34752

# மேக்கப் புன்னகை

இரவெல்லாம் எரிந்து முடித்திருந்த கொசுவர்த்திச் சுருள் உழைப்பின் நிரூபணமாக தரையில் சாம்பல் முறுக்கு போட்டிருந்தது. கொடியில் கறுப்பு பிராவும், வெள்ளை பிராவும் அருகருகில் தொங்கிக் கொண்டிருந்தன.

திடீர் காற்றில் கொக்கி மாட்டாத ஜன்னல் கதவு, சத்தமிட்டது. சுவர்க் காலண்டரில் மெல்லிய தாள்களில் நிரம்பிய தேதிகள் விடுதலைக்குத் துடித்தன.

சத்தத்தில் உறக்கம் கலைந்தது. இனியா அரைக் கண்ணில் பார்த்தாள். நைட்டியில் வினோதினி. காதில் வாக்மேன். கையில் ஸ்டார்டஸ்ட்.

''வினோ, மணி என்னப்பா?''

பதில் தேவையில்லை போல போர்வையை கழுத்து வரை இடுக்கிக் கொண்டு, கைகளை தொடைகளுக்கு நடுவில் செருகிக் கொண்டு கண்களை மூடிக் கொண்டாள். கேள்வி இல்லை.

குட்மார்னிங்குக்குப் பதிலானது.

''ஏழே முக்கால்தான் ஆகுது. தூங்கு, வாவ்!''

கடைசி துள்ளல் வார்த்தை புத்தகத்தைப் பார்த்து.

''என்னாச்சு?''

''டாப்லெஸ் போஸ்! ப்ளோ- அப்! நம்ம ரூம்ல கண் டிப்பா ஒட்டப் போறேன்.'' கத்தரிக்கோல் எடுத்து கர கரக்கென்று வெட்ட ஆரம்பித்து விட்டாள்.

''யாரு? ஷாருக்கானா?''

''இல்லை. என் ஆளு அப்பாஸ்!''

''ஹீல்ஸ் பிஞ்சிடும். நம்ம ஆளுன்னு சொல்லு அவனை தேசிய உடைமையாக்கியாச்சு''

அந்த ப்ளோ-அப்பை உடனே பார்த்தாக வேண்டும் தள்ளிப் போட முடியாது. போர்வையை விலக்கி எழுந்து விட்டாள் இனியா.

''எங்கே பார்க்கலாம்''

முத்தம் கொடுத்த பிறகுதான் அவளிடம் நீட்டினா விேனா.

''இந்தப் போஸ் சுமார்தான். நேர்ல இன்னு சூப்பரா இருக்கான். தெரியுமா?''

''உனக்கென்னடி கொடுத்து வச்சவ, ரெண்டு இன் பக்கத்திலே நின்னு பார்ப்பே. பேசுவே. உள்ளங்கை யில ஆட்டோ கிராஃப் வாங்குவே!''

''ரொம்ப பெருமூச்சு விடாதே! பட்டன் எகிறிட போகுது. ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன். அதுவு பூஜையில். நூறு, இருநூறு பேர் நெருக்கியடிச்சிட்டிரு தாங்க. சட்டுன்னு பேப்பர் எதுவும் கிடைக்கலை''

''பால் பாய்ண்ட் பேனாதானே? எப்படி குறுகுறுன்னு இருந்திச்சா!''

''ம்கூம்...கோன்ல மெகந்தி வரைஞ்ச மாதிரி குளு குளுன்னு இருந்திச்சி''



''அய்யோ! அந்த சமயம் பார்த்து நான் லீவு போட் டுட்டு ஊருக்குப் போயிட்டேனே...உன் கைக்கு ஒரு முத்தம் கொடுத்திருப்பேனே...நான் வர்ற வரைக்கும் நீ குளிக்காம இருந்திருக்கலாமில்லே?''

''பக்கத்தில இருந்த சினிமா ரிப்போர்ட்டர் அந்தக் கையெழுத்தோட என்னை போட்டோ எடுத்து புஸ்தகத் துல போட்டு ரெண்டு வரி எழுதிட்டான். தெரியுமா?''

''மை குட்னெஸ்! சொல்லவே இல்லையே நீ! என் னன்னு எழுதியிருந்தான்?''

''காதல் யுத்தம் பட பூஜைக்கு நடிகை மதுமிதாவு டன் வந்திருந்த அவர் தங்கை இனியா அப்பாஸிடம் உள் ளங்கையில் கையெழுத்து வாங்கினார்ன்னு''

இனியா ஹேர்பாண்ட்டை விடுவித்து கூந்தலை உதறி கொண்டு, ஜன்னல் அருகில் வந்து நின்றாள். வெளியே ஹாஸ்டலின் மைதானத்தில் பெண்கள் ஷட்டில்காக் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் மெஸ்ஸை நோக்கி நடந்து கொண்டிருந்தார்கள்.

வாக்மெனைக் கழற்றி வைத்துவிட்டு அவளருகில் வந் தாள் வினோ.

''அந்த சினிமா பத்திரிகையை எங்கே வச்சிருக்கே இனியா?''

''அக்கா கிழிச்சுப் போட்டுட்டா''

''ஏன்?''

''வேடிக்கையா கொண்டு போய் காட்டினதுக்கு அவ ளுக்கு அவ்வளவு கோபம் வந்துடுச்சி''

''ஒரு ஃபன்தானே! வாட்ஸ் தேர்?''

''வேடிக்கைக்குக் கூட சினிமாவோட நிழல் என்மேல விழுந்துடக்கூடாதாம். இனிமே அவளைப் பார்க்கற

துன்னா வீட்ல மட்டும்தான் பார்க்கணுமாம். ஷூட்டிங் ஃப்ளோருக்குப் போகக் கூடாதாம். மகாராணி உத்தரவு போட்டுட்டா''

''ஏன் அப்படி?''

''என் கவனம் முழுக்க படிப்புல மட்டும்தான் இருக்கணுமாம்! நான் கம்ப்யூட்டர் என்ஜினியராகி பெரிசா தொழில் ஆரம்பிக்கணுமாம்!''

''ஆனா நீ காலேஜுக்கு கட் அடிச்சிட்டு பாப் ஷோ, ஃபேஷன் ஷோ ரெய்ன் டான்ஸ்ஸுன்னு பொறுப்பில்லாம சுத்திக்கிட்டிருக்கே!''

''இதெல்லாம் நானா ஏற்படுத்திக்கிட்ட ஆர்வம் தெரியுமா? தூரத்துல ஒரு ஆம்பளையைப் பார்த்தாலே இந்தப் பக்கமா ஓடிடுவேன். இப்ப? என் ஃப்ரெண்ட்ஸ்ல பாய்ஸ்தான் அதிகம்! இதையெல்லாம் மறைமுகமா அவளுக்கு நான் காட்ற ஒருவகை எதிர்ப்புன்னு என் மனசு சொல்லுது வினோ. இவ யாரு என் வாழ்க்கை திசையை தீர்மானிக்கிறதுக்கு?''

''பின்னே, ஏன் கட்டுப்படறே?''

''யாரு கட்டுப்படறா? ஒரு நாளாவது நான் படிச்சி நீ பார்த்திருக்கியா?''

''சரி. எதுக்கு கட்டுப்படற மாதிரி நடிக்கிறே?''

''என் காஸ்ட்யூம்ஸ். காஸ்மெட்டிக்ஸ், காருக்கு பெட்ரோல், காலேஜுக்கு ஃபீஸ் இதெல்லாம் எவனாச்சும் ஸ்பான்சர் செய்றதா சொல்லட்டும். அக்காவுக்கு எதிரா போர்க்கொடி தூக்கிடுவேன். காசு அவ மட்டும் தானே சம்பாரிச்சுத் தொலைக்கிறா...வசதியா சகல செளபாக்கியங்களோட வளர்த்துத் தொலைச்சுட்டா...இதையெல்லாம் விட்டுக் கொடுக்க மனசில்லை. அதனால ரோஷத்தை உள்ளுக்குள்ளே புதைச்சி வெச்சிருக்கேன்.''



''ஏன் உங்கம்மா சம்பாரிக்காத காசா? அந்தக் காலத்திலயே பென்ஸ் வெச்சிருந்தவங்க இல்லை? எங்க பெரியப்பா செத்துப்போனப்ப. அவர் பெட்டியை ஆராய்ச்சி செஞ்சோம், உங்கம்மா படங்களையெல்லாம் ஒட்டி ஒரு ஆல்பமே வெச்சிருந்தார்''

''எல்லாப் பணத்தையும்தான் அந்தப் பொறுக்கி சுருட்டிகிட்டு ஓடிட்டானே! வீடு பூரா புரொடியூசர்ஸ் உட்கார்ந்திருந்த காலம் மாறி. வீடு பூரா கடன்காரங்க உட்கார்ந்திருந்த காலம் வந்ததாலதானே அக்காவே நடிக்க வந்தா.''

''என்ன இருந்தாலும், எதுக்கு அப்பாவைப் போய் பொறுக்கின்னு திட்டறே?''

''ரெண்டு குழந்தையோட அம்மாவைத் தவிக்க விட்டுட்டு ஹிந்திக்காரியோட ஓடிப்போன ஒரு திருட்டு ஆளுக்கு அப்பான்ற மரியாதை எல்லாம் கொடுக்க முடியாது.''

''சரி, விடு, காலைலயே மூடைக் கெடுக்காதே! இன்னைக்கு எப்படி ஐடியா. காலேஜுக்கு வர்றதா உத்தேசம் இருக்கா?''

''ஒரு ஃபோன் வரணும். அதுக்கப்புறம்தான் முடிவு செய்வேன்.''

''யாரு?''

''ஆகர்ஷ். புதுசா ஒரு ஃபார்ம் ஹவுஸ் வாங்கியிருக்கானாம். அதை இன்டீரியர் டெக் பண்றதுக்கு என் யோசனை வேணுமாம்.''

''இப்பல்லாம் நீ ஆகர்ஷ் பத்தி அடிக்கடி பேசறே இனியா''

''அதனால என்ன?''

பிரஷ் எடுத்து பேஸ்ட் பிதுக்கிக் கொண்டாள்.

''நீ அவனை...''

''கேட்டு முடி! லவ் பண்றியா? அதானே? இது இல்லைன்னு எனக்கும் தெரியும். அவனுக்கும் தெரி ஜஸ்ட் எ ஃபிரெண்ட். கம்பேனியன். அவ்வளவுதா சுதிர் மாதிரி கல்யாண் மாதிரிதான் ஆகாஷும். நத் ஸ்பெஷல்! க்ளியர்ட்''

வாஷ் பேசினுக்குச் சென்று கொப்புளித்துவிட்டு வ போது ஸ்டார் டஸ்ட்டைப் புரட்டி ''உன் அக்காவே பேட்டி வந்திருக்கு இனியா! அப்படியே படிக்கட்டு தமிழாக்கம் செய்யட்டுமா?'' என்றாள் வினோ.

''வேணாம். என்ன புதுசா சொல்லியிருக்கப் போ கைல பதினாலு படம் இருக்கு. மூணு வருஷத்துக்கு ஷீட் இல்லை. சீக்கிரத்தில் ஹிந்தியிலேயும் நம்பர் ஒ வந்துடுவேன். இதை வேற வேற வார்த்தைகள்ல பீ கிட்டிருப்பா...அதானே?''

கொடியிலிருந்து டர்க்கி டவல் உருவினாள்.

''உனக்கு அக்கா மேல கோபமா இல்லை வெறு

''ரெண்டும் இல்லை''

''வேற என்ன?''

''வெளிப்படையா சொல்லட்டுமா?''

''சொல்லு''

''பொறாமை! வண்டி வண்டியா பொறாமை!''

''ஆனா அவளுக்கு உன்மேல இருக்கிறது...அக்க

''உன் தலை''

''உன் அக்காவை நீ சரியாப் புரிஞ்சுக்கலைன் நினைக்கிறேன்.''



''நீ சினிமாக்காரியைப் புரிஞ்சுக்கலைங்கறதுதான் மை''

''நீ அவளை சினிமாக்காரியா பாக்கறே. ஆனா அவ ன தங்கையா பார்க்கிறா இனியா''

''ஷிட்! அவ என்னை எதிரியா நினைக்கிறா வினோ. துப் புரியாது. அவளுக்கு என்மேல பாசம் கிடை பயம்''

''என்ன பயம்?''

''அவளை நான் சாப்பிட்டுடுவேன்னு பயம்''

''ளறாதே!''

''அதான் நிஜம். அவ என்னைவிட நிறம் கம்மி. விட உயரம் கம்மி. என்னைவிட அழகு கம்மி. ல அவளுக்கு காம்ப்ளெக்ஸ்! நான் இன்டஸ்ட்ரிக் வந்துட்டா அவ காணாமல் போய்டுவா! அந்த ஹிந்தில நம்பர் ஒன் பொசிசனுக்கு வரணுங்கற ல்லாம் வெடிச்சி சிதறிடுமே! அந்த பயம்!''

''அவளுக்கு காம்ப்ளெக்ஸ்ன்னா, உனக்கும்தான் ம்ப்ளெக்ஸ்! சுப்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ்! நிறம், அழகு-இதெல்லாம் உன் முயற்சியா? இதெல்லாம் சரியம்! ஆனா, அவ ஜெயிச்சிருக்கிறது திறமை அதை ஏன் மறந்துட்டே?''

''என்ன பெரிய திறமை? அடிப்படையா கொஞ்சம் வம் இருந்தாப் போதும். அட்டகாசமான டைரக் இருக்காங்க, பட்டை தீட்டி ஜொலிக்க வைக்கிற மதுமிதாவோட முதல் படத்தை இன்னைக்குப் ஒரு எக்ஸ்பிரஷனும் இருக்காது. தத்தி மாதிரி யிருப்பா. கதையினால படம் ஹிட்! ராசியான ண்ணுன்னு பேர் வந்திடுச்சி. பழகப் பழக பயம் ச்சு. அதான் தொழில்னு ஆனதுக்கப்புறம் சூத்திரம்

கத்துக்கிட்டா. எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கச் சொல்லு, அப்புறம் பேசு!''

வினோ மென்மையாக சிரித்தாள். ''ஹிந்தில நம்ப ஒண்ணா வரணும்னு உங்க அக்காவுக்கு லட்சியம்னு ந சொல்றே. ஆனா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக் கிட்டு நடிக்கிறதை நிறுத்திக்கப் போறதா இந்தப் பேட்டி யில சொல்லியிருக்கா''

பாத்ரூம் கதவைத் திறக்கப் போனவள் அதிர்ச்சியுடன் அருகில் வந்து ''அப்படியா சொல்லியிருக்கா? இதென்ன புதுசா இருக்கு?''என்று பரபரப்பாக அந்தப் பேட்டியைப் படிக்கத் துவங்கினாள் இனியா.

# 2

''இத பாரும்மா, நீ சொன்ன எத்தனையோ விஷயங்களுக்கு நான் எதிர்த்து ஒரு வார்த்தை பேசாம சம்மதிச்சிருக்கேன். இது என் வாழ்க்கை பிரச்னை. இதில நான் யாரோட தலையீடும் இல்லாம சுதந்திரமா முடிவெடுக்க விரும்பறேன். என் முடிவு சரியோ, தப்போ என் சொந்த முடிவா இருக்கட்டும். இந்த முடிவால நான் சந்தோஷப் பட்டாலும் சரி, சங்கடப்பட்டாலும் சரி... நான்தான் பொறுப்பு விட்டுடு! கல்யாண விஷயத்துல மட்டும் என் இஷ்டத்துக்கு விட்டுடு. நான் அமெரிக்கா மாப்பிள்ளை, லண்டன் மாப்பிள்ளைன்னு எதிர்பார்க்கலை. அவர் டாக்டரா இருக்கணும், என்ஜினியரா இருக்கணும்னு எதிர் பார்க்கலை. என்னைப் புரிஞ்சிக்கிட்டவரா இருக்கணும். நான் புரிஞ்சிக்கிட்டவரா இருக்கணும். இந்த ரெண்டே தகுதிதான் என் எதிர்பார்ப்பு. ரெண்டு தகுதியும் வினோத் கிட்டே இருக்கு. ஜாதி, அந்தஸ்துன்னு எதையெதையோ



காரணம் காட்டி எங்களைப் பிரிக்கப் பார்க்காதே! உன் சொந்த கௌரவத்துக்காக எங்க வாழ்க்கையை பலி கொடுக்க நாங்க தயாரா இல்லை! உன் சம்மதத்தோட எங்க கல்யாணம் நடக்கணும்னு நான் ஆசைப்படறேன். நீ சம்மதிக்காவிட்டாலும் இந்தக் கல்யாணம் நடக்கத்தான் போகுது. என்ன பார்க்கறே...நிச்சயமா நாங்க உனக்குத் தெரியாம ஓடிப்போய் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை! கல்யாணத்துல திருட்டுத்தனம் அவசியமில்லை. பகிரங்கமா பலபேரை கூப்புட்டு விருந்து வெச்சுத்தான் நடக்கும். முதல் பத்திரிகை உனக்குத்தான் வெப்பேன்.'' என்றாள் மதுமிதா.

''கட்'' என்றார் டைரக்டர். செட்டில் அத்தனை பேரும் கை தட்டினார்கள்.

திரையில் ஒரு முழு நிமிடம் ஓடுகிற ஷாட்! தொண்ணூறு அடி! சிங்கிள் டிராலி ஷாட்! ஆதிக்கம் கொண்ட ஷாட்! உதடுகள் துடிக்க, தொண்டை நரம்புகள் புடைக்க. ஏற்ற இறக்கத்துடன் பேச வேண்டிய ஷாட்! படித்துக் கொண்டிருக்கும் ஒரு புத்தகத்தை 'க்யூ' வசனம் சொல்லப்பட்டதும் தூக்கிப் போட்டுவிட்டு வேகமாக எழுந்து கேமிராவுக்கு வலதுபுறம் அம்மா நிற்பதாக கற்பனையாகப் பார்த்துக்கொண்டு, மெதுவாக நடந்தபடியே பேசி நடுவில் ஒருமுறை கண்ணீரை உருளச் செய்து, அதைஅலட்சியமாக சுண்டிவிட்டு...மீண்டும் வசனம் பேசிவிட்டு மறுபடி அதே சோபாவில் உட்கார்ந்து புத்தகம் எடுத்துக் கொண்டு ஒரு முத்தாய்ப்புப் பார்வை கொடுத்து முடிக்க வேண்டிய ஷாட்! இதை ஒரே டேக்கில் தப்பில்லாமல் செய்து முடிப்பதென்பது நிச்சயமாக கைதட்ட வேண்டிய விஷயம்தான். கேமிரா மேனை ஒரு வார்த்தை கேட்டுக் கொண்டு ஷாட்டை ஓ. கே. செய்த டைரக்டர் சுதிர் டச்சப் பெண்ணிடம் ஸ்பான்ச் எடுத்து இமைகளை ஒற்றிய மதுமிதாவிடம் ''கிளாசிக்!'' என்றார்.

''அந்த டியர்ஸ் கரெக்ட்டா ரோலாகுமான்னுதான் சந்தேகமா இருந்திச்சு. பர்ஃபெக்ட்! மதுவை நம்பி இரு நூறடிக்கு சிங்கிள் ஷாட் தைரியமா வைக்கலாம்னு புரூவ் பண்ணிட்டே'' வலிய அவள் கையைப்பற்றி குலுக்கி, விடுவிக்காமல் இருந்தார்.

''தேங்க்யூ சார்...இந்த சீன் ஓவரா?''

''ஒன் மினிட்'' என்று சுதிர் திரும்ப அவர் பார்வைக்கு காத்திருந்த இரண்டு அசிஸ்டெண்ட்ஸ் அம்புகளாய் பாய்ந்து வந்தார்கள். ''இதுல எதாச்சும் பேலன்ஸ் இருக்காய்யா?''

ஒருவன் டயலாக் பேப்பர்களைப் புரட்ட கையமர்த்தினார்.

''பேப்பரைப் பார்க்காம சொல்லுய்யா''

பதில் தெரிந்தாலும் மரியாதை அடைக்க, சொல்ல வராமல் தவித்தான், மதுமிதாவின் கையை விடுவித்து விட்டு இரண்டு கைகளாலும் அபிநயித்தபடி, ''மதுமேல ஓபனிங் மிட் ஷாட் எடுத்தமா? காபி கப்பை வெச்சிட்டு புக்கை கைல எடுத்திச்சா? வைட் வெச்சி அந்தம்மா ரைட் எண்ட்ரி ஷாட் எடுத்தமா? முதல் நாலுவசனம் ரெண்டு பேருக்கும் மாறிமாறி க்ளோஸ் கட் செஞ்சோம். அதுக்கப்புறம்தான் இந்த டிராலி ஷாட். இப்ப மதுமிதா பாய்ண்ட் ஆஃப் வியூல அந்தம்மாவுக்கு ரியாக்ஷன் ஷாட் எடுக்கணும்...அதில அந்தம்மா லெஃப்ட்ல அவுட் போயிடுது. இதைச் சொல்றதுக்கு ஏன்யா முழிக்கிறீங்க? ஆப்போசிட் சைடுக்கு லைட்டிங் பண்ணச் சொல்லு போ'' விசுவாசம் காட்டற அளவுக்கு விஷயம் காட்டமாட்டேங்கறீங்க!

மதுமிதா வெல்வெட் நாற்காலியில் அமர்ந்து டச்சப் பெண் சுமதி கையில் பிடித்திருந்த பேட்டரி ஃபேனுக்கு



முகம் காட்டி அதன் நெருக்கக் காற்றில் கூந்தல் அலைய கண்களைக் குறுக்கிக் கொண்டிருந்தாள்.

''மது. ஒரு பாய்ண்ட் ஆஃப் வியூ ஷாட்தான் பேலன்ஸ். மேக்கப் டச்சப் பண்ணிக்க வேண்டியதில்லை''

''ஏழு மணிக்கு மாலினியோட வெட்டிங் ரிசப்ஷன் இருக்கு சார்''

''இந்த ஷாட்டோட பேக்கப்! எனக்கும் 'இன்வெட்டிங்லி யுவர்ஸ்'ன்னு பத்திரிகை அனுப்பிச்சிருக்கா-நானும் வரணும். அவளை சைல்ட் ஆர்ட்டிஸ்ட்டா இன்டிரடியூஸ் செஞ்சதே நான்தான்.''

''அப்படியா சார்?''

''என்னோட வந்துடறியா? சேர்ந்தே ரிசப்ஷன் போய்ட்டு உன்னை அப்புறம் டிராப் பண்றேன்.''

''ஸாரி சார்! அம்மாவும் வர்றாங்க, வீட்டுக்குப் போய் அவுங்களைப் பிக்கப் பண்ணிக்கணும்.''

''உன் டிரைவரை வண்டியெடுத்துக்கிட்டு போகச் சொல்லிரு. என் வண்டியிலேயே போய் உங்கம்மாவை பிக்கப் பண்ணிட்டுப் போகலாம். முடிஞ்ச வரைக்கும் பெட்ரோலை மிச்சப்படுத்தி தேசத்துக்கு சேவை செய்யலாமே... என்ன நான் சொல்றது?''

இந்த இடத்தில் புன்னகைக்காவிட்டால் வருத்தப்படுவாரென்று புன்னகைத்தாள். ''பரவாயில்லை சார். உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''இதுல என்ன சிரமம்? தி கிரேட் ஆர்ட்டிஸ்ட் மதுமிதாவோட சேர்ந்து போறதுக்குப் பெருமை இல்லையா?''

''அய்யா எனக்கு உன்னோடு வர ஒரு சதவிகித அளவு கூட இஷ்டம் இல்லை அய்யா!'' என்று நேரடியாக முகத்துக்கு முன்னால் எப்படி சொல்வது?

''நீங்க உங்க வைஃபை கூட்டிட்டு வரலையா சார்?''

''பூவைப் பத்திப் பேசிட்டிருக்கிறப்ப முள்ளைப் பத்தி ஞாபகப்படுத்தறியே நீ?''

ஒரு நாற்காலியை அவள் அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார். ''உன் காதைக் கொடு. ஒரு விஷயம் சொல்றேன்.''என்றார். அவர் பக்கம்சாய்ந்தாள்.

அவள் அருகில் கிசுகிசுப்பாக, ''அவளுக்கு ஒருபொட்டு வெளிச்சம் இல்லாம இருட்டா இருக்கணும்... எனக்கு ஒரு பொட்டு இருட்டு இல்லாம வெளிச்சமா இருக்கணும்... இந்த சண்டையில எட்டு வருஷம் ஓடிடுச்சி. பெட்ரூம் கூரையில் கண்ணாடி பதிச்சதெல்லாம் வேஸ்ட்டு! பை தி பை, தூரத்திலேர்ந்து பார்த்தா இப்ப நான் உன்கிட்டே ரகசியம் பேசற மாதிரி தெரியுமா. இல்லை முத்தம் கொடுக்கற மாதிரி தெரியுமா?'' என்றார்.

''பிக் ஜோக் சார்''என்று பொய் சொல்லி பொய்யாய் சிரித்தாள். இந்த வேடச் சிரிப்பு இயக்குனர் என்கிற மரியாதைக்காக. வர்த்தக ரீதியான நட்புறவில் விரிசல் விடக்கூடாதென்பதற்காக எந்த விதத்திலும் என் சினி கேரியர் பாதிக்கப்பட்டு விடக் கூடாதென்பதற்காக நீ சொல்லும் எதையும் நான் ரசிப்பதில்லை என்கிற அப்பட்டமான உண்மை உனக்குத் தெரியுமா? உனக்குள் இருக்கும், கசியும் வக்கிர எண்ணங்களை நான் அறிவேன் என்பதை நீ அறிவாயா? உன் ஒவ்வொரு வார்த்தையும் எதற்காக தூண்டில் என்பதை நான் புரியாதவள் அல்ல என்பதை நீ உணர்ந்ததில்லையா?

''லைட்டிங் பண்ண நேரமாகும் போலிருக்கு. நான் ரூம்ல இருக்கேன் சார்'' எழுந்து கொண்டாள் மதுமிதா.



[illegible] ஐபேன் ஐஸ்பாக்ஸ் மேக்கப் ஸ்பிரே சேகரித்து [illegible] எடுத்துக் கொண்டாள்.

''ஏன் நான் போரடிக்கிறேனா?''

''சேச்சே! நீங்க ஒரு இன்ட்ரஸ்டிங் பர்சனாலிட்டி [illegible].''

''எதிலேயும் நான்வெளிபடை. நோ ரகசியம்ஸ். அத [illegible]தான்வழுக்கையை மறைச்சிவிக்கும் வைக்கிறதில்லை. [illegible]யும் வைக்கிறதில்லை. வழுக்கை வயசை மட்டும் [illegible] காட்டுதா? அனுபவஸ்தன்னு இன்னொரு சேதி [illegible]லையா என்ன?'' கண்ணடித்துச் சிரித்தார்.

'போடா குப்பை வண்டி!' என்று மனது சொன்னதை [illegible] அழகாக நாகரிகப்படுத்தி ''உங்கசிந்தனையே தனி [illegible]'' என்றன.

[illegible]திதா மேக்கப் அறைக்குள் வந்தாள். சுமதி ஓட்ட[illegible] வந்து ஏ.சி. போட்டாள். அடையாளம் வைக்கப் [illegible] ஆங்கில நாவலை எடுத்து அவள் கையில் [illegible]டுத்தாள்.

[illegible]ங்கிக் கொண்டு படிக்காமல் தன் மனதில் சற்றுமுன் [illegible]றிய குப்பை வண்டி, என்கிற வார்த்தைகளை [illegible]சித்தாள்.

இப்படி—

ஒரே ஒரு குப்பை வண்டிதானா? காமம் மட்டும்தான் [illegible]பையா? குப்பை வண்டியில் எத்தனை வகை குப்பைகள்! தேசத்தில் ஊழல் ஒரு குப்பை இல்லையா? எனில் ... ஜாதி வெறி ஒரு குப்பை இல்லையா? குப்பை தேசமா இது? சரி எந்த தேசத்தில் குப்பை இல்லை? எய்ட்ஸ் குப்பை வெளிநாட்டு இறக்குமதிதானே? எல்லா தேசத்திலும் வேறு வேறு வகை குப்பைகள் எனில் இது குப்பை உலகமா? உலகமேகுப்பையெனில் இதில் யார் சுத்தம்?

எனக்குள் இருக்கிறதா இல்லையா இந்தக் குப்பை? நிச்சயமாய் இருக்கிறது. இது வேறு வகை குப்பை!

யோசித்ததில் 'குப்பை உலகம்' என்று தலைப்பிட்டு ஒரு கவிதை எழுதலாம் என்று பட்டது.

''சுமதி என் டைரி எடு''

சுமதி தொங்கின கைப்பைக்குள்ளிருந்து கேட்ட டைரியும் கேட்காத பேனாவும் எடுத்துக் கொடுத்துவிட்டு ''மேடம் உங்க தங்கச்சியோட ஃபோன்ல பேசணும்னு சொன்னீங்க'' என்றாள்.

''லைன் போட்டுக் கொடு.'' என்று விட்டு டைரியில் 'குப்பை உலகம்' என்று எழுதி அடிக்கோடிட்டு ஆரம்ப வார்த்தைக்கு யோசித்தாள்.

சுமதி டெலிபோனில் மறுபடி மறுபடி முயன்று கொண்டிருக்க 'எக்ஸ்யூஸ் மி' என்ற குரலும் கதவுத் தட்டலும் தொடர உள்ளே பாதி உடம்பை நீட்டி எட்டிப் பார்த்தான் பாலாஜி, நிருபர்.

''பாலாஜி சார் உங்களை நாளைக்குத்தானே வரச் சொன்னேன்.''

''சொன்னீங்க. இன்னைக்கு நைட் நான் ஃபிலிம் ஃபெஸ்டிவலுக்குப் புறப்படறேன். ஜஸ்ட் ரெண்டே கேள்விதான். அஞ்சே நிமிஷம்தான். ஆறாவது நிமிஷம் 'வெளில போடா'ன்னு சொல்லிடுங்க''

''உட்காருங்க''

மேக்கப் போடும் சுழல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சின்ன நோட்டும் பேனாவும் எடுத்துக் கொண்டு ''ஸ்டார் டஸ்ட்ல திடீர்னு கல்யாணத்தைப் பத்தி பரபரப்பா சொல்லியிருக்கீங்களே!'' என்றான்.

''அம்மா லைன்ல இருக்காங்க'' என்றாள் சுமதி.



ரிசீவரை வாங்கிக் கொண்ட மதுமிதா ''இனியா உன் படிப்பை பாதியில நிறுத்தட்டுமா? விளையாட்டில்லை. சீரியஸாத்தான் பேசறேன். நீ புறப்பட்டு வீட்டுக்கு வா. நேர்ல பேசிக்கலாம்.'' என்றாள்.

# 3

''என்ன கேட்டீங்க?'' என்றாள் ரிசீவரை வைத்துவிட்டு, மதுமிதாவின் கூந்தலை பிரஸ் செய்யத் துவங்கினாள் சுமதி.

முனை பிதுக்கிய பால்பாய்ண்ட் பேனாவோடு பாலாஜி அவளைப் பார்த்தான். ''ஸ்டார் டஸ்ட்ல...''

''கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கிட்டு செட்டிலாகப் போறேன்னு சொல்லியிருக்கேன். அதானே?''

''அதைப் பத்தித்தான் கேக்கறேன். கொஞ்சம் விபரமா சொல்ல முடியுமா ப்ளீஸ்''

''என்ன விபரம் சொல்லணும்?''

''ஏன் திடீர்னு கல்யாணம் பண்ணிக்கிற ஐடியா?''

''எனக்கு வயசு இருபத்தி நாலு. எண்பது படம் முடிச்சாச்சு. திகட்டத் திகட்டப் புகழ் பார்த்தாச்சு. பல அவார்டுகள் வாங்கி என் திறமையை நிரூபிச்சாச்சு. இந்த இண்டஸ்ட்ரில இன்னும் நான் என்ன சாதிக்கணும் சொல்லுங்க''

''ஆறு மாசம் முன்னாடி நானே எடுத்த ஒரு பேட்டியில அடுத்து இந்தில முன்னணி நட்சத்திரமா வர்றதுதான் என் லட்சியம்னு நீங்க சொன்னீங்க மதுமிதா!''

''ஆமாம், சொன்னேன்''

''அந்த லட்சியம் இன்னும் நிறைவேறலையே''

''அதனால எனக்கு ஏமாற்றம் கிடையாதுங்க''

''சரி எப்ப கல்யாணம்பண்ணிக்கப் போறீங்க''

''சீக்கிரத்துல''

''சீக்கிரம்னா...இந்த வருஷத்துக்குள்ளே இருக்குமா''

''இருக்கலாம்''

''கல்யாணத்துக்கப்புறம் தொடர்ந்து நடிப்பீங்களா?''

''ஒப்புக்கிட்ட படங்கள் எல்லாம் முடியறவரைக்கும் நடிப்பேன்.''

''அதுக்கப்புறம்?''

''கண்டிப்பா நடிக்க மாட்டேன்''

''இந்த முடிவுக்கு சினிமாமேலே ஏற்பட்ட சலிப்புத் தான் காரணமா?''

''இல்லை. குடும்ப வாழ்க்கை மேலே ஏற்பட்ட ஆர்வம்தான் காரணம்''

''கல்யாணத்துக்கப்புறம் உங்க திட்டம் என்ன?''

''குழந்தை பெத்துப்பேன். ஒரு பத்திரிகை நடத்தணும்னு திட்டம் இருக்கு''

''சினிமா பத்திரிகையா?''

''இல்லை. கவிதைகளுக்கு முக்கியத்துவம் தர்ற பத்திரிகையா அது இருக்கும்''

''நீங்க சொல்றது வித்தியாசமா இருக்கு. வழக்கமா இந்தக் கேள்விகளுக்கு எல்லாரும்...சினிமா தியேட்டர் வாங்குவேன். ஹோட்டல் கட்டுவேன். பியூட்டி பார்லர் நடத்துவேன்னு இந்த மாதிரிதான் சொல்வாங்க''

''எனக்கு கவிதைகள் மேல எப்பவும் ஆர்வம் உண்டு.''



''நீங்க கவிதை எழுதுவீங்களா?''

''எழுதுவேன்!''

''ஒரு கவிதை தர்றீங்களா. இந்த பேட்டியோட பாக்ஸ் மேட்டர்ல போட்டுடலாம்''

''வேணாம். நான் நடத்தப்போற பத்திரிகைலதான் என் கவிதைகளை வெளியிடறதா இருக்கேன். ஒரு நடிகையோட சிந்தனைகளுக்கு நேர்மையான அங்கீகாரம் கிடைக்காது. 'இவ என்ன சொல்றது'ன்னு அலட்சியப்படுத்துவாங்க.''

''சரி. இப்ப முக்கியமான கேள்விக்கு வந்துடறேன். யார் அந்த அதிர்ஷ்டசாலி?''

''நிச்சயமா நான் ரகசிய கல்யாணம் பண்ணிக்கிறதா இல்லை. இண்டஸ்ட்ரில அத்தனை பேரையும் இன்வைட் பண்ணிதான் கல்யாணம் பண்ணிக்குவேன். உங்களுக்கும் கண்டிப்பா பத்திரிகை உண்டு. பாலாஜி சார் கொஞ்சம் வெயிட் பண்ணுங்களேன்!''

''எல்லாம் சொல்லிட்டிங்க. அது மட்டும் என்ன ரகசியம்?''

''ஒரு சஸ்பென்ஸ் இருக்கட்டுமே!''

''அவர் இண்டஸ்ட்ரில உள்ளவரா இல்லை யாராச்சும் தொழிலதிபரா?''

மதுமிதா மறுப்பாகத் தலையசைத்துச் சிரித்தாள்.

''ம்கூம்...அதைப்பத்தி எதுவும் சொல்றதா இல்லை!''

''உங்கம்மா சம்மதிச்சுட்டாங்களா?''

''சம்மதிச்சுடுவாங்க''

''அப்படீன்னா. இப்போதைக்கு இதை எதிர்க்கிறாங்களா?''

''ரெண்டே ரெண்டு கேள்வின்னு சொல்லிட்டு எத்த னைக் கேள்வி கேக்கறீங்க பார்த்தீங்களா? நீங்க சொன்ன அஞ்சு நிமிஷம் எப்பவோ முடிஞ்சு போச்சு பாலாஜி''

''சரி. இதோ புறப்படுகிறேன். இன்னும் ஒரே... ஒரு கேள்வி!''

''என்ன?''

''நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறவர் ஏற் கனவே கல்யாணம் ஆனவரா?''

''பார்த்தீங்களா இந்தக் கிண்டல்தானே வேணாங் கறது!''

''சிலபேர் அந்த மாதிரி முடிவெடுத்திருக்கிறதால தான் அந்தக் கேள்வி கேட்டேன்.''

''அது அவங்கவங்க சூழ்நிலை. எல்லாருமே அந்த மாதிரிதான் முடிவெடுத்திருக்காங்களா? சரி போதும்.''

பாலாஜி பேனாவை பாக்கெட்டில் குத்திக் கொண்டு எழுந்தான். ''தேங்க்யூ மதுமிதா''

அவன் வெளியேறிய பிறகு சுமதி, ''நீங்க ஷாட்ல இருக்கிறப்ப என்னைத் தனியாக் கூப்பிட்டு விசாரிச் சாருங்க மேடம்'' என்றாள்.

''என்ன கேட்டாரு?''

''நீங்க யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறீங் கன்னு கேட்டாரு''

''நீ என்ன சொன்னே?''

''அதைப் பத்தி எனக்கு எதுவும் தெரியாதுங்க சார்னு சொன்னேன்.''

''சரி, யார் கேட்டாலும் அப்படியே சொல்லு.''



''சரிங்க''

''நிஜமா உனக்கு அதைப் பத்தி ஏதாவது தெரியுமா?'

''தெரியாதுங்க''

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த அசிஸ்டெண்ட் ...டரக்டர், ''மேடம், ஷாட் ரெடி'' என்றதும், மதுமிதா ...ழுந்தாள்.

ஃ ஃ ஃ

**து**ர்கா கொண்டையில் வெள்ளி ஊசிகளைச் செருகிக் ...காண்டாள். பூச்சரம் எடுத்து அரை வட்டமாக கொண் ...டக்கு மேல் வைத்துக் கொண்டாள்.

லிப்ஸ்டிக் திருகி பிசிறியடிக்காமல் தடவிக் கொண் ...டாள். பட்டுப்புடவையின் மடிப்புகளை நீவிவிட்டுக் ...காண்டாள். செண்ட் எடுத்துப் பீய்ச்சிக்கொண்டு ஒரு ...சனைத் தேராக அசைந்து அசைந்து அறையை விட்டு ...வளியே வந்தாள்.

துர்கா எழுபதுகளில் தமிழ் திரையுலகை கலக்கிய ...வர்ச்சிப் புயல்! வில்லனால் கற்பழிக்கப்படும் கதாநாய ...ின் தங்கையாக அறிமுகம். அந்தக் கற்பழிப்புக்காட்சி ...களுக்கு இரக்கம் ஏற்படுத்தாமல் கிறக்கம் ஏற்படுத்தும் ...தமாக அமைந்து போனதால்...அவசர அவசரமாக ...லாப் படங்களிலும் தலா ஒரு கற்பழிப்புக் காட்சி ...தயில் சேர்க்கப்பட்டு 'கூப்பீடு காவ்யாவை'' என்றார் ... (காவ்யா துர்காவின் சினிமாப் பெயர்).

ஒரு கட்டத்தில் 'என்ன சார் அம்மா கற்பழிப்பு காட் ... மட்டும் என்னைக் கூப்புடறீங்க?' என்று அலுத்துக் ...டதில் ஒரு படத்தில் இரண்டாம் கதாநாயகியாக்கி ...ளத்தில் இரண்டு பீஸ் உடையுடன் இறக்கி ஒரு ... கொடுத்ததில்...காவ்யா கனவுக் கன்னியா

பிறகு கிளாமர் கதாநாயகி என்றால் காவ்யாதா என்றானாள். அவள் உடல் கவர்ச்சியை விதவிதமா வெளிப்படுத்துவது எப்படி என்று நட்சத்திர ஹோட்ட களில் அறையெடுத்து மட்டன் சாப்பிட்டுக் கொண்டு ம டையை உடைத்துக் கொண்டார்கள்.

ஒரு கட்டத்தில் எந்த சினிமா பத்திரிகையை எடுத்த லும் அதன் மையப் பக்க 'ப்ளோ-அப்'பில் காவ்யாதான் காவ்யாவை புகைப்படம் எடுப்பதென்றால் போட்டே கிராஃபர்களுக்கு குஷி. முகம் சுளிக்காத ஒத்துழைப்பு!

''அப்படியே லேசா குனிஞ்சா நல்லாருக்கும்''

''அந்த முதல் பட்டனை மட்டும் கொஞ்சம்...''

''ஒரு டவல் மட்டும் கட்டிக்கிட்டு வரமுடியுமா?''

''இன்னும் கொஞ்சம் லோ ஹிப்புல''

காவ்யாவின் படம் போட்டு பீடி விற்றார்கள். பா விற்றார்கள், குளிர் பானங்கள் விற்றார்கள். காவ்ய விளம்பரத்திற்கு போஸ் கொடுத்ததில் ஒரு மதுக் கம்பெ யின் விற்பனைக்கோடு செங்குத்தாய் எகிறியது.

நகைக்கடைகளும், துணிக்கடைகளும் திறந்து வை தாள் காவ்யா. நட்சத்திர இரவு நிகழ்ச்சிகளில் காவ்ய மேடைக்கு வந்தபோது கை தட்டல்களும், விசில்களு அடங்க ஐந்து நிமிடங்களாயின. ஒரு கிரிக்கெட் நிகழ்ச் யில் காவ்யா உபயோகித்த கிரிக்கெட் பேட்டை ஒரு ல சத்துப் பத்தாயிரத்துக்கு ஏலத்தில் விட்டார்கள்.

தமிழகத்தின் தினசரி வாழ்க்கையில் காவ்யா தவிர்க் முடியாத ஒன்றாக எங்கும் குறுக்கிட்டாள். புத்தகங்களி கட்-அவுட்களில், விளம்பரங்களில்...போஸ்டர்களில், செய்தித்தாள்களில்...ரேடியோவில் சிறப்பு தேன் கிண்ண களில்...தொலைக்காட்சி பேட்டிகளில்...

மஞ்சள் வெளிச்சத்தின் வருடலில் கம்பீரமாக பவ வந்து கொண்டிருந்த காவ்யாவின் புகழ் இரண்டு நிகழ் களில் தொபுக்கடீர் என்று கவிழ்ந்தது.



ஒன்று : காவ்யாவின் தற்கொலை முயற்சி!

செய்தித்தாள்களில் படித்து ரசிகர்கள் துடித்துப் போனார்கள். சிகிச்சையளிக்கப்பட்ட ஆஸ்பத்திரி வாச லில் ஒரு ராத்திரி முழுக்க ஆயிரக்கணக்கில் கலையாமல் காத்திருந்தார்கள்.

காப்பாற்றப்பட்ட காவ்யா பிரஸ் மீட்டில் ''காதலும் இல்லை அதில தோல்வியும் இல்லை. ரொம்ப டயர்டா இருந்தா தூக்க மாத்திரை போட்டுக்கிட்டுத் தூங்குவேன். பத்து நாலு மாத்திரையா போட்டுக்கிட்டேன். வீட்ல இருந்தவங்க காபரா பண்ணிட்டாங்க...'' என்றாள்.

ஆனால் அடுத்த வாரமே செய்தித்தாள்களில் 'காவ்யா ரகசிய திருமணம்!' என்ற தலைப்புச் செய்தி அவள் பேட்டியில் சொன்னதெல்லாம் பொய் என்று விளம்பரப் படுத்தின.

மறுபடி பத்திரிகையாளர்களை அழைத்து விருந்து கொடுத்து கோட் சூட்டில் இருந்தவனை அறிமுகப்படுத்தி னாள் காவ்யா.

''இவர்தான் என் கணவர். ராகேஷ். தேயிலை ஏற்று மதி பண்றார். ரகசியமா காதலிச்சோம். அவர் வீட்ல எதிர்ப்பு இருந்தது. அதனால யாருக்கும் சொல்லாம ரகசியமா கல்யாணம் செய்துகிட்டோம். இனிமே நான் நடிக்கப் போறதில்லை''

அதற்குப் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக காவ்யாவை மறந்து போனார்கள். பத்திரிகைகாரர்கள் மட்டும் அவ்வப்போது 'காவ்யா தாயானார். பெண் குழந்தை என்றும்'...'இதுதான் காவ்யாவின் குழந்தை என்றும்' செய்திகள் எழுதின. காவ்யாவாகிய துர்காவாகிய மது மிதா இனியா இவர்களின் தாயாகிய அவள் கீழே இறங்கி ஹாலுக்கு வந்த போது பீடாவை குதப்பிக் கொண்டிருந்த கஸ்வர் ரிசீவரை அவளிடம் நீட்டியபடி

''சினிமா நிருபர் பாலாஜியாம். உன்கிட்ட பேசணுமாம் '' என்றார்.

''ஹலோ துர்கா பேசுகிறேன்.''

''வணக்கம்மா...மதுமிதா கல்யாணம் பண்ணிக்கப் போறதைப் பத்தி விரிவா எனக்கு பேட்டி கொடுத்தாங்க. அதைப் பத்தி உங்க கருத்து என்னம்மா?''

''அதெல்லாம் சும்மா விளையாட்டுக்கு சொல்லிட்டிருக்கா. அவளுக்குக் கல்யாணம் எதுவும் நடக்கப்போறதில்லை. வெச்சிடுங்க'' என்றாள் கடுமையாக துர்கா.

# 4

'கீழே கேழ்வியக் கேட்டு காஷைழேழந்து பழிஷைழந்து போன் வந்துட்ச்சா'' என்றார் ஈஸ்வர்.

''ஒரு எழவும் புரியலை. முதல்ல துப்பிட்டு வந்துப் பேசுங்க என்றாள் துர்கா சோபாவில் அமர்ந்தபடி.

ஈஸ்வர் அந்த உத்தரவை செயல்படுத்த மூலை வாஷ் பேசினுக்குப் போய்த் திரும்பினார்.

மறுபடி ஒலித்த ஃபோனைக் காட்டி...''இது பதினாறாவது ஃபோன். மதுமிதா கல்யாணம் பண்ணிக்கப் போறாங்களாமே. அப்படியா? எல்லா போன்லயும் இதே கேள்விதான். நான் பேசட்டுமா. நீ பேசறியா?''ரிசீவரை எடுக்கப்போன அவரைக் கையமர்த்தி துர்கா எடுத்தாள்.

''ஹலோ'' என்றாள்.

''வாட் மம்மி? வாட் நான்சென்ஸ்-இஸ் கோயிங் ஆன்...?''

''என்ன இனியா சொல்லு''

''என்னாச்சு அக்காவுக்கு? ஷூட்டிங்ல நாய் எதுவும் கடிச்சிடுச்சா...? டாக்டர்கிட்டே அழைச்சுக்கிட்டுப் போயி தொப்புளைச் சுத்தி ஊசி போடு மம்மி... கிடந்து இப்படி குரைக்கிறாளே!''

''என்னா சொன்னா?''



''என் படிப்பை நிறுத்தப் போறாளாம். சுவிட்சு போட்டா எரியறதுக்கும் அணைஞ்சுக்கறதுக்கும் என்னை என்ன டியூப்லைட்னு நினைச்சாளா? மனுஷியம்மா நானு! ரெண்டு கையி ரெண்டு காலோட சேர்த்து ஒரு மூளையும் கொடுத்திருக்கான் யோசிக்கிறதுக்கு தெரியும். இல்லை.''

''இப்ப எதுக்கு திடீர்னு உன் படிப்பை நிறுத்தணும்?''

''உனக்கு காரணம் தெரிஞ்சிருக்குமோன்னுதான் உன்னைக் கூப்பிட்டேன். உனக்கு விஷயமே தெரியாதா?''

''இப்பல்லாம் எந்த விஷயத்துக்கும் என்னைக் கலந்து ஆலோசிக்கிறதே இல்லைன்னு வெச்சிருக்கா உங்கக்கா''

''அதுக்கெல்லாம் கொஞ்சம் நன்றி விசுவாசம் இருக்கணும் மம்மி. நீ ஃபோன் பண்ணி எத்தனை படக்கம்பெனி ஏறி இறங்கி அவளை இண்டஸ்ட்ரில நுழைச்சிவிட்டேன்னு எனக்கு இருக்கிற அளவுக்கு அவளுக்கு ஞாபகம் இல்லாமல் போச்சே. நைட் என்னை வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கா.''

''எதுக்கு?''

''ஃபோன்ல சொன்ன ஒரு வரித் தீர்ப்புக்கு ஒரு மணி நேரம் விளக்கம் சொல்வா. கோர்ட்சீன் மாதிரி பாய்ண்ட் பாய்ண்டா சொல்வா... நான் குற்றவாளிக் கூண்டுல நிக்கிற விசாரணைக் கைதி மாதிரி கைகட்டி நிக்கணும். ஏதாச்சும் விளக்கம் சொல்ல வாயெடுத்தாலும், 'உஷ்! கேட்ட கேள்விக்கு பதில்! அப்படின்னு. மிரட்டுவா! உதவிக்கு நீயும் வர மாட்டே! ஈஸ்வர் சித்தப்பாவும் வரமாட்டாரு! ரெண்டு பேரும் டவாலி மாதிரி நிப்பீங்க.''

''எங்கிட்டே இவ்வளவு பேசற நீ அவ சொன்னப்ப ஏன் வாயை மூடிக்கிட்டு இருந்த? எதுக்காக நான் படிப்பை நிறுத்தணும்னு கேக்க வேண்டியதுதானே வாயில என்ன பிள்கம் இருந்திச்சா?''

''என்னை எங்க பேசவிட்டா? ஜஸ்ட் எ டெலிகிராபிக் கான்வர்சேஷன்! மம்மி சொல்லிட்டேன். அவ இஷ்டத்துக்கு நீங்க ரெண்டு பேரும் வேணும்னா தலையை ஆட்டிக்கிட்டு இருங்க. நான் இனிமே அவ பேச்சை

கேட்டுக்கிறதா இல்லை. என்ன வீட்டை விட்டு வெளில போகச் சொல்லுவாளா? போய்க்கிறேன்.''

''ஏன் இனியா இப்படியெல்லாம் பேசறே! நீ உன் சொந்தக் கால்ல நிக்கிற வரைக்கும் அவளை அனுசரிச்சுத் தான் போயாகணும்''

''டேம் இட்! தெருமுனையில கம்பி கட்டி நடந்து வித்தை காட்டி பொழைப்பேன்னு நினைச்சியா? விஷ்வா நூறு தடவை கெஞ்சிக் கெஞ்சிக் கூப்புட்டான் தெரியுமா? நான்தான் பிடிவாதமா மறுத்துக்கிட்டு இருக்கேன்.''

''யாரு விஷ்வா? எதுக்குக் கூப்புடுறான்?''

''எல்லாரையும் மறந்துடுவியே! என் பர்த்டே அன்னைக்கு அட்வர்டைஸ்மெண்ட் ஏஜன்சி நடத்தறான்னு ஒரு ஃபிரண்டை இண்ட்ரட்யூஸ் பண்ணேன். விரல்ல கூட 'வி இன்ஷியல்ல வைர மோதிரம் போட்டுருந்தானே''

''கெச்சலா, ஃபிரன்ச் தாடி வெச்சிட்டிருந்தானே, அவனா?''

''அய்யோ! அது ப்ரேம்சந்த்! சரி, விடு! அந்த விஷ்வா என்னை மாடலிங் பண்ணு பேபின்னு ஒரே தொந்தரவு! கூப்புட்டு யெஸ்னு ஒரு வார்த்தை சொன்னாப் போதும்... ஈஃபிள் டவர் உயரத்துக்கு என்னை எங்கேயோ கொண்டு போய்டுவான். மாடலிங் பண்ணட்டுமா, சொல்லு.''

''எங்கிட்டே. ஏண்டி பாய்றே? நானா உன்னைப் படிப்பை நிறுத்தச் சொன்னேன். ராத்திரி வரச் சொல்லி யிருக்கா இல்லே, வந்து அவகிட்டே பேசு!''

''வர்றேன். பேசறேன். அப்ப நான் சொன்ன இந்த பாய்ண்ட்ஸ் எல்லாம் மறந்து போச்சுன்னா நீ எடுத்துக் கொடு! எட்டு மணிக்கு வர்றேன். என்ன டின்னர் இன்னைக்கு வீட்ல?''

''நீ அங்கேயே சாப்டுட்டு ஒம்போது மணிக்கு வா... நாங்க எல்லோரும் ஒரு ஆர்ட்டிஸ்ட்டோட கல்யாண ரிசப்ஷனுக்குப் போறோம்.''

''அக்காவுமா?''

''ஆமாம்''



''சரி, இதென்ன புதுசா கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு பேட்டி கொடுத்திருக்கா? பப்ளிசிடி டல்லடிக்குதா என்ன?''

''எனக்கு ஒண்ணும் புரியலைம்மா. பத்திரிகைக் காரங்க ஃபோனுக்கு மேல் ஃபோனா கேட்டுத் துளைக்கிறாங்க. பதில் சொல்லி மாளலை. அதைப் பத்தியும் இன்னைக்கு அவகிட்டே பேசியாகணும். நேர்ல பேசிக்கலாம். வெச்சிடவா?''

''ஒண்ணே ஒண்ணு சொல்லிடறேன். கேட்டுட்டு வையி.''

''என்ன?''

''எனக்கு வயசு பதினெட்டு தாண்டியாச்சு...?''

''அதுக்கென்ன?''

''சட்டப்படியும் நான் மேஜர்''

''எதுக்கு இப்போ சட்டம் கிட்டம்னு பேசிக்கிட்டு''

''அவசியப்பட்டா ராத்திரி இதுக்கு மேலயும் பேசுவேன். அப்ப உனக்கு திக்குன்னு இருக்கக்கூடாதேன்னு தான் இப்பவே தயார்படுத்தறேன். வெச்சிடு''

பெருமூச்சுடன் வைத்தாள் துர்கா.

''என்னவாம்?'' என்றார் ஈஸ்வர். வெள்ளி டம்ளர்கள் இரண்டை மெலிசான காகிதத்தில் சுற்றி அட்டைப் பெட்டியில் வைத்து, அதை பூக்காகிதம் போட்டுச் சுற்றி சலஃபன் கட் செய்து ஒட்டியபடி....

''திடீர்னு சின்னவ படிப்பை நிறுத்தப் போறேன்னு குதிச்சாளாம்''

''இங்கிலீஷ்ல ஒரு பழமொழி இருக்கு''

''பரவாயில்லை தமிழ்ல்லே சொல்லுங்க''

''நமக்கு ரொம்ப பிடிச்ச ஒரு விஷயமே, ஒரு எல்லையில வெறுப்பா மாற ஆரம்பிச்சிடுமாம்''

''அந்த மாதிரி?''

''மதுவுக்கு மூஞ்சில பான்கேக் பூசிப்பூசி அலுத்துப் போயி, மஞ்சள் பூசிக்கலாம்னு ஆசை வந்துடுச்சோ?''

''முட்டாள்தனமா மாத்திச் சொல்றீங்க. மஞ்சள் பூசிக்கணும்னு ஆசை வந்ததால பான்கேக் மேல வெறுப்பு வந்திருக்குங்க!''

''சரி, செட்டில் ஆயிட்டுப் போறா, விட்டுடுவமே?''

''பேத்தாதீங்க! படம் பாதில நிக்குது. அடுத்த வாரம் காரைக்குடில எடுக்கப் போற சாங்குக்கு மட்டும் எழுநூறு ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்ஸ் கேட்ருக்காரு டைரக்டர் உரலுக்குத் தலையைக் கொடுத்துட்டு இடி வாங்கிட்டு இருக்கேன். ஏழு படம் ஹிட் கொடுத்தவனாச்சேன்னு கதையும் கேக்காம, ஒண்ணும் கேக்காம புக் பண்ணித் தொலைச்சுட்டேன். ஹீரோ ஒரு தும்மல் போடறதுக்குக் கூட அதை சிவகெங்கைக்கு நாற்பது கிலோ மீட்டர் தள்ளி லொக்கேஷன் பிடிக்கிறாரு. இந்தப் பாட்டுக்கு மட்டும் பட்ஜெட் பதினாலு லட்சம் ஆகுது தெரியுமில்லே? இவ பாட்டுக்கு கல்யாணம் கச்சேரின்னு செட்டில் ஆய்ட்டான்னா சிமன்லாலுக்கு யாரு செட்டில் பண்றது? பெட்டியைத் தூக்கிட்டு பிளாட்பாரத்துக்குப் போய் போஸ்டர் ஒட்டிப் பிழைச்சுக்கலாமா? அப்படி எதுவும் அபிப்பிராயம் இருக்கா?''

ஈஸ்வர் பேக் செய்து முடித்த பரிசுப் பார்சலின் மேல் அமைதியாக தாளம் போட்டார்.

''என்ன பேச்சையே காணோம்?''

''நான் எதுவும் சொல்லலை. எங்கிட்டே எகிறுவே நீ''



''சும்மா சொல்லுங்க. தொண்டை வரைக்கும் வெச்சிருக்கிறதைத் துப்பிடுங்க!''

''படம் தயாரிக்கிற வேலை எல்லாம் நமக்கு வேணாமான்னு மதுமிதா நூறு தடவையாவது சொல்லிச்சு. நாம கேட்டமா?''

''படம் முடியட்டும். அவுட்ரைட்ல வித்து ஒரே சமயத்தில ரெண்டு கோடி ரூபாயை அவமுன்னாடி கொண்டாந்து அடுக்கறேன். அப்ப தெரியும் என் சாமர்த்தியம். பணம் சம்பாரிக்கிறதுன்னா சும்மாவா? சிரமப்பட்டுதான் ஆகணும். விதை போடாமலே செடி முளைக்க வைக்க முடியுமா என்ன?''

''அப்புறம் ஏன் அலுத்துக்கறே?''

''அநாவசியமா செலவாகுதேன்னு கோபம் வருது. கோபப்பட வேண்டிய விஷயத்துக்கு கோபப்படலைன்னா உப்பு போட்டு சோறு திங்கிறதுக்கு அர்த்தமே இல்லைங்க!''

''நான் எதுக்குச் சொல்றேன்னா?''

''கார் சத்தம் கேக்குது வாயை மூடுங்க முதல்ல!''

சுமதி தொடர மதுமிதா வீட்டுக்குள் வந்ததும் உஷ்ண அலை மாறி, தென்றலாக துர்கா சிரித்தாள்.

''என்ன மதுமிதா இப்படி வேர்த்திருக்கு? ஏண்டி சுமதி வண்டியில ஏ.சி. போடச் சொல்லலையா?''

''நான் குளிச்சிட்டு டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வந்துடறேன். ரிசப்ஷனுக்கு டயமாச்சாம்மா?''

மாடிப்படி ஏறிக்கொண்டே துள்ளி வந்த புசுபுசு நாயைத் தூக்கித் தடவிக் கொண்டே கேட்டாள் மதுமிதா.

''நீ மெதுவா வாம்மா கண்ணு. நாம போறதே அவளுக்கு கௌரவம்தான்'' என்றாள் துர்கா.

ஃ ஃ ஃ

ரிசப்ஷனில் கார்கள் வழிந்தன.

பார்க் செய்ய பதினைந்து நிமிடங்களாயின.

''ஐ மதுமிதாடி! மதுமிதாடா!'' என்று உற்சாக ரகசிய குரல்கள் அங்கங்கே ஊடுருவி தலைகள் இவள் திசையில் திரும்பின. வீடியோ கிராஃபர்கள் ஓடி வந்தார்கள். ஒரு மாமா...பரபரப்பில் நாற்காலியில் தடுக்கி விழுந்தார். ஆங்காங்கே டி.வி.க்களில் மதுமிதா கூந்தல் கற்றையை ஒதுக்கியபடி மேடை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

மணப்பெண் கையில் பார்சலைத் திணித்து போட்டோவுக்கு நின்றபோது இருபது ஃபிளாஷ்கள் மின்னின.

''சாப்டுட்டுத்தான் போகணும் மது''

''கண்டிப்பா''

''சுபாஷ் வந்திருக்கார்''

''எங்க?''

மணப்பெண் கட்டிக் காட்டிய திசையில் சுபாஷ் தன்னைச் சுற்றி நீட்டப்பட்ட ஆட்டோகிராஃப் நோட்டுகள், திருமண வாழ்த்து அட்டைகள், ரூபாய் நோட்டுக்கள் பஸ் டிக்கெட்டுக்களில் பொறுமையாக கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந்த மதுமிதா புன்னகையுடன் அவன் திசையில் நடந்தாள்.

## 5

சுபாஷை மதுமிதா நெருங்கியதும், கையெழுத்து வேட்டைக்காரர்கள் அவள் பக்கம் தாவினார்கள்.



நாற்காலியில் அமர்ந்து பொறுமையாக கையெழுத்துப் போடத்துவங்கினாள்.

''எப்படி இவ்வளவு அழகா இருக்கீங்க?''

''பூ மாதிரி இருக்கீங்க.''

''இது நிஜமா இல்லை விக்கா?''

''ஆமாம். உங்களுக்கு என்ன வயசு?''

புன்சிரிப்பைத் தவிர வேறெதையும் பதிலாகத் தர முடியாத கேள்விகள் அவளை மொய்த்தன.

ஏதாவது பேச வேண்டும். பதில் ஒரு பொருட்டல்ல. அந்தக் கேள்வி அவள் கவனத்தை ஈர்த்தால் போதும். அந்த புன்சிரிப்பு பதிலே எதேஷ்டம். பிரபல இசை அமைப்பாளரின் இன்னிசை கச்சேரி துவங்கிவிட...ரசிகர்களிடமிருந்து நழுவி, மொட்டை மாடி ஷோமியானா அடியில் தட்டுகளில் வேண்டியதை எடுத்துப் போட்டுக் கொண்டு ஒதுங்கி நின்றார்கள் மதுமிதாவும், சுபாஷும்.

அவள் அந்த ஹார்ட்டீன் வடிவ கட்லெட்டை துண்டு போடுவதில் கவனமாய் இருந்தாள்.

''இப்பல்லாம் பழைய மதுமிதாவைப் பார்க்க முடிவதில்லை!''

குளோப்ஜாமூன் சுவைத்தபடி கேட்ட சுபாஷை நிமிர்ந்து பார்த்தாள் மதுமிதா.

''என்ன சொல்றீங்க சுபாஷ்?''

''வேலியோரத்துப் பூக்கள் படம்தானே நீயும், நானும் சேர்ந்து பண்ணின முதல் படம்?''

''ஆமாம்.''

''அந்த ஷூட்டிங்ல எவ்வளவு பேசின தெரியுமா நீ ஒரு உற்சாகப் புயலா இருந்தே? நீ சிரிக்கிற சத்தம் செட

டுக்கு வெளில கேட்கும். எல்லார் கிட்டேயும் ஏதாச்சும் ஒரு குறும்பு பண்ணிட்டு இருப்பே, 'மதுமிதா வருது, ஒளிஞ்சுக்குங்க...கடி ஜோக் சொல்லி அறுத்திடும்'னு கிண்டல் செய்வோம். என்ன ஆச்சு இப்ப?''

''ஏன், நான் எப்பவும் போலத்தானே இருக்கேன் சுபாஷ்?''

''பொய்! புஸ்தகத்தைத் தூக்கிட்டு உட்கார்ந்துடறே! யார்கிட்டேயும் நாலு வார்த்தைக்கு மேல பேசறதில்லை''

''எதையும் யோசிக்கலைன்னா, பிரச்னை இல்லை சுபாஷ். யோசிக்க ஆரம்பிச்சிட்டா, எல்லாமே அபத்தமாப் படுது! இந்த வாழ்க்கை, நடிப்பு...நடிப்புக்குள்ளே ஒரு நடிப்பு...எல்லாம்!''

''இது வேதாந்தமா. இல்லை விரக்தியா?''

''ரெண்டுமில்லை. பாடம்! அனுபவம் தந்த பாடம்''

''கமான்யா! என்னாச்சு? இந்த வருஷம் அவார்டு எதுவும் எதிர் பார்த்து கிடைக்கலையா? இல்லை எவனாச்சும் பெருசா செக் கொடுத்து பவுன்ஸ் ஆயிடுச்சா?''

''அதெல்லாம் இல்லை. திடீர்னு போதும்னு தோணிடுச்சி''

''போதும்னா?''

''இந்த சினிமா வாழ்க்கையைச் சொல்றேன்.''

''ஏன்?''

''வேற மாதிரி வாழ்க்கைக்கான தாகம்தான்'' காரணம்.''

''புரியலை''

''யோசிச்சா இது ஒரு மாயைதான். நம்ம மனசு இருக்கே அதைமாதிரி தந்திரம் பண்றதுக்கு யாராலயும்



முடியாது. அதுக்கு ஏதாச்சும் ஒருகுறை இருந்துக்கிட்டே இருக்கும்.''

''மதுமிதா மாதிரி ஒரு வாழ்க்கை அமையாதான்னு எத்தனை லட்சம் பேரு ஏங்கிட்டிருக்காங்க தெரியுமா?''

''தெரியும். அதே மாதிரிதான் என் ஏக்கமும், நிறைய உழைச்சிட்டேன் சுபாஷ். என் சம்பாத்தியம் எதுக்காகன்னு புரியலை. மேலமேல பணம் குவிச்சி, என்ன பண்ணப் போறேன்னு தெரியலை. அதான்...விலகிட்டு, வீட்ல உட்கார்ந்துடலாம்னு யோசனை. புருஷன் எப்ப வருவான்னு காத்துக்கிட்டு வீட்ல இருக்கிற ஒரு குடும்பப் பெண்ணுக்கு பாசத்தைத் தவிர வேற சிந்தனையே இருக்காது. சுபாஷ். சம்பாதிக்கிற பொறுப்பை இறக்கி வெச்சிடணும் ஒரு ஸ்டேஜ்ல. இல்லைன்னா எல்லாக் கனவுமே கனவாத்தான் இருக்கும்.''

சுபாஷ் சென்று தயிர்சாதம் எடுத்துப் போட்டுக்கொண்டு வந்து ''எதுக்கு பணம்னு கேக்கறே! அதேசமயம் பெரிய பட்ஜெட்ல படம் எடுத்திட்டிருக்கே! முரண்பாடா இல்லை?'' என்றான்.

''அது என் அம்மா செய்ற வேலை! என்பேரை புகழை கடைசி சொட்டு வரைக்கும் காசாக்கணும் அவளுக்கு.''

''அப்படி என்ன வெறி அவங்களுக்கு?''

''தோத்துப்போன வெறி! தான் சம்பாதிச்சது எல்லாத்தையும் இழந்து நின்னாங்க! அதில பணம்மேல ஒரு வெறி வந்து அநியாயத்துக்கு துரத்திட்டிருக்காங்க. எங்க ரெண்டு பேர் அலைவரிசையும் வெவ்வேற சுபாஷ்! தினம் வீட்ல ஒரு போராட்டம்தான். என்னைக் கேக்காம அவங்க பாட்டுக்கு புதுப் படத்துக்கு ஒத்துக்கிட்டு அட்வான்ஸ் வாங்கிடுவாங்க''

சுபாஷ் திறந்ததும் இனிமையாக இசை எழுந்த சிகரெட் கேஸிலிருந்து ஒன்றை எடுத்துக்கொண்டு அவளிடம்

நீட்டினான். மதுமிதா ஒன்றை எடுத்துக் கொண்டாள். இரண்டுக்குமாகப் பற்ற வைத்தான்.

''ஸோ...?'' என்றான் புன்னகைத்தான்.

''ஸோ?'' என்று திருப்பிக் கேட்டாள்.

''எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறே?''

''சீக்கிரத்தில''

''யாரு தேவகுமாரா?''

''பார்த்தீங்களா. பத்திரிகைகாரன் மாதிரி கேக்கறீங்களே?''

''ஓ.கே. நான் கேக்கலை.'.

''சுபாஷ் என் கல்யாணத்துல உங்க உதவி வேணும்.''

''ஷ்யூர். என்ன செய்யணும்? தோரணம் கட்டணுமா?''

''விளையாடதீங்க?''

''சீரியஸ்! சொல்லு. என்ன பிராப்ளம்?''

''அம்மாதான் பிராப்ளம்''

''நான் பேசி கன்வின்ஸ் செய்யட்டுமா?''

''யார் பேசினாலும் அவங்க கன்வின்ஸ் ஆகமாட்டாங்க?''

''பின்னே?''

''படப்பைல உங்களுக்கு ஒரு ரெஸ்ட் ஹவுஸ் இருக்குது இல்லே. உள்ளேயே சலவைக்கல்லுல பிள்ளையார் கோவில் எல்லாம் வெச்சு...இன்னும் உங்ககிட்டதானே இருக்கு... வித்துடலையே...?''



''விலைக்கு வேணுமா? தனிக்குடித்தனமா? டேக்இட்! இப்ப நான் அங்க போறதில்லை.''

''விலைக்கு வேணாம். உபயோகத்துக்கு வேணும். அந்த கோயில்ல உங்க முன்னிலைல நான் கல்யாணம் பண்ணிக்க நினைச்சிருக்கேன். அந்த பங்களாவுல கல்யாணம் முடிஞ்சதும் பத்திரிகைக்காரங்களை கூப்புட்டு விருந்து கொடுக்கணும்னு திட்டம்.''

''தாராளமா! தாராளமா! எவ்வளவு பெரிய நல்ல காரியம். தாராளமா எடுத்துக்கம்மா...எத்தனை நாள் வேணும்னாலும் நீ யூஸ் பண்ணிக்கலாம். வாட்ச்மேனுக்கு போன் பண்ணிச் சொல்லிடறேன். எப்ப வேணாலும் நீ போகலாம்.''

''ரொம்ப தேங்க்ஸ் சுபாஷ்!''

''சரி எப்போ?''

''சீக்கிரத்தில்...முழுக்க பிளான் பண்ணிட்டு நான் அவரோட வந்து உங்களைப் பார்க்கறேன். அறிமுகப்படுத்தி வைக்கிறேன். அதுவரைக்கும் இந்த மேட்டரைப் பத்தி யார் கிட்டேயும் டிஸ்கஸ் பண்ணிடாதீங்க ப்ளீஸ்''

''அந்த வாக்குறுதி மட்டும் என்னால தரமுடியாது. தூரத்தில என் பொண்டாட்டி நம்மையே பார்த்துக்கிட்டு சாப்பிட்டுக்கிட்டு இருக்கா. வீட்டுக்குப் போனதும் 'என்ன பேசினீங்க...அவ்வளவு நேரம்'னு கேப்பா...கஷ்டப்பட்டு பொய் சொல்றதா?''

''சரி அவங்ககிட்ட மட்டும் சொல்லுங்க'' என்றாள் மதுமிதா.

''அவ்வளவு நேரம் அந்த சுபாஷ்கிட்டே அப்படி என்ன பேசிட்டிருந்தே?'' என்றாள் துர்கா பாலிதீன்

பையைக் கிழித்து பீடா எடுத்துப் போட்டுக் கொண்டபடி.

காரின் ஜன்னலுக்கு வெளியே ஓடுகின்ற நியான் வெளிச்சங்களைப் பார்த்தபடி வந்த மதுமிதா திரும்பி ''ஷூட்டிங்ல நடந்த ஒரு கலாட்டா பத்தி பேசிட்டிருந்தோம்மா.'' என்றாள். வீட்டிற்கு வந்தபோது இனியா காத்திருந்தாள்.

மதுமிதா பட்டுப்புடவையிலிருந்து நைட்டிக்கு மாறியதும் குரல் கொடுத்து அவளை அழைத்தாள்.

இனியா அவள் அறைக்குள் வந்து, ''என்னக்கா?'' என்றாள்.

மதுமிதா சோபாவில் அமர்ந்தபடி, ''உக்காரு'' என்றாள்.

''பரவாயில்லை, சொல்லு''

''சாப்ட்டியா?''

''சாப்டேன் சொல்லு''

''யார் அது ஆகாஷ்?''

''ஏன்? என் ஃபிரண்டு.''

''உனக்கு படிப்புல அக்கறை இல்லையா?''

இனியா மௌனமாக இருந்தாள்.

''சொல்லுடி! உனக்கு என்னை மாதிரி நடிகையாகணும்னுதான் ஆசையா? வாயைத் திறந்து சொல்லு!''

'ஏன் அப்படி ஆசைப்படக் கூடாதா?' முனகினாள் இனியா.



சில வினாடிகள் அவளை அமைதியாகப் பார்த்துக் கொண்டு இருந்து விட்டு ''போய் கதவை சார்த்திட்டு வா சொல்றேன்.'' என்றாள் மதுமிதா.

# 6

மதுமிதா தனது நகங்களில் பூசியிருந்த பிங்க் நிற பாலீஷை ரிமூவர் கொண்டு துடைத்தபடி நிமிர்ந்து எதிரே நின்ற இனியாவைப் பார்த்தாள்.

''கதவை சாத்திட்டு வா இனியா!'' என்றாள் மதுமிதா.

''எதுக்கு?'' என்றாள் இனியா.

''எல்லாத்துக்கும் காரணம் கேட்கணுமா?''

அந்த அதட்டலில் அவசரமாகச் சென்று அறையின் கதவைத் தாழிட்டுவிட்டு வந்தாள்.

'நம்ம வீட்டுக்குள்ளே வேற யாரு இருக்காங்க? அப்படி என்ன ரகசியம் பேசப் போறோம்?' தனக்குள்ளே முனகிக் கொண்டாள்.

''ஹாஸ்டல்லயே வளர்ந்துட்டே இனியா நீ! உனக்கு அனுபவம் பத்தாது. வீட்டுக்குள்ளே நெருக்கமா இருக்க வேண்டியவங்களே, வேற யாரோ மாதிரி நடந்துக்கற கொடுமை எல்லாம் நீ அனுபவிச்சுப் பார்க்கலை. உக்காரு''

அமைதியாக அமர்ந்தாள். தன் அக்காவைப் பார்த்தாள்.

'அப்படி என்ன பிரமாதமான அழகு?'

கொஞ்சம் சிவப்பு. அகலக் கண்கள்.

இணைக்கப்பட்ட இமைகள். செதுக்கின புருவங்கள். உப்பல் கன்னங்கள். சராசரி அழகுதான். தெருவுக்கு இரண்டு பெண்கள் இந்த மாதிரி இருப்பார்கள். பிறகு ஏன் உலகம் இவளை கொண்டாடுகிறது? 'என் தேவதையே' என்று துவங்கி ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கடிதம் எழுதுவது எப்படி? பத்திரிகை ஆசாமிகள் கூட கேள்விபதில் பகுதிகளில்மதுமிதாவை அழகுப் பெட்டகம், வரம் வாங்கி வந்தவள் அது இது என்று புகழ்வது எதனால்?

அதிர்ஷ்டம்! அது ஒன்றுதான் காரணம். இதோ... வீட்டில் எந்த ஒப்பனையும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் இந்த நிலையில் ஒரு புகைப்படம் எடுத்து வெளியிட வேண்டும். அப்போதும் ரசிப்பார்களா என்ன?

இனியா இந்த ரீதியில் யோசித்துக் கொண்டிருக்க...

''என்ன யோசிக்கிறே நீ?'' என்றாள் மதுமிதா.

''சொல்ல மாட்டேன்''

''ஏன்?''

''சொன்னா உனக்கு கோபம் வரும்''

''பரவாயில்லை சொல்லு''

''என்ன பெரிய அழகி நீன்னு ஊர்ல, தலையில தூக்கி வெச்சிக்கிட்டு ஆடறாங்கன்னு யோசிச்சுப் பார்த்தேன்.''

மதுமிதாவுக்கு சிரிப்பு வந்துவிட்டது.

அக்கா இதற்கு சிரிப்பாள் என்று தங்கை எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாகப் பார்த்தாள்.

''யோசிச்சதில விடை கிடைச்சுதா?''

''ம்...''

''என்ன அது?''



''எல்லாம் நேரம்தான்! ஜனங்களுக்கு ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொருத்தரை உச்சில உக்கார வெச்சி ஆராதனை செய்யணும். இந்த பீரியட்ல அதிர்ஷ்ட மாலை உன் கழுத்தில விழுந்திருக்கு...தட்ஸ் ஆல்''

மதுமிதா மறுபடி சிரித்தாள்.

''ஏன் சிரிக்கிறே?''

''உனக்கு இப்படியெல்லாம் கூட யோசிக்கத் தெரிஞ்சிருக்கேன்னு நினைக்கிறப்ப சிரிப்புதான் வந்துச்சு.'' என்றவளின் முகம் சட்டென்று கடுமையாகி,

''ஆகாஷோட எந்த அளவுக்கு உனக்குப் பழக்கம்?'' என்றாள்.

''என்னது திருப்பித் திருப்பி அதையே கேட்டுக்கிட்டிருக்கே! ஆகாஷ் என் ஃபிரண்ட்ஸ்ல ஒருத்தன். தட்ஸ் ஆல்.''

''ஐ...ஸீ...''

''எதுக்குக் கேட்டே?''

''அக்கறை!''

''என் மேலயா? உனக்கா? நான் நம்பணுமா?''

''உன் மேல எனக்கு அக்கறை இல்லையா?''

''இருந்தா என் விருப்பத்துக்கு மரியாதை கொடுத்திருப்பே''

மதுமிதா படபடப்பாகப் பேசும் இனியாவை சில வினாடிகள் கூர்ந்து பார்த்தாள். கைகளைக் கட்டிக் கொண்டாள்.

''சரிம்மா. சொல்லு...உன் விருப்பம் என்ன?''

''நிச்சயமா படிப்பு என் விருப்பம் இல்லை!''

''ஏன்?''

''நான் கம்ப்யூட்டர் இன்ஜினியராகி என்னக் கிழிக்கப் போறேன்? எனக்கு என்ன சொத்து இல்லையா? வசதி இல்லையா?''

''அப்படியா? சொத்து இருக்கா உனக்கு?''

''ஏன் இல்லை? இந்த வீடு அம்மா பேர்லதானே இருக்கு? எனக்கு சரிபாதி உரிமை இருக்கே!''

''வீடு அம்மா பேர்ல இருக்கு. சரி, வீட்டுப்பத்திரம் எங்க இருக்குன்னு தெரியுமா உனக்கு?''

இனியா அதிர்ச்சியாகப் பார்த்தாள்.

''என்னக்கா சொல்றே?''

''போ! போய் அம்மாகிட்டே விபரம் கேட்டுட்டு வா.''

''நீ சொல்லு! இந்த வீடு இப்ப நம்மளோடது இல்லையா?''

''அடமானத்துல இருக்கு''

''ஏன்?''

''கோடிக்கணக்குல ஃபைனான்ஸ் பண்றவன் சும்மாத் தூக்கிக் கொடுப்பானா இனியா?''

''எதுக்கு அவ்வளவு கடன் வாங்கியிருக்கோம்?''

''உங்கம்மா சினிமா எடுத்துக்கிட்டிருக்கிறது தெரியாத மாதிரிப் பேசறியே''

''அதுக்கு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் கொண்டாந்து அட்வான்ஸ் கொடுக்க மாட்டாங்களா?''



''இனியா அரைவேக்காட்டுதனமா எதையாச்சும் தெரிஞ்சு வெச்சுக்கிட்டு ஏதேதோ கற்பனையில இருக்காதே!''

''சரி...அது எப்படியோ இருக்கட்டும். உன்னை நான் நேரடியாவே ஒண்ணு கேட்கட்டுமா?''

''கேளு அதுக்கு முன்னாடி நீயா கேக்கறியா இல்லை யாராச்சும் சொல்லிக் கொடுத்துக் கேக்கறியான்னு விபரம் சொல்லிடு''

''எனக்கு யார் என்ன சொல்லிக் கொடுக்கணும்?''

''இந்தத் திமிர்தான் வேணாம்னு சொல்றேன். சரி கேளு''

''நான் நடிகையாகணும்னு ஆசைப்படறேன். அதை நீ ஏன் தடுக்கறே?''

''அதைவிட நல்ல வழியை உனக்கு அமைச்சித் தரணுங்கறதுதான் என் ஆசை''

''பொய்! உனக்கு பயம்! நான் உள்ளே வந்துட்டா உன் மார்க்கெட் அவுட்டாயிடும்னு கவலை! நான் உன்னை முந்திக்கிட்டு மேலே போயிடுவேன்னு பொறாமை. அதானே!?''

''முட்டாள்த்தனமா பேசாதே!''

''இல்லை. அதான் உண்மை!''

''இப்ப நடிச்சிக்கிட்டிருக்கிற படங்களை முடிச்சிட்டு நான் இந்த இண்டஸ்ட்ரியை விட்டே விலகப் போறேன். அப்படி இருக்கிறப்ப நான் உன் மேல பொறாமைப்படறேன்னு அசட்டுத்தனமா சொல்றியே''

இனியா பேச்சில்லாமல் வெறித்தாள்.

''இன்னிக்கு நீ பேசறது எல்லாமே அதிர்ச்சியா இருக்குக்கா. நிஜமாத்தான் சொல்றியா?''

''ஆமாம். சத்தியம் செஞ்சாதான் நம்புவியா? உன் தலைல அடிச்சி சொல்லட்டுமா?''

''வேணாம். நம்பறேன். அப்போ நீ கல்யாணம் பண்ணிக்கப் போறதா பத்திரிகைகள்ல வர்ற விஷயம் பப்ளிசிடிக்காக செஞ்சது இல்லையா? எல்லாமே உண்மையா?''

''ஆமாம் இனியா தள்ளி நின்னு பார்க்கிறப்ப எந்த ஒரு விஷயத்திலயும் உள்ள குறைபாடுகள் தெரியாது. தூரத்திலேர்ந்து செடியைப் பார்த்தா ரோஜா மட்டும் தான் கண்ணுக்குத் தெரியும். அதைப் பறிக்கிறப்பதான் முள்ளு குத்தும். எனக்கு சரியானபடி வழி நடத்த யாரும் இல்லை. உனக்கு நான் இருக்கேன். முழுக்க முழுக்க அனுபவத்தோட நிக்கிறேன். அப்படியும் அழிச்சாட்டியமா பேசினா எப்படி இனியா? தன் தங்கை நல்லா இருக்கக்கூடாதுன்னு எந்த அக்காவாவது நினைப்பாளா? நான் கண்டிப்பா இருக்கிறதும் பேசறதும் உன் நல்லதுக்குத்தானே ஒழிய உன்னை அடக்கி வெச்சி வளர விடாம செய்யறதுக்காக இல்லை.''

மௌனமாக இருந்தாள் இனியா.

''சரி, உன்னை எதுக்காக வரச் சொன்னேன் தெரியுமா?''

''சொல்லுக்கா''

''நீ அந்த ஆகாஷோட ஊர் சுத்தறதாகவும் படிப்புல கொஞ்சம் கூட அக்கறை காட்டறதில்லைன்னும் எனக்குத் தகவல் வந்திச்சு. அதனாலதான் எச்சரிக்கை பண்றதுக்கும் எடுத்துச் சொல்றதுக்கும் வரச் சொன்னேன். உனக்கு எதிர்காலத்துக்கு உன் படிப்பு மட்டும்தான் கை கொடுக்கணும். நடிப்புங்கறது இந்தக் குடும்பத்தில என்னோட போகட்டும். புரிஞ்சுதா?''



அமைதியாக நிமிர்ந்து பார்த்தாள் இனியா.

''இனியா நீ நினைக்கிற மாதிரி ஒரு அம்மா நமக்கு அமையலை. அவங்களை எதிர்த்துத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கப்போறேன். அதுக்கப்புறம் அம்மா நிச்சயமா உன்னை நடிக்க வைக்கத் தீர்மானிப்பாங்க. அப்ப நீ முட்டாள்தனமா ஒத்துக்கக்கூடாது. எக்காரணம் கொண்டும் நடிக்கிற இந்தத் தொழிலுக்கு நான் வரமாட்டேன்னு நீ எனக்கு வாக்கு கொடுக்கணும். கொடுப்பியா?'' என்றாள் மதுமிதா.

# 7

இனியா மிரண்டு போனாள். தன் சகோதரி இப்படி கண் கலங்கி நெகிழ்ச்சியோடு பேசிப்பார்ப்பது இதுவே முதல் அனுபவம். எப்போதுமே அவளிடமிருந்து வருகிற வார்த்தைகள். இதைச் செய். அதைச் செய்யாதே என்று உத்தரவுகளைச் சுமந்துதான் வந்திருக்கின்றன. என்ன இப்படி திடீரென்று குழைகிறாள்? என் மேல் அக்கறை என்கிறாள். என் எதிர்காலத்திற்காகக் கவலை கொண்டு பேசுவதாகச் சொல்கிறாள்.

ஆனால், நான் திரை உலகத்திற்குள் வரவே கூடாது என்கிறாளே...அதையும் புராண மாந்தர்கள் வரம் கேட்பது போல வாக்குறுதி தரச் சொல்லிக் கேட்கிறாளே... என் தனிப்பட்ட லட்சியம் என்ன ஆவது? இவளை எதிர்த்துக்கொண்டு என் சொத்துக்களை இவளின் ஆதிக்கத்திலிருந்து பிரித்துக் கொண்டு விளம்பரத் துறையில் இறங்கத் திட்டமிட்டிருந்தேனே...

மாடலிங் கலையின் நுணுக்கங்களைக் கற்று நம்பர் ஒன் மாடலாக வரத் திட்டமிட்டிருந்தேனே...இந்திய

அழகிப் போட்டியில் பங்கு கொள்ள வேண்டும் என்று யோசித்திருந்தேனே...

இவளின் சிபாரிசு இல்லாமல், ஒரு நடிகையின் மகள் என்கிற சலுகை இல்லாமல் என் சொந்த முயற்சிகளில் பல நூறு தயாரிப்பாளர்களை என்னைத் தேடி வரச் செய்து ஒன்றிரண்டு படங்களிலேயே தேசிய அளவில் புகழ்பெற்று இவளைத் தாண்டி உயரங்களில் மிதக்க வேண்டும் என்றெல்லாம் எதிர்கால திட்டங்களை மனதில் வகுத்துக் கனவுகள் கண்டு கொண்டிருக்கிறேனே!

இவள் என்ன என் ஆசைகளின் ஆணிவேரில் அமிலம் ஊற்றி அழிக்கப் பார்க்கிறாள்?

இவள் பேசுவதெல்லாம் விஷயமா இல்லை விஷமா? நாகரிகமான நயவஞ்சக நாடகமா?

இப்போது இவளுக்கு என்ன குறைச்சல்? பணம் பேர் புகழ் எல்லாவற்றிலும் கொடி கட்டிப் பறக்கிறாள். இவள் தும்மினால் அது பத்திரிகைத் துணுக்காகிறது. புன்னகைத்தால் வரலாற்றுக் கணக்காகிறது. சாலையில் இறங்கினால், போக்குவரத்தே ஸ்தம்பிக்கிறது. எங்கே போனாலும் கையெழுத்துப் போட்டே களைத்து போகிறாள். தன்னை ஒரு நொடி இவளின் பார்வை தடவிச் செல்லாதா என்று வீட்டு வாசலில் எத்தனை பேர் தவமிருக்கிறார்கள்.

ஒரு தனி மனுஷிக்கு இன்னும் என்ன பெருமை வேண்டும்? இத்தனை மரியாதை உள்ள மகாராணிக்கு மனதில் குறைகளா? அதை நான் நம்ப வேண்டுமா?

''என்ன இனியா அப்படி பார்க்கிறே?'' என்றாள் மதுமிதா.

''இந்த மாதிரி எல்லாம் மனம்விட்டு என்கிட்டே நீ பேசினதே இல்லையே. அதான் ஆச்சரியமா இருக்குது.''



''இப்ப பேசவேண்டிய சூழ்நிலை இனியா.''

''ஏதோ ரொம்பப் பெரிய சோகத்துல நீ இருக்கிற மாதிரி ஒரு பிரமையை உண்டு பண்றே மதுமிதா''

''அது பிரமை இல்லை இனியா. ஓரளவுக்கு உண்மை''

''என்னால நம்ப முடியலை. உனக்கு இப்ப என்ன பிரச்னை? ஒரு முட்டாளுக்குப் புரிய வைக்கிறதா நினைச்சிக்கிட்டு விபரமா சொல்ல முடியுமா?''

''சில விஷயங்களை விபரமா சொல்லமுடியும். சில விஷயங்களை அனுபவிச்சுத்தான் தெரிஞ்சுக்கணும். நான் சொன்னதுக்கு நீ பதில் சொல்லலையே இனியா''

''எதுக்கு?''

''நீ சினிமாப் பக்கம் வரமாட்டேன்னு எனக்கு வாக்குத் தரச் சொன்னேனே.''

இனியா அமைதியானாள்.

''என்ன பேசமாட்டேங்கறே?''

''சில விஷயங்களை தெளிவுபடுத்துக்கா''

''என்ன?''

''நீ கல்யாணம் செய்துகிட்டா, அம்மா என்னை நடிக்க வைப்பாங்கன்னு சொன்னியே, அதெப்படிச் சொல்றே''

''அவங்களுக்கு வேற வழி இல்லை. இந்த வீட்ல பணம் காய்க்கிற மரம் ஒண்ணு இருந்துக்கிட்டே இருக்கணும்''

''சரி, அப்படியே அம்மா விரும்பினாலும் அதில தப்பு என்ன இருக்கு? அம்மா ஒரு நடிகை. நீ ஒரு நடிகை. நானும் ஒரு நடிகை ஆகறதில என்ன தப்பு? ஒருவேளை

இயல்பாவே எனக்கு இந்தத் துறையில விருப்பம் இல்லைன்னா பரவாயில்லை. எனக்கோ எக்கச்சக்கமான விருப்பம் இருக்கு. லட்ச லட்சமா பணமும் கொடுத்து, புகழும் கொடுக்கற துறை இது. இந்தத் துறைக்கு நான் வரக்கூடாதுன்னு நீ சொல்றது ரொம்ப அழிச்சாட்டியமாத் தெரியுதுக்கா''

''இப்பத்தானே சொன்னேன்...இந்தத் துறையில் இருக்கற கவர்ச்சி மட்டும்தான் உன் கண்ணுக்குத் தெரியுது. இதில உள்ள சங்கடங்கள் அவமானங்கள் இதெல்லாம் உனக்குத் தெரியாது. சில சமயங்கள்ல நான் ஒரு மனுஷியாக்கூட நடத்தப்பட்டதில்லை. சொல்றதை ரைட் சென்ஸ்ல புரிஞ்சுக்கோ. நான் உனக்குச் சொல்றது சின்சியரான அட்வைஸ். 'நீ எப்படியோ போ. எனக்கென்ன'ன்னு பொறுப்பில்லாம நடந்துக்க முடியாது என்னால. நான் சொல்றதில வேற எந்த உள்ளர்த்தமும் இல்லை.''

இனியா தன் நகங்களைப் பார்த்துக் கொண்டாள்.

''அவ்வளவுதானே? நான் போகலாமா?'' என்றாள்.

''நான் சொன்ன எதையும் நீ சரியா எடுத்துக்கறதா இல்லை. அப்படித்தானே!''

''யோசிக்கிறேன்க்கா. அவ்வளவுதான் நான் சொல்ல முடியும். உன் கைல அடிச்சி சத்தியம் செஞ்சித்தரணும்னு சென்டிமெண்ட்டலா எதிர்பார்க்காத. விச் ஐ டோண்ட் லைக். அப்படியே நான் உனக்கு எதாச்சும் சத்தியம் செஞ்சாலும், அது மனப்பூர்வமானதா இருக்காது. எனக்கு அதில எல்லாம் நம்பிக்கை இல்லை. ஒவ்வொரு தனி நபரும் ஒரு சந்தர்ப்பவாதி! நாளைக்கு எனக்கு அனுசரணையா ஒரு சூழ்நிலை அமைஞ்சா உனக்கு செய்யற சத்தியத்தைக் காத்துல பறக்க விடறதுக்கு நான் தயங்க



மாட்டேன். அதுவே என்னை பைண்ட் பண்றது எனக்குப் பிடிக்காது''

இனியா சோபாவிலிருந்து எழுந்து கொண்டாள்.

மதுமிதா அருகில் வந்தாள்.

''யாரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறே?''

''சொல்றேன்.''

''ரகசியமாவா, பகிரங்கமாவா?''

''ரகசியமா பண்ணிக்கிட்டு அப்புறம் பகிரங்கப்படுத்தப் போறேன்.''

''லவ்வா?''

''உனக்கு சினிமால மட்டும்தான் லவ் பண்ணத் தெரியும்னு நினைச்சிட்டு இருந்தேன். நிஜமாவே லவ் பண்ணியிருக்கியே...ஆல் தி பெஸ்ட்! நீ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு உனக்கு முழு உரிமை இருக்கு. நீ மேஜர். எதுக்காக ரகசியமா பண்ணிக்கணும்.''

''நம்ம அம்மா பண்ணிக்க விடமாட்டாங்க''

''ஏன்?''

''இந்த பணம் காய்க்கிற மரம் வேற ஒருத்தருக்கு சொந்தமாயிடுமே''

''போக்கா! நம்ம அம்மாவை மனிதாபிமானமே இல்லாதவளா நினைக்காதே! நம்ம மேல பாசம் இல்லையா அவங்களுக்கு? நீ கல்யாணம் பண்ணிக்கிட்டா நிச்சயமா சந்தோஷப்படுவாங்க!''

''அப்படியா? அக்கா கல்யாணம் பண்ணிக்கிறதிலே உனக்கு சந்தோஷம்தானேம்மான்னு கேட்டுப் பாரு இனியா''

'':சரி... ஒண்ணு சொல்லட்டுமா? யு நீட் எ சைக்கோ தெரபி! ஒண்ணுமே இல்லாதப்போ உள்ளுக்குள்ளே கற்பனையா சோகம் உருவாக்கி சஞ்சலப்பட்றது ஒருவகை மன வியாதிதான்!''

இனியா சொல்லிவிட்டு அறையை விட்டுப் போக மதுமிதா சிரித்துக் கொண்டாள்.

டெலிபோன் ஒலித்தது. எடுத்தாள். ''ஹலோ... மதுமிதா.''

''ஹாய்! நான்தான் பேசறேன்.''

கீழே வேறு ஒரு ஃபோன் எடுக்கப்படும் ஓசைகேட்டது.

''நீங்க வெச்சிடுங்க. நான் கூப்புடறேன்.''

ரிசீவரை வைத்துவிட்டு சற்றுத் தள்ளியிருந்த செல் போனை எடுத்து எண்கள் ஒற்றி காதில் வைத்துக் கொண்டாள்.

''சொல்லுங்க.''

''மேரேஜ் ரிசப்ஷனுக்கு வரணும்னு நினைச்சேன். முடியாமப் போச்சு.''

''பரவாயில்லை.''

''என்ன பண்ணிக்கிட்டிருக்கே?''

''ஒரு நாவல் பாதியில இருக்கு படிச்சிட்டிருக்கேன்.''

''கமிங் அவுட்?''

''இப்பவா?''

''பத்துதானேம்மா ஆவுது? முழு ராத்திரி மிச்ச மிருக்கே.''

''காலைல ஆறு மணிக்கு ஷூட்டிங் இருக்கு '



''ரெண்டு மணி நேரத்தில திரும்பிடலாமே''

''எங்கேர்ந்து பேசறீங்க?''

''பார்க் ஷெராட்டன்ல... கேட்ஸ்பி''

''சரி வர்றேன். மேரேஜ் ரிசப்ஷன்ல சுபாஷைப் பார்த்தேன்!''

''என்ன சொன்னார்?''

''எல்லாவிதத்திலேயும் உதவி பண்றேன்னு சொன்னார். அவரோட படப்பிடிப்பு பங்களாவை தாராளமா பயன்படுத்திக்கிடலாம்னு சொன்னார். விபரமா நேர்ல சொல்றேன். பத்து நிமிஷத்தில வந்துடறேன்.''

மதுமிதா புறப்பட்டு கீழே வர அம்மா துர்க்கா, ''மதுமிதா கொஞ்சம் உக்காரு பேசணும்.'' என்றாள்.

# 8

ஈஸ்வர் வெற்றிலையைக் குதப்பியபடி அடிக்கண் களால் மதுமிதாவைப் பார்த்தார். துர்கா அவரருகில் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள். சற்றுத்தள்ளி டைனிங் டேபிளில் அமர்ந்து இனியா சாப்பிட்டுக் கொண் டிருந்தாள்.

''ரொம்ப முக்கியமாப் பேசணுமாம்மா?'' என்றாள் மதுமிதா.

''முக்கியமா இருந்தாத்தான் உங்கிட்ட பேசணுமா'' என்றாள் துர்கா-ஈஸ்வர் மடித்து நீட்டிய வெற்றிலையை வாங்கி வாயோரத்தில் அதக்கிக் கொண்டு.

''நான் இப்ப வெளில புறப்பட்டுக்கிட்டிருக்கேன்ம்மா· அதனால அப்படிச் சொன்னேன்''

''இந்த நேரத்தில எங்க போறே? இப்ப ஷூட்டிங் டப்பிங் எதுவும் கிடையாதே...''

''இந்த வீட்டைவிட்டு நான் வெளிய போகணும்னா நடிகைன்ற ஸ்தானத்தில மட்டும்தான் போகணுமா? வெறும் மதுமிதாவா வெளில போகக் கூடாதா என்ன?''

''எங்கன்னு கேட்டா பதில் சொல்றதை விட்டுட்டு எடக்குப் பேசறியே...அம்மான்ற மரியாதையே இல்லாமப் போச்சா உனக்கு?''

பதில் பேசாமல் கைகளைக் கட்டியபடி துர்காவைப் பார்த்தாள் மதுமிதா. அந்தப் பார்வையின் வீச்சைத் தாங்க முடியாமல் தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள் துர்க்கா.

ஈஸ்வர் எழுந்து வாஷ்பேசினுக்குப் போய்த் துப்பி விட்டு வந்து

''மது உன் மேல உள்ள அக்கறையாலதானம்மா அம்மா கேக்கறா'' என்றார்.

அவரை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள் மதுமிதா. அவர் பார்வையைத் தாழ்த்திக் கொண்டு நகங்களில் படிந்த சுண்ணாம்பைச் சுரண்டத் துவங்கினார்

''உன்னைத்தான் கேக்கறேன் மதுமிதா. என்ன அப்படிப் பார்க்கறே? நீ எங்கே போறேன்னு கேக்கற உரிமை எனக்கு இல்லையா?''

உதடுவரை வார்த்தைகள் கொப்பளித்தன. ஒரு அம்மாவுக்கு உரிய அத்தனை உரிமைகளையும் நீ பயன் படுத்தியிருந்தால் இந்த உரிமையும் உனக்கு உண்டு



என்னை எப்போது அரிதாரம் பூச உட்கார வைத்தாயோ அந்த நிமிடத்திலிருந்து என்னை நீ மகளாகப் பார்த்ததில்லையே அம்மா.

ஒரு நடமாடும் இயந்திரமாகத் தானே என்னை இத்தனை நாளும் நடத்தி வந்திருக்கிறாய்! இயந்திரத்திற்கு இதயம் எங்கே இருக்கப் போகிறது, அதில் உணர்ச்சி எங்கே இருக்கப் போகிறதென்று அலட்சியமாய் விட்டு விட்டாய்!

என்னுடைய எத்தனை சின்னச்சின்ன ஆசைகளை நசுக்கி வீசியிருக்கிறாய்! தவறு! நசுக்கவில்லை. எரித்து விட்டாய்! நசுக்கினால் மீண்டும் உருவம்பெற வாய்ப்பிருக்கிறதே என்று சாம்பலாக்கிக் கரைத்து விட்டாய்.

என் உருப்படாத அப்பா உன்னை நிர்க்கதியாக்கி விட்டு ஓடிப்போனதனால், பணப் பிரச்னையை சமாளிக்க என்னை பலிகடாவாக்கி விட்டாய்!

உன் நெஞ்சைத் தொட்டுச் சொல்? நான் இந்தத் துறையை விரும்பினேனா? பள்ளிக்கூடத்தில் 'எதிர் காலத்தில் நீ என்னவாக விரும்புகிறாய்? என்கிற கேள்விக்கு ஒவ்வொரு பெண்ணும் கலெக்டர், போலீஸ் அதிகாரி விமான பணிப்பெண் என்று சொல்ல, நான் எழுத்தாளராக விரும்புகிறேன் என்றேன் நான்.

அப்போதே நோட்டுப் புத்தகங்களில் சக மாணவிகள் பொம்மைவரைய கோலம் போட, நான் உதட்டில் பென்சில் வைத்து யோசித்து கவிதை எழுதினேன். அப்போது நான் எழுதியவற்றை கிறுக்கியவை என்றுதான் சொல்ல வேண்டும்' அவை கவிதையிலும் சேர்த்தியில்லை.

**'நிலா காட்டி சோறூட்டுவாள் அன்னை,**
**நிலாவுக்கு சோறூட்டுவது யார்?'**

-நன்றாக நினைவிருக்கிறது. இதுதான் என் முதல் கிறுக்கல். அதை டீச்சரிடம் என் தோழி எடுத்துக் காட்டி விட டீச்சர் என்னைத் திட்டப் போகிறாரோ என்று பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் போது என் கன்னத்தில் தட்டி 'வெரிகுட்' கீப் இட் அப்' என்ற வார்த்தைகள் எனக்குள் சேர்த்த நம்பிக்கையின் அளவை அந்த டீச்சர் உணர்ந்திருக்க மாட்டார்.

அதேக் கவிதையை உன்னிடத்தில் காட்ட நான் பதினைந்து நாட்கள் போராடியதும் நினைவிருக்கிறது எனக்கு.

அப்போது நீ சினிமாவில் பயங்கர பிஸி. வீட்டின் வாசலில் பத்துக்கும் மேற்பட்ட கார்கள் நின்று கொண்டிருக்கும் எப்போதும், டெலிபோன் ஒலித்துக் கொண்டேயிருக்கும். நீ எங்காவது புறப்பட்டுப் போய்க் கொண்டேயிருப்பாய். போகிற போக்கில் என் முதுகில் தட்டி 'நல்லா படிக்கணும்' என்று விருந்தாளி சொல்வது போல சொல்லி நகர்வாய். பாய்ந்து வரும் வெள்ளைப் பாமரேனியனை அள்ளியெடுத்து அணைத்து முத்தம் கொடுப்பாய். உன்னோடு அதையும் ஷூட்டிங்கிற்கு அழைத்துச் செல்வாய் உன்மடி மீது வைத்து.

அந்த நாய்க்குட்டியை கொஞ்சின அளவுக்குக்கூட நீ என்னைக் கொஞ்சினதில்லை அம்மா.

இந்த நடிப்புத் தொழிலில் உள்ள கஷ்டங்களை பிரச்னைகளை எதுவும் எடுத்துச் சொல்லாமல் விதவிதமாக டிரெஸ் போடலாம். எல்லோரும் பாராட்டுவார்கள் புத்தகங்களில் எல்லாம் உன் போட்டோ வரும் என்று கனவுத்தன்மையுடன் கூடிய வார்த்தைகளில் போட்டு என்னை உற்சாகத்தோடு இறங்க வைத்தாய்.

அம்மா இன்றைக்கு இதே துறையில் வரவேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கிற என் சகோதரிக்கு



...ார்க்கும்போது ஒரு மகளுக்கு பாசம் ...கோபம் பிறக்கக்கூடாது.

...னால் மனப்பூ...

...ய முடியவில்லை நான் பார்க்கும் போதெல்லாம் ...ன் பொங்குகிறது. என்ன செய்வது?

நான் கடந்து...

...த பாதைதா பேசாமல் மெதுவாக வாசலை நோக்கி ...மையான மா சுழற்றியபடி நடந்தாள் மதுமிதா.

...யாதே! உன் ...த்தி குத்துக்கல்லாட்டம் உக்காந்துகிட்டு ...நைந்து... ...றன், எந்த பதிலும் சொல்லாமப் போறா ...மானங்க... ...ன்றாள் துர்கா.

...நாகரிகங்க...

...ரோகங்க திரும்பிப் பார்த்தாள்.

...ாவாத் தெரிய வேண்டிய நீ ஒருகுத்துக்கல்லாத் ...க்குத் தெரியறே! குத்துக் கல்லுக்கு யாரும் பதில் ... கிடையாது!'' என்று வார்த்தைகள் துடித்தன. ...னைத்த கொண்டாள்.

...துமிதா தன் அம்மாவின் எதிரில் வந்து நின்றாள்.

''இப்ப உனக்கு என்னம்மா தெரியணும்?'' என்றாள்.

''இப்ப நீ எங்கே போறே?''

''ஹோட்டலுக்குப் போறேன்.''

''கல்யாண ரிசப்ஷன்லதான் சாப்பிட்டமே''

''இப்ப சாப்பிடப் போகலை. ஒருத்தரை சந்திக்கப் ...றேன்.''

''யாரை?''

''என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறவரை! ...பண்ணிட்டிருப்பார், இதுக்கு மேலேஎல்லா ...நாளைக்குப் பேசிக்கலாம்.

...டென்று கிளம்பி மதுமிதா போனதும்ஈஸ்வரைத் ... அவசரப்படுத்தினாள் துர்கா. ''நம்ம கனவுல

எல்லாம் மண்ணை அள்ளிப் போடப்போற அந்த படுபா யாருன்னு தெரிஞ்சாகணும். பின்னாடியேப் போ யாரவன்னு தெரிஞ்சிக்கிட்டு வாங்க கிளம்புங்க என்றா

# 9

மதுமிதா பங்களாவின் வாசலுக்கு வர டிரைவ பீடியை வீசிவிட்டு ஓட்டமாக வந்தான்.

''வேணாம். நீ வர வேணாம்''

மஞ்சள் நிற மாருதி ஜென்னை தானே ஓட் கொண்டு புறப்பட்டாள்.

ஈஸ்வர் அம்பாசிடர் அருகில் வந்தார். டிரைவ ரிடம் வந்தான் ''வேணாம். நீ வர வேணாம். கொடு.''

சாவி கொடுத்துவிட்டு. விலகி நின்றான்.

ஈஸ்வர் ஸ்டார்ட் செய்து சீறினார். அவசரப் அணைத்து வீணானதற்கு வருத்தப்பட்ட டிரைவர் அ பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான்.

காரை வழக்கத்தை விட சற்று வேகமாகவே ஓ னாள் மதுமிதா. டேப்பில் இசையை போட்டு. லயிக்காமல் இரண்டே நிமிடங்களில் அணைத்தாள்.

அம்மா பேச விரும்பியது என் பத்திரிகை பேட்டி பற்றிதான். முகத்திலேயே அதிர்ச்சி எழுதி ஒட்டிய கிறதே...

''அது சும்மா...ஒரு பரபரப்புக்காகச் சொன் தும்மா'' என்று நான் சொல்லிவிட்டால் முகமெல்லா பல்லாகச் சிரித்திருப்பாள்.



''எங்க வேணும்னாலும் போய்ட்டு வாம்மா...எப்ப வேணும்னாலும் திரும்பி வாம்மா'' என்று சொல்லியிருப் பாள்.

பத்திரிகை பேட்டி உண்மைதான் என்பது போல 'நான் என்னைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறவரைத் தான் பார்க்கப் போறேன்' என்று.

வெடுக்கென்று சொல்லிவிட்டு வந்ததில், அடிவயிற்றில் அமிலம் பரவியிருக்கும்.

இனியா வேறு. நான் அவளிடம் பேசியதை எல்லாம் ஒரு எழுத்து மாறாமல் அம்மாவிடம் ஒப்பித்திருப்பாள்.

ஹோட்டலுக்குப் போய்த் திரும்பியதும் வீட்டில் இன் றைக்கு ஒரு மிகப்பெரிய யுத்தம் இருக்கிறது.

நிகழட்டும் அந்த யுத்தம்!

எந்த யுத்தமும் அநீதிக்குத் துணை போனதில்லை. ராமாயணத்திலும் சரி. மகாபாரதத்திலும் சரி அதர் மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டுகிற நல்ல முடிவை தான் யுத்தம் தந்திருக்கிறது.

காரை அந்த நட்சத்திர ஹோட்டலின் போர்ட்டி கோவில் நிறுத்தி இறங்கி சாவியை அங்கேநின்ற பொறுப் பாளரிடம் ஒப்படைத்து விட்டு உள்ளே நடக்க. அந்தச் சீருடை நபர் காரை பார்க் செய்ய எடுத்துச் சென்றான்.

ஈஸ்வர் காரை ஹோட்டலுக்குள்ளே எடுத்துச் செல்ல வில்லை. காம்பௌண்டுக்கு வெளியே சாலையில் ஓரமாக நிறுத்தினார். கண்ணாடிகளை ஏற்றிவிட்டுப் பூட்டி இரண்டு பாக்கெட்டுகளிலும் கைகளை நுழைத்துக் கொண்டு ஹோட்டலின் முகப்பை நோக்கி மெதுவாக நடந்தார்.

போர்ட்டியில் புறப்படப் போவதுபோல வரிசை வரிசை யாக கார்கள் நின்றிருந்தன. கண்ணாடிக் கதவு தாண்டி மெத்தென்ற கம்பளத்தை மிதித்ததும் குளிர் வரவேற்றது.

குளிருக்காகவும் எங்கிருந்தாவது மதுமிதா தன்னை பார்த்துவிடக்கூடாதென்பதற்காகவும் தோளில் கிடந்த மப்ளரை தலையில் சுற்றி தாடையில் முடிச்சு போட்டுக் கொண்டார்.

ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார்.

மதுமிதா இந்த ஹோட்டலுக்குள் எந்தப் பகுதிக்குச் சென்றிருப்பாள்?

சைவ உணவகம், அசைவ உணவகம், நீச்சல்குளம், ஹெல்த் சென்டர் பியூட்டி பார்லர் டிஸ்கொதே ஹால், பார், மினி கான்ஃபெரன்ஸ் ஹால், பார்ட்டி ஹால் என்று எத்தனைப் பகுதிகள்!

அசைவ உணவகப் பகுதிக்கு வந்தார். உள்ளே நுழைந்து அரையிருட்டில் கதவுக்கு அருகிலிருந்த ஓர நாற்காலியில் அமர்ந்து கொண்டு வேறு மேஜைகளில் மதுமிதாவைத் தேடினார்.

அவள் அங்கு இல்லை.

அங்கிருந்தபடியே கண்ணாடிச் சுவர் வழியே நீச்சல் குளத்தைப் பார்க்க முடிந்தது. கண்களை அங்கே மேய விட்டார். சிக்ரெட் புகையை ஆழமாக உள்வாங்கி வெளியேற்றினார்.

ஸ்டூவர்ட் வந்து வெல்வெட் துணியில் தைத்த மெனு புத்தகம் வைத்துக் காத்திருக்க...

''வெய்ட்டிங் ஃபார் எஃபிரண்ட். ஆர்டர் யுலேட்டர்'' என்று சொல்லி அவனை அனுப்பினார்.

அவன் தலை மறைந்ததும் அவசரமாக வெளியே வந்து பார் பகுதியை நோக்கி மார்பிள் தரையில் நடந்தார்.

இந்த ஈஸ்வர் துர்காவின் கணவன் இருந்தபோதே துர்காவுக்கு அறிமுகமானவர்.



சென்னையில் மட்டுமே வெளிவந்த **'BIG SCREEN'** என்ற ஆங்கிலப் பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலை பார்த்தவர். அதை நடத்தின சர்மா ஒரு காலத்தில் படம் எடுத்து மஞ்சள் நோட்டீஸ் கொடுத்தவர். அனுதாபத்தில் சினிமா உலகம் அவருக்கு ஆதரவு அளித்து பட விளம்பரங்களைக் கொடுத்தது.

அந்த விளம்பர வருமானத்திற்காக நடத்தப்பட்ட பத்திரிகை பதினாறே பக்கங்கள், விளம்பரம் போக நான்கு அல்லது ஐந்து பக்கங்களுக்குத்தான் சினிமாச் செய்திகள் விமர்சனங்கள் பேட்டிகள் இருக்கும்.

சர்மாதான் பப்ளிஷர் கம் எடிட்டர். ஆனால் அவர் பேனாவைத் தொட்டதே இல்லை. எல்லாம் ஈஸ்வர்தான் பார்த்துக் கொண்டார்.

பத்திரிகைக்கென்று ஆபீஸ் எல்லாம் எதுவும் கிடையாது. சர்மா வீட்டின் மொட்டை மாடியில் ஒரு ஓரத்தில் கீற்றுக் கொட்டகைக்கு அடியில் ஒரு மேஜை இரு நாற்காலிகள். அவ்வளவுதான் ஆபீஸ்.

ஈஸ்வர்தான் பேட்டிக்குப் போக வேண்டும். சினிமாச் செய்திகளுக்காக ஸ்டுடியோக்களில் அலையவேண்டும். பத்திரிகையாளர்களின் காட்சிகளுக்குப் போய் விமரிசனம் எழுத வேண்டும்.

தவிர சினிமா நிறுவன அலுவலகங்களுக்கு நாய் மாதிரி அலைந்து கெஞ்சிக் கூத்தாடி விளம்பரமும் மூன்று மாசம் கழித்து அதற்குப் பணமும் வசூலித்து வரவேண்டும். (அந்தப்படம் பிரமாதமாக ஓடியிருந்தால் விளம்பரத் தொகையில் பாதியாவது தேறும். படம் ஃப்ளாப் என்றால் ஒரு காபி கூட கிடைக்காது)

மேலும் கம்ப்போசிங்கிற்குக் கொடுத்து புரூஃப் திருத்தி லே அவுட் செய்து அச்சகத்திற்குச் சென்று பேப்பர் வாங்கிக் கொடுத்து, அச்சான பிரதிகளை ஆட்டோவில் எடுத்து வந்து கடைகள் பெயர் எழுதி பார்சல் கட்டி,

எடுத்துப்போய் போட்டு விற்காத பிரதிகளும் போன இதழுக்கான பணமும் வசூலித்து வந்து...பைசா சுத்தமாக கணக்கும் எழுதித்தர வேண்டும்.

இத்தனை வேலைகளுக்கும் சேர்த்து சர்மா அப்போது ஈஸ்வருக்கு மாதம் சம்பளமாக கொடுத்தது இருநூறு ரூபாய்.

ஆனால் புதிய நடிகைகளிடம் அவர்களின் புகைப்படங் களை வெளியிட காசு வாங்குவார். மோசமான படங் களைத் தூக்கி எழுத சிலரிடம் கவர் வாங்குவார் ஈஸ்வர்.

ஒரு பேட்டிக்காக துர்காவிடம் வந்தபோதுதான் முதல் அறிமுகம். இவர் போன சமயம் துர்காவின் பி.ஆர்.ஒ. செய்த ஒரு முட்டாள்தனத்தால் ஒரு மணி நேரத்தில் ஹைதராபாத்திற்கு பறக்க வேண்டிய விமானத் தில் டிக்கெட் கிடைக்காமல் அவனை துர்கா கண்டபடி திட்டிக் கொண்டிருந்தாள்.

ஈஸ்வர் உடனே அங்கேயே போன் எடுத்து ஒரு பெரிய டிராவல்சின் பெரிய நபரைப் பிடித்துபேசி அந்த டிக் கெட்டை ஏற்பாடுசெய்து கொடுத்ததற்கு துர்கா பத்து முறை நன்றிசொல்லி புறப்பட்டுப் போனாள்.

ஏர்போர்ட்டுக்குப் போகிற வழியிலேயே பேட்டி தருவ தாக ஈஸ்வரையும் தன்னுடன் காரில் ஏற்றிக் கொண் டாள்.

ஐந்தே நிமிடத்தில் பேட்டி முடிந்துபோக ஈஸ்வர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று விசாரித்தாள்.

''தினம் உங்க பத்திரிகை ஆபீஸ்ல மூணு மணி நேர வேலைதான் இருக்குன்னு சொல்றீங்க. நீங்க ஏன் எனக்கு செகரட்டரியா வேலை பார்க்கக்கூடாது. நல்லா இங்கி லீஷ் பேசறீங்க'' சாமர்த்தியம் தெரியுது. இப்படி ஒருத் தரைத்தான் நான் தேடிக்கிட்டு இருக்கேன் என்றாள் துர்கா.



மறுநாளே சர்மாவிடம் சொல்லிவிட்டு வந்து துர்கா விடம் சேர்ந்தார் ஈஸ்வர்.

அவளது பயண ஏற்பாடுகள் நிகழ்ச்சிகள். பேட்டிகள் கால்ஷீட் விவகாரங்கள் வங்கிக் கணக்குகள் வருமான வரிக் கணக்குகள் என்று சகல விதமான காரியங்களையும் கவ னிக்கத் துவங்கிய ஈஸ்வர் துர்காவின் மனதிலும் இடம் பிடித்து விட்டார்.

கணவனோடு கசப்பான அனுபவங்கள் ஏற்பட்ட நேரம் அது! கணவன்பாம்பேக்குச் சென்றுவிட...ஈஸ்வரை அவர் தங்கியிருந்த அறையைக் காலி செய்துவிட்டு தன் பங்களாவிலேயே தங்கிக் கொள்ளச் செய்து விட்டாள் துர்கா.

அவரை 'சித்தப்பா' என்றழைக்க வேண்டும் என்று குழந்தைகளுக்கு உத்தரவிட்டாள். துர்கா உச்சியிலிருந்த வரை ஈஸ்வரின் ராஜ்யம் கொடிகட்டிப் பறந்தது.

அவள் மார்க்கெட் விழுந்து...மதுமிதா பெரியவளாகி விபரங்கள் புரிந்து கேள்விகள் கேட்கத் துவங்க...ஈஸ்வர் அடங்கி விட்டார்.

மதுமிதா நடிகையான பிறகு ஈஸ்வரை சுத்தமாக மதிப்பதில்லை. துர்காவும் அவரை ஒரு வேலைக்காரனை போல நடத்தினாலும் ஈஸ்வர் அதற்கெல்லாம் கவலைப் படுவதில்லை.

தாலி கட்டாத ஒரு கணவனாக பெறாத இரண்டு பெண்களுக்கு அப்பாவாக சம்பளம் இல்லாத வேலைக் காரனாக ஆனால் சகல வசதிகளும் அனுபவிக்கிற உரிமை யோடு அந்த வீட்டில் ஒட்டிக் கொண்டிருக்கும் ஈஸ்வரின் உள்மனதிலும் சில எதிர்பார்ப்புகள் இருக்கின்றன.

ஈஸ்வர் பாரில் மதுமிதாவை தேடிவிட்டு டிஸ்கோ ஹாலுக்குள் நுழைய...தூரத்தில் ஒரு அரையிருட்டு மூலை

யில் ஒரு உயரமான இளைஞனுடன் நடனமாடிக் கொண்டிருந்த மதுமிதாவைப் பார்த்து விட்டார் ஈஸ்வர். அவளோடு ஆடியவன் அவருக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தான்.

# 10

அந்த டிஸ்கொதே ஹாலில் ஆண்களும் பெண்களும் நிறைய பேர் இருந்தார்கள். ஒரு இசைக் குழு மேற்கத்திய சங்கீதத்தை வாசித்துக் கொண்டிருந்தது.

எல்லா திசைகளிலிருந்தும் வர்ண வெளிச்சக் கதிர்கள் ஹாலில் பாய்ந்து ஜோடிகள் ஊடுருவின.

ஈஸ்வர் இருந்த வாசல் பகுதியிலிருந்து மிக தூரத்தில் மதுமிதா. தெரிந்து தெரிந்து மறைந்தாள். வேறு வேறு ஜோடிகள் தங்கள் நடனத்தால் இடம் நகர்ந்ததில் மதுமிதாவையே இப்போது தேட வேண்டியிருந்தது.

ஈஸ்வர் பார்த்த ஒரு வினாடியில் அவருக்கு அந்த மதுமிதாவின் காதலன் முதுகைத்தான் காட்டிக் கொண்டிருந்ததால் அவனைப் பற்றி உயரமானவன் நளினமாக நாகரீகமாக உடுத்தியவன் என்கிற சில உபரித் தகவல்கள் மட்டுமே மனதில் பதிந்தன. அந்த ஹாலின் உள்ளே செல்ல முயற்சித்தபோது ஈஸ்வர் தடுக்கப்பட்டார்.

''எக்ஸ்க்யூஸ் மி சார்... இங்கே ஜோடியா வர்றவங்களுக்கு மட்டும்தான் அனுமதி'' என்று சொல்லப்பட்டார்.

அசடு வழிய சிரித்தபடி ஹாலுக்கு வெளியே அவர் வர கதவு தானாக மூடிக்கொண்டு இசைக் கசிவை கைது செய்தது.

துர்கா அவருக்கு இட்ட உத்தரவு மதுமிதாவின் காதலன் யாரென்று அறிந்து வருவது.



அதைத் தெரிந்து கொள்ளாமல் போனால் 'நீங்க எதுக்குத்தான் லாய்க்கு என்றுத் துவங்கி ஒரு மணி நேரத்திற்கு அர்ச்சனை நடக்கும்.

அந்த அர்ச்சனை எரிச்சல் ஒரு பக்கம் இருந்தாலும் மதுமிதா யாரை நேசிக்கிறாள் என்று தெரிந்து கொள்கிற ஆர்வம் அவருக்கே இருந்தது.

இது மிக முக்கியமான விஷயம்!

எல்லோருடைய கண்களிலும் மண்ணைத் தூவிவிட்டு அவள் ரகசியமாக திருமணம் செய்து கொள்ளப் போகிறாள்.

அப்படி எதுவும் நடந்துவிட்டால் நிறைய பாதிப்புகள் இருக்கின்றன. திருமணத்திற்குப் பிறகு அவள் இன்னொருவனுக்குச் சொந்தம். அவள் மட்டுமா சொந்தம்? அவள் சுயமாக தன் உழைப்பால் சம்பாதித்த சொத்துக்கள் நகைகள் எல்லாமும்தான் சொந்தம்.

பிறகு...கணவனுக்கு விருப்பம் இல்லை என்று நடிப்பதை நிறுத்திக் கொள்கிறேன் என்பாள்.

மிகுந்த எச்சரிக்கையோடுதான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறாள் மதுமிதா. சொந்தப்படம் தயாரிக்கவேண்டும் என்கிற ஈஸ்வரின் யோசனையை துர்கா ரசித்த அளவிற்கு மதுமிதா ரசிக்கவில்லை.

நான்கு வருடங்கள் முன்பு அந்த யோசனை சொல்லப்பட்டு, பிறகு வற்புறுத்தப்பட்டு வேறு வழியில்லாமல் சம்மதம் கொடுத்தாள் மதுமிதா.

'ஆனால் அதில் நான் நடிக்கமாட்டேன் என்று குண்டு தூக்கிப் போட்டாள்.'

கதாநாயகிக்கு கொடுக்கும் சம்பளம் மிச்சம். கால்ஷீட் பிரச்னைகள் இருக்காது என்று எடுத்துச் சொல்லி, சம்மதிக்க வைத்தார்கள்.

மதுமிதாவை மையப்படுத்தி அமைக்கப்பட்ட திரைக்கதை. தயாரிப்புச் செலவில் ஈஸ்வர் புகுந்து விளை

யாடினார். புரொடக்ஷன் மேனேஜர்கள் கேஷியரை எல்லாம் கைக்குள் போட்டுக் கொண்டு தனியாக வங்கிக் கணக்கில் அந்தப் படத்தில் அடித்த தொகை பன்னிரெண்டு லட்சம் போட்டு வைத்திருக்கிறார்.

படம் பார்த்துவிட்டு விநியோகஸ்தர்கள் அடிமாட்டு விலைக்குக் கேட்டார்கள். ஒரு வருடம் இழுபறியாகி ஒரு வழியாக வியாபாரம் முடித்தபிறகு கணக்குப் போட்டுப் பார்த்ததில் நிகர நஷ்டம் இருபத்தி ஏழு லட்சம் (அந்த பனிரெண்டு லட்சம் கணக்குகள் வந்திருந்தால் நஷ்டம் பதினைந்து லட்சமாகக் குறைந்திருக்கும்.)

''சொந்தமா படம் எடுக்கிற வேலை வேணாம்னு சொன்னேனே கேட்டீங்களா? நான் எத்தனை படத்தில ராத்திரி பகலா கஷ்டப்பட்டு சம்பாரிச்ச காசு! இப்படி ஒரே படத்துல வாரி விட்டுட்டீங்களே!'' என்று மதுமிதா கத்தினாள்.

அதற்குப் பிறகு இரண்டு வருடங்கள் சும்மா இருந்து விட்டு மறுபடி கொஞ்சம் பணம் ஊறியதில்...

இந்த வருட ஆரம்பத்தில் ஈஸ்வர் துர்காவிடம் பேச்சை ஆரம்பித்தார்.

''துர்கா அனுபவம்ன்றது என்ன? பட்டுத் தெரிஞ்சுக் கறதுதானே? ஒரு படம் எடுத்ததில பணநஷ்டம் ஏற்பட்டிருந்தாலும் நமக்குக் கிடைச்ச அனுபவம் லாபம்தானே?''

''எதுக்கு இதைச் சொல்றீங்க?''

''இப்ப நமக்கு எதை எதை செய்யக்கூடாதுன்னு ரொம்ப நல்லாத் தெரியும். இப்ப நம்ம மதுமிதா முந்தி விட இன்னும் பாபுலர்.''

''என்ன சொல்ல வர்றீங்க?''



''இப்போ மட்டும் நாம ஒரு பூஜை போட்டோம்னு வையி. பூஜை அன்னைக்கே அவுட்ரைட்டுல வியாபாரம் முடிச்சிடலாம். கைலேர்ந்து ஒரு பத்துப் பைசாக்கூட போட வேண்டியதில்லை. பூஜை அட்வான்ஸ்லயே முதல் ஷெட்யூல் ஷூட்டிங் ஆரம்பிச்சிடலாம்.''

''மறுபடி படம் எடுக்கலாம்னு சொல்றீங்களா?''

''இதைப் புரிஞ்சுக்க உனக்கு இவ்வளவு நேரமாகுதா? மதுமிதா ஷூட்டிங்ல பிஸியா இருக்கா. நல்லாத்தான் இருக்கு வருமானம். உனக்கும் எனக்கும் என்ன வேலை இங்கே? நம்ம நிர்வாகத் திறமைக்கு தீனி போட வேணாமா?'' வெறும் நடிப்பை மட்டும் நம்பிட்டிருந்தது அந்தக்காலம். திடீர்னு புதுசா நாலு பேர் ஃபீல்டுல வந்து, நம்ம மதுவோட மார்க்கெட் அடி வாங்கி வீட்ல உட்கார வெச்சிட்டாங்கன்னா? அதை யோசிச்சுப் பாரு. அப்பவும் நமக்கு எந்த வருமானமும் குறையக் கூடாது! எந்த வசதியும் பாதிக்கக் கூடாது. அதுக்கு இப்படி ஏதாவது ஏற்பாடு பண்ணிக்க வேணாமா?''

''மதுமிதா ஒத்துக்கமாட்டாங்க!''

''நான் சொன்னா ஒத்துக்க மாட்டா...நீ சொன்னா ஒரு வாரம் மூஞ்சை தூக்கி வெச்சிட்டிருந்தாரு. அப்புறம் "உங்க இஷ்டம்'னு சொல்லிடுவா. அவளுக்கு எதிர்கால பிளானிங் எல்லாம் கிடையாது.

''ஏற்கனவே இருபத்தி ஏழு லட்சம் நஷ்டங்க!''

''அது அப்போ! நமக்கு அனுபவம் இல்லாததால எல்லாரும் ஏமாத்தினாங்க. பத்தாயிரம் கூட மதிக்கமுடியாத செட்டுக்கு நாலரை லட்சம்னு பில்லு போட்டு வாங்கினாங்க. அந்த மாதிரி நிறைய நடந்துடுச்சி. இப்ப நமக்கு இன் அண்ட் அவுட் தெரியுமே!''

''கைலேர்ந்து எதுவும் போடவேண்டிய தில்லைன்னு சொல்றீங்களா?''

''இன்விடேஷன் அடிக்கிற செலவும், பூஜை செலவும் மட்டும்தான் நம்ம முதலீடு. மத்தபடி முழுக்க டிஸ்டிரிப்யூட்டர்ஸ் பணத்திலே இந்த ப்ராஜக்ட்டை முடிச்சி காமிக்கிறேன். பாரு''

துர்கா சமயம் பார்த்து, மதுமிதாவிடம் சொல்ல அவள் மிகத்தீவிரமாக எதிர்த்தாள். மறுபடி வம்பை விலை கொடுத்து வாங்க வேண்டாம் என்றாள்.

ஒரு மாதமாக மாற்றி மாற்றி எடுத்துச் சொல்லி, அவளை வலுக்கட்டாயமாக சம்மதிக்க வைத்தார்கள்.

தமிழ் தெலுங்கு என்று இரண்டு மொழிகளில் பிரம்மாண்டமாக படத்தின் திட்டத்தை உருவாக்கினார் ஈஸ்வர்,

''இந்தப் படத்தில் நான் நடிக்கவில்லை'' என்று கண்டிப்பாகச் சொல்லி மறுத்துவிட்டாள் மதுமிதா.

அதனால், தமிழ், தெலுங்கு, இரண்டு ரசிகர்களும் ஏற்றுக்கொள்ளும் ஒரு முன்னணி நடிகர். முன்னணி நடிகையை புக் செய்தார்கள். பூஜை போடப்பட்டது.

ஈஸ்வர் எதிர்பார்த்தபடி எல்லாம் டிஸ்ட்ரிபியூட்டர்கள் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்துவிட வில்லை.

ஒரு ஷெட்யூல் முடிந்ததும், ரஷ் பார்த்துவிட்டு, அட்வான்ஸ் தருவதாகச் சொல்லிவிட்டதால், ஃபைனான்சியர்களின் தயவைநாடி, பத்திரங்களை வைத்து, ஷூட்டிங் நடந்து கொண்டிருக்கிறது.

ஈஸ்வர் இதுவரையில் எட்டரை லட்சம் தன் கணக்கில் வங்கியில் போட்டிருக்கிறார்.

மதுமிதா திருமணம் செய்து கொண்டால் இந்தப் புதிய படத்தின் தொடர்ச்சி பாதிக்கப்படும். விற்பனையும் பாதிக்கப்படும். தனிக்கணக்கின் வளர்ச்சியும் பாதிக்



கப்படும். ஈஸ்வர் மனதில் வைத்திருக்கின்ற வேறு பல எதிர்காலத் திட்டங்களும் பாதிக்கப்படும்!

ஆகவே ஈஸ்வருக்கு தனிப்பட்ட முறையிலும் மதுமிதாவின் காதலனை அறிந்து கொள்கிற ஆர்வம் இருந்தது.

டிஸ்கொதே ஹாலுக்கு வெளியே வராந்தாவில் மெதுவாக நடந்தார் ஈஸ்வர்.

எவ்வளவு நேரமானால் என்ன? திரும்பும்போது ஹோட்டலின் வாசல் வழியாகத்தானே மதுமிதா வெளியேற வேண்டும்? அப்போது அவளருகில் அவனும் கண்டிப்பாக வருவான். அப்போது பார்த்துக் கொண்டால் போயிற்று.

ஈஸ்வர் அந்த ஹோட்டலின் ரிசப்ஷன் பகுதிக்கு வந்தார். அங்கே கொத்துக் கொத்தாக நிறைய ஸோபாக்கள் போடப்பட்டிருந்தன.

அதில் ஒரு ஸோபாவில் வந்து அமர்ந்து கால்மேல் கால் போட்டுக் கொண்டார். அங்கிருந்த ஆங்கில நாளிதழை எடுத்து மடியில் போட்டுக் கொண்டார். படித்துக் கொண்டே காத்திருந்தார்.

ஒரு மணிநேரம் கழித்து கும்பலாக நிறைய பேர் வெளிவாசல் நோக்கி நடக்க, கண்களை கூர்மைப்படுத்தினார். மதுமிதா அவர்களுக்கு நடுவில் நடந்து கொண்டிருந்தாள்.

ஆனால் அவள் யாருடனும் பேசாமல், யாரையும் தொடராமல் தனியாகச் சென்று கொண்டிருக்க ஏமாற்றமடைந்தார்.

எழுந்து அவளைத் தொடர்ந்தார்.

அவள் தனியாகச் சென்று தன் காரில் அமர்ந்து புறப் பட, தன் உள்ளங்கையில் குத்திக் கொண்டார்.

'உள்ளேயே அவனைக் கழற்றிவிட்டு விட்டாயா? நீ அவ்வளவு சாமர்த்தியசாலியா? சரி. இனிமேல் என் சாமர்த்தியத்தைப் பார்—கறுவிக் கொண்டார் ஈஸ்வர்.'

# 11

மதுமிதா காரை நிதானமாக செலுத்தினாள்.

ரியர்வியூ கண்ணாடியை அட்ஜஸ்ட் செய்தாள். அம்பாஸிடரில் தூரத்தில் ஈஸ்வர் தன் காரைத் தொடர்ந்து கொண்டிருப்பதை கவனித்தாள். மெதுவாக சிரித்துக் கொண்டாள்.

எல்லாருக்கும் எதிரி வீட்டுக்கு வெளியே இருந்தால் எனக்கு மட்டும் வீட்டுக்கு உள்ளேயே!

அம்மாவுக்கு இந்த ஈஸ்வரை எந்தக் காரணத்தால் பிடித்துப் போனது?

ஈஸ்வரின் சுயமுகம் இன்றுவரை அம்மா உணராமல் தான் இருக்கிறாளா? எனில் அம்மா ஒரு உலக மகா முட்டாள்!

அம்மாவுக்கு அப்போது இவர்மேல் ஏற்பட்டது காதலா இல்லை அம்போவென்று கைவிட்டு விட்டு ஓடிப்போன அப்பாவை பழிவாங்கும் ஒரு நடவடிக்கையாகத்தான் ஈஸ்வரை சேர்த்துக் கொண்டாளா?

அம்மாவுக்கு அப்போது தேவைப்பட்டது ஒரு நம்பிக் கையான ஆசாமியின் பாதுகாப்பு. மனசுக்கு இதமாக ஆறுதல் வார்த்தைகள்.

செகரெட்டரியாக அருகிலேயே இருந்த ஈஸ்வருக்கு அம்மாவின் பலமும் தெரியும். பலவீனமும் தெரியும்.



பெரிய தைரியசாலி மாதிரி வெளியே போனாலும் அம்மா ஒரு பயங்கரகோழை என்பது அவருக்கு தெரியாதா?

அம்மாவிடம் அதிகாரம் செய்தால் வேலையாகாது. அதுவே கெஞ்சலாக இதயத்தைத் தொடும்படியாகப் பேசி விட்டால் உடனே நடந்து விடும். இது ஈஸ்வருக்கு தெரியாதா? ஈஸ்வருக்கு துருதுருவென்ற மூளை.

ஆனால் துருப்பிடித்த மனசு! வெளியே சாதுப்பசு. உள்ளே சதி மிக்க நரி.

அம்மாவுக்கு ஆறுதல் சொல்லிச் சொல்லியே ரொம்ப அருகில் வந்து ஒட்டிக் கொண்டுவிட்டார்.

அம்மாவின் கழுத்தில் உள்ள தாலி அப்பா கட்டியதுதான் என்று எனக்குத் தெரியும். ஆனால் இது ஈஸ்வர் பெங்களூருக்கு அருகில் ஒரு கோயிலில் வைத்துக் கட்டியதென்றும் அப்பா கட்டிய தாலியை எப்போதோதான் கழற்றி வீசி விட்டதாகவும் பத்திரிகைகாரர்களிடம் சொன்ன பொய்யையே எனக்கும் இனியாவுக்கும் இன்றுவரை சொல்லிக் கொண்டிருக்கிறாள் அம்மா.

ஈஸ்வருக்கு இந்த வீட்டில் தன் நிலை என்ன, உரிமை என்ன, அதிகாரப்பூர்வமாக என்ன உறவு என்று எல்லாம் தெரியும்.

அதனால்தான் நிறைய சதிகள் செய்து கொண்டிருக் கிறார். அவர் மனதில் பலவிதமான திட்டங்கள் இருப்பது எனக்குத் தெரியும்.

ஆனால் அம்மா அவரை ஒருஅப்பாவி என்று அப்பட்ட மாக நம்பிக் கொண்டிருக்கிறாள்.

முதல் படம் எடுத்தபோது ஏற்பட்ட நஷ்டத்திற்குள் இவரால் ஏற்படுத்தப்பட்ட நஷ்டம் கணிசமாக பங்கு பெற்றிருப்பது எனக்குத்தெரியும். ஆனால் கையும் களவு

மாக ஆதாரப்பூர்வமாக என்னால் நிரூபிக்க முடியாது, அந்த அளவிற்கு ஈஸ்வர் முட்டாள் இல்லை.

இப்போது இரண்டாவது படம் எடுத்துக் கொண்டிருப் பதிலும் ஏதேதோ தில்லுமுல்லுகள் நடந்து வருகின்றன.

அம்மாவின் மூளை மழுங்கிவிட்டதால் எல்லாவற்றை யும் நம்புகிறாள் என்னைத் தவிர.

என்னைப்பற்றி அவள் மனதில் ஏராளமாக வளர்ந் திருக்கும் வெறுப்புக்கும் ஈஸ்வர்தான் காரணமாக இருக்க வேண்டும். அவ்வப்போது என்னைப் பற்றின வெறுப்பு ஊசியை அம்மாவின் மனதில் செலுத்திக் கொண்டிருப்பவர் அவர்தான்.

நான் செய்து கொள்ளப்போகும் திருமணம் இனியா வைப் பொறுத்தவரை மகிழ்ச்சியான விஷயம். ஏனென் றால், அவளைப் பொறுத்தவரை நான் ஒரு போட்டி. அந்தப் போட்டி விலகிவிடும். தன்னிஷ்டப்படி செயல்பட லாம், சுதந்திரம் மீட்கப்படும்.

அம்மாவைப் பொறுத்தவரை உணர்வு ரீதியாகவும் பாதிப்பு இருக்கிறது. பொருளாதார ரீதியாகவும் பாதிப்பு இருக்கிறது.

தான் திருமணம் செய்து கொண்டு அதில் தோல்வியை சந்தித்தால், என் திருமண வாழ்வு பற்றி சந்தேகம் உண்டு. அடிமனதில் பொறாமையும் உண்டு. ஒரு தாய் தன் மகளின் மகிழ்ச்சியான வாழ்க்கையைப் பார்த்து பொறாமைப் படுவாளா என்ன? படுவாள்! என் தாய் படுவாள். எனக்கு அவளைத் தெரியும். அவள்அடி மனதில் படிந்திருக்கும் எல்லாம் தெரியும்.

என்னை நடிகையாக்கியவள் அவள்தான். ஆனால் தன் காலத்தில் தனக்குக் கிடைத்த புகழையும், பணத்தை யும் விட பல மடங்கு தன் மகளுக்கு கிடைத்து வருவது



அவள் மனதில் ஒரு நிரந்தரப் புழுக்கத்தை ஏற்படுத்தி விட்டது.

ஏதாவது ஒரு புத்தகத்தில் அட்டைப் படமாக என்னைப் போட்டிருந்தால், அவள் முகம் அன்றைக்கு முழுக்க பார்க்க சகிக்காது. ரொம்ப நாளாக, அநேக சம்பவங்களில் அவளை கவனித்து நான் யோசித்து அறிந்து கொண்டதுதான் அந்தப் புழுக்கம்.

நான்கு வருடங்களுக்கு முன்பாக திடீரென்று எல்லா டைரக்டர்களுக்கும் ஃபோன் செய்து பேசினாள் அம்மா.

''வீட்ல போரடிக்குதுங்க. நடிச்சுப் பழகிட்டதால நடிக்காம இருக்கிறதே உறுத்தலா இருக்கு. மறுபடி நடிக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன். அக்கா கேரக்டர், அம்மா கேரக்டர் எதுவாக இருந்தாலும் சரிங்க''

தன் முடிவை என்னிடம் சொன்னபோது நான் சொன்னேன்.

''அம்மா கதாநாயகியாவே நடிச்சிட்டிருந்துட்டு கௌரவமா நீ ஃபீல்டை விட்டு விலகிட்டே. உன்னைப் பத்தி ஒரு கவர்ச்சியான இமேஜ் இன்னைக்கும் இருக்கு. இப்ப நீ மறுபடி நடிக்கறதுக்கான அவசியம் என்னஇருக்கு? பணப் பிரச்னைன்னு சொல்ல முடியாது. நான்தான் லட்ச லட்சமா கொட்டிகிட்டிருக்கேன். இப்ப நீ செட்டுக்கு வந்தா பழைய மரியாதை கிடைக்காதும்மா. அந்த பழைய கௌரவத்தோட நிறுத்திக்கிறது நல்லது.''

''இன்னைக்கு நம்ம குடும்பம் முழுக்க முழுக்க உன் வருமானத்தை நம்பி ஓடுது. எனக்குன்னு ஒரு வருமானம் இருந்தா எல்லா முடிவுரைக்கும் நான் உன்னைக் கேக்க வேண்டியதில்லை பாரு''

''ஏம்மா இப்படி பிரிச்சுப் பேசறே? இன்னைக்குத் தானேம்மா எனக்கு இத்தனை வருமானம்? என்னை

நீதானே இந்த சினிமாவுல நுழைச்சுவிட்டே. அன்னைக்கு எதுவும் இல்லையே.''

'சினிமா எடுக்கணும்னு சொன்னா நீ மறுக்கறே! என்கிட்ட பணம் இருந்தா உன் தயவை எதிர் பார்க்க வேண்டியதில்லையே''

''அவ்வளவுதானே? சரிம்மா. நான் எந்த மறுப்பும் சொல்லலை. சினிமா எடு. தாராளமா எடு!''

சொந்தப் படத் தயாரிப்புக்கு நான் அப்படித்தான் சம்மதிக்க வைக்கப்பட்டேன்.

ஆனாலும் அம்மா பாத்திரத்தில் இரண்டு படங்களில் நடித்தாள். அதற்காக பியூட்டி பார்லர் ஜிம் என்று போய் உடம்பைக் குறைக்கிற அழகாக்கிக் கொள்கிற முயற்சிகளில் ஈடுபட்டு...

அப்படியும் பத்திரிகைகளில் கிண்டல் செய்துதான் எழுதினார்கள்.

''மதுமிதாவின் அம்மாவுக்கு இந்த விபரீத ஆசை ஏற்பட்டிருக்கத்தான் வேண்டுமா? ஸ்க்ரீன் முழுக்க வருகிறார். பின்னணியில் 'ஹாத்தி மேரே சாத்தி' பட இசையை ஒலிக்கச் செய்திருப்பது சரியான கிண்டல்.

அம்மா அதற்கெல்லாம் கவலைப்படவில்லை. எனக்குத்தான் வேதனையாக இருந்தது.

எனக்குத் தெரிந்த டைரக்டர்களிடம் எல்லாம் 'தயவு செய்து நடிக்கச் சொல்லி அம்மாவை அழைக்காதீர்கள்' என்று நான் கேட்டுக் கொண்டேன்.

அதற்கும் சண்டை! 'தனக்கு வரும் வாய்ப்புகளைத் தடுக்க நான் யார்?' என்று தீவிரமான சண்டை. நான் எதற்காக அப்படிச் செய்தேன் என்பதைப் புரிந்து கொள்ளாமல் வீம்புச் சண்டை!



அது முதல் நான் அம்மாவுக்கு எதிரியாகிப் போனேன்.

தன் மகள்மேல் பழி தீர்த்துக் கொள்ள ஒரு தாய் செய்யத் துணியாத ஒரு காரியம் செய்தாள் அம்மா.

தனக்கு வேண்டிய ஒரு நிருபரை அழைத்து நான் ஒரு நடிகருடன் உல்லாசமாக இருப்பதாகவும் விளைவாக வயிற்றில் கரு உண்டாகி அதை ரகசியமாக கலைத்துக் கொண்டதாகவும் செய்தி வெளியிடச் செய்தாள்.

அந்த நிருபர் செய்தியைப் போட்டுவிட்டு பிறகு ஒருநாள் போதை நிலையில் அம்மாதான் அப்படிப் போட சொன்னாள் என்று என்னிடம் உளறிக் கொட்டியபோது...

நான் நடுங்கிப் போனேன்.

அவள் அம்மாதானா? நிஜமாகவே என்னைப் பெற்றவள் அவள்தானா?

அந்த சம்பவத்திற்குப் பிறகுதான் அம்மா என் மனதிலிருந்து ரொம்ப தூரம் விலகிப் போனாள். மதிப்பு மரியாதை எல்லாம் காற்றில் கரைந்து போனது. பார்க்கும்போதெல்லாம் ஆத்திரம்தான் கொப்பளித்தது.

இனி என் சொந்த உணர்வுகளுக்கு மட்டுமே முக்கியத்துவம் தர வேண்டும் என்று இதயத்தில் அழுத்தமாக சிந்தனை பதிந்தது.

அந்த அம்மாதான் நான் யாரை நேசிக்கிறேன் யாரை திருமணம் செய்தி கொள்ளப் போகிறேன் என்று வேவு பார்ப்பதற்காக ஈஸ்வரை உளவாளியாக அனுப்பி வைத்திருக்கிறாள்.

ஹோட்டலுக்குள் ஈஸ்வர் நுழையும்போதே நான் அவரைப் பார்த்துவிட்டதால்தான் அவரிடமிருந்து அவசரமாக பிரிந்து புறப்பட்டுவிட்டேன்.

ஈஸ்வரையும் அம்மாவையும் ஏமாற்றிவிட்டு திருமணம் செய்து கொள்வது என்பது. ஒரு மிகப் பெரிய சவாலாகத் தான் எனக்கு அமையப் போகிறது.

பார்க்கலாம் என் முடிவிலிருந்து நான் பின்வாங்குவ தாக இல்லை. கண்டிப்பாக இந்தத் திருமணம் என் விருப்பப்படி நடக்கத்தான் போகிறது.

சிந்தனையோடு காரைச் செலுத்திக் கொண்டிருந்த மதுமிதா அந்த விளைவால் மிக வேகமாக வந்த பைக்கை கவனிக்கத் தவறியதால் எதிர்பாராத அந்த விபத்து இமைக்கும் நேரத்தில் நிகழ்ந்துவிட்டது.

# 12

அந்த விபத்தை தவிர்த்துவிட மதுமிதா எவ்வளவோ முயன்றும் முடியாமல் போனது. இவள் சரியாக இடது புறம் காரை ஓட்டிக்கொண்டிருந்தாலும், எதிர்புறம் இடதுபுறமாக வரவேண்டிய அந்த மோட்டார் பைக் வலதுபுறமாக படு வேகத்தில் வந்தது. தூரத்திலேயே அதை கவனித்திருந்தாலும், சமாளித்திருக்கக் கூடும்.

திருப்பத்தில் வந்த சீறல் அது. உடனடியாக காரை வலதுபுறம் திருப்ப முயன்று, அதே சமயம் பின்புறம் ஒரு லாரி வேகமாக இவள் காரை ஓவர்டேக் செய்யும் முயற்சி யில் இருப்பதை கடைசி துல்லிய வினாடியில் கணித்து உடனே மறுபடி இடதுபுறமே காரைத் திருப்பியதில் ஏற் பட்ட தடுமாற்றத்தில், மதுமிதாவின் கார் இடது ஓரத்தில் இருந்த விளக்குக் கம்பத்தில் பெரிய சத்தத்துடன் மோதி யது. பைக்வாலா சறுக்கிக் கொண்டே தொலைதூரம் சென்றான். மதுமிதா உடனடியாக நினைவிழந்தாள்.



அந்த நட்சத்திர மருத்துவமனையில் ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியில் துர்காவும், ஈஸ்வரும் பதைப் போடு காத்திருந்தார்கள்.

''கால்ல சின்ன ஆபரேஷன்தான்னு சொன்னாங்க. ஆனா ஒருமணி நேரத்துக்கும் மேல ஆயிடுச்சேங்க!''

''உயிர் பொழைச்சதே பெரிய விஷயம் துர்கா''

''நல்லவேளை... நீங்க பின்னாடியே வந்ததால உடனே உங்க கார்ல தூக்கிப் போட்டுட்டு வந்துட்டீங்க... ரொம்ப ரத்தம் போயிருச்சா?''

''முன் பக்கம் அப்படியே நசுங்கினதால அவளோட லெஃப்ட் லெக் சிக்கிடுச்சு. ஆனா, துண்டாகலை. வலி தாங்காம மயக்கம் போட்டுட்டா.''

''அந்த பைக்ல வந்தவனுக்கு என்ன ஆச்சி?''

''உடம்பெல்லாம் சிராய்ப்பு! ஆனா உணர்வு இருந் திச்சி. தப்பு அவன் பேர்லதான். அதனால அவன் உடனே பைக்கை நிமிர்த்திக்கிட்டு பறந்துட்டான்.''

''வணக்கம் சார்'' என்ற குரலுக்குத் திரும்பி னார்கள்.

பத்திரிகை நிருபர் ரவி நின்றிருந்தார்.

''மதுமிதாவுக்கு ஆக்ஸிடெண்டாமே... அப்படியா?''

''அதுக்குள்ள உங்களுக்கு தகவல் வந்துடுச்சா?''

''இதுவே லேட் சார்...ஆக்ஸிடண்ட் நடந்து ரெண்டு மணி நேரமாச்சாமே...எப்படி சார் மேஜரா?''

''இல்லை...மைனர்தான்.''

''ஹெட் இன்ஜுரியா''

''அதெல்லாம் எதுவும் இல்லை. கால்லதான் அடி... ஆபரேஷன் நடந்திட்டிருக்கு''

''கார்ல வேற யாரு இருந்தாங்க?''

''அவ மட்டும்தான் இருந்தா''

''என்னாச்சு? பிரேக் பிடிக்கலையா?''

''எதிர்ல பைக்காரன் ராங் சைடுல வந்துட்டான், அவன் மேல மோதிடக்கூடாதுன்னு சமாளிக்கிறதில பேலன்ஸ் போய் லைட் போஸ்ட்ல மோதிட்டா''

''மயக்கமாயிட்டாங்களா?''

''ஆமாம்.''

''ஓட்டறப்பவே மயக்கத்திலே இருந்தாங்களா?''

''என்னது?''

''ஏதாச்சும் பார்ட்டிக்குப் போய் திரும்பிட்டிருந்தாங் களான்னு கேட்டேன்''

''ஏம்ப்பா நீ வேற! போதும். போய்ட்டு அப்புறம் வாங்க?''

ரவி நேராக ரிசப்ஷனுக்குப் போய் தன் பத்திரிகை அலுவலகத்துக்குப் ஃபோன் செய்யத் துவங்க, ஈஸ்வர் பாக்கெட்டிலிருந்து பீடா கவர் எடுத்தார். பின்னை ஜாக்கிரதையாக நகத்தால் நீக்கி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு பீடாவை வாயில் போட்டுக் கொண்டார்.

''யாருன்னு தெரிஞ்சிக்கிட்டீங்களா?'' என்றாள்... துர்கா.

''எது? பைக்ல வந்தவனா?''

''அதில்லை. அவ பார்க்கப் போனது யாரைன்னு கேட்டேன். அதைத் தெரிஞ்சுக்கத்தானே அவ்வளவு அவசரமா உங்களை அவ பின்னாடியே அனுப்பி வைச்சேன்.''



''டிஸ்கோ ஹால்ல அவங்க நுழைஞ்சுட்டாங்க. ஜோடி இல்லாம என்னை உள்ளே விட முடியாதுன்னுட் டான். தூரத்திலிருந்து அவன் பின்பக்கத்தைத்தான் பார்த்தேன். நல்ல உயரம். அகலமான தோள். கருகருன்னு தலை. ஸ்டைலான டிரஸ். அவ்வளவுதான் கவனிக்க முடிஞ்சுது''

''எதுக்குத்தான் நீங்க பிரயோஜனம்?''

''அலுத்துக்காதே! இந்த ஆக்ஸிடெண்ட் நமக்கு ஒரு விதத்தில சௌகரியம்தான்''

''என்ன சௌகரியம் இதுல?''

''நிலைமையைப் பார்த்தா பத்து நாளைக்காவது பெட்ல இருக்கச் சொல்லிடுவாரு டாக்டர். அவளோட ரகசிய கல்யாணத் திட்டத்தை வேற வழியே இல்லாம தள்ளி வைச்சாகணும். நீ ஒண்ணு செய்யி''

''என்ன?''

''மதுமிதாவுக்கு இப்படி அடி பட்டிருக்குன்னு தெரிஞ் சதும் அவன் நிச்சயம் துடிச்சிப் போயிருவான், நேர்ல பார்க்க வருவான். இல்லை, அட்லீஸ்ட் போன்லயாவது பேசுவான். அவகூட துணைக்கு நீதான் இருக்கப்போறே... கண்கொத்திப் பாம்புமாதிரி அவளை கண்காணிச்சுக் கிட்டே இரு. அவளோட காதலன் யாருன்னு மட்டும் தெரிஞ்சி என்கிட்டே சொல்லிடு''

''சொல்லிட்டா?''

''மிச்சத்தை நான் பார்த்துக்கறேன்''

''பார்த்துக்கறேன்னா?''

''உனக்கு என்ன நடக்கணும் துர்கா?''

''அவ இப்படி திடுதிப்புன்னு கல்யாணம் பண்ணிட்டுப் போயிடக்கூடாதுங்க. ஏகப்பட்ட சிக்கலை சந்திக்க வேண்டியதாயிடும்.''

''அதைத்தான் நான் பார்த்துக்கறேன்னு சொன்னேன்.''

ஈஸ்வர் பீடாவின் குதப்பலைத் துப்ப, வாஷ்பேசின் தேடி நடந்தார். துர்கா எதிர்புறம் பதிக்கப்பட்டிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள்.

மதுமிதா கண்விழித்த போது காலில் இரும்புவைத்து கட்டியது போல உணர்ந்தாள்.

வலது காலில் பெரிய பாண்டேஜ் போடப்பட்டு உயரமாக இழுத்துத் தொங்கவிடப்பட்டிருந்தது.

மசமசப்பிலிருந்து முழுப் பார்வைக்கு வந்தபோது அருகில் இருந்த அம்மா அவள் தோளில் கை வைத்தாள்.

''கவலைப்படாதே மது. பெருசா எதுவும் இல்லை. சின்ன ஆக்ஸிடெண்ட்தான் இது.''

''உனக்கு ஏமாற்றமாப் போயிடுச்சாம்மா?''

''என்ன கேக்கறே?''

''பெரிய ஆக்ஸிடெண்ட்டா எதுவும் நடக்கலையேன்னு ஏமாற்றமாப் போயிடுச்சான்னு கேட்டேன்.''

''என்னடி பேச்சு இது? தகவல் தெரிஞ்சி பதறிகிட்டு ஓடிவந்து ஆபரேஷன் தியேட்டர் வாசல்ல உயிரைக் கைல பிடிச்சுக்கிட்டு காத்திருந்ததுக்கு இப்படி ஒரு குத்தல் பேச்சா? எந்த அம்மாவாவது பொண்ணுக்கு விபத்துன்னா சந்தோஷப்படுவாளா?''

மதுமிதா பேசாமல் இருந்தாள்.

''உனக்கு புத்தி ரொம்ப வக்கிரப்பட்டுப் போச்சி''

''சரி...டாக்டர் என்ன சொன்னார்?''

''இருபது நாள் நீ இங்கே இருந்தாகணுமாம்''



''இருபது நாளா? என்ன ஆச்சு கால்ல?''

''எலும்பு முறிஞ்சி உள்ளே சதையில குத்திருச்சு. உடைஞ்ச இடத்தில எவர்சில்வர் பிளேட் வெச்சு போல்ட் போட்டிருக்காங்க! எலும்பு சேர்ந்ததும் கொஞ்ச நாள் கழிச்சி அந்த பிளேட்டை ஆபரேஷன் செஞ்சி எடுத்திடலாம்''

''என்னால நடக்க முடியுமாம்மா?''

''அதெல்லாம் முடியும். ஆனா, இருபது நாளைக்கு அசைக்கக்கூடாதாம். இப்படியேதான் இருக்கணுமாம். தைரியமா இரு மதுமிதா.''

மதுமிதா அமைதியானாள். கண்களை மூடிக்கொண்டாள்.

''ஏன் இந்த தண்டனை இறைவனே? என்ன தப்பு செய்தேன்? இன்னும் நான்கு தினங்களில் திருமணம் செய்து கொள்ள முடிவு செய்து வைத்திருந்தேனே... வாழ்வின் முக்கியமான திருப்புமுனை முடிவை யோசித்து வடிவமைத்து செயலுக்கு காத்திருந்தேனே...'

''பசிக்குதா மதுமிதா?''

''இல்லை.''

''ஜூஸ் ரெடியா இருக்கு. பசிக்கிறப்ப கேளு''

''அம்மா!''

''என்ன?''

''டாக்டரைப் பார்க்கணும்''

''ஈவினிங் ரவுண்ட்ஸ் வர்றப்ப பார்க்கறேன்னு சொல்லிட்டுப் போயிருக்கார் மது''

''பேப்பர்ல வந்துடுச்சா'''

''எல்லா பேப்பர்லையும் நிறைய பேர் ஃபோன் செஞ்சாங்க. நேர்ல வந்தாங்க. ரெண்டு நாளைக்கு அப்புறம் தான் விசிட்டர்சை அலோ செய்யறது நல்லதுன்னு டாக்டர் சொல்லிட்டார்.

அம்மா மூக்குக் கண்ணாடி அணிந்து தினசரி இதழ் ஒன்றைப் புரட்டி, அவள் விபத்து பற்றி வந்த செய்தியைக் காட்டினாள். டெலிபோன் ஒலித்தது. துர்கா எடுத்தாள்.

''சந்திரசேகர் பேசறேன். மதுமிதாகிட்டே பேச முடியுமா?''

''சந்திரசேகர்னா, எந்த சந்திரசேகர்?''

மதுமிதாவின் கவனம் சட்டென்று திரும்பியது. ''அம்மா கொடு. நான் பேசிக்கிறேன்.''

துர்கா ரிசீவரை அவளிடம் தர, ''அம்மா, நீ கொஞ்சம் வெளில இருக்கியா? நான் பர்சனலா பேசணும்'' என்றாள் மதுமிதா.

# 13

''**கொ**ஞ்சம் வெளில இருன்னு சொன்னேன்.'' என்றாள் ரிசீவரின் மவுத் பீஸை மூடியபடி மதுமிதா.

''யாரு அந்த சந்திரசேகர்? அப்படி என்ன பர்சனலாப் பேசப் போறே?'' என்றாள் அம்மா நகராமல்.

''நான் பேசறது உனக்குத் தெரிய வேணாம்னு நினைக்கிறேன். போதுமா? இதுக்கு மேல எப்படி வெளிப்படையா சொல்றது?''

''ஆனாலும், உனக்கு இவ்வளவு திமிரு ஆகாதுடி! உன் அம்மாவை ஒரு வேலைக்காரி மாதிரிதான் நடத்தறே''



நொடித்துக் கொண்டு துர்கா வெளியே போனாள்.

''ஹலோ சந்துரு'' என்றாள் மதுமிதா.

''என்னாச்சும்மா?''

''ஆக்ஸிடெண்ட் யாரைக்கேட்டுப்பா நடக்குது?''

''கால்லயா? எந்தக் கால்ல?''

''லெஃப்ட்ல''

''ஃபிராக்ச்சரா?''

''உடைஞ்சே போச்சிப் போலிருக்கு. ஆபரேட் பண்ணி பிளேட் வெச்சு போல்ட் பண்ணியிருக்காங்க. இருபது நாளைக்கு காலை அசைக்காம இருக்கணுமாம்... கட்டி தொங்க விட்டிருக்காங்க. சந்துரு.''

''ஐ ம் ஸாரி மது! என்னாலதான்!''

''நீ என்னப்பா செஞ்சே?''

''நான்தானே உன்னை ஹோட்டலுக்குக்கூப்பிட்டேன் வந்துட்டு நீ திரும்பினப்பதானே இது நடந்திருக்கு.''

''அசடு மாதிரி பேசாதே. விபத்துக்கு பெரிசா ஆராய்ச்சி பண்ணக்கூடாது. நடக்கணும்னு இருந்திருக்கு. நடந்திருச்சி. விட்டுடு''

''தைரியமா இருக்கியா?''

''தைரியம் இருக்கு. ஆனா ஏமாற்றமா இருக்கு சந்துரு''

''என்ன ஏமாற்றம்?''

''இன்னும் நாலு நாள்ல கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். இந்தச் சூழ்நிலை இப்படி வந்து படுத்துட்டேனே''

''பரவால்லை. அதனால என்ன? கொஞ்சம் தள்ளிப் போகுது.''

''உனக்கு இதுல வருத்தமில்லையா?''

''கல்யாணம் தள்ளிப் போறதில்லையா?''

''ம்.''

''ம்கூம். உனக்கு அடிபட்டதிலதான் வருத்தம். வலி இருக்கா?''

''இருக்கு.''

''நான் உன்னைப் பார்க்கணும் மாதிரி இருக்கு மது.''

''எனக்கும் ஆசையாத்தான் இருக்குப்பா. ஆனா இங்க என் கூடவே அம்மா இருக்கா. உன் ஃபோனை முதல்ல அவதான் அட்டெண்ட் செஞ்சா. சரியான சந்தர்ப்பம் அமையறப்ப நானே ஃபோன் பண்றேன். வந்துடு''

''அது நல்ல ஹாஸ்பிடல்தானா? வேற யாராச்சும் பெஸ்ட் ஆர்த்தோ சர்ஜன் சிபாரிசு பண்ணட்டுமா?''

''இது பக்கத்திலே இருந்த பெரிய ஹாஸ்பிடல்னு இங்க சேர்த்துட்டாங்க. கரெக்டான ட்ரீட்மெண்ட்னு தான் நினைக்கிறேன். இன்னும் நான் டாக்டரை கன்சல்ட் செய்யலை. அவசியப்படாதுன்னு நினைக்கிறேன்.''

''மயக்கமாய்ட்டியா?''

''ஆமாம்.''

''யாரு கொண்டு வந்து சேர்த்தது?''

''சித்தப்பா! டான்ஸ் ஹால்ல என்னை வேவு பார்க் கறதுக்காக பின்னாடியே வந்திருக்காருன்னு நான்கூட சொல்லலை? இந்த விஷயத்தில அம்மாவுக்கு நான்தேங்க்ஸ் சொல்லியாகணும்.''



''எதுக்கு?''

''அவதானே வேவு பார்க்க சித்தப்பாவை அனுப்பி வெச்சது.''

''சரி. டாக்டர் சொல்ற அட்வைஸ்படி நடந்துக்க. உன்னை நேர்ல பார்க்க சந்தர்ப்பம் அமைச்சிக் கொடு.''

''சரி.''

''இப்போ உனக்கு உதவிக்கு இருக்கிற அம்மாவோட உதவி தேவை. அதனால அவங்கக்கிட்டே அனுசரனையா நடந்துக்கோ மது.''

''அம்மா இல்லைன்னா ஒரு நர்ஸ் செய்துட்டுப் போறா!''

''எடக்குப் பேசாதே! உன் அம்மா எதிர்ப்பை இந்தச் சூழ்நிலைல காட்டாதே!''

''அப்புறம்?''

''டேக் கேர்! ஈவினிங் ஃபோன் செய்றேன்.''

''ரைட்டு, தைரியமா இரு சந்துரு''

''அது நான் சொல்ல வேண்டிய வார்த்தை வைச்சி ட்டுமா?''

''சரி...''

ரிசீவரை வைத்தாள் மதுமிதா. பெருமூச்சு விட்டாள்

அறைக் கதவின் கீழ்ப்பகுதியில் அரை இன்ஞ் இடை வெளி இருந்தது. அந்த இடைவெளியில் அம்மாவின் புடவை லேசாகத் தெரிந்தது.

கதவிடுக்கில் காது வைத்து நான் என்ன பேசுகிறேன்

என்று ஒட்டுக் கேட்டிருப்பாள். தெரியும். இதைவிட கேவலமாகவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறவள்தானே.

''பேசி முடிச்சிட்டியா? உள்ளே வரட்டுமா?''

கேட்டபடி உள்ளே வந்தாள் துர்கா.

''ஜூஸ் சாப்புடறியா?''

''கொடும்மா.''

துர்கா ஜூஸ் போட்டபடியே ''அப்படி என்ன ரகசியம்? யாரு அந்த சந்திரசேகர்? பேரு புதுசா இருக்கே...'' என்றாள்.

''அவசியம் தெரிஞ்சுக்கணுமா?''

''ஒரு அம்மாவையே வெளில போகச் சொல்லிட்டு ஒருத்தனோட சிரிச்சுப் பேசறே! யாருன்னு கேக்கக் கூடாதா? அதுக்கு எனக்கு உரிமை இல்லையா?''

''இந்த இண்டஸ்ட்ரீல நான் யார்கிட்டே சிரிச்சுப் பேசலை? சிரிச்சுப் பேசணும்னு எனக்குக் கத்துக் கொடுத்ததே நீதானேம்மா?''

''காலொடிச்சிக்கிட்டு படுத்துக்கிட்டிருக்கிறப்பவே உனக்கு எவ்வளவு திமிரு! இத பாரு மதுமிதா, இன்னைக்கு சினிமா உலகமே உன்னைத் தலைல தூக்கி வெச்சிக்கிட்டு கொண்டாடுதுன்னா அதுக்கு என்ன காரணம்னு யோசிச்சுப் பாரு!''

''என் அழகு! என் திறமை! என் உழைப்பு!''

''உன்னை அறிமுகப்படுத்தினது நான்தான். அதை மறந்துட்டுப் பேசறியே!''

''நான் கேட்டேனா? இல்லை கெஞ்சினேனா? என்னை நீ இதிலே திணிச்சே! உன் சௌகரியத்துக்காக செஞ்ச வேலை அது!''



''எல்லாத்தையும் குதர்க்கமா பார்க்கறதும், வெடுக் வெடுக்னு பேசறதும் உனக்குப் பழக்கமாப் போச்சு! முந்தியெல்லாம் வாயில்லாப் பூச்சியா, சாதுவா இருந்தே! இப்ப இப்படியெல்லாம் முரட்டுத்தனமா பேசறே! இப்படி பேச உனக்கு யாரு கத்துத் தந்தது? அந்த சந்திரசேகரா? யாரவன்? சொல்லுடி!''

மதுமிதா அமைதியாக இருந்தாள்.

''யாரும் எனக்கு எதுவும் கத்துக் கொடுக்க வேண்டிய தில்லைம்மா. என் மனசுக்குள்ளேயே பேசிக்கிட்டிருந் தேன். இப்ப வெளிப்படையா பேச ஆரம்பிச்சிருக்கேன். அவ்வளவுதான் வித்தியாசம்''

''இந்த தைரியம் எப்படி புதுசா வந்திச்சு?''

''பலூன் சாதாரண ரப்பர் சமாச்சாரம்தான். ஊத ஊத பெருசாகும். ஒரு எல்லைக்கு மேல ஊதினா வெடிச் சுடும். இவ்வளவு நேரம் பேசாம இருந்த பலூன் இப்ப ஏன் வெடிக்குதுன்னு கேப்பியா? அப்படித்தான் மனசும். ஒரு எல்லை வரைக்கும்தான் அது பொறுமையா இருக்கும் அப்புறம் ஒரு கட்டத்தில பொங்கத்தான் செய்யும்!''

''போதும்! நிறுத்துடி! நானும் பார்த்துக்கிட்டிருக் கேன். நீ பாட்டுக்கு பேசிக்கிட்டே போறியே என்ன? அந்த சந்திரசேகர் யாரு? இப்ப நீ சொல்லப் போறியா இல்லையா?''

மதுமிதா கண்களை மூடிக்கொண்டாள்.

''உன்னைத்தாண்டி கேக்கறேன்?''

''எனக்குத் தூக்கம் வருதும்மா''

''பதில் சொல்லிட்டுத் தூங்கு!''

மதுமிதா தன் கைக்கருகில் இருந்த அழைப்பு மணி பித்தானை அழுத்தினாள். வினாடிகளில் ஒரு நர்ஸ் வேக மாக உள்ளே வந்தாள்.

''சிஸ்டர்! எனக்கு ஆபரேஷன் செஞ்ச டாக்டரை நான் உடனடியாய் பார்க்கணும். ப்ளீஸ்...உடனே வரச் சொல்லுங்க''

''உங்களுக்கு என்ன பிரச்சனை? என்கிட்டே சொல்லுங்க மேடம்!''

''நான் தொடர்ந்து இங்க சிகிச்சை செய்துக்கணுமா இல்லை...வேணாமான்னு பிரச்னை. நீங்க வரச் சொல்லுங்க ப்ளீஸ்''

''யெஸ் மேடம்''

நர்ஸ் வெளியேறினாள். துர்கா ''இப்ப எதுக்குடி டாக்டரைக் கூப்புடறே? அவர்தான் ஈவினிங் வந்து பார்க்கறேன்னு சொன்னாரே...உனக்கு என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்காங்கன்னுதான் நான் விளக்கமா சொன்னேனே'' என்றாள்.

டாக்டர் தாமஸ் உள்ளே வந்தார்.

''யெஸ் மேடம்...வாட்ஸ் யுவர் ப்ராப்ளம்''

''உங்ககிட்டே கொஞ்சம் பர்சனலா பேசணும் டாக்டர்''

''அம்மா நீங்க கொஞ்சம் வெளில இருங்க. சிஸ்டர் நீங்களும் வெளில இருங்க'' என்றார் டாக்டர்.

துர்கா தயங்கியபடி வெளியே சென்றாள்.

''எனக்கு என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கீங்க டாக்டர்''

தாமஸ் விளக்கமாகச் சொன்னார்.

''இருபது நாளைக்கு அப்புறம் என் கால் பரிபூரணமா குணமாயிடும் இல்லையா? நடக்கறதிலே ஓடறதிலே டான்ஸ் ஆடறதிலே எந்த பிரச்னையும் இருக்காதே!?''



''எதுவும் இருக்காது. யு வில் பீ கம்ப்ளீட்லி ஆல் ரைட். ஆனா இந்த இருபது நாளும் நீங்க இங்க முழு ஓய்வுல இருக்கணும்.''

''டாக்டர் என்னை இங்கே கவனிச்சுக்கறதுக்கு ஸ்பெஷலா ஒரு நர்ஸ் ஏற்பாடு செஞ்சிடுங்க. எங்கம்மா என்கூட இருக்கறதை நான் விரும்பலை. விளக்கம் கேக்காதீங்க. சம் பர்சனல் ப்ராப்ளம். நீங்க ஏதாவது காரணம் சொல்லி அவங்களை வீட்டுக்கு அனுப்பி வெச்சிடுங்க ப்ளீஸ்...'' என்றாள் மதுமிதா.

டாக்டர் தாமஸ் அவளை ஆச்சரியமாகப் பார்த்தார்.

# 14

பாதி நிலாவில் மேக ஒட்டடை படிந்திருந்தது.

மொட்டை மாடியில் அலங்கார ஊஞ்சலில் அமைதியாக அமர்ந்திருந்த துர்கா, நைட்டியில் இருந்தாள்.

அருகில் அமர்ந்திருந்த ஈஸ்வர் டீப்பாய்மேல் கிளாஸை வைத்து ஜின் ஊற்றினார். ஐஸ் க்யூப்ஸ் இடுக்கியில் எடுத்துப் போட்டார்.

எடுத்து அவளிடம் நீட்டினார்.

வாங்கி ஒரே மூச்சில் தொண்டைக்குழி எகிற குடித்து முடித்துவிட்டு வைத்தாள்.

ஈஸ்வர் தனக்கு வெளிநாட்டு விஸ்கியை ஊற்றிக் கொண்டார். நிதானமாக இரண்டு சிப் பருகிவிட்டு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார்.

''நான் பெத்த பொண்ணு என்னை இன்சல்ட் பண்றாங்க''

''போகுது விடு''

''டாக்டர் மூலமா சொல்லி என்னை வீட்டுக்கு அனுப்பி வெச்சிட்டா! நர்ஸ் பார்த்துப்பாளாம்''

''அவளுக்கு உன்னைப் பிடிக்கலைன்னு இன்னிக்குத் தான் உனக்குத் தெரியுமா துர்கா?''

''ஏன் பிடிக்கலை? இவளுக்கு சோத்துல விஷம் வெச்சிட்டனா? இன்னைக்கு ஊரு, உலகம் பூரா மதுமிதா, மதுமிதான்னு பேசுதே, அதுக்குக் காரணம் யாரு?''

''நீதான். நீ நடிகையா இருந்ததாலதான் உனக்கு அவளை சுலபமா அறிமுகப்படுத்த முடிஞ்சுது. எவ்வளவு புரொட்யூசர்கிட்ட நீ அவளுக்கு சான்ஸ் கிடைக்கணும்ங்கறதுக்காக கெஞ்சியிருக்கே! நானே பக்கத்தில் இருந்து பார்த்திருக்கேனே!''

''அந்த நன்றி அவ மனசுல கொஞ்சம்கூட இல்லாமப் போச்சேங்க!''

''இருக்கு! அதை புகழ் கொடுத்த மமதை மறைச்சிட்டிருக்கு''

''காலொடிச்சிக்கிட்டு படுத்திட்டாளேன்னு எனக்கு எவ்வளவு பதறுது! அந்தப் பாசத்தை அவ வேஷம்னு சொல்றாங்க''

''பெத்த மனசு பித்து! பிள்ளை மனசு கல்லு! இன்னொரு கிளாஸ் ஊத்தட்டுமா துர்கா?''

''ஊத்துங்க!''

ஈஸ்வர் மற்றும் ஒரு கிளாஸ் ஊற்றிக் கொடுத்தார்.

''அவ ஏங்க என்கிட்டே இப்படி வெடுக் வெடுக்னு பேசறா?''



''உனகிட்டே மட்டும்தான் பேசறாளா? நான் தகவல் சொல்லி இனியா போய்ப் பார்த்திருக்கா. அவகிட்டேயும் ஏதோ கடுப்படிச்சிருக்கா. ஆஸ்பத்திரியிலே இருக்கறப்பக்கூட அக்காவுக்கு மண்டை கனம் இறங்காதான்னு இனியா என்கிட்டே ஃபோன்ல கேக்கறா!''

''என்ன ஆச்சு அவளுக்கு?''

''அதே மாதிரி நம்ம புரொடக்‌ஷன் வேலைகள் சம்பந்தமா நாலு செக்குல கையெழுத்துப் போட்டுத் தரச் சொல்லிக் கேட்டேன். நான் இனிமே பிளாங்க் செக்ல கையெழுத்துப் போட முடியாதுன்னு மூஞ்சில அடிச்ச மாதிரி 'சொல்லிட்டா!''

''உங்ககிட்டேயும் எதிர்த்துப் பேச ஆரம்பிச்சிட்டாளா?''

''அவளோட இந்த திடீர் பாய்ச்சலுக்கு ஒரு பின்னணி காரணம் இருக்கு துர்கா''

''என்ன?''

''இத்தனை நாளா நீ சொல்றதுக்கெல்லாம் தலை யாட்டிக்கிட்டு பெட்டிப் பாம்பா இருந்துட்டிருந்தவ, இப்ப கேள்வி கேக்கறான்னா என்ன அர்த்தம்? இது சொந்த புத்தியும் இல்லை. சுய புத்தியும் இல்லை. சொல்லித் தர்ற புத்தி''

''என்ன சொல்றீங்க?''

''கல்யாணம் பண்ணிக்கப் போறதா சொல்லிக்கிட்டு எவனோடவோ சுத்திக்கிட்டு திரியறாளே, அவன் கொடுக்கற தைரியம்தான் எல்லாம்.''

''சந்திரசேகரையா சொல்றீங்க?''

''சந்திரசேகரா? அது யாரு?''

''அதுதான் அவ கட்டிக்கப் போறவனோட பேரு''

''அட! இது எப்படி உனக்குத் தெரியும்?''

''அவன்கிட்டேயிருந்து ஃபோன் வந்திச்சி. பர்சனலா பேசணும்னு என்னை வெளியே அனுப்பிச்சிட்டா...கத விடுக்குல காது வெச்சி இந்த சைடு இவ பேசினதெல்லாம் கேட்டேன். அதிலேர்ந்து அவன்தான் அந்தப் பையன்னு தெரிஞ்சுக்க முடிஞ்சதுங்க''

''சந்திரசேகர்? அப்படின்னு இண்டஸ்ட்ரில யாருமே இல்லையே. எனக்குத் தெரிஞ்சி யாரு அதுன்னு விசாரிக்க வேண்டியதுதானே!''

''அதை விசாரிக்கறதுக்குத்தான் சண்டை போட்டு, டாக்டரை கூப்பிட்டு, கலாட்டா பண்ணி என்னை வீட்டுக்கே அனுப்பி வெச்சிட்டா!''

ஈஸ்வர் யோசனையில் ஆழ்ந்தார். மற்றொரு சிகரெட்டை எடுத்து அதன் நெருப்பை அதற்குக் கடத்தி விட்டு அதை சமாதி செய்தார்.

எழுந்து மெதுவாக மொட்டை மாடியின் கைப்பிடி சுவர் அருகே வந்தார். தூரத்து கார் வெளிச்சப் பொட்டுக்களின் அசைவுகளைப் பார்த்தார். நட்சத்திரங்களின் மினுக்கல்களைப் பார்த்தார்.

களக் களக் என்று திரவம் கிளாஸில் ஊற்றப்படும் சத்தத்திற்குத் திரும்பி, ''துர்கா, போதும்! ஏற்கெனவே உன் லிமிட்டுக்கு மேல போயிட்டே!'' என்றார்.

''பரவாயில்லை! எனக்கு ரொம்ப வேதனையா இருக்குங்க''

குடிக்கத் துவங்கினாள் துர்கா.

அவளருகில் வந்தார் ஈஸ்வர்.



''இருபது நாளைக்கு அந்த ஆஸ்பத்திரியை விட்டு அந்தப் பக்கம் இந்தப் பக்கம் அசைய முடியாது அவளால...இல்லையா?''

''ஆமாம்.''

''இந்த இருபது நாளைக்குள்ளே நாம புத்திசாலித்தனமா கொஞ்சம் செயல்பட்டாகணும் துர்கா. இல்லைன்னா வாழ்க்கை பூரா ரொம்ப வருத்தப் பட்டுக்கிட்டிருப்போம்.''

''என்ன செய்யணும் சொல்லுங்க''

''அந்த சந்திரசேகர் யாருன்னு கண்டுபிடிச்சி அவன் மனசுல இருந்து மதுமிதாவை தூக்கி எறிய வைக்கணும். இவளோட கல்யாணத் திட்டத்தை தவிடுபொடியாக்கணும். இதை நான் பார்த்துக்கறேன். நீ செய்ய வேண்டிய வேலை ஒண்ணு இருக்கு.''

''என்ன?'' குழறலாகக் கேட்டபடி ஊஞ்சலில் சைடாக சரிந்தாள் துர்கா.

''இப்ப நான் எது சொன்னாலும் உனக்குப் பதியாது. அப்புறம் சொல்றேன். வா போலாம். நீ தூங்கு''

துர்காவை எழுப்பி அவளைத் தோளோடு சாய்த்து அணைத்தபடி நடத்திச் சென்று படுக்கையறையில படுக்க வைத்தார் ஈஸ்வர்.

மறுபடி மொட்டை மாடிக்கு வந்தார். தன் கிளாஸை நிரப்பிக் கொண்டார். சிகரெட்டை ஆழமாக உள்ளிழுத்துக் கொண்டார் ஈஸ்வர்.

ஃ ஃ ஃ

ஜீப்பைக் கண்டதும் செக்யூரிட்டி ஆசாமி அவசரமாக இரும்பு கேட்டைத் திறந்துவிட்டு ஜீப் அவனைக் கடக்கும்

போது உள்ளே இருந்த சந்திரசேகர் கவனிக்கவில்லை என்றாலும் விரயமாக ஒரு சல்யூட் வைத்தான்.

அந்த யார்டில் அறுக்கப்பட வேண்டிய மரங்கள் தேக்கு வெண் தேக்கு, பலேசா, கோங்கு, படாக் என்று ரகம் பிரிக்கப்பட்டு மலை மாதிரி அடுக்கப்பட்டிருந்தன. ஆஸ்பெஸ்டாஸ் வேய்ந்த ஷெட்டுகளில் சைஸ் வாரியாக அறுக்கப்பட்ட மரங்கள்.

கட்டிங் பகுதியில் ஐந்து மெகா சைஸ் இயந்திரங்கள் தாமாக இயங்கி மரங்களை அறுத்துத் தள்ளிக் கொண்டிருக்க நீல நிற யூனிஃபார்ம் அணிந்த ஊழியர்கள் மாற்றி மாற்றி சந்திரசேகருக்கு வணக்கம் சொன்னார்கள்.

அலுவலகக் கட்டிடத்தில் குளிர் அறைக்கு வந்ததும் உதவி மேனேஜரை உள்ளே அழைத்தான்.

''ஆர்.கே. கன்ஸ்ட்ரக்ஷனுக்கான லாட் முந்தாநாளே டெஸ்பாட்ச் பண்ணச் சொல்லி உங்ககிட்டே பர்சனலா நானே இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருக்கேன். இன்னைக்கு வரைக்கும் அனுப்பலை. என்ன சார் பண்றீங்க...உம்...''

சந்திரசேகர் கேஸில் இருந்து சிகரெட் உருவியபோது அது சங்கீதமாக சிணுங்கியது.

''ஸாரி சார். அவங்க ஆர்டர்ல ரெண்டு அயிட்டம் ரெடியாகலை. அதான் நாளைக்கு...அனுப்பிச்சிடுவோம் சார்''

''ரெடியானதை மட்டும் முதல்ல அனுப்பியிருக்கலாமே''

''ரெண்டு தடவையா அனுப்பிச்சா நமக்கு ரெண்டு டிரான்ஸ்போர்ட் செலவு ஆகும் சார். அதனாலதான்''

''எனக்கு நஷ்டத்தை அவாய்ட் பண்றீங்களாக்கும்! ரெண்டு அயிட்டம் ரெடியாகலை என்ன சார் பண்ணட்டும்னு என்னை நீங்க கேட்டீங்களா? அதுவும் ரெடியானதும் அனுப்பிக்கலாம்னு நீங்களா முடிவெடுத்துட்டு பேசாம உட்கார்ந்திருந்தது அதிகப்பிரசங்கித்தனம். அதையும் நானா கேட்டப்புறம்தான் சொல்றது பொறுப்பில்லாத் தனம்''

''உடனே ரெடியாய்டும்னுதான் சார் நினைச்சேன்.''

''செஞ்ச தப்பை ஒத்துக்காம சமாளிச்சிப் பேசறது அழிச்சாட்டியமான பிடிவாதம்! யு கேன் கோ நவ்!''

ஆத்திரமாகக் கத்திவிட்டு மேஜை மேலிருந்த தண்ணீரை எடுத்து மடமடவென்று குடித்தான் சந்திரசேகர்.

செல் ஃபோன் சிணுங்கியது.

''ஹலோ...சந்திரசேகர்.''

''சந்துரு நான்தான் மதுமிதா''

''எப்படிம்மா இருக்கே?''

''வலி குறைஞ்சிட்டிருக்கு. வர்றீங்களா?''

''எப்போ?''

''இப்பவே!''

''ஒண்ணும் பிரச்னை இல்லையே? உன் அம்மா?''

''அவங்களை வீட்டுக்கு அனுப்பிட்டேன்.''

''பத்திரிகைக்காரன் எவனாச்சும் பார்த்துடுவான்னு புலம்புவியே பரவாயில்லையா?''

''பரவாயில்லை. வாங்க. இனிமே எதுக்கும் யாருக்கும் பயப்படப் போறதில்லை.''

''ஓ.கே. உடனே வர்றேன். நான் ஏதாச்சும் உனக்கு வாங்கிட்டு வரணுமா மது?''

''ஆமாம் சந்துரு.''

''என்ன வேணும் சொல்லு?''

''ஒரு தாலி வாங்கிட்டு வாங்க' 'என்றாள் எதிர்முனையில் மதுமிதா.

# 15

''என்ன சொன்னே? கம் அகைய்ன்!'' என்றான் சந்திரசேகர்.

''ஒரு தாலி வாங்கிட்டு வாங்கன்னு சொன்னேன் சந்துரு'' என்றாள் மதுமிதா எதிர்முனையில்.

''புரியலைம்மா. எதுக்கு?''

''தாலி எதுக்கு? என் கழுத்துல நீங்க கட்றதுக்குத் தான்?''

''என்ன உளறல் இது?''

''நீங்க வாங்கிட்டு வந்துடுங்க. நேர்ல விபரம் சொல்றேன்.''

''நான் முதல்ல நேர்ல வர்றேன். லெட் அஸ் டிஸ்கஸ் ரொம்ப குழம்பிப் போயிருக்கேன்னு புரியுது. டென்ஷன் இல்லாம இரு மது. மீட் பண்ணலாம். பேசலாம்.''

ஃபோனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். நெற்றியைத் தடவியபடி சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இண்டர்காமில், ''சாரி சார், கொஞ்சம் வாங்க'' என்றான்.

நெற்றியில் திரிசூரணமிட்ட பாக்கெட்டில் மூன்று பேனாக்கள் செருகின ஷெல் பிரேமில் கண்ணாடி அணிந்த தேசிகாச்சாரி உள்ளே வந்தார்.

''உட்காருங்க... சாரி சார்''



''என்ன தம்பி?'' என்று அமர்ந்தார்.

''ட்ரையல் பேலன்ஸ் எடுத்துட்டீங்களா?''

''இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு தம்பி. ஏழு வவுச்சர்ஸ் டேலி ஆக மாட்டேங்குது''

''தொகை எவ்வளவு?''

''நாலே முக்கால் லட்சம்?''

''விளையாடறீங்களா?''

''நிஜமாத்தான் தம்பி சொல்றேன்.''

''கம்ப்யூட்டரைத் தூக்கி காயலான் கடைக்கு போட்டுடலாமா?''

''அது என்ன தப்பு பண்ணிச்சு? நாம எதை உள்ளே போடறோமோ அதை வெச்சிக்கிட்டுத்தானே அதுகணக்கு சொல்லும். இன்ஃபாக்ட், டேலி ஆகலைன்னு நமக்குத் தகவல் சொன்னதே கம்ப்யூட்டர்தானே!''

''டேலி ஆகாததுக்கு என்ன காரணம்?''

''ஒவ்வொரு ரிசிப்டா, ஒவ்வொரு வவுச்சரா செக் பண்ணிட்டு இருக்கேன் தம்பி. கவனக்குறைவா சில எண்ட்ரீஸ் விட்டு போயிருக்கலாம்.''

''சரி, ரௌஸாரியோ நேத்து ஃபோன்ல என்ன சொன்னார்?''

''அதான் குறிப்பு எழுதி வைச்சிருந்தேனே!''

''கதைச் சுருக்கம் மாதிரி ரெண்டு வரிதானே எழுதி வெச்சிருந்தீங்க? விபரமாச் சொல்லுங்க... சாரி சார்''

''ஸ்வீடன்ல பிசினஸ் ரொம்ப டல்லாம். ஏகப்பட்ட நஷ்டமாம். இந்த அக்கவுண்ட்டிங் இயரோட அங்கே பிரான்ச்சை குளோஸ் பண்றாராம்.''

''ஒரு தாலி வாங்கிட்டு வாங்க''என்றாள் எதிர்முனையில் மதுமிதா.

# 15

''என்ன சொன்னே? கம் அகைய்ன்!'' என்றான் சந்திரசேகர்.

''ஒரு தாலி வாங்கிட்டு வாங்கன்னு சொன்னேன் சந்துரு'' என்றாள் மதுமிதா எதிர்முனையில்.

''புரியலைம்மா. எதுக்கு?''

''தாலி எதுக்கு? என் கழுத்துல நீங்க கட்றதுக்குத் தான்?''

''என்ன உளறல் இது?''

''நீங்க வாங்கிட்டு வந்துடுங்க. நேர்ல விபரம் சொல்றேன்.''

''நான் முதல்ல நேர்ல வர்றேன். லெட் அஸ் டிஸ்கஸ் ரொம்ப குழம்பிப் போயிருக்கேன்னு புரியுது. டென்ஷன் இல்லாம இரு மது. மீட் பண்ணலாம். பேசலாம்.''

ஃபோனை பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். நெற்றியைத் தடவியபடி சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான்.

இண்டர்காமில், ''சாரி சார், கொஞ்சம் வாங்க'' என்றான்.

நெற்றியில் திரிசூரணமிட்ட பாக்கெட்டில் மூன்று பேனாக்கள் செருகின ஷெல் பிரேமில் கண்ணாடி அணிந்த தேசிகாச்சாரி உள்ளே வந்தார்.

''உட்காருங்க... சாரி சார்''



''என்ன தம்பி?'' என்று அமர்ந்தார்.

''ட்ரையல் பேலன்ஸ் எடுத்துட்டீங்களா?''

''இன்னும் கொஞ்சம் வேலை இருக்கு தம்பி. ஏழு வவுச்சர்ஸ் டேலி ஆக மாட்டேங்குது''

''தொகை எவ்வளவு?''

''நாலே முக்கால் லட்சம்?''

''விளையாடறீங்களா?''

''நிஜமாத்தான் தம்பி சொல்றேன்.''

''கம்ப்யூட்டரைத் தூக்கி காயலான் கடைக்கு போட்டுடலாமா?''

''அது என்ன தப்பு பண்ணிச்சு? நாம எதை உள்ளே போடறோமோ அதை வெச்சிக்கிட்டுத்தானே அதுகணக்கு சொல்லும். இன்ஃபாக்ட், டேலி ஆகலைன்னு நமக்குத் தகவல் சொன்னதே கம்ப்யூட்டர்தானே!''

''டேலி ஆகாததுக்கு என்ன காரணம்?''

''ஒவ்வொரு ரிசிப்டா, ஒவ்வொரு வவுச்சரா செக் பண்ணிட்டு இருக்கேன் தம்பி. கவனக்குறைவா சில எண்ட்ரீஸ் விட்டு போயிருக்கலாம்.''

''சரி, ரௌஸாரியோ நேத்து ஃபோன்ல என்ன சொன்னார்?''

''அதான் குறிப்பு எழுதி வைச்சிருந்தேனே!''

''கதைச் சுருக்கம் மாதிரி ரெண்டு வரிதானே எழுதி வெச்சிருந்தீங்க? விபரமாச் சொல்லுங்க... சாரி சார்''

''ஸ்வீடன்ல பிசினஸ் ரொம்ப டல்லாம். ஏகப்பட்ட நஷ்டமாம். இந்த அக்கவுண்ட்டிங் இயரோட அங்கே பிரான்ச்சை குளோஸ் பண்றாராம்.''

''பண்ணிட்டு''

''மெக்ஸிகோல பிளான் பண்றாராம். இன்னைக்கு ராத்திரி உங்களைப் ஃபோன் பேச சொன்னாரு.''

''இந்தியா வர்ற மாதிரி எதாச்சு பிளான் இருக்காமா? நீங்க கேட்டீங்களா?''

''வரணும்னு சொன்னார். தேதி எதுவும் சொல்லலை அப்படி எதுவும் பிளான்பண்ணியிருந்தாக்கூடஎன்கிட்டயா சொல்லுவாரு''

சந்திரசேகர் மௌனமானான். அவன் அனுமதித்த பிறகு தன் ஸீட்டுக்குப் போக வேண்டி சாரி காத்திருந்தார்

அவரை உற்றுப் பார்த்தான் சந்திரசேகர்.

''என்ன தம்பி அப்படி பார்க்கறீங்க?''

''சாரி சார், நீங்க இங்கே எத்தனை வருஷமா இருக்கீங்க?''

''இருபத்தி நாலு வருமா!''

''என்னை எத்தனை வருஷமாத் தெரியும்?''

''பத்து பன்னிரண்டு வருஷமா''

''கொஞ்சம் பர்சனலா உங்ககிட்டே பேசலாமா?''

''தாராளமா''

''நான் கல்யாணம் பண்ணிக்கட்டுமா?''

''இதை நாலு வருஷமா சொல்லிக்கிட்டிருக்கேன். உங்கப்பா இருந்திருந்தா அதட்டி மிரட்டி மனையில உக்கார வைச்சிருப்பார். நான் சொல்லத்தானேமுடியும்?''

''சினிமா உலகம் பத்தி உங்க கருத்து என்ன?''



''முக்கால்வாசிப் பேரு ஃபிராடு! ஏதோ சில பேர்தான் அங்க நல்லவங்களா இருக்காங்க. இது என் அபிப் பிராயம்''

''எல்லாத் துறையிலயுமே இப்ப அப்படித்தானே இருக்காங்க?''

''அங்க கொஞ்சம் அதிகம். எக்கச்சக்கமா பணம் புழங்கற இடத்திலதான் எக்கச்சக்கமா பிரச்னைகளும் புழங்கும்''

''நீங்க சினிமா பார்க்கறதுண்டா...சாரி சார்''

''ஓ! மாசத்துக்கு ஒரு படம்தான் போவேன். போற துக்கு முன்னாடி பத்திரிகை விமர்சனங்களைப் படிச்சிட்டு மத்தவங்களை விசாரிச்சுட்டு நல்லபடமா செலக்ட் செஞ்சி பார்ப்பேன்.''

''அப்போ உங்களுக்கு நடிகை மதுமிதாவைத் தெரியும் இல்லையா?''

''மதுமிதாவைத் தெரியாதவங்க இருக்காங்களா தம்பி? படம் பார்க்காதவனுக்கும் தெரியுமே! பேப்பர், போஸ்டர், டி.வின்னு எங்கயும் அவதானே கண்ல படறா?''

''மதுமிதா பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

''நல்ல நடிகை! பொதுவா கவர்ச்சியான உடலமைப்பு இருக்கிற நடிகைகளுக்கு நடிப்பு சுமாராதான் வரும். பிரமாதமா நடிக்கிற பொண்ணுங்களுக்கு நல்ல உடற்கட்டு அமையாது. இது ஒரு சாபக்கேடு. ஆனா. மதுமிதா இதுல விதி விலக்கு. கவர்ச்சியாவும் இருக்கா. நல்லாவும் நடிக்கிறா''

சந்திரசேகர் சிகரெட் எடுத்து அவருக்கும் ஒன்றை நீட்ட மறுக்காமல் பெற்றுக் கொண்ட சாரி, ''அப்புறமா

பிடிச்சுக்கறேன்.'' என்று சட்டைப் பாக்கெட்டில் போட்டுக்கொண்டார்.

''மதுமிதாவை தனிப்பட்ட முறையில தெரியுமா? அதாவது நேர்ல சந்திச்சிருக்கீங்களா? பேசிப் பழகியிருக்கீங்களா?''

''என் வயசுக்கு இப்படி ஒரு கேள்வியை நீங்க கேக்கறது நல்லா இருக்கா தம்பி?''

''சேச்சே! நான் தப்பா கேக்கலை. ஏதாச்சும் ஒரு வகையில அறிமுகம் உண்டான்னு கேட்டேன்.''

''இல்லை தம்பி''

''எனக்கு உண்டு சாரி சார். ஒரு நட்சத்திர ஹோட்டல் டிஸ்கோ ஹால்ல, லேசா ஆரம்பிச்ச அறிமுகம். ஒரு வருஷமா நாங்க நெருக்கமா பழகிட்டிருக்கோம்.''

''அப்படியா?''

''அவ மனசு பூராவும் எக்கச்சக்கமான சோகம் இருக்குன்னு நான் சொன்னா நீங்க நம்புவீங்களா சார்?''

''ம்கூம்...நான் நம்பமாட்டேன்.''

''ஏன்? நடிகைக்கு சோகம் இருக்காதா?''

''இருக்கும். அது மிகைப்படுத்தப்பட்ட சோகமாத்தான் இருக்கும். இடுப்புல சதை வந்துடுச்சி. எந்த நேரம் இன்கம்டாக்ஸ்காரன் வந்து எல்லாத்தையும் அள்ளிக்கிட்டுப் போவானோன்னு ஒரு கவலை இருக்கலாம். ஏர்க்கண்டிஷனர் ரிப்பேராயிடுச்சே. நீச்சல் குளத்தோடு உள்ள ஒரு பங்களா வாங்கணுமே...இப்படி எல்லாமே லக்ஸரி கவலையாத்தான் இருக்கும்''

''அப்படியா?''



''உலகத்துல மனுஷனுக்கு வர்ற பிரச்னைகள்ல தொண்ணூறு சதவிகிதப் பிரச்சினைகளை பணத்தால சரி பண்ணிடலாம் தம்பி. மிச்ச அஞ்சு சதவிகித பிரச்சினைகள் பணத்தால வர்ற பிரச்சினைகளாத்தான் இருக்கும்.''

''அப்படியில்லை சாரி சார். இதையெல்லாம்விட மனப்பிரச்சினைன்னு ஒண்ணு இருக்கே. அது பணம் இருக்கிறவனுக்கும் வரும் இல்லாதவனுக்கும் வரும்.''

''சரி...இருந்துட்டுப் போகுது விடுங்க...எதுக்கு என்னை உக்கார வெச்சி ஒரு நடிகையைப் பத்தி பேசிட்டிருக்கீங்க? முதல்ல அதைச் சொல்லுங்க!''

சந்திரசேகர் சற்றே யோசித்துவிட்டு...''சாரி சார், நான் மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்'' என்றான் நிதானமாக.

34752

தேசிகாச்சாரியின் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது அதிர்ச்சி!

''தம்பி முடிவே பண்ணிட்டீங்களா?''

''ஆமாம். ஏதாச்சும் சொல்லணுமா?''

''முடிவு செஞ்சதுக்கப்புறம் சொல்றதுக்கு என்ன இருக்கு?''

''இன்னும் செயல்படுத்திடலையே... தீர்மானம் தானே! என்ன நினைக்கிறீங்களோ சொல்லுங்க!''

''எனக்கு உங்க மேல அக்கறை உண்டுன்னு நம்புறீங்களா தம்பி?''

''நம்புறதாலதான் உங்ககிட்டே இந்த பர்சனல் மேட்டரை டிஸ்கஸ் பண்ணிட்டு இருக்கேன்.''

''நீங்க எனக்கு புள்ளைமாதிரி! வேணாம் தம்பி. இந்த யோசனையை விட்டுடுங்க, ஏதோ ஒரு கவர்ச்சில அவமேல ஆசை வெச்சிட்டிங்க போலிருக்கு! சிலது தூரத்தில இருந்தாதான் அழகு! பக்கத்தில வந்தா அசிங்கம்! ஜாலியா பழகின வரைக்கும் சரி. விட்டுடுங்க! அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்க எதிர்காலம் பாழாப் போயிடும். கொஞ்சநாள் சந்தோஷமா இருப்பீங்க. அப்புறம் உங்க நிம்மதியே போயிடும்.''

சந்திரசேகரின் முகம் சிறுத்துப்போனது.

# 16

தான் சொன்ன பதிலால் சந்திரசேகரின் முகம் சட்டென்று வாடிப் போவதை கவனித்த சாரி சங்கடப்பட்டார்.

தன் அபிப்ராயத்தை இப்படி வெளிப்படையாகச் சொல்லி இருக்கக் கூடாதோ என்று ஒரு குறுகுறுப்பு அவர் மனதில் ஏற்பட்டது.

''தம்பி'' என்றார் நிதானமாக.

''சொல்லுங்கள் சார்'' என்றான் பேப்பர்வெயிட்டை மெதுவாக உருட்டிக் கொண்டிருந்த சந்திரசேகர்.

''நீங்க எம். பி. ஏ. படிச்சவர். இவ்வளவு பெரிய தொழிலை திறமையா நிர்வாகம் பண்றவர். இந்தத் தொழில் ஏற்படற பலவிதமான பிரச்னைகளுக்கு பதட்டமே இல்லாம பளிச்சுன்னு புத்திசாலித்தனமா தீர்வு கண்டு செயல்படுத்தறவர். என்னதான் எனக்கு அனுபவம் ஒருபலமா இருந்தாலும், உங்க புத்திசாலித்தனத்தையும், சாமர்த்தியத்தையும் பார்த்து பலசமயம் பிரமிச்சுப் போயிருக்கேன். வீட்ல என் பிள்ளைங்களுக்கு அட்வைஸ் பண்றப்போ உங்களைத்தான் உதாரணம் காட்டிச் சொல்வேன். அப்படி உங்கமேல மதிப்பும், மரியாதையும் நான் வெச்சிருக்கறதாலதான் உரிமையோட உங்க முடிவை நிராகரிக்கச் சொன்னேன்''



''சாரி சார், எனக்கு ஆலோசனை சொல்றதுக்கும். தேவைப்பட்டா.

கண்டிக்கிறதுக்குகூட உங்களுக்கு உரிமை உண்டு சார். உங்களை நான் என் அப்பா ஸ்தானத்திலதான் மனசுல வெச்சுருக்கேன். அதனாலதான் இந்த பர்சனல் மேட்டரை உங்ககிட்ட பேசினேன். என் கருத்துக்கு எதிரா பேசறதுக்காக நீங்க தயக்கம் காட்டத் தேவையில்லை''

''வேணாம் தம்பி. இந்த யோசனையை மனசிலேர்ந்து கழுவிடுங்க''

''மதுமிதாவைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என் வாழ்க்கைல நிம்மதி போயிடும்னு எதனால சார் சொன்னீங்க? காரணத்தைச் சொல்ல முடியுமா?''

''எனக்கு தர்மசங்கடமா இருக்கு தம்பி''

''சும்மா சொல்லுங்க. உங்க மனசுல பட்டதை தைரியமா சொல்லுங்க. எனக்குக் கோபம் வராது. இது ஒரு வெளிப்படையான விவாதம்தான்''

''சினிமா பொம்பளைங்க அவ்வளவு சுத்தமானவங்க இல்லை தம்பி''

''சுத்தம்னு நீங்க சொல்றது உடம்பையா மனசையா? நீங்க உடம்பைக் குறிப்பிடறதா இருந்தா இன்னைக்கு எவ்வளவோ கல்யாணமாகாத காலேஜ் பொண்ணுங்களும் ஆபீசுக்குப் போற பெண்ணுங்களும்கூட சுத்தமில்லை சாரி சார். சரி, எத்தனை ஆம்பளைங்க சுத்தம்? வெளிப்படையா சொல்லணும்னா உங்க கோணத்துல நான்கூட

சுத்தமில்லை சார். சில செக்ஸ் அனுபவங்கள் எனக்கும் உண்டு. இதுக்கென்ன சொல்றீங்க?''

''என்ன சொல்றதுன்னு எனக்குப் புரியலை. நான் அந்தக் காலத்து ஆசாமி, இப்படி அணுகுண்டு போடற மாதிரி அதிர்ச்சியா பேசத் தெரியாது.''

''உண்மையான உண்மையைப் பேச ஆரம்பிச்சா அது பல சமயம் அதிர்ச்சியாதான் இருக்கும் சாரி சார். மதுமிதாவோடு வெளி அழகுதான் முதல்ல என்னை அவளோட பழகத் தூண்டிச்சு. ஆனா அவளை என்மனசு நேசிக்க ஆரம்பிச்சது அவளோட உள் அழகை உணர ஆரம்பிச்சதுக்கப்புறம்தான்.''

''உங்களோட பணக்காரப் பின்னணி தெரிஞ்சதும் உங்களை வளைச்சிப் போடறதுக்காக அவ ஜாலமா பேசியிருக்கலாம் தம்பி. உங்களுக்குப் பிடிச்ச மாதிரியெல்லாம் நடந்திட்டிருக்கலாம். கேமிரர்வுக்கு முன்னாடி நடிக்கத் தெரிஞ்சவங்களுக்கு கேமிரா இல்லாதப்பவும் நடிக்கிறதென்ன கஷ்டமா?''

''நோ! சினிமாக்காரங்கன்னாலே தப்பானவங்க. அடுத்தவங்களை ஏமாத்தறதுக்கு சந்தர்ப்பம் பார்க்கறவங்கன்னு உங்க மனசுல, எண்ணம் பதிவாயிடுச்சு, விதிவிலக்குகள் இருக்கலாம்னு ஏத்துக்க மாட்டேங்கறீங்களே. ஏன்? மதுமிதாவோட அம்மா துர்கா இருக்காங்களே. அவங்க வாழ்க்கைலயும் நடிக்கிறவங்க. ஆனா மதுமிதா அப்படி இல்லை சார். நீங்க பேட்டிகள்லயும். போஸ்டர்லயும் பார்க்கற மதுமிதா வேற சார்! அது எல்லாம் மேக்கப் சார்! நிஜமான மதுமிதாவை பழகிப் பார்த்தாத்தான் புரிஞ்சுக்க முடியும்''

''நீங்க இளமை மயக்கத்திலேயே பேசறீங்க. மனசுல காதல் வந்துட்டா புத்தி வேலை செய்யறதை நிறுத்திடும்.



அந்தப் பொண்ணோட கவர்ச்சி உங்களை ஆட்டிப் படைக்குது. இப்படியெல்லாம் பேச வைக்குது''

சந்திரசேகர் வாய்விட்டுச் சிரித்தான்.

''அந்த வயசை நான் கடந்துட்டேன் சார். இது பருவச் சலனம் இல்லை. பக்குவமான நேசம். மதுமிதாவோட ஒரிஜினல் டைமென்ஷன் புரிஞ்சதால் ஏற்பட்ட நேசம். அவளுக்குள்ளே ஒருநல்ல மனுஷி சிறைபட்டிருக்கா சார். இந்த சமுதாயத்துக்கு ரொம்ப உபயோகமுள்ள மனுஷி. சார் ஒரு எழுத்தாளர் அந்த மனுஷிக்குள்ளே உண்டு...ஒரு பத்திரிகையாளர் உண்டு...சமூகசேவகி உண்டு. அவ சினிமால நுழையாம இருந்திருந்தா வேற ஒரு உன்னதமான நிலையில் இருப்பா சார். நான் சொல்றதெல்லாம் உங்களுக்கு மிகையாப் படலாம். ஆனா இது உண்மை. அவளுக்குள்ளே இருக்கிற அந்த நிஜ மனுஷிக்கு விடுதலை கொடுக்கணுங்கற துடிப்புலதான் சார் நான் கல்யாணம் செஞ்சுக்கற முடிவெடுத்தேன்''

''தம்பி. நான் மதுமிதாவை நேர்ல தூரத்திலேர்ந்து கூடப் பார்த்ததில்லை. நீங்க நெருக்கமா பழகியிருக்கீங்க நமக்குள்ளே வயசு வித்தியாசம் இருக்கு. அனுபவ வித்தியாசம் இருக்கு. அதனால அபிப்ராயத்திலயும் வித்தியாசம் இருக்கத்தான் செய்யும். தீர்க்கமா நூறு தடவை யோசனை செஞ்சி முடிவெடுங்க. இதுக்கு மேல நான் என்ன சொல்றது?''

சில விநாடிகள் அவரையே உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்த சந்திரசேகர் ''மதுமிதாவைக் கல்யாணம் செய்துக்கிற என் முடிவில மாற்றம் இல்லை சார். கல்யாணத்துக்குப்புறம் அவ நடிக்கப் போறதில்லை. அப்போ நான் சொன்ன மனுஷியை நீங்க மட்டுமில்லை உங்களை மாதிரியே அபிப்ராயம் வெச்சிருக்கிற இந்த சமூகத்தில உள்ள பலரும் புரிஞ்சுக்குவாங்க நீங்க உங்க சீட்டுக்குப் போங்க'' என்றான்.

அவர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் ஒரு பெரு மூச்சை வெளியேற்றி விட்டு அமைதியாக எழுந்து சென்று தும் மற்றொரு சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

அந்த ஆங்கிலக் கவிதைப் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள் மதுமிதா.

ஒரு கவிதையின் இரண்டு வரிகள் அவளை ஈர்த்தன.

'மகரந்தத் தூளைக் காற்றில் கலக்கவிட்ட அந்த மல ருக்கு தன் மூலம் கருத்தரித்த மனைவி மலர்களை அடை யாளம் தெரியுமா? என்கிற அர்த்தத்தில் எழுதப்பட்ட அந்தக் கவிதை அவளை புத்தகம் மூடி யோசிக்க வைத்தது'

மலருக்கு மட்டுமா இந்தக் கேள்வி? மனிதர்களுக்குக் கூடத்தான் பொருந்தும்! சில யுத்தங்களின் போது எதிரி நாட்டின் பெண்களை சில போர் வீரர்கள் கற்பழிக்கிறார் களே...பிறகு அந்த முகங்களை நினைத்துப் பார்ப்பார் களா? அவர்கள் கருத்தரித்தார்களா, பிரசவித்தார்களா, கர்ப்பம் கலைத்தார்களா, கழுத்தில் சுருக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டார்களா என்றெல்லாம் அந்தக் காம வெறியர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களா?

''மே ஐ கமின் மது?''

கதவில் தட்டியபடி கேட்டுவிட்டு உள்ளே வந்தான் சந்திரசேகர். கொண்டு வந்த பழங்கள் நிறைந்த வலைக் கூடையை ஓரமாக வைத்துவிட்டு: கட்டுப்போட்டு படுக் கையிலிருந்து ஒரு அடி உயரத்தில் கயிறு போட்டு உயர்த்தி தொங்கவிடப்பட்டிருந்த அவள் காலைப் பார்த்துக் கண் கலங்கினான்.

''மை காட்! இந்த அளவுக்கா?'' ஸ்டூலில் அமர்ந் தான்.



''அதனால்தான் டாக்டர் இருபது நாளைக்கு இங்கேயே இப்படியே இருந்தாகணும்னு சொல்றார்''

''ஒண்ணும் பிராப்ளம் இல்லையே. அப்புறம் சரியாயிடும் இல்லை? நார்மலாயிடும் இல்லை?''

''ஓடலாம். குதிக்கலாம். பாண்டி விளையாடலாம். உதைக்கலாம். எப்பவும்போல இருக்கலாம்னு சொல்லிட் டாரு. ஆனா இருபது நாளைக்கப்புறம்''

''அவர் இருபது நாள் சொன்னாலும் நீ ரெண்டு மாசம் ரெஸ்ட் எடுக்கணும் மது''

''அதுசரி, படம் எல்லாம் முடிச்சிக் கொடுக்க வேணாமா? இப்பவே புரொடியூசர்ஸ் எல்லாம் அழுதுட்டி ருக்காங்க தெரியுமா? கோயில்ல அர்ச்சனை பண்ணி பிரசாதம் கொண்டு வர்றாங்க. மதுமிதா மேல அக் கறையா? இல்லை மதுமிதாங்கிற மிஷின் சீக்கிரம் ரிப்பேரா கணுமேங்கிற கவலை! அவங்க பொண்டாட்டிக்கு கால் ஒடிஞ்சாக்கூட இவ்வளவு கவலைப்படமாட்டாங்க'' என்று சிரித்தாள்.

''எப்பவும் ஒரு விரக்தி! சரி சொல்லு. கால்ல இப்ப வலி இருக்கா?''

''இப்ப இல்லல. அப்பப்ப வரும். குறையும். ஒரு வாரம் கழிச்சுத்தான் வலி சுத்தமா நிக்குமாம்.''

''என்ன போ! என்னவெல்லாமோ ப்ளான் பண் ணோம். இப்படி திடீர்னு படுத்துட்டே! ஏய்! நான் கவலைப்படறது நிஜமான மதுமிதாவுக்காக. நடிகை மதுமிதாவுக்காக இல்லை. என்னையும் உன் சினிமா லிஸ்ட்ல சேர்த்துடப் போறே?''

''சே! என்னப்பா இது! உங்களை அந்த லிஸ்ட்ல சேர்ப்பேனா? ஏன் கண் எல்லாம் சிவந்திருக்கு?''

''தூக்கமில்லை. உன்னைப் பத்தித்தான் நினைச்சிட்டிருந்தேன்''

''சரி, தாலி வாங்கிட்டீங்களா? கொண்டாந்திருக்கீங்களா?''

''போன்ல பேத்தினது பத்தாதா? நேர்லயுமா?''

''சந்துரு ஐயாம் ஹண்ட்ரட் பர்ஸெண்ட் சீரியஸ்''

''என்ன சொல்றேம்மா?''

''நான் உங்களைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு அம்மாவும் ஈஸ்வரும் ரொம்ப சுலபமா கண்டுபிடிச்சிடுவாங்க. அப்புறம் கல்யாணம் நடக்காம இருக்கறதுக்கு என்னவெல்லாம் சதி பண்ண முடியுமோ அத்தனையும் பண்ணுவாங்க''

''அதனால?''

''நம்ம கல்யாணம் ரகசியமாகவும் நடக்கணும். அவசரமாகவும் நடக்கணும் சந்துரு''

''எப்படியும் நீ டிஸ்சார்ஜ் ஆகி வர்றவரைக்கும் நான் காத்துக்கிட்டுதான் இருந்தாகணும் மது''

''ஏன் அப்படி? நான் சீரியஸா கேக்கறேன்- நாம ஏன் இந்த ஆஸ்பத்திரிலேயே கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?'' என்றாள் மதுமிதா.

# 17

மதுமிதாவின் முகத்தையே சில விநாடிகள் அமைதியாகப் பார்த்தான் சந்திரசேகர். பெருமூச்சுவிட்டான்.



அவன் சொல்லப் போகும் பதிலுக்காக அவள் காத்திருந்தாள். அவள் தலையை இதமாகக் கோதிவிட்டான் சந்திரசேகர்.

''சொல்லுங்க சந்துரு''

''என்ன சொல்லச் சொல்றே?''

''இந்த ஆஸ்பத்திரிலயே நாம கல்யாணம் செய்துகிட்டா என்ன சந்துரு?''

''நீ ரொம்ப குழம்பிப் போயிருக்கே மது.''

''எங்கம்மாவைப் பத்தித் தெரிஞ்சதாலதான் அவசரப்படறேன்.''

''நீ அவசரப்படறதுக்கு வேற ஒரு காரணம் இருக்க முடியுமான்னு நான் யோசிக்கறேன் மது''

''என்ன?''

''என் மேலே உனக்கு நம்பிக்கை குறைஞ்சிருக்கு அப்படித்தானே?''

''சேச்சே! அப்படி இல்லைப்பா''

''அப்படித்தான் எனக்குத் தோணுது இந்தக்கல்யாணம் நீயும் நானும் சம்பந்தப்பட்டது ரெண்டுபேரும் அதில உறுதியா இருக்கோம். மூணு வாரத்திலே யார் மனசை யார் கலைச்சிட முடியும்?''

''உங்களுக்கு ஈஸ்வர் பத்தித் தெரியலை, அந்தாளு ஒரு நரி. குறுக்குத்தனமா ஏதாச்சும் யோசிப்பாரு. அதெல்லாம் யோசிச்சுப் பார்த்துதான் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டு அப்புறம் சமூகத்துக்கு தெரிவிக்கலாம்னு சொன்னேன் நீங்களும் ஒத்துக்கிட்டீங்களே...''

''நடிகர் சுபாஷோட படப்பைபங்களால பிள்ளையார் கோவில்ல கல்யாணம் பண்ணிக்கலாம்னு பேசினோம்.

இப்ப என்னடான்னா ஆஸ்பத்திரில தாலி கட்டுன்னு சொல்றே. உங்க சினிமால வர்ற சீன் மாதிரி இருக்கு.''

''நான் ஆஸ்பத்திரில இருக்கறப்ப அவங்க ஏதாச்சும் சதி செஞ்சிடுவாங்கன்னு நான் ரொம்ப பயப்படறேன் சந்துரு. ப்ளீஸ் எனக்காக இந்தத் திட்டத்துக்கு நீங்க சம்மதிங்க. அட் எனி காஸ்ட் உங்களை நான் மிஸ் பண்ணத் தயாரா இல்லை. என்னை ஒரு பொருளா இயந்திரமா பார்த்த உலகத்தில் பெண்ணாப் பார்த்தவர் நீங்க மட்டும்தான் என் மனசை துலலியமாப் புரிஞ்சிக் கிட்டவர் நீங்கதான் ப்ளீஸ் சந்துரு''

மதுமிதாவின் கண்கள் கலங்கி துளிகள் உருண்டன.

''ஏய்! என்னம்மா இது? எதுக்கு இப்ப கண் கலங்கறே? ஓ.கே. ஓ.கே. படப்பை பங்களாலயும் ரகசியமாத்தான் பண்ணிக்கிறதா இருந்தோம் இங்கேயும் ரகசியமாத்தான் பண்ணிக்கப் போறோம். இடம்தானே மாறும்? ரைட்டு. அதுசரி எலெக்ஷன்ல எம்.ஜி.ஆர் படுத்துக்கிட்டே ஜெயிச்சாரே, அந்த மாதிரி படுத்துக் கிட்டே தாலி கட்டிக்கப் போறியா? அட்லீஸ்ட் நீ எழுந்து நடக்கற நிலைமைக்கு கூட வரவேணாமா?''

''டாக்டரைக் கேட்டுட்டேன். இன்னும் நாலு நாள் கழிச்சு என்னை ரூமுக்குள்ளேயே நடக்க வைப்பாங்களாம், அதனால வர்ற வெள்ளிக்கிழமை காலைல பத்து மணிக்கு இதே ரூமில நமக்கு கல்யாணம். சரியா?''

''ரைட்டு ரெண்டு பேர் சாட்சி வேணும்.''

''சுபாஷ் எப்ப கூப்புட்டாலும் எங்க கூப்புட்டாலும் வர்றேன்னு சொல்லியிருக்கார். அவர் ஒருத்தர்கிட்டதான் இதுபத்தி மனசுவிட்டு பேசிருக்கேன்.''



''இன்னொருத்தரா எங்க ஆபீஸ்ல வேலை பார்க்கற தேசிகாச்சாரியைக் கூப்புட்டுக்கறேன். என் மேல பிரிய மும் அக்கறையும் உள்ளவரு.''

''போதும். இந்த ரெண்டு பேர் போதும். அந்த சமயத்தில இந்த ஹாஸ்பிடல டாக்டரையும் கூப்புட்டுக்க லாம்.

''முகூர்த்தப் புடவை வேஷ்டி சட்டை எடுத்துட்டு வந்துடறேன். ரெண்டு மாலை வாங்கிட்டு வந்துடறேன் தாலி செஞ்சிட்டு வந்துடறேன். வேற?''

''உங்ககிட்ட இருக்கிற ஸ்டில் கேமிராவும் வீடியோ கேமிராவும் எடுத்துட்டுவந்துடுங்க. சுபாஷ் சார் எடுத்துக் கொடுப்பாரு. அதான் நமக்கு ரெக்கார்ட். ரெஜிஸ்டர் பண் றதுக்கு தேவைப்படும்.''

''அய்யர் மந்திரம் எல்லாம் வேணாமா?''

''எனக்கு அவசியம்னு தோணலை. வேணும்னா நாதஸ்வரம் மட்டும் கேஸட்ல போட்டுக்கலாம்''

''ஆஸ்பத்திரிக்குள்ளே கல்யாணம்னு இப்ப நினைச்சா லும் விநோதமாத்தான் இருக்கு மது''

''அவசியத்துக்காகத்தானே இப்படிப் பண்றோம்''

''ரைட்டு. ரைட்டு. பிரஸ் மீட் வெச்சு அறிவிக்கிறது எப்போ?''

''அது நான் டிஸ்சார்ஜ் ஆகிற அன்னைக்கு''

''ரிசப்ஷன்?''

''அது பிரஸ் மீட்டுக்கு அப்புறம் வர்ற ஏதாச்சும் ஒரு ஸண்டே''

''அதையாச்சும் கிராண்டா வைக்கணும் மது''

''கண்டிப்பா. புதுமையாவும் ஏதாச்சும் செய்யலாம். என்டெர்டைன்மெண்ட்ல வழக்கமா கர்நாடிக் இல்லை. லைட் மியூசிக்தான் எல்லாரும் வைக்கிறாங்க. நாம வேற ஏதாச்சும் ஏற்பாடு செய்யணும். இங்க ஆஸ்பத்திரில சும்மாதானே இருக்கேன். நல்லா யோசிச்சு வித்தியாசமான ஐடியாஸ் பண்றேன். அப்புறம் சந்துரு உங்ககிட்ட எனக்கு ஒரு பர்மிஷன் வேணும்.''

''என்ன?''

''கல்யாணத்துக்கப்புறம் நான் கண்டிப்பா நடிக்கப் போறதில்லைன்னு ஏற்கனவே முடிவு செஞ்சாச்சு. அதே சமயம் என் நேரத்தை வீட்ல சமையல் பண்றதில செலவு செய்ய விருப்பமில்லை. சமூகத்துக்கு உபயோகமா ஏதாச்சும் பிஸியா செய்யணும்.''

''உனக்கு எப்படி இஷ்டமோ அப்படி செய்யின்னு ஏற்கனவே நான் சொல்லிட்டனேம்மா''

''முதல் கட்டமா ஒரு பத்திரிகை ஆரம்பிக்கணும்னு நினைக்கிறேன் சந்துரு. சர்க்குலேஷன் கம்மியா போனாலும் பரவால்லை ஒரு வீரியத்தோடு அந்த பத்திரிகை வரணும். கவிதைகளுக்கு அதில முக்கியத்துவம் தரணும்''

சந்திரசேகர் மெல்லச் சிரித்தான்.

''என்ன சந்துரு சிரிக்கறீங்க?''

''எங்க ஆபீஸ்ல சாரின்னு இருக்காருன்னு சொன்னேனே. அவர் இப்ப இங்க இருந்து நீ சொல்றதைக் கேட்டாருன்னா மயக்கமே போட்டு விழுந்துடுவாரு. அதை நினைச்சிக்கிட்டேன்''

''ஏன் அப்படி?''

''அவர் நடிகைகள் மேல் வெச்சிருக்கிற அபிப்ராயம் அப் படி!''



''என்ன அவரோட அபிப்ராயம்?''

''வேணாம், அது உனக்கு முக்கியமில்லை''

''சும்மா சொல்லுங்க''

''நான் உன்னைப் பத்தி என்ன அபிப்ராயம்வெச்சிருக்கிருக்கேன்றதுதான் உனக்கு முக்கியம். விட்டுடு. அப்ப நான் புறப்படறேன். அப்பப்ப போன் பண்றேன். சும்மா எதையாச்சும் யோசிச்சுக்கிட்டே இருக்காம நல்லா ரெஸ்ட் எடு. என்ன?''

சந்திரசேகர் எழுந்து கொண்டு அவள் நெற்றியில் முத்தமிட்டு கன்னத்தில் தட்டிவிட்டு நடந்தான்.

புரொடக்ஷன் மேனேஜர் செல்லப்பன் பவ்யமாக நின்று கொண்டிருந்தான்.

சோபாவில் கால் மேல் கால் போட்டமர்ந்தபடி கணக்கு நோட்டை கண்ணாடி போட்டு வரிவரியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் துர்கா.

''என்னய்யா இது ஒரு ஃபைட் சீனுக்கு ஐநூறு ஜூனியர் ஆர்ட்டிஸ்டா? எதுக்குய்யா அவ்வளவு பேரு?''

''திருவிழாவுல நடக்கற சண்டைம்மா. அதனால தான் டைரக்டர் அத்தனை பேரு கேட்டாரு.''

''அவருக்கென்ன இஷ்டத்துக்கு கேட்டுடுவாரு! இங்க என்ன பணம் அருவி மாதிரி கொட்டிக்கிட்டு இருக்கா? அந்தாளு சொந்தபடம் எடுத்தாரே... அதில் இப்படித்தான் ஐநூறு பேர் ஆயிரம் பேர்னு ஜூனியர் ஆர்டிஸ்ட்ஸ் யூஸ் செஞ்சாரா? அடுத்தவங்க காசுன்னா விளையாடிப் பார்க்கறதா?''

''இல்லைம்மா. அப்பத்தாம்மா ரிச்சா கிராண்டா தெரியும்.''

''நூறு பேரை வெச்சிகிட்டே ஐநூறு பேர் இருக்கிற மாதிரி காட்டலாம். அதுக்கெல்லாம் கொஞ்சம் வித்தை தெரியணும். நாளைக்கு இருக்கா ஃபைட்டு?''

''ஆமாம்மா''

''அஞ்சி நாளாவா ஒரு ஃபைட்டை எடுக்கறாரு''

''கொஞ்சம் பெரிய ஃபைட்டும்மா''

''டைரக்டரை நாளைக்கு செட்டுக்குப் போறதுக்கு முன்னாடி இங்க வரச் சொல்லு''

''எதுக்குன்னு கேட்டா?''

''ஃபர்தர் ஷூட்டிங் பத்தி டிஸ்கஸ் செய்யணும்னு சொல்லு. நான் செட்டுக்கு வந்தா எனக்கு டென்ஷன் ஏறிடும். நாலு பேர் இருக்காங்களேன்னு பார்க்காம கத்திடுவேன். அது நல்லா இருக்காது. நீ வரச்சொல்லு. நான் பேசிக்கிறேன்.''

''சரிங்கம்மா''

செல்லப்பன் கணக்கு நோட்டை வாங்கிக்கொண்டு அகல துர்கா கண்ணாடியைக் கழற்றி மடக்கி வைத்தாள்.

கார் வந்து நின்று ஈஸ்வர் அதிலிருந்து அவசரமாக இறங்கி உள்ளே வந்தார்.

''துர்கா இப்படி வா''

தனியறைக்கு அவர் நடக்க அவளும் தொடர்ந்தாள்.

''கை கொடு சொல்றேன்.''

''எதுக்குங்க?''

''கொடு சொல்றேன். அந்த சந்திரசேகர் யாரு என்னன்னு கண்டுபிடிச்சிட்டேன்.''



முகமலர்ந்தாள் துர்கா. ''அப்படியா? யாருங்க அவன்?''

''கொஞ்சம் பசை உள்ள பார்ட்டியாத்தான் பிடிச்சிருக்கா. பெரிய ஸா மில்லு வெச்சிருக்கான். மர வியாபாரம் ஹோல்சேல். எம்.பி.ஏ. படிச்சிருக்கான். அப்பா, அம்மா இல்லை. இவனை வளர்த்தது ஒரு கிறிஸ்டியன். ரோஸாரி யோன்னு பேரு. அவரு இண்டர்நேஷனல் பிஸினெஸ்மேன். பல வியாபாரம் பல நாட்ல. பறந்துகிட்டே இருக்கிறவரு. அவருக்கு தனிக் குடும்பம் குழந்தைங்க உண்டு. இவனை வளர்த்து படிக்க வெச்சி மெட்ராஸ்ல உள்ள பிசினெஸ் மட்டும் ஒப்படைச்சிட்டாரு'

''இதெல்லாம் நமக்கெதுக்குங்க. நாமஎன்ன சம்பந்தம் பேசப்போறமா? மதுமிதா மனசுல இருந்து அவனைப் பிடுங்கி தூரப் போடணும், இல்லை அவனை கரெக்ட் செஞ்சு இவளை விட்டு விலகவைக்கணும். அதுக்கு என்ன வழி?''

''ஒரு யோசனை சொல்றேன். சரியா வருமான்னு பாரு'' என்றார் ஈஸ்வர்.

# 18

''என்ன யோசனை? சொல்லுங்க?'' என்றாள் ஆர்வமாக துர்கா.

ஈஸ்வர் தன் வெற்றிலைப் பெட்டிலிருந்து ஒரு பீடா எடுத்துப் போட்டுக் கொண்டு கண்களை மூடி வாயையும் மனதையும் கசக்கிக் கொண்டிருந்தார்.

பொறுமையில்லாத துர்கா ''நீங்க என்ன யோசனை செய்தாலும் சரி. அந்த சந்திரசேகர் நம்ம மதுமிதாவை கல்யாணம் பண்ணிக்கக்கூடாது. வெறுத்து ஒதுக்கணும்.

இவ அவமானப்பட்டு நிற்கணும். அம்மாதான் கதின்னு என்கிட்ட சரண்டர் ஆகணும்'' என்றாள்.

ஈஸ்வர் பீடா தூளை விழுங்கிவிட்டு சக்கையை வாஷ் பேசினில் துப்பி மேல் துண்டால் வாயைத் துடைத்தபடி வந்தார்.

''துர்கா என் நோக்கமும் அதேதான். நம்ம பொண்ணு சைடுல நயமா இதமாப் பேசி இந்த கல்யாணத்தை நிறுத்த முடியாது. வேர்லயே ஆசிட் ஊத்தறமாதிரி மாப்பிள்ளை மனசையே கலைச்சிட்டமுன்னா அப்புறம் கல்யாணம் எப்படி நடக்கும்?''

''அந்தப் பையனை இவ மயக்கி வெச்சிருப்பாளே. பொதுவாவே நடிகைன்னா லட்சம் பேர் ஏங்கிப் போயிட றாங்க. இவ கல்யாணமும் செய்துக்கறேன்னு சொல்றப்ப ரொம்ப அடிமை மாதிரில்ல கெடப்பான். அவன் மனசை என்ன சொல்லி கலைப்பீங்க?''

''அவன்கிட்ட நேரடியா மூவ் பண்ணக் கூடாது துர்கா''

''வேற எப்படி?''

''ஒரு அட்டகாசமான பிளான் வெச்சிருக்கேன் துர்கா''

''என்ன?''

''அதை ஒர்க்-அவுட் பண்றதுக்குக் கொஞ்சம் செலவா கும்''

''எவ்வளவாகும்?''

''நாப்பது அம்பது ஆகலாம்''

''பிளான் என்னன்னு சொல்லுங்க''

தன் மனதில் இருந்த திட்டத்தை பதினைந்து நிமிடம் பொறுமையாக விவரித்து முடித்தார் ஈஸ்வர்.



''நிஜமாவே நல்ல பிளான் தான். ஆனா...'' என்றாள் துர்கா.

''ஆனா?''

''இதிலே இன்னொருத்தனை நம்ப வேண்டி யிருக்கே...''

''வேற வழியில்லையே...''

''அந்தாள் விசுவாசமானவனா இருக்கணும்''

''காசு கொடுத்தா விசுவாசம் காட்டுவான் யாரும்''

''கடைசி வரைக்கும் சாதிப்பானா?''

''தைரியமான ஆளைத்தானே பிடிப்பேன் நான்''

''போலீஸ்ல மதுமிதா கம்ப்ளைண்ட் கொடுத் தான்னா?''

''கொடுக்கட்டுமே. என்ன ஆகும்?''

''போலீஸ் நாலு போடு போட்டு விசாரிச்சா பயந்து போய் இந்த மாதிரி துர்காவும் ஈஸ்வரும்தான் இப்படி நடக்கச் சொன்னாங்கன்னு சொல்லிட்டா?''

''அந்தளவுக்கு விட்டுடுவமா? போலீஸ் இதில் தலை யிட்ற மாதிரி தெரிஞ்சா அவனை கப்சிப்புன்னு தலை மறைவாகச் சொல்லிடலாம், ஒரு குளத்துல கல் வீசுனா என்னாகும்? அலை பரவும். நமக்கு வேண்டியது அந்த அலைதான். அதை உருவாக்கிட்டு அடியில காணாமப் போற கல்லைப் பத்தி கவலைப்படத் தேவையில்லை''

''சரி, யாரை பயன்படுத்தப் போறீங்க இதில?''

''நம்பகிட்ட படத்தில நடிக்க சான்ஸ் கேட்டு ரொம்ப நாளா ஒரு தெலுங்கு பையன் வந்திட்டிருக்கானே கதிர வன்னு. அவனைத்தான் யூஸ் பண்ணப் போறேன்''

''சரி. பண்ணிடுங்க. லேட் பண்ணாதீங்க. மதுமிதா ஆஸ்பத்திரில இருக்கிறப்பவே இந்தக் காதலை உடைச்சிடணும்''

''நம்ம புரொடக்ஷன் மேனேஜர் செல்லப்பாகிட்ட கதிரவனோட அட்ரஸ் வாங்கி வெச்சிட்டேன். இப்ப அவனைத்தான் பார்க்கப் போறேன். விபரமா பேசிடறேன். அட்வான்சா இருபதாயிரம் தூக்கிப் போட்டா அசந்துடுவான் அவன்'' என்றார் ஈஸ்வர்.

''தர்றேன்''

இடுப்பில் செருகின வெள்ளி சாவிக் கொத்துடன் சென்று பீரோ திறந்து இருபதாயிரத்துடன் வந்தாள் துர்கா.

ஜிப்பா பாக்கெட்டில் போட்டுக் கொண்டு கார் சாவியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் ஈஸ்வர்.

''உக்காருங்க, சாரி சார்'' என்றான் சந்திரசேகர் சுழல் நாற்காலியை வலதுபக்கமாகத் திருப்பிக் கொண்டு.

''சொல்லுங்க தம்பி'' என்றார் அவர் அமர்ந்தபடி.

''எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும்''

''என்ன செய்யணும்?''

''தாலி வாங்கறதுக்கு என்னோட கூட வரணும். பெரியவங்க உங்க ஆசீர்வாதம் என் கல்யாணத்தில கண்டிப்பா வேணும்''

சாரி அமைதியாக தன் பேனாவைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தார்.

''நீங்க தீர்மானத்திலேர்ந்து மாறவே இல்லையா தம்பி''



''இல்லை சார். இன்னொரு விஷயத்துக்கு இன்னும் கூட நீங்க ஆச்சரியப்படுவீங்க. மதுமிதா ஒரு சின்ன விபத்துல சிக்கி இப்ப ஆஸ்பத்திரில இருக்கா. அது தெரியுமா?''

''பேப்பர்ல நியூஸ் படிச்சேன்''

''அந்த ஆஸ்பத்திரில அவளோட ஸ்பெஷல் வார்டுல வெச்சிதான் இந்தக் கல்யாணம் நடக்கப் போகுது. அய்யர் கிடையாது. அக்னி கிடையாது. ரெண்டு ரெண்டு பேரை சாட்சியா வெச்சிக்கிட்டு நான் அவளுக்குத் தாலி கட்டப் போறேன்''

''கல்யாணங்கிறது ரொம்ப விளையாட்டாப் போச்சா தம்பி?''

''கேளுங்க. போட்டோ எடுத்துடறோம். வீடியோ பண்ணிடறோம். ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல கல்யாணத்தைப் பதிவு பண்ணிடறோம். அவ ஹாஸ்பிடல்லேர்ந்து டிஸ்சார்ஜ் ஆனதும் பிரஸ் மீட் வெச்சி அறிவிப்பு கொடுத்து மறுவாரம் கிராண்டா ஒரு ரிசப்ஷன் நடத்திடப் போறோம்''

''எதுவும் நல்லால்லை''

''என்ன நல்லாலை?''

''ஒரு நடிகையை கல்யாணம் பண்ணிக்கிறதே முதல்ல எனக்குப் பிடிக்கலை.''

''நான் நடிகையை கல்யாணம் பண்ணிக்கலை சார். மதுமிதாங்கற பொண்ணை. அவளுக்கு நடிப்பு தொழிலா இருக்கு. கல்யாணத்துக்கப்புறம் அவ நடிக்கப் போறது இல்லை.''

''சரி. இது உங்க பர்சனல் விஷயம். அப்படியே தீர்மானிச்சாலும் அதை எதுக்கு ஆஸ்பத்திரில ரகசியமா நடத்தணும்?''

''அவ சைடுல எதிர்ப்பு இருக்கு. அவளோட அம்மா இந்தக் கல்யாணத்தை ஒத்துக்க மாட்டாங்க.''

''ஏன்?''

''அவங்களுக்கு பணம் மேல அவ்வளவு வெறி. சொந்தப் படம் எடுத்திட்டிருக்காங்க. ஏகப்பட்ட எதிர்கால‌த் திட்டங்கள் வெச்சிருக்காங்க. அதுக்கெல்லாம் மதுமிதா தொடர்ந்து நடிச்சி சம்பாரிச்சி கொட்டிக்கிட்டே இருந்தாகணும்.''

''ஒரு அம்மாவுக்கு தன் பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கணும்னு ஆசை இருக்காதா?''

''சில அம்மாக்களுக்கு இருக்காது. இந்த அம்மாவுக்கு இல்லை. அப்புறம் எங்க கல்யாணத்துக்கு ரெண்டே பேர் சாட்சின்னு சொன்னேனே, அந்த ரெண்டு பேர்ல ஒண்ணு நீங்க இன்னொருத்தர் நடிகர் சுபாஷ்!''

''தம்பி, இந்த திருட்டுக் கல்யாணத்தில என்னை இழுக்காதீங்க. நான் சாஸ்திரம், சம்பிரதாயம் இது எல்லாம் ஊறினவன்.''

''எனக்கு வேற யார் சார் இருக்கா?''

''ஏன் ரொஸாரியோ சார்கிட்ட தகவல் சொல்லி வரச் சொல்லலாமே...''

''அவர்கிட்ட கல்யாணம் முடிஞ்சதும்தான் தகவல் சொல்லலாம்னு இருக்கேன். சாரி சார், உங்க ஆசீர்வாதம் வேணும் சார்.''

''அது எப்பவும் உண்டு தம்பி. திருட்டுக் கல்யாணத்துக்கு துணையாக் கூப்பிடறீங்களே—ரெண்டாவது எனக்கு இஷ்டமில்லாத கல்யாணம்.''

சந்திரசேகர் சிரித்தான். சற்றே யோசித்தான்.



''உங்களுக்கு கல்யாணப் பொண்ணை பிடிக்கலை. அப்படித்தானே?''

''ஆமாம்.''

''ஒரு விஷயம் சொல்லட்டுமா? கல்யாணத்துக்கு அப்புறம் ஒரு நல்ல பத்திரிகை ஆரம்பிச்சு நடத்தறதுக்கு என் அனுமதி கேட்டா சார்! இதைவெச்சி அவ குணத்தை உங்களால யூகிக்க முடியலையா?''

''எனக்கு எல்லாமே நடிப்பாய் படுது. உங்க பின்னணி தெரிஞ்சி உங்களுக்குத் தகுந்த மாதிரி அந்தப் பொண்ணு பேசி உங்களை மயக்கி வெச்சிருக்கான்றது என் கருத்து. தெரிஞ்சே புதை மணல்ல காலை வைக்கிறேன்னு சொல்றீங்க நீங்க.''

''ரைட்டு! சாரி சார், அவ நீங்க நினைக்கிற மாதிரி இல்லைன்னு உங்களுக்குப் புரிய வைக்கிறேன். அவளுக்குள்ளே இருக்கிற ஒரு நல்ல மனுஷியை உங்களுக்கு அடையாளம் காட்டறேன். என் செலக்ஷன்ல தப்பில்லைன்னு நீங்க மனசார உணர்ந்தா என் கல்யாணத்துல சாட்சியா இருப்பீங்களா?''

இந்தக் கேள்வியில் சற்றே திணறின சாரி, ''சரி [illegible]'' என்றார். ''எப்படி எனக்கு நம்பிக்கையூட்டப் போறீங்க?''

''ஒரு நாடகம் நடத்தலாமா?''

''நாடகமா?''

''ஆமாம். லேசா ஒரு ஐடியா வந்திருக்கு. அதை கரெக்டா யோசிச்சுட்டு சொல்றேன். அந்த நாடகத்துக்கப்புறம் மதுமிதா எப்படிப்பட்டவள்னு நீங்களே புரிஞ்சிப்பீங்க'' என்றான் சந்திரசேகர்.

**கா**ரை அந்த சந்துமுனையில் ஓரங்கட்டி நிறுத்திவிட்டு இறங்கினார் ஈஸ்வர். ஓரமாக வெற்றிலை எச்சிலைத்

துப்பினார். ஜிப்பாவிலிருந்து கதிரவனின் விலாசம் எழுதின சீட்டை எடுத்துக்கொண்டார்.

ஒரு வீட்டின் வாசலில் சைக்கிளை நிறுத்திவிட்டு தபால் கொடுத்துக் கொண்டிருந்த தபால்காரரைக் கண்டதும் அவரிடம் காட்டி விபரம் கேட்டார்.

''இந்த தெரு கடைசிலதான் நூத்தி ஏழு வரும். அது ஒரு காலனி சார். உள்ளே மாடிலதான் 74 வரும்னு நினைக்கிறேன்.''

''தேங்க்ஸ் சார்''

காலனியில் பெண்கள் தண்ணீர் அடித்துக் குடங்களில் நிரப்பிக் கொண்டிருந்தார்கள். ஒரு வீட்டிலிருந்து டி. வி. வசனங்கள் வந்தன. ஒரு வீட்டிலிருந்து சாம்பார் வாசனை.

மாடியில் 74 அறையின் கதவில் சினிமா ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டிருக்க, தட்டினார். கதவு திறந்த சட்டையணியாத லுங்கி கட்டிய கதிரவன் பாதி பீடியை மிதித்து விட்டு, ''சார்! நீங்களா சார்? உள்ளே வாங்க சார். நீங்க போய் என்னைத் தேடி...ஸாரி சாா. உருப்படியா ஒரு நாற்காலி கூட இல்லை. இந்த பெட்டி மேல உக்காருங்க சார். இருங்க!'' பரபரப்பாக ஒரு துண்டை எடுத்து பெட்டி மேல் விரித்தான்.

''நான் வரலைப்பா இங்கே. அதிர்ஷ்டம்தான் உன்னைத் தேடி வந்திருக்கு.''

''என்ன சார் சொல்றீங்க?''

''நடிக்க சான்ஸ் கேட்டுநடையா நடந்தியே...ஹீரோ சான்ஸ் தர்றேன் கதிரவா''

''ஹீரோவா?'' நெஞ்சைப் பிடித்துக் கொண்டான்.

''ஆமாம். மதுமிதாவுக்கு புருஷனா நீ நடிக்கப் போறே'' என்றார்.



# 19

கதிரவன் பானையிலிருந்து கொண்டுவந்து கொடுத்த தண்ணீரைக் குடித்தார் ஈஸ்வர்.

''என்ன நான் சொன்னதெல்லாம் புரிஞ்சுதா?''

கதிரவன் கலக்கமாக இருந்தான்.

''சார், எனக்கு பயமா இருக்கு''

''என்ன பயம்?''

''ஏதோ படத்திலதான் நடிக்க சான்ஸ் தர்றீங்கன்னு பார்த்தா வாழ்க்கைல நடிக்கச் சொல்றீங்களே சார்''

''அதனால என்ன?''

''நீங்க சொல்றது பெரிய விஷயம் சார்''

''ஆமாம். அதனால்தான் பெரிய தொகையாத் தர்றேன்னு சொல்றேன். ஒரு சின்ன நாடகத்துக்கு அம்பதாயிரம் 'பெரிய தொகை இல்லையா?''

''ஆனாலும்...''

''மனசாட்சி உறுத்துதா?''

''அதில்லை. மாட்டிக்கிட்டா என்ன செய்றதுன்னு தான் யோசனையா இருக்கு''

''எப்படி மாட்டுவே?''

''இந்தாள் சொல்றதெல்லாம் பொய் அப்படின்னு சொல்லி என்னை போலீஸ்ல பிடிச்சுக் கொடுக்க ஸ்டெப் எடுத்துட்டா?''

''அவளைப் பத்தி எனக்குத் தெரியும். அந்த அளவுக்கெல்லாம் கண்டிப்பா போக மாட்டா''

''பத்திரிகைகாரங்க பலவிதமா கேள்வி கேப்பாங்களே''

''இன்னும் நாலுநாள் கழிச்சுதான் இந்த நாடகத்தோட அரங்கேற்றம். அதுக்குள்ளே உன்னை நான் தயார் படுத்திடுவேன் கதிரவன். எப்படி பதில் சொல்லணும்னு எல்லாம் நான் சொல்லித் தர்றேன்''

''வேற எதுவும் பிரச்னை வராதே...''

''வராது''

''ஒருவேளை, இதனால நீங்க சொல்ற அந்த சந்திர சேகருக்கு கடுமையா கோபம் வந்து என்னை ஆளை வைச்சி அடிச்சா?''

''நீ ரொம்பவும் விபரீதமா கற்பனை பண்ணிக்கிறே''

''எல்லாத்தையும் யோசிக்கணுமில்ல''

''ரைட்டு. இந்தா அட்வான்ஸ் இருபதாயிரம்''

கதிரவன் இரண்டு நூறு ரூபாய் கட்டுக்களையும் ஆர்வமாக வாங்கி வைத்துக் கொண்டான்.

''இப்ப சொல்லு. உன் பேரென்ன?''

''கதிரவன்''

''அதில்லையா! நம்ம நாடகப்படி உன் பேர் என்ன?''

''வேங்கடரெட்டி''

''உனக்கு சொந்த ஊரு எது?''

''ஆந்திரால நெல்லூர் பக்கத்துல ஒரு கிராமம்''

''உனக்கும் மதுமிதாவுக்கும் எங்க கல்யாணம் நடந்திச்சு?''

''ஹைதராபாத்ல சார்''



''வெரிகுட்''

ஈஸ்வர் மேற்கொண்டு ஒரு மணி நேரத்திற்கு மேல் அவனை தயார்படுத்திவிட்டு எழுந்து, ''நாளைக்கு நீட்டா ஷேவ் பண்ணிக்கிட்டு ஸ்டுடியோவுக்குப் போய் போட்டோ எடுத்துட்டு வா. அர்ஜெண்ட்னு சொல்லி சாயங்காலமே டெலிவரி வாங்கு. நெகடிவையும் வாங்கிட்டு வந்துடு. நாலஞ்சு விதமா எடுக்கச் சொல்லு. அப்புறம் வேற என்ன'' என்றார்.

''நான் கொஞ்சம் அழறதுக்கு கத்துக்கணும்''

''ஆமாம். அது முக்கியம். பேசறப்ப கடகடன்னு ரெண்டு சொட்டு கண்ணீர் வந்தாலே எல்லோரும் நம்பிடுவாங்க. அப்ப நான் வர்றேன்''

ஈஸ்வர் கார் சாவியைச் சுழற்றியபடி நடந்தார்.

ரோஸ்ட் செய்த பிரெட் துண்டுகளை பீங்கான் தட்டில் வைத்து, மிளகாய் சாஸ் ஊற்றிக் கொண்டு ஹாலில் வந்து அமர்ந்தான் சந்திரசேகர்.

ரிமோட் எடுத்து டி.வியைப் போட்டு சேனல் சேனலாய் மாற்றி திரைப்பட பாடல்களில் நிறுத்தினான்.

''எக்ஸ்க்யூஸ் மீ...''

''அடடே! வாங்க சார்''

தேசிகாச்சாரி குடையை ஓரமாக வைத்துவிட்டு வந்தார்.

''உக்காருங்க சார்''

''என்ன இது. பிரெட் சாப்பிடறீங்க? பையன் டிஃபன் வாங்கிட்டு வரல்லையா?''

''இன்னைக்கு அவன் லீவு சார். ரெண்டே நிமிஷம்''

''மெதுவா சாப்பிடுங்க. எனக்கு அவசரமில்லை.''

சந்திரசேகருக்கு விக்கல் எடுக்க, சாரி சென்று ஜக்கிலிருந்து டம்ளரில் நீர் சரித்துகொண்டு வந்து கொடுத்தார்.

சந்திரசேகர் பிரெட் சாப்பிட்டு முடித்து, ''எனக்கு காபி போட்டுக்கப் போறேன் உங்களுக்கு?'' என்றான்.

''சர்க்கரை இல்லாம''

சந்திரசேகர் இரண்டு காபிகளுடன் வந்து அவருக்கொன்று நீட்டி, தன்னுடையதைப் பருகினான்.

காபி குடித்ததும், டி.வியை அணைத்துவிட்டு ஒரு பெரிய அட்டைப் பெட்டியை எடுத்து டீப்பாய் மேல் வைத்தான்.

''என்ன இது?''

சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு, சாரியின் சிகரெட்டைப் பற்ற வைத்துவிட்டு சின்ன இருமலுக்கு பிறகு சொன்னான்.

''எல்லாம் வாடகைக்கு எடுத்தது சார். விக், ஒட்டு மீசை, கோட், சூட், டை, பைப், மோதிரங்கள், செயின், வாக்கிங் ஸ்டிக்''

''இதெல்லாம் எதுக்கு?''

''ஒரு மிகப் பெரிய கோடீஸ்வரன்னு உங்களை மதுமிதா நம்ப வேணாமா? எழுநூத்தி நாற்பது கோடிக்கு சொந்தக்காரர்! அந்த கெட்டப்பை ஏற்படுத்தியாகணுமே''

''என்ன தம்பி இது, ஒரு கோடீஸ்வரன் சிம்பிளா இருக்கக் கூடாதா?''

''இருக்கலாம். நம்பிக்கை வராது. ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரை மஃப்டில பார்க்கறதுக்கும், யூனிஃபார்ம்ல பார்க்கறதுக்கும் வித்தியாசம் இல்லையா?''



''சரிசரி. அவ சினிமாக்காரின்றதால சினிமாத்தனமாவே நடந்துக்கச் சொல்றீங்க, ரைட்டு! ஆமாம், இந்த நாடகம் அவசியம்தானா?''

''உங்களுக்காகத்தான் சார். எனக்கு அவசியம் இல்லை''

''அந்தப் பொண்ணு நல்லவ'ன்னு நான் புரிஞ்சுக்கிட்டாக வேண்டியது அவசியம்தானான்னு கேக்கறேன்''

''அது அவசியம் சார். நான் ரொம்ப மதிக்கிறவங்கள்ல நீங்களும் ஒருத்தர் சார். அதனாலதான் நீங்க கல்யாணத்துக்கு சாட்சியா இருக்கணும்னு ஆசைப்படறேன். நான் வற்புறுத்திச் சொன்னா நீங்க வந்திடுவீங்க. ஆனா நீங்க மனப்பூர்வமா, முழு மனசோட வரணும். மதுமிதாவை நான் செலக்ட் செஞ்சது தப்பில்லைன்னு நீங்க உணர்ந்தாத்தான் உங்களுக்கு இந்தக் கல்யாணத்தில ஈடுபாடு வரும். அதுக்காகத்தான் இந்த நாடகம்''

''நான் ஏன் இதுக்கு ஒத்துக்கறேன் தெரியுமா?''

''சொல்லுங்க சார்''

''என் மனசு சமாதானமாகிறது ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த நாடகத்தில் ஒருவேளை அவளோட சுயரூபம் வெளிப்பட்டு என் அபிப்ராயம் சரியா இருந்து போச்சுன்னா, நீங்க இந்த கல்யாண விலங்குலேர்ந்து தப்பிச்சுடலாமே...அதுக்காகத்தான் ஒத்துக்கறேன்''

''நீங்க மதுமிதாவைப் பார்த்துட்டு வந்து சொல்லுங்க சார்''

''ரைட்டு''

''இதை எல்லாம் போட்டுக்கிட்டு கோடீஸ்வர அப்பாவா வாங்க, சீக்கிரம்!''

தேசிகாச்சாரி அந்த அட்டைப் பெட்டியுடன் அடுத்த அறைக்குச் சென்றார். சிந்தனையோடு சிகரெட்டைப் புகைத்தான் சந்திரசேகர்.

சில நிமிடங்களில் முழு கெட்டப்பில் கோடீஸ்வரராய் ஹாலுக்கு வந்தார் தேசிகாச்சாரி.

''அற்புதமா இருக்கு சார் இந்த கெட்டப். நிஜமாவே நீங்க மீசை வெச்சிக்கலாம். ஸ்டைலா பைப்பை இப்படிப் பிடிக்கணும் சார்''

அவர் விரல்களை மாற்றியமைத்து திருத்தினான்.

''இப்ப உங்க பேர் என்ன?''

''எப்பவுமே என் பேர் தேசிகாச்சாரிதான்''.

''அதான் தெரியுமே. இந்த நாடகத்துக்காக சூட்டினேனே''

''கைலாஷ்!''

''கரெக்ட். நீங்க எந்த ஊரு?''

''காஷ்மீர்''

''அங்க என்ன தொழில்?''

''ஏக்கரா ஏக்கராவா ஆப்பிள் தோட்டம் வெச்சிருக்கேன். ஆப்பிள் ஜூஸ் தயாரிச்சு உலகம் பூரா எக்ஸ்போர்ட் பண்றேன்''

''கரெக்ட்''

''உங்க பையன் பேரு என்ன?''

''ராகேஷ்''

''வெரிகுட். இப்ப போன் பண்றீங்களா?''



சாரி அமர்ந்து போனை எடுத்தார். அவன் சொன்ன எண்களை அழுத்தினார்.

''ஹலோ அங்கே ஸ்பெஷல் வார்டுல ஆர்ட்டிஸ்ட் மதுமிதாவோட பேசணும். கொஞ்சம் கனெக்ட் பண்ணுங்க ப்ளீஸ்...'

காத்திருந்தார்.

''ஹலோ, மதுமிதா ஹியர்''

''வணக்கம் மதுமிதா''

''வணக்கம்''

''என் பேரு கைலாஷ். நான் காஷ்மீர்லேர்ந்து வந்திருக்கேன். ஒரு முக்கியமான விஷயமா உங்களை நேர்ல சந்திக்கணும்மா''

''என்ன விஷயம் சார்?''

''ரொம்ப பர்சனல் மேட்டர். ஒரு கல்யாணம் சம்பந்தமா பேசணும். நீங்க அடிபட்டு ஆஸ்பத்திரில ட்ரீட்மெண்ட் எடுத்துட்டு இருக்கீங்கன்னு தெரியும். இருந்தாலும் தொந்தரவு செய்ய வேண்டியிருக்கு. நேர்ல வரட்டுமா? சும்மா பதினைஞ்சி நிமிஷம் பேசினாப் போதும். மேட்டர் ரொம்ப அர்ஜெண்ட். தற்கொலைக்கு முயற்சி செஞ்ச என் பையனோட உயிரை நீங்கதான் காப்பாத்தணும்''

''சரி. வாங்க பேசலாம்'' என்றாள் மதுமிதா.

## 20

பெரிய டாக்டர் வந்து மதுமிதாவின் பெட்டில் மாட்டியிருந்த பேட் எடுத்து நேட்டி டாக்டரின் ரிப்போர்ட்களை பார்த்தார்.

''வலி குறைஞ்சிருக்கா மேடம்?'' என்றார்.

''குறைஞ்சிருக்கு டாக்டர்'' என்றாள் மதுமிதா.

ஒரு சின்ன உபகரணம் கொண்டு பேண்டேஜ் போட்ட காலின் மேல் செல்லமாக தட்டிக் கொண்டே, ''எந்த இடத்திலயாவது லேசா வலி தெரிஞ்சா சொல்லுங்க'' என்றார்.

''எந்த இடத்திலயும் வலி இல்லை டாக்டர்''

''வெரிகுட், ட்ரீட்மெண்ட்ல எந்த மாற்றமும் இல்லை. நாளைக்கு நர்ஸ் துணையோட நீங்க ரூமுக்குள்ளேயே ரெண்டு தடவை நடந்து பாருங்க. வலிச்சா நடக்க வேண்டாம்.''

''சரி டாக்டர்''

டாக்டர் போன கொஞ்ச நேரத்தில் துர்கா ஒரு கூடையோடு வந்தாள்.

''உன் கூடவே இருக்க ஆசைப்பட்டேன். உனக்குத் தான் பிடிக்கலை. ஆனா பார்க்காமலேயே வீட்ல உட்கார்ந்திருக்கிறதுக்கு பெத்த மனசு கேக்குமா மது? எப்படி இருக்கு இப்ப வலி?''

ஸ்டூலை அவளருகில் இழுத்துப் போட்டமர்ந்து கூந்தலைத் தடவியபடி கேட்டாள் துர்கா. இந்த மாதிரி வெகுசில சந்தர்ப்பங்களில் மதுமிதா குழம்பித் தடுமாறிப் போவாள். இந்தப் பாசத் துடிப்பு உண்மையானதா?

''என்ன மது அப்படிப் பார்க்கறே?''

''ஏம்மா, என்னைப் பெத்தப்ப நான் ஆம்பளைப் பிள்ளையா பொறக்கலையேன்னு வருத்தப்பட்டியா?''

''இல்லையே. வீட்டுக்கு முதல் குழந்தை பெண் குழந்தை பொறக்கறதுதான் நல்லது மது. உங்கப்பா



பையன்தான் பொறப்பான்னு சொன்னாரு. இல்லை பொண்ணுதான்னு நான் பந்தயம் கட்டினேன்.''

மதுமிதா அமைதியாக பார்வையைத் திருப்பினாள்.

''எதுக்கு கேட்டே?''

''சும்மாதான்''

''உனக்குப் பிடிக்குமேன்னு ஆப்பமும் தேங்காய்ப் பாலும் கொண்டு வந்திருக்கேன்மதுமிதா.சாப்பிடறியா?''

''வேணாம்மா. டிஃபன் இங்க கொடுத்துட்டாங்க. சாப்டுட்டேன்''

''ஒண்ணே ஒண்ணு சாப்பிடேன்.''

'சரி சாப்பிடறேன். இப்ப வேணாம். கொஞ்ச நேரம் போகட்டும்'' என்று சொன்ன மதுமிதாவின் மனதில் சட்டென்று ஒரு கேள்வி மின்னலாய் வெட்டியது.

'என்ன இவ்வளவு அக்கறை திடீரென்று? ஒருவேளை தேங்காய் பாலில் வேறு ஏதாவது கலந்து...'

'ச்சே! ஒரு தாய் கொலை செய்வாளா என்ன? இப்படி கூட விபரீதமாக சிந்திக்கிற அளவுக்கு அவள் நடந்திருக்கிறாளே.'

அறைக்கதவு தட்டப்பட்டு, தொடர்ந்து ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று குரலும் ஒலித்தது.

''யெஸ்... யாரு?''

கோடீஸ்வர கெட்டப்பில் இருந்த சாரி இரண்டு கைகளையும் கூப்பியபடி உள்ளே செண்ட்மணத்துடன் வந்தார் ''வணக்கம்மா. நான் கைலாஷ்! உங்க கூட போன்ல பேசினேன்...''

''வாங்க சார்! அம்மா அந்த சேரை இப்படி எடுத்து போடு''

துர்கா அவரின் தோற்றத்திலேயே மிரண்டு போய் அவசரமாக நாற்காலியை நகர்த்திப் போட்டாள். சாரி கொண்டு வந்த பூங்கொத்தை புன்னகையுடன் நீட்டினார். அதில் விரைவில் உடல்நலம் தேற வாழ்த்துச் செய்தி ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டிருந்தது. பூங்கொத்தை வாங்கி வைத்து,

''தேங்க்ஸ் உக்காருங்க சார்'' என்றாள் மதுமிதா.

சாரி அமர்ந்ததும் கால்மேல் கால் போட்டுக் கொண்டார்.

''உடம்பு எப்படி இருக்கும்மா மதுமிதா''

''படிப்படியா குணமாகிட்டு வர்றேன் சார். பை தி பை... நீங்க ஏதோ கல்யாணம் தற்கொலை அவசரம்னு ஏதேதோ சொன்னதாலதான் என்னை சந்திக்க அனுமதி கொடுத்தேன். டாக்டர் என்னை முழு ஒய்வில் இருக்கச் சொல்லியிருக்கார். நீங்க வந்த விஷயத்தை சீக்கிரமா சுருக்கமா சொல்லுங்க சார்''

''சொல்றேன். இவங்க யாரு?'' என்றார் துர்காவை காட்டி.

''என் அம்மாதான்''

''இவரு யாரும்மா?'' என்றாள் துர்கா.

''எனக்கு அறிமுகமில்லை. சந்திக்கணும்னு இன்னைக் குத்தான் ஃபோன் செஞ்சார். வரச்சொன்னேன். அவரைப் பத்தி அவர்தான் சொல்லணும்''

''எனக்கு ஊர் காஷ்மீர். பேர் கைலாஷ். நிறைய ஆப்பிள் தோட்டம் இருக்கு. எத்தனை ஏக்கர்னு என்னா லேயே கணக்கு சரியாச் சொல்ல முடியாது. போனவருஷம் வருமானவரி டிபார்ட்மெண்டுக்கு காட்டின கணக்குப்படி என் சொத்துக்களோட மதிப்பு எழுநூத்தி நாப்பதுகோடி



யா என்கிட்ட இரண்டாயிரம் பேர் வேலை பார்க்கறாங்க அரசியல்வாதியா இருந்தாலும்சரி. அதிகாரியா இருந்தா லும் சரி. இதுவரைக்கும் எந்த காரியத்துக்காகவும் நான் நேராப் போய் யாரையும் சந்திச்சதில்லை. அவங்கதான் என் இடத்துக்கு வருவாங்க. உன்னைப் பார்க்கத்தான் நானே நேரா வந்திருக்கேன்'' என்று நிறுத்தினார் சாரி. துர்காவின் முகம் தகதகவென்று பிரகாசமடைந்தது.

''அதுக்குக் காரணம்...'' தொடர்ந்தார். ''என் மகன் ராகேஷ்''

''அவர் என்ன செஞ்சார்?''

''தற்கொலைக்கு முயற்சி செஞ்சான்''

''எப்போ?''

''ஒரு வாரம் முன்னாடி நல்லவேளையா காப்பாத்தி யாச்சு''

''எதுக்காக தற்கொலை முயற்சில உங்க பையன் இறங்கினாரு?'' என்றாள் துர்கா.

''உங்க பொண்ணுதாம்மா காரணம்''

''என்ன சொல்றீங்க?''

''என் பையன் மெட்ராஸ் எம்.ஐ.டி.ல ஆட்டோ மோபைல் என்ஜினியரிங் போன வருஷம்தான் படிச்சி முடிச்சான். அவன் இங்க இருந்தப்போ மதுமிதா நடிச்ச ஒவ்வொரு படத்தையும் எழுபது தடவை எண்பது தடவை பார்த்திருக்கான். மதுமிதாவை அவனுக்கு அவ்வளவு பிடிச்சுப்போச்சு. மதுமிதாவோட போட்டோ எந்த பத்திரிகைல வந்தாலும் வாங்கிடுவான். கத்தரிச்சி ஒட்டி ஒட்டி பத்து ஆல்பம் வெச்சிருக்கான். படிச்சி முடிச்சுட்டு காஷ்மீர் வந்த அவனை பிஸினெஸ் பாருடான்னு கேக்

கலை. எப்பப் பார்த்தாலும் எல்.டி. பிளேயர்ல போட மதுமிதா படமே பார்த்துக்கிட்டிருந்தான். ஒரு ரசிக மதுமிதாவை ரசிக்கிறான்னு நினைச்சா...வரவர... னோட செயல்கள்ல தீவிரம் வந்துடுச்சி. ரூம் சுவர் முழு மதுமிதா மதுமிதான்னு கிறுக்கறதும் மதுமிதாவோ பெரிய சைஸ் புளோ அப் கட்அவுட் செஞ்சு கட்டி அதை அணைச்சுக்கிட்டுத் தூங்கறதுமா ஆரம்பிச் டான்''

''அப்புறம்...''

''ஒருநாள் திடீர்னு என் முன்னாடி வந்து நின்னா டாடி எனக்கு மதுமிதாவை கல்யாணம் பண்ணி வைங்க னான். சினிமா நட்சத்திரங்களை ரசிக்கிறதோட நி திக்கணும்னு பலவிதமா அட்வைஸ் சொன்னேன். அவ தன் பிடிவாதத்தை தளர்த்திக்கலை. கடைசில என மதுமிதாவை கல்யாணம் பண்ணி வைக்கலைன்னா கொலை செய்துக்குவேன்னு சொன்னான். விளையாட் குத்தான் சொல்றான்னு நினைச்சா நிஜமாவே வி குடிச்சிட்டான். இப்ப அவனை காப்பாத்தி வீட்ல பா காப்புல வெச்சிருக்கேன். இப்பவும் அவன் தன் முடி மாத்திக்கிறதா இல்லை. எனக்கு இருக்கிறது ஒ பிள்ளை. அவனை இழக்க எப்படிங்க மனசு வரு அதான் இது விஷயமா பேசிப்பார்க்கலாம்னு நேர்ல பு பட்டு வந்துட்டேன்''

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த மதுமிதா ''இது நான் எந்த விதத்தில உதவி செய்ய முடியும் சார்?'' என் றாள்.

''இதோ பாரும்மா. எழுநூத்தி நாப்பது கோ ரூபா சொத்து எனக்கப்புறம் அவனுக்குத்தான். அவன் பக்கா ப்ரில்லியண்ட்! என் தொழிலைத் தொடர்ந்தாலே போதும். புதுசா எதுவும் ஆரம்பிக்க வேண்டியதில்லை.



ஆனா மினி கார் தயாரிக்கிற தொழிற்சாலை ஒண்ணு ஆரம்பிக்கலாம்னு பிளான்ல இருக்கான். சீரியஸாவே கேக்கறேன். அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறயாம்மா?''

மதுமிதா வாய்விட்டு சிரித்தாள். ''என்ன சார் பேச றீங்க? என்னைக் கல்யாணம் செய்துக்க ஆசைப்படற ஒவ்வொருத்தரையும் நான் கட்டிக்கறதுன்னு ஆரம் பிச்சா, என் வாழ்க்கைல எத்தனை பேரை நான்கல்யாணம் செய்துக்க முடியும்? அவரை ஒரு நல்ல மனநல மருத்துவர் கிட்ட கூட்டிக்கிட்டுப் போய் முறையா வைத்தியம் பாருங்க சார். அதை விட்டுட்டு...

''இப்படி அலட்சியப் படுத்திப் பேசாதம்மா. நான் கேட்டதில என்ன தப்பு? அவன் போட்டோ காமிக்கிறேன் பாரு. அசந்து போய்டுவே. பர்சனாலிட்டி இருக்கு. புத்தி இருக்கு. படிப்பு இருக்கு. பணம் இருக்கு. இதைத் தாண்டி வேற என்ன வேணும் உனக்குப் புருஷனா வர்றதுக்கு?''

துர்கா அவசரமாக, ''எங்கே உங்க பையனோட போட்டோவைக் காமிங்க பார்க்கலாம்'' என்றாள்.

''அம்மா, நீ பேசாம இரு!'' அதட்டினாள் மதுமிதா.

சில நிமிடங்கள் அமைதியில் கழிந்தன.

''போட்டோ பார்க்கிறியாம்மா?'' என்றார் சாரி.

''வேணாம் சார். யோசிச்சுப் பார்த்தேன் சார். நீங்க வந்து இப்படி கேட்டதில தப்பில்லை சார். உங்க பைய னோட ஆசையை நிறைவேத்தி வைக்கணும்னு பார்க் கறீங்க. ஆனா... உங்க பையனை நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது சார்.''

''ஏம்மா?''

''நான் வேற ஒருத்தரை மனசார விரும்பிக்கிட்டிருக் கேன். அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்.''

''என் சொத்து மதிப்பை கொஞ்சம் நினைச்சுப் பாரம்மா.''

''இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் என் முடிவுல மாற்றம் இல்லை சார்'' என்றாள் மதுமிதா.

# 21

''அப்போ இதுதான் உன் பதிலா மதுமிதா?'' என்றார் சாரி.

''ஆமாம் சார். உங்க பையனுக்காக நான் அனுதாபப் படலாம். அதுக்குமேல என்கிட்டேர்ந்து எந்த உதவியும் எதிர் பார்க்காதீங்க. ஒரு நல்ல மனநல வைத்தியரால கண்டிப்பா அவரை குணப்படுத்திட முடியும்'' என்றாள் மதுமிதா,

சாரி எழுந்து கொண்டார்.

''என் பையனோட போட்டோவைப் பார்க்கக்கூட நீ தயாரா இல்லையாம்மா?''

''பார்க்கறதால என்ன சார் பிரயோஜனம்?''

''நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே.''

''சொல்லுங்க சார்.''

''பல சினிமா நடிகைகள் திடீர்னு விவாகரத்து பண்ணிட்டு புருஷனையே மாத்திக்கிறாங்க. நீ ஒருத்தர்மேல ஆசை வெச்சிருக்கிறதாத்தானே சொன்னே... என்னோட பிரம்மாண்டமான ஆப்பிள்தோட்டங்களுக்கு உரிமைஉள்ள வளா ஆகப் போறதை நினைச்சுப் பார்த்து உன் மனசை மாத்திக்கக் கூடாதா? ஒரு சினிமா நடிகையை மருமகளா அடைய நான்தான் நூறுதடவை யோசிக்கணும். நானே சரின்னு சொல்றப்ப நீ ரொம்பதான் பிகு பண்றியேம்மா...''



மதுமிதாவுக்கு சர்ரென்று கோபம் எகிறியது.

''சினிமா நடிகைன்னா பணத்துக்கு மயங்கிடுவான்னு யார் சார் சொன்னது? சில பேர் அப்படி இருக்கறதை வெச்சி பொதுவான அபிப்ராயத்துக்கு வராதீங்க சார். அவளுக்கும் மனசு இருக்கு. விருப்பம் இருக்கு. ஒரு நடிகைய பொருளா நினைச்சி விலைக்கு வாங்க முயற்சி பண்ணாதீங்க. அவளை ஒரு மனுஷியா முதல்ல மதிக்கத் தெரிஞ்சுக்கங்க. நீங்க போகலாம்''

சாரி அவளை முறைப்பாகப் பாாத்துவிட்டு விருட்டென்று வெளியேற, துர்கா அவசரமாக அவர் பின்னால் ஓட்டமாக வந்து வராந்தாவில் தடுத்து நிறுத்தினாள்.

''சார், நீங்க எதையும் மனசுல வைச்சுக்காதீங்க. என் பொண்ணு பொழைக்கத் தெரியாதவ. நீங்க உங்க அட்ரஸைக் கொடுத்துட்டுப் போங்க சார். நான் பக்குவமா எடுத்துச் சொல்றேன். எவ்வளவு பெரிய ஆளு நீங்க. உங்களைப் போயி அலட்சியப்படுத்தி பேசறா பாருங்க!''

''அந்தப் பொண்ணுதான் வேற யாரையோ ஆசைப் படறதா திட்டவட்டமா சொல்லிடுச்சேம்மா. இதுக்குமேல நீங்க என்ன சொல்லி சமாதானப்படுத்துவீங்க''

''சொல்லிப் பார்க்கறேன். முடியாமப் போனா எனக்கு வேற ஒரு யோசனையும் இருக்கு சார்''

''என்னம்மா?''

''எனக்கு இன்னொரு பொண்ணு இருக்கா. இனியான்னு பேரு. காலேஜ்ல படிச்சுட்டு இருக்கா. இவளைவிட ஜோரா இருப்பா சார். அவ போட்டோ தர்றேன். உங்க பையன்கிட்ட காமிக்கிறீங்களா?''

''சாரி கஷ்டப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டார்.

''என்னம்மா இது. என் பையன் மதுமிதாவை நேசிக்கிறான்னுதானே நான் என் அந்தஸ்து, கௌரவம் எல்லாம் விட்டுட்டு தேடிவந்து பேசினேன். வேற பொண்ணை கட்டி வைக்கிறதுன்னா உலகம் பூரா லட்சம் பொண்ணுங்களை க்யூவுல என் பையன் முன்னாடி நிறுத்த மாட்டேனா நான்?''

''அதுக்கில்லை சார். இனியா மதுமிதாவோட தங்கைன்றதால கிட்டத்தட்ட அவ சாயல் இருப்பா சார். இன்னும் அழகாத்தான் இருப்பா. கொஞ்சம் வெய்ட் பண்றீங்களா? ஃபோன் பண்ணி இனியாவை வரச் சொல்லட்டுமா?''

''நான் பார்த்து என்ன பண்ணப் போறேன்?''

''இல்லைன்னா அவளை உங்ககூடவே காஷ்மீர் அழைச்சிட்டுப் போங்க. ஒருவாரம் உங்க வீட்லே அவ தங்கியிருக்கட்டும். எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை. உங்க பையன் ராகேஷோட அவ பேசட்டும். பழகட்டும். உங்க பையனுக்கு அவளைப் பிடிச்சிருந்தா அப்புறம் மேற்கொண்டு பேசலாம்''

''இல்லைம்மா. அதெல்லாம் சரியா வராது. மதுமிதாதான் தன் மனைவியா வரணும்னு பிடிவாதம் பிடிச்சி தற்கொலைவரைக்கும் போனவன் அவன். அவனை எப்படி சமாதானப்படுத்தறதுன்னு நான் பார்த்துக்கறேன். வர்றேங்க''

விட்டால் போதுமென்று வேகமாக நடந்தார் சாரி.

ஒரு நீண்ட பெருமூச்சை வெளியேற்றிய துர்கா மீண்டும் அறைக்குள் வந்து மதுமிதாவை வெறுப்பாகப் பார்த்தாள்.

''என்னம்மா பார்க்கறே?''



''உன்னைவிட பெரிய முட்டாள் யாரும் இருக்க முடியாதுடி!''

''காசுக்காக எது வேணும்னாலும் செஞ்சா புத்திசாலித்தனமா? அப்படி மனசை மாத்திக்கிறதுதான் அறிவாளி செய்ற வேலைன்னு நீ நினைச்சா நான் முட்டாளாவே இருந்துட்டுப் போறேன்''

''அவர் எவ்வளவு கோடி சொத்து சொன்னாரு கவனிச்சியா?''

''அந்தப் பையன் உன்னை ஆசைப்பட்டிருக்கக் கூடாதான்னு நினைக்கறியாம்மா?''

''ச்சீ! வாயை மூடுடி!'' என்று தளர்வாக அமர்ந்தாள் துர்கா.

ஃ ஃ ஃ

**வே**ஷம் கலைத்து சொந்தத் தோற்றத்தில் இருந்த சாரி வாய்விட்டுச் சிரித்தார். அவரின் சிரிப்படங்க தன் நாற்காலியில் மெதுவாக இடம், வலம் அசைந்தபடி காத்திருந்தான் சந்திரசேகர்.

''இப்படி நாடகம் போட்டதில நல்ல அனுபவம் தம்பி? அந்தம்மா என் காஷ்மீர் அட்ரஸ் கேக்கறா. நான் எதைக் கொடுக்கறது? சமார்த்தியமாய் பேசிட்டு ஓடி வந்துட்டேன்''

''எந்தம்மா மதுமிதாவோட அம்மாவா?''

''ஆமாம். பொம்பளையா அவ? பணம் மேல அவ்வளவு வெறி உள்ள ஒருத்தியை நான் பார்த்ததே இல்லை தம்பி. வாய் வார்த்தையா என் சொத்து மதிப்பை சொன்னதுக்கே வாய் பிளந்துட்டா. தன் ரெண்டாவது பொண்ணை என் கூடவே அனுப்பி வைக்கிறதுக்கு ரெடி அந்தம்மா!''

''எதுக்கு?''

''அவ காஷ்மீர்ல ஒரு வாரம் தங்கி ராகேஷோ[illegible] பேசிப் பழகணுமாம். அவனுக்குப் பிடிச்சிருந்தா கல்யா[illegible]ணம் பண்ணிக்கட்டுமாம். நானே கல்யாணம் பண்ணி[illegible]கிறேன்னு சொல்லியிருந்தாக்கூட உடனே தயங்கா[illegible] சரின்னு சொல்லிருப்பா போலிருக்கு. பணப் பிசாசு!''

''ரெண்டாவது பொண்ணைப் பத்தி எதுக்குப் பேச[illegible] வந்திச்சு''

''மதுமிதாதான் முடியாதுன்னு சொல்லிட்டாளே''

''அதை முதல்ல சொல்லுங்க சார். அவ என்[illegible] சொன்னா? மதுமிதாவோட பதில்தானே உங்களுக்கு மு[illegible]கியம்? அதுக்காகத்தானே இந்த நாடகம்?''

''கையைக் கொடுங்க தம்பி'' அவன் கையைப் பற்றி[illegible] குலுக்கினார்.

''நீங்க சொன்ன மாதிரியே நடிகையா இருந்தாலு[illegible] உறுதியான வித்தியாசமான பொண்ணு. நானும் எப்ப[illegible] எப்படியோ வார்த்தையைப் போட்டு தூண்டில் போட்[illegible]டேன். கொஞ்சம்கூட அசையலையே. உங்க பையனுக்கு[illegible] பைத்தியக்கார டாக்டர்கிட்ட வைத்தியம் பாருங்க. நான்[illegible] ஒருத்தரை நேசிக்கிறேன். அவரைத்தான் கல்யாண[illegible] பண்ணிக்கப் போறேன்னு ஆணியடிச்ச மாதிரி சொ[illegible]லிட்டா!''

''இப்பயாவது மதுமிதாவைப் புரிஞ்சிக்கிட்டீ[illegible]களா?''

''உங்க பண பின்னணி தெரிஞ்சி இந்து கல்யாணத்[illegible] அவ பண்ணிக்கலைன்னு இப்ப நான் பரிபூரணமா [illegible]கறேன் தம்பி. மண்டையில அடிச்ச மாதிரி ஒரு வா[illegible] சொன்னா தம்பி''



''என்ன சொன்னா?''

''இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் என் முடிவுல மாத்தம் இருக்காதுன்னு சொன்னா''

சந்திரசேகர் முகத்தில் பெருமிதம் தவழ்ந்தது.

''நான் எவ்வளவு சொல்லியும் நீங்க ஒத்துக்கலை. அதனாலதான் உங்களுக்கு உணர்த்தறதுக்காக இப்படி செட்டப்பா பேசச் சொன்னேன். இப்போ இந்தக் கல்யாணத்தில நீங்களும் ஒரு சாட்சியா வர்றதில உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?''

''இல்லை. கண்டிப்பா வர்றேன். என் ஆசீர்வாதம் முழு மனசோட உங்களுக்கு உண்டு தம்பி''

''அது போதும் எனக்கு'' என்று பெருமூச்சு விட்டான் சந்திரசேகர்.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்தான் சந்திரசேகர்.

படித்துக் கொண்டிருந்த நாவலை மூடி ஓரமாக வைத்து புன்னகைத்தாள் மதுமிதா.

ஸ்டூலில் கட்டில் அருகே அமர்ந்து, ''டாக்டர் இன்னும் உன்னை நடக்கச் சொல்லலையா மது?''

''வலி இல்லைன்னா நாளையிலேர்ந்து ரூமுக்குள்ளேயே நடக்கச் சொல்லிருக்காரு''

''வெரிகுட். வலி இருக்கா?''

''ரொம்ப குறைஞ்சிடுச்சி''

கொண்டு வந்த இரண்டு நாவல்களை அவளிடம் கொடுத்தான்.

''நீ கேட்டது இதானான்னு பாரு''

''இதான் சந்துரு''

''அப்புறம்? வேற என்ன விசேஷம்?''

''ஒரு சுவாரசியமான விஷயம் சொல்லணும் சந்துரு''

''சொல்லு''

''இன்னைக்குக் காலைல காஷ்மீர்லேர்ந்துகைலாஷ்னு ஒரு பெரிய கோடீஸ்வரர் வந்தாரு''

''உன்னை வைச்சி படம் எடுக்கறதுக்கா?''

''இல்லை. அவரோட பிள்ளைக்கு என்னைக் கட்டி வைக்கிறதுக்கு அவர் பையன் என்னோட வெறிபிடிச்ச ரசிகனாம். ஒரு கட்டத்தில் பைத்தியம் மாதிரி ஆயிட்டானாம். என்னை கல்யாணம் செய்துக்கணும்னானாம். தற்கொலைக்கு முயற்சி செய்து காப்பாத்திட்டாங்களாம். பையனோட விருப்பத்தை நிறைவேத்தறதுக்காக இவர் புறப்பட்டு வந்துட்டாரு''

''நீ என்ன சொன்னே?''

''இதென்ன கேள்வி. முடியாதுன்னுதான் சொன்னேன்.''

''எந்த வார்த்தைகள்ல சொன்னேன்னு கேட்டேன். இரு நானே சொல்றேன், இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் ஒத்துக்க மாட்டேன்னு சொல்லிருப்பே கரெக்டா?''

அவனை ஆச்சரியமாகப் பார்த்தாள், ''அதெப்படி அவ்வளவு கரெக்டா சொன்னீங்க?''

''அவரை அனுப்பி வெச்சதே நான்தான் மது. என் ஆபீஸ்ல வேலை பார்க்கறவர். சாரின்னு பேரு. உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கிறதில அவருக்கு இஷ்டம் இல்லை. உன்னைப்பத்தி புரிய வைக்க நான்தான் அவரை இப்படி ஒரு நாடகமாடச் சொன்னேன். இப்ப புரிஞ்சிக் கிட்டாரு''



சட்டென்று முகம் மாறி அவனை வெறுப்போடு பார்த்தாள் மதுமிதா.

''அவர் மனசுல உள்ள சந்தேகத்தை சரிபண்றதுக்காக இந்த நாடகமா இல்லை, உங்க மனசுலேயே ஒரு சந்தேகம் உண்டா?'' என்றாள்

# 22

மதுமிதா தன் மனதில் தோன்றிய சந்தேகத்தை வடிகட்டாமல் வார்த்தைகளில் அலங்காரம் சேர்க்காமல் பளிச் சென்று கேட்டு விட்டதில் சற்றே அதிர்ந்து போனான் சந்திரசேகர்.

அவளை உற்றுப் பார்த்தபடி அமைதியாக இருந்தான்.

''பதில் சொல்லுங்க சந்துரு அவனை உசுப்பினாள் மதுமிதா.

''என்ன சொல்லணும்?''

''உங்க ஆபீஸ்ல வேலை பார்க்கற ஒருத்தரை நாடகம் நடத்தச் சொல்லி என் கேரக்டரை டெஸ்ட் செஞ்சது அவரை திருப்திப்படுத்தறதுக்காவா இல்லை உங்களுக்கே ஒரு சந்தேகம் என்மேல இருந்திச்சான்னு கேட்டேன்.''

''மது இப்படி நீ கேக்கறதுதான் என்னை அவமானப் படுத்தற மாதிரி இருக்குது. என்னோட உண்மையான அன்பை இப்ப நீதான் சந்தேகப்படறே''

மதுமிதா கோபமாக முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டாள்.

''மது, இங்கே என்னைப்பாரு...நான் உன்னை சந்தேகப்படுவேன்னு நீ எப்படி சந்தேகப்பட்டே?''

''நீங்க என்னை சமாதானப்படுத்தறதுக்காக இப்படி எல்லாம் பேசறீங்க. இல்லைன்னா இவ்வளவு ஒரு மோசமான நாடகத்தை எதுக்காக நடத்தணும்?''

''அதான் சொன்னனே, அந்த சாரி சாரை திருப்திப் படுத்தறதுக்காகன்னு''

''நான் நல்லவள்னு அவருக்கு நம்பிக்கை ஏற்படுத்த அவசியம் என்ன? கல்யாணம் செய்துக்கப் போறது நீங்களும் நானும் நமக்கு ஒருத்தர் மேல ஒருத்தருக்கு முழுமையான நம்பிக்கை இருக்கு. இதில்நடுவில அவர் எங்கே வந்தாரு?''

''நான் மதிக்கிற நபர்கள்ல அவரும் ஒருத்தர் மது. வயசுல மூத்தவர். என்மேல அன்பும் அக்கறையும் வெச்சிருக்கிறவர். எனக்குத் தொழில் நுணுக்கம் எல்லாம் கத்துக் கொடுத்தவர். நம்ம கல்யாணத்துக்கு ஒரு சாட்சியா அவரும் இருக்கணும்னு நான் ஆசைப்பட்டேன். அவர் பழைய சம்பிரதாயங்கள்ல ஊறினவர். சினிமா நடிகைன்னா கொஞ்சம் தரக்குறைவான மதிப்பீடுதான் இன்னைக்கு நிறைய பேர் மனசுல இருக்கு. அதே மாதிரிதான் அவரும் தயக்கமாப் பேசினார். நான் உன்னோட நெருக்கமாப் பழகி உன்னை ரொம்ப உணர்வுப்பூர்வமா புரிஞ்சுக்கிட்டதால, உலகம் பூரா அதே மாதிரி புரிஞ்சுக்குமா? எனக்கு உலகம் எல்லாம் புரிஞ்சுக்க வேணாம். அட்லீஸ்ட் நான் மதிக்கிற ஒருத்தர் மட்டுமாவது உன்னை சரியா புரிஞ்சுக்கணும்னு ஆசைப்பட்டேன். இது தப்பா?''

மதுமிதா அமைதியாக இருந்தாள்.

''நீ என்ன பதில் சொல்லப் போறேன்னு எனக்கு நல்லாத் தெரியும். அதை அவர் தெரிஞ்சுக்கணும்னு விரும்பினேன். அவ்வளவுதான். அநாவசியமா என் சின்சியாரிட்டியை சந்தேகப்பட்டு நான் உன்மேல வெச்சிருக்கிற பிரியத்தைக் கொச்சைப்படுத்தாதே!''



அப்போதும் மதுமிதா அமைதியாகவே இருக்க, சட்டென்று எழுந்து கொண்டான் சந்திரசேகர்.

''எது உண்மையோ அதை விளக்கமா சொல்லிட்டேன். எனக்கு உன்மேல எந்தவித சந்தேகமும் கிடையாதுன்னு வேற எப்படி உனக்குப் புரிய வைக்கிறதுன்னு எனக்குத் தெரியலை. இது தேவையில்லாத கோபம்! கொஞ்சம் அமைதியா யோசிச்சுப் பார்த்தா அதை நீ புரிஞ்சுப்பே...புரிஞ்சதுக்கப்புறம் ஃபோன் பண்ணு. இதுக்குமேல இதுல வாதம் செய்றதுக்கோ. விளக்கம் சொல்றதுக்கோ எதுவும் இல்லை''

வேகமாக கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றான் சந்திரசேகர். அவன் செல்வதையேப் பார்த்துக்கொண்டிருந்தாள் மதுமிதா.

நான்தான் அனாவசியமாக சந்துருவை சந்தேகப்பட்டு விட்டேனா? அவர் சொல்வதெல்லாம் உண்மைதானோ?

எனக்குப் பரீட்சை வைப்பதுபோல நாடகமாடச் சொல்லி என்னைப் புரியவைப்பதும் ஒருவிதத்தில் என்னை அவமானப்படுத்துவது இல்லையா?

ஒரு கோடீஸ்வரன் வந்து சொக்கவைக்கும் வார்த்தைகளில் பணத்தை கவர்ச்சிப் பொருளாக்கி கவர்ந்து பேசினால் நான் தடுமாறிடுவேனா?

என்ன ஒரு அபத்தமான பரிசோதனை இது?

அந்த சாரி அவர் மதிக்கிற நபராக இருக்கலாம். அதற்காக அவரை நம்ப வைப்பதற்காக என்னை இப்படி எல்லாம் கேள்வி கேட்கச் செய்ய வேண்டுமா?

இது என் தன்மானத்தைப் பாதிக்கிற விஷயம் என்று ஏன் அவருக்குத் தோன்றவில்லை.

ஒரு விளையாட்டுக்காக அந்த சாரியிடம் உங்கள் மகனை நேரில் சந்தித்து பேசி பிறகு முடிவு சொல்றேன் என்று நான் பதில் சொல்லியிருந்தால்?

அந்த பதிலை வைத்து சாரி என்னை பணத்திற்காக மனதை மாற்றிக் கொள்ளக்கூடிய பெண் இவள் என்கிற கருத்திற்கு வந்திருப்பார்.

அதே கருத்தை கண், காது, மூக்கு வைத்து அழுத்த மாக இவரிடம் சொல்லியிருப்பார்.

அப்போது இவரின் நிலை என்ன?

சாரி சொல்கிற பரிசோதனை முடிவை வைத்து இவரின் முடிவை மாற்றிக் கொள்வாரா?

என்ன ஒரு பேத்தலான நாடகம்? நான் என்ன கார் மாதிரி ஒரு பொருளா? ஒரு பழைய காரை வாங்குவதாக இருந்தால் ஒரு மெக்கானிக்கை அழைத்துச் செல்வார்கள். அந்தக் காரைப் பரிசோதித்துக் கவனிக்கச் சொல்வார்கள். வாங்கலாமா, வேண்டாமா, வாங்கலாம் என்றால் என்ன விலை கொடுக்கலாம் என்று அவர் கருத்து சொல்வார். அதன்படி வாங்கச் செல்பவர் முடிவெடுப்பார்.

அந்தமாதிரி யாரோ ஒரு சாரியை அனுப்பி என்னை பரிசோதிப்பது ஒரு வேதனை தரும் விஷயம் என்று உங்களுக்கு தோன்றவில்லையா சந்துரு?

இந்தப் பரிசோதனை எனக்காக இல்லை. அவருக்காகத்தான் என்று விளக்கம் சொல்லிவிட்டால் சரியாய்ப் போயிற்றா?

மதுமிதாவின் மனதில் குமுறல்கள் அலை அலையாக வந்து கொண்டே இருந்தன. 'இந்த சந்துரு ஒரு சந்தேக புத்தி கொண்டவனோ?' என்று ஒரு விதை அவள் மனதில் விழுந்து போனதில் வருத்தமாகவும், வெறுப்பாகவும் இருந்தது.

ஃ ஃ ஃ



'சினிமா புயல்' பத்திரிகையின் அலுவலகம்.

அந்த தபாலில் வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்த ஆசிரியர், உடனடியாக இண்டர்காமில் ஒரு நிருபரை தன் அறைக்கு வரச்சொல்லி அழைத்தார்.

சில வினாடிகளில் நிருபர் காசிநாதன், ''நடிகை மதுமிதா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப்போறதா சமீபத்தில் பரபரப்பா ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுத்தாங்க, இல்லையா?''

''ஆமாம் சார்''

''ஆந்திராலேர்ந்து வேங்கடரெட்டின்னு ஒரு ஆளு இங்க வந்திருக்காரு காசிநாதன். அவரு பல வருஷம் முன்னாடியே எனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாணமாயிடுச்சுன்னு சொல்லி எழுதியிருக்காரு''

''என்ன சார் சொல்றீங்க?''

''இதைப் பாருங்க''

தன் கையிலிருந்த கடிதத்தை கொடுத்தார்.

அதை வாங்கிப் படித்தார். காசிநாதன்.

'அன்புள்ள சினிமாபுயல் பத்திரிகையின் ஆசிரியர் அவர்களுக்கு...வணக்கம்.

என் பெயர் வேங்கடரெட்டி நான் ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்தவன். நெல்லூர் அருகில் ஒரு கிராமம் என் சொந்த ஊர்.

இதுவரை இந்த சமுதாயத்திற்குத் தெரியாத ஒரு உண்மையை பகிரங்கப்படுத்தவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

இன்னைக்கு தமிழ் திரையுலகில் கொடிகட்டிப் பறக்கும் முன்னணி நடிகை மதுமிதா யார் தெரியுமா?

அவள் என் மனைவி.

இந்தத் தகவல் உங்களுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் இது உண்மை.

எனக்கும் மதுமிதாவிற்கும், அவள் திரையுலகில் நுழைவதற்கு முன்பாகவே ஹைதராபாத்தில் திருமணம் நடந்தது.

அந்தத் திருமணத்திற்கான ஆதாரங்கள் என்னிடம் உள்ளன. இத்தனை வருஷம் சும்மா இருந்துவிட்டு இப்போது இதை ஏன் வெளிப்படுத்துகிறேன் என்று உங்கள் மனதில் ஒரு கேள்வி எழலாம்.

இதுபோல இன்னும் நிறைய கேள்விகள் உங்கள் மனதில் தோன்றலாம். உங்கள் எல்லாக் கேள்விகளுக்கும் நான் முறையான விளக்கம் தர தயாராக இருக்கிறேன்.

நான் தற்சமயம் சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் தங்கியிருக்கிறேன். தாங்கள் உங்கள் பத்திரிகையின் நிருபர் ஒருவரை அனுப்பி வைத்தால் விரிவாக பதில் சொல்லத் தயார்.

தமிழில் தாங்கள் சினிமாப் பத்திரிகை ஒரு முன்னணி பத்திரிகை என்பதால் இந்தக் கடிதம் உங்களுக்கு மட்டும் எழுதியிருக்கிறேன்.

பிறகு ஒரு பத்திரிகையாளர்கள் சந்திப்பை ஏற்பாடு செய்து எல்லா பத்திரிகைகளுக்கும் பேட்டி கொடுக்க திட்டமிட்டுள்ளேன்.

நன்றி.

இப்படிக்கு
வேங்கடரெட்டி.



சாமிநாதன் உற்சாகமாக கடிதத்திலிருந்து நிமிர்ந்தான்.

''நான் இப்பவே போய்ப் பார்க்கிறேன் சார். இந்த ஆதாரங்கள் உண்மையா இருந்தா அடுத்த இதழ்ல அட்டைப்படக் கட்டுரையா இதைப் போட்டு பரபரப்பா இண்டஸ்ட்ரியையே கலக்கிடலாம் சார்'' என்றான்.

''உடனே போய்ட்டு வாங்க'' என்றார் எடிட்டர்!

# 23

அந்த ஹோட்டல் அறை வசதியாக இருந்தது. தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப்பெட்டி எல்லாம் இருந்தது.

ஆளுயரக் கண்ணாடியில் தன் 'வேங்கட ரெட்டி' வேஷப் பொருத்தத்தைப் பார்த்துக் கொண்டான் கதிரவன்.

கிரீம்நிற ஸில்க் ஜிப்பா, தார்ப்பாய்ச்சி கட்டின வேஷ்டி வாயில் பீடா குதப்பல். நெற்றியில் திரிசூரணக் கோடு. போன் ஒலித்தது. வாஷ் பேஷினுக்கு ஓடி வாயை அவசரமாக கொப்புளித்து வந்து எடுத்தான்.

''ஹலோ... கதிரவன் பேசறேன். யாரு?'' என்றான்.

''முட்டாள்! நான் ஈஸ்வர் பேசறேன். இப்ப நீ வேங்கட ரெட்டி! இப்படி அறிவு கெட்டத்தனமா உன் சொந்தப் பேரை சொல்றியே?''

''ஸாரி சார்''

''ஹோட்டல்ல வேங்கட ரெட்டின்ற பேர்லதான் ரூம் போட்ருக்கு. கொஞ்ச நாளைக்கு நீ கதிரவன்றதையே மறந்துடணும்.''

''சரி சார்''

''ஃபோனை எடுத்ததும் ஹலோன்னு மட்டும் சொல்லு. அப்புறம் வேங்கட ரெட்டின்னு பேரைச் சொல்லு. புரிஞ்சுதா?''

''சரி சார்.''

''சினிமாப் புயல் பத்திரிகைக்கு அனுப்பி வைச்ச அந்த லெட்டருக்கு ஏதாச்சும் ரெஸ்பான்ஸ் உண்டா? யாராச்சும் நேர்ல வந்து உன்னைச் சந்திச்சாங்களா?''

'இல்லை சார்...வர்றதா ஃபோன் செஞ்சாரு ஒருத்தர்'

''யாரு?''

''காசிநாதன்னு அந்தப் பத்திரிகைல ரிப்போர்ட்டராம்''

''அவனா ரொம்ப இடக்கு முடக்கா கேள்வி கேக்கறவனாச்சே. சரி... எப்போ வர்றேன்னான்?''

''இன்னும் கொஞ்ச நேரத்தில வருவார் சார். அவரை எதிர்பார்த்துத்தான் அவசரமா வெங்கட ரெட்டி கெட்டப்புக்கு மாறி காத்துக்கிட்டிருக்கேன்.''

''இத பாரு, யாராச்சும் வர்றப்பதான் நீ கெட்டப் மாத்திருக்கிறது வேணாம். எப்பவுமே வெங்கட ரெட்டி கெட்டப்புல இரு''

''இந்த டிரஸ் அசௌகரியமா இருக்கு சார்''

''பணம் வாங்கலை? பொறுத்துக்கோ. அந்தக் காசிநாதன் வந்துட்டுப் போனதும் எனக்குப் ஃபோன் செய்''

''சரி சார்''

''ஹோட்டல் ரூம்லேர்ந்து பண்ணாதே.வெளில வந்து ஒரு பப்ளிக் பூத்லேர்ந்து பேசு''

''ஏன் சார்?''

''முட்டாள்! ஹோட்டல்ல உன் ரூம் பில் கணக்குல லோக்கல் ஃபோன் கணக்கும் சேர்ப்பாங்க. அப்ப நம்பரு



நோட் செய்யலாம். நாளைக்கு எந்த வகையிலயும் நான் பிராப்ளத்துல மாட்டிக்கக் கூடாது. அதுக்குத்தான்.''

''அப்போ நான் பிராப்ளத்தில மாட்டிக்கிட்டா பரவாயில்லையா?''

''நான் சொல்லிக் கொடுத்தபடி கச்சிதமா செஞ்சிக்கிட்டு வந்தியான்னா மாட்டறதுக்கு சான்சே இல்லை. அப்படி ஒரு வேளை சிக்கல் ஏற்படற மாதிரி இருந்தா உன்னை விவகாரத்தில இருந்து விடுவிச்சி தப்ப வைக்கிறதுக்கும் என்கிட்டே யோசனை இருக்கு''

''நீங்க எப்படியும் என்னைக் கைவிட்டுட மாட்டீங்கன்ற நம்பிக்கைதான் சார். நான் இதில தைரியமா இறங்கியிருக்கேன்.''

''காசிநாதன்தான் உன்னைச் சந்திக்கப் போற முதல் ரிப்போர்ட்டர். பதட்டம் இல்லாம கச்சிதமா இயல்பா பேசு.''

''சரி சார்''

''வெச்சிடட்டுமா?''

''ஒரு நிமிஷம் சார்''

34752

''என்ன?''

''அந்த காசிநாதன் என்னை ஃபோட்ட எடுக்கணும்னு சொன்னா அதுக்கு அனுமதிக்கட்டுமா சார்?''

எதிர்முனையில் ஈஸ்வர் சில விநாடிகள் யோசித்தார்.

''தப்பில்லை. போஸ் கொடு. நீயா முன் வந்து உன்னை ஃபோட்டோ எடுக்கச் சொல்லாதே... வெச்சிடறேன்.''

கதிரவன் என்கிற வெங்கடரெட்டி ரிசீவரை ஒரு நீண்ட பெருமூச்சுடன் வைத்தான்.

ஒரு சிகரெட் பற்ற வைத்தபடி அறையில் மெதுவாக உலாத்தினான். ஜன்னல் அருகில் நின்றான். திரைச் சீலையை கயிறு இழுத்து நகர்த்தினான்.

கீழே எட்டுவடிவத்தில் ஒருஅழகான நீச்சல்குளம்தெரிந்தது. அதில் பலர் நீச்சலடித்துக் கொண்டிருந்தார்கள்.

நாற்காலியை இழுத்துப் போட்டு அமர்ந்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த கதிரவன் அழைப்பு மணியின் சத்தத்தில் பார்வை திருப்பினான். எழுந்து சென்று கதவைத் திறந்தான்.

புன்னகையுடன் கை கூப்பினான் தோளில் கேமிரா அணிந்த காசிநாதன்.

''நான் காசிநாதன். சினிமாப்புயல் பத்திரிகை ரிப்போர்ட்டர். ஃபோன் பண்ணியிருந்தேனே''

''வாங்கோ உள்ளே வாங்கோ சார்''

காசிநாதன் உள்ளே வந்து அமர்ந்தான். எதிரே கதிரவன் அமர்ந்து இண்டர்காம் எடுத்து, ''காபி சொல்லட்டுமா?'' என்று கேட்டு, காசிநாதன் தலையசைத்ததும் காபி ஆர்டர் செய்துவிட்டு வைத்தான்.

''மிஸ்டர் வேங்கடரெட்டி உங்க லெட்டர் எங்களுக்கு ரொம்ப அதிர்ச்சியா இருந்திச்சி,'' என்ற காசிநாதன் ஒரு சிறிய டேப் ரிக்கார்டரை வைத்து அதன் ரெக்கார்ட் பட்டனை அழுத்தினான்.

''பல சமயங்கள்ல உண்மை அதிர்ச்சியாத்தான் இருக்கும்.''

''வரிசையா ஒவ்வொண்ணா கேக்கறேன். உங்க முழுப் பேர் என்ன?''

''முழு பேரா? வேங்கடரெட்டிதான்!''



''நீங்க இப்ப எங்க இருக்கீங்க?''

''சொந்த ஊர் ஹைதராபாத் பக்கத்தில் ஒருகிராமம். இப்போ நான் ஹைதராபாத்ல இருக்கேன்.''

''என்ன செய்றீங்க அங்கே?''

''ரெண்டு மூணு பிஸினெஸ் செஞ்சேன். எல்லாத்திலயும் நஷ்டம். அதனால, இப்ப கைல இருக்கிற பணத்தை பேங்க்ல போட்டுட்டு மாசா மாசம் அதில இருந்து வர்ற வட்டில வாழ்ந்துகிட்டு இருக்கேன்.''

''ஹைதராபாத்ல உங்ககூட வேற யார் யார் இருக்காங்க?''

''நான் மட்டும்தான் இருக்கேன்.''

''நடிகை மதுமிதா உங்கமனைவின்னு உங்கலெட்டர்ல குறிப்பிட்டிருந்தீங்க. அது சம்பந்தமா சொல்லுங்க.''

''என்ன சொல்லணும்?''

''அது உண்மையா இல்லை ஒரு புகழுக்காக கொடுத்த அதிர்ச்சி ஸ்டேட்மெண்ட்டா?''

''புகழுக்காகவா?''

''சில பேருக்கு திடீர்னு தன் பேர் ஒரே ராத்திரியில உலகம் பூரா பரவணும். ஏதோ ஒரு விதத்தில தன்னைப் பத்தி எல்லாரும் பேசற மாதிரி ஏதாச்சும் செய்யணும்னு ஆசை வரும். உதாரணத்துக்கு சோனியாகாந்தி மகள் பிரியங்கா என் மனைவின்னு ஒருத்தர் அறிக்கை விட்டார். அப்புறம் அவரைக் கைது செஞ்சிட்டாங்க. அதுக்காக கேட்டேன்.''

கதிரவன் வாய்விட்டுச் சிரித்து, ''என் விஷயத்துல அந்த மாதிரி கைது செய்றதா இருந்தா, எனக்கு துரோகம் செஞ்சிட்ட மதுமிதாவைத்தான் கைது செய்யணும்'' என்றான்.

''எதனால அப்படி சொல்றீங்க?''

''மதுமிதா என்னை புருஷனாவே மதிக்கிறதில்லை''

''உங்க ரெண்டு பேருக்கும் எப்படி கல்யாணம் நடந்துச்சி? விபரமா சொல்லுங்க''

''அப்போ மதுமிதா நடிகை ஆகலை. ஸ்கூல்ல படிச்சுக்கிட்டிருந்திச்சு. சாயங்காலத்தில டைப் கத்துக்கிச்சு... அங்க நானும் கத்துகிட்டேன். மதுமிதா ரொம்ப அழகுன்னு நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரிய வேண்டியதில்லை. அந்த அழகு என்னை அடிச்சிப் போட்டுடுச்சு.''

''அப்புறம்?''

''மதுமிதா மேல ஒரு வெறித்தனமான காதல் வந்துடுச்சி. நேராப் பேச தயக்கமா இருந்திச்சு. என் மனசுல உள்ளதை எல்லாம் கொட்டி ஒரு பெரிய லவ் லெட்டர் எழுதினேன். அதை தைரியமா அவகிட்டே கொடுத்துட்டேன்.''

''அதுக்கு என்ன ரியாக்ஷன்?''

''அதுக்கு மதுமிதா ஒரு பதில் எழுதிக் கொடுத்தா. அந்த பதில்லேர்ந்துதான் அவளும் என் மேல ஆசை வெச்சிருக்கான்னு தெரிஞ்சுக்கிட்டேன். அந்த லெட்டரைப் பார்க்கறீங்களா? மதுமிதா தன் கைப்பட எனக்கு எழுதின காதல் கடிதம்''

''காமிங்க''

கதிரவன் எழுந்து சென்று சூட்கேஸ் திறந்து ஒரு கடிதம் எடுத்து வந்தான். நீட்டினான்.

அது நிறம் பழுத்துப் போய் பார்த்தாலே பழைய காகிதம் என்று புரிந்தது. காசிநாதன் படித்துப் பார்த்தான்.



'அன்பரே,

உங்கள் ஆசைக் கடிதம் பார்த்தது முதலில் அதிர்ச்சியும், பிறகு வியப்பும் மேலிட்டது. அதிர்ச்சி-உங்களிடமிருந்து அப்படி ஒரு கடிதம் எதிர்பார்க்காததால், வியப்பு-என் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் அதே எண்ணங்களை நீங்கள் வார்த்தையாக்கியிருப்பதால்.

மேற்கொண்டு உங்கள் விருப்பத்தைப் பற்றி பெரியவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். என் அம்மாவிடம் பேசுங்கள்.

தங்கள், மதுமிதா.

காசிநாதன் ஏற்கனவே மதுமிதாவின் கையெழுத்தை அறிந்திருந்ததால் இந்தக் கடிதத்தில் உள்ள கையெழுத்து நிச்சயமாக மதுமிதாவுடையதுதான் என்பதை உணர முடிந்தது.

# 24

மதுமிதா தனக்கு எழுதியதாகக் கதிரவன் கொடுத்த அந்த பழைய காதல் கடிதத்தைப் படித்துப் பார்த்த காசிநாதன் ''சார், இதை நான் போட்டோ எடுத்துக்கலாமா?'' என்றான்.

''நானே ஜெராக்ஸ் பண்ணி வெச்சிருக்கேன். இந்தாங்க''

அருகிலிருந்து ஒருகடித நகலை எடுத்துக் கொடுத்தான் கதிரவன்.

''நீங்க கொடுத்த லவ்-லெட்டருக்கு மதுமிதா இந்த மாதிரி பதில் லெட்டர் கொடுத்தாங்க. அப்புறம் என்ன ஆச்சு?''

அறைக் கதவு தட்டப்பட்டு ரூம் பாய் வந்து சிறிய பிளாஸ்கிலிருந்து இரண்டு கோப்பைகளில் காபி ஊற்றிக் கொடுத்துவிட்டு விலகினான்.

''அம்மாவிடம் பேசுங்கன்னு மதுமிதா அதில குறிப்பிட்டிருந்தா...அப்போ மதுமிதாவோட அம்மா துர்காவுக்கு...''

''துர்காவா?''

''துர்காதான் சார் ஒரிஜினல் பேரு. சினிமாவுக்காக வெச்சிக்கிட்ட பேருதான் காவ்யா. அவங்களுக்கு பட வாய்ப்புகள் ரொம்பவும் குறைஞ்சி போயிருந்த நேரம். வருமானம் குறைஞ்சிடுச்சி...ஆனா பாப்புலர் நடிகைன்ற பந்தாவை குறைச்சுக்க முடியலை. அதனால சொந்தமா படம் தயாரிக்கிற முயற்சிகள்ல இருந்தாங்க''

''சரி...''

''நான் நேர அவங்க வீட்டுக்குப் போயி தைரியமா அவங்ககிட்டே பேசினேன்.''

''என்ன பேசினீங்க?''

''இந்த மாதிரி உங்க பொண்ணை நான் லவ் பண்றேன். அவளும் என்னை விரும்பறா...எங்களுக்கு கல்யாணம் பண்ணி வைங்கன்னு கேட்டேன். அவங்க நம்பலை. மதுமிதா எழுதின லெட்டரை காமிச்சேன். அவளையே கூப்புட்டுக் கேளுங்கன்னு சொன்னேன்.''

''அப்புறம்?''

''மதுமிதாவைக் கூப்புட்டுக் கேட்டாங்க. நடுங்கிக்கிட்டே ஆமாம்னு சொன்னிச்சு. பளார்னு ஒரு அறை விட்டாங்க...அழுதுகிட்டே உள்ளே ஓடிருச்சி...என்கிட்டே என் பொண்ணு எழுதின லெட்டரைக் கொடுத்திட்டு அவளுக்குப் பக்குவம் இல்லை. ஏதோ சபலப்பட்டு



எழுதிட்டா...அவளை மறந்துடு. எவ்வளவு பணம் வேணும்னு கேட்டாங்க. நான் பதில் பேசாம கோபமா புறப்பட்டு வந்துட்டேன்.''

கதிரவன் சட்டென்று தன் சட்டையின் கைப்பகுதியை உயர்த்தி, முழங்கை அருகில் இருந்த சைக்கிள் ஓட்டப் பழகினபோது ஏற்பட்ட காயத் தழும்பைக் காட்டினான்.

''இதைப் பார்த்தீங்களா தழும்பு''

''என்ன இது?''

''மதுமிதாவைக் காதலிச்சதுக்கு அவங்கம்மா எனக்குக் கொடுத்த பரிசு. இதே மாதிரி உடம்பு பூரா ஆறேழு இடத்தில தழும்புகள் இருக்கு''

''ஆள் வச்சு அடிச்சாங்களா?''

''ஆமாம்! அடியா அது? மரண அடி! கிட்டத்தட்ட செத்துட்டேன். பதினைஞ்சு நாள் ஆஸ்பத்திரியில இருந்தேன். ஒரு நாள் ஆஸ்பத்திரிக்கு மதுமிதா வந்தா. என்னைப் பார்த்து கதறி அழுதா. அவங்கம்மா எவ்வளவு எதிர்த்தாலும் என்னைத்தான் கல்யாணம் செய்துக்குவேன்னு சத்தியம் செஞ்சா.''

''அப்புறம்?''

''நான் உடம்பு குணமானதும் நாங்க ரெண்டு பேரும் ஒரு கோயில்ல வெச்சு கல்யாணம் பண்ணிக்கிட்டோம். என்னோட ரெண்டே ரெண்டு ஃபிரண்ட்ஸ் மட்டும்தான் இருந்தாங்க''

''போட்டோ எடுத்தீங்களா?''

''எடுத்துக்கிட்டேன். விவகாரமான கல்யாணமாச்சே... காட்றேன். எல்லாம் சொல்லி முடிச்சுட்டு காட்றேன். காட்றது மட்டுமில்லை. உங்களுக்கு ஒரு காப்பியும் தர்றேன்.''

''மேற்கொண்டு சொல்லுங்க''

''வழக்கம்போல அந்தம்மா என் பெண்ணை கடத்திட்டாங்கன்னு போலீஸ்ல புகார் கொடுத்துச்சி... போலீஸ் வந்து விசாரிச்சப்ப மதுமிதா நான் மேஜரான பொண்ணு, என் விருப்பத்தோடதான் இந்தக் கல்யாணம் நடந்துச்சின்னு ஸ்டேட்மெண்ட் கொடுத்தா.''

''ஐ ஸீ...''

''அதுக்கப்புறம் அவங்கம்மா என்னை எதிர்த்துகிட்டா காரியம் ஆவாதுன்னு புரிஞ்சுக்கிட்டு என்னை மாப்பிள்ளையா ஏத்துக்கறதா சொல்லிட்டாங்க. ஒரு வாரம் நாங்க ஆந்திரா பூரா கார்லயே சுத்தி தேனிலவு கொண்டாடிட்டு வந்தோம். ஒரு நாள் என் மாமியார் வந்து ஒன்னு அழுதாங்க.''

''எதுக்கு?''

''அவங்க படம் எடுத்ததிலே நஷ்டம்னு சொன்னாங்க. நிறைய கடன் இருக்கிறதாச் சொன்னாங்க. அதை எல்லாம் அடைக்கணுமின்னா மதுமிதாவை நடிக்க வெச்சாகணும்னு சொன்னாங்க. மதுமிதாவுக்கும் சினிமாவுல நடிக்கிற ஆசை இருந்துச்சி. எனக்கும் என் மனைவி நடிகைன்னா பெருமிதமா இருக்கும்னு பட்டுச்சு. சரி, நடிக்கட்டும்னு சொன்னேன்.''

''அப்புறம்?''

' உடனே அவங்க அடுத்த கண்டிஷன் போட்டாங்க''

''என்ன கண்டிஷன்?''

''நான் மதுமிதாவை அவங்க வீட்ல விட்டுட்டுப் பிரிஞ்சிடணுமாம். மாசா மாசம் கணிசமான தொகை கொடுத்துடுவாங்களாம். எனக்கும் மதுமிதாவுக்கும் கல்யாண



மான விஷயத்தை நான் எப்பவும் யார் கிட்டேயும் சொல்ல கூடாதாம்!''

''ஏன் அப்படி?''

''சினிமால அறிமுகமாகறப்பவே மதுமிதாவைக் கல்யாணம் ஆனப் பொண்ணுன்னு சொன்னா தயாரிப்பாளர்களும் சரி, ரசிகர்களும் சரி...வரவேற்கமாட்டாங்கன்னு விளக்கம் சொன்னாங்க''

''அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க.''

''அவங்க சொன்னது நியாயமா இருந்திச்சு. என் மனைவி ஒரு பிரபல நடிகையா வரணும்கற ஆசை எனக்கு இருந்ததால அவங்க சொன்ன எல்லா நிபந்தனைகளுக்கும் நான் ஒப்புக்கிட்டேன்.''

''அப்புறம்?''

''மதுமிதாவை அவங்க வீட்ல விட்டுட்டு நான் போய்ட்டேன். அவ நடிகையானா...எனக்கு சொன்னபடி மாசா மாசம் பணம் அனுப்பி வைச்சாங்க. மதுமிதா பிரபலம் ஆக ஆக அவ போக்குல மாற்றம் வந்திடுச்சி...எப்பயாவது நான் போனாக்கூட என்கிட்டே முகம் கொடுத்துப் பேசாம என்னை அலட்சியப்படுத்தினா. ஒரு கட்டத்தில எனக்கும் அவளுக்கும் நடந்ததெல்லாம் ஒரு கனவான்னு நானே சந்தேகப்படற அளவுக்கு அவளும், அவங்கம்மாவும் நடந்துக்க ஆரம்பிச்சாங்க''

''ஏன் அப்படி?''

''காசும் புகழும் கத்துக்கொடுத்த திமிர்தான். வேற என்ன? நாலு மாசம் முன்னாடி ஒருதடவை மதுமிதாவை நான் பார்த்தேன். நீ நடிச்சது போதும். நிறுத்திக்கோ. என்னை உன் புருஷன்னு ஒரு விழா ஏற்பாடு செஞ்சி அறிவிச்சிருன்னு சொன்னேன்''

''அதுக்கு அவங்க என்ன சொன்னாங்க?''

''அவ சொன்ன பதில் என்னை அதிர்ச்சியில உறைஞ்சிப் போக வெச்சிருச்சி...ஏதோ அந்த சமயம் ஒரு சபலத்தில் உங்களைப் பிடிச்சுப்போய் கல்யாணமும் பண்ணிக்கிட்டேன், இப்போ நான் வேற மதுமிதா. இப்போ என் நாகரிக சூழ்நிலைக்கும் மனப்பக்குவத்துக்கும் நீங்க ஒத்துவரமாட்டீங்க. மாசா மாசா பணம் கொடுக்கற மாதிரி மொத்தமா ஒரு தொகை தர்றேன். இல்லை சொத்து எழுதித் தர்றேன். நிரந்தரமா என்னை விட்டு விலகிடுங்கன்னு சொன்னா.''

''அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?''

''எனக்கு பணம் வேணாம். உன்னோட இணைஞ்ச வாழ்க்கை தான் வேணும்னு சொன்னேன். அதுக்கு அவ 'என் செல்வாக்கு புரியாம பேசாதீங்க. கொடுக்கறதை வாங்கிட்டு விலகிட்டா உங்களுக்கு நல்லது. இல்லைன்னா உங்க உயிருக்கே ஆபத்து வரலாம்னு சொன்னா. ஒரு பொண்டாட்டி புருஷனைப் பார்த்து பேசற பேச்சா சார் இது? அதுவும் காதலிச்சி வீட்டை எதிர்த்துக்கிட்டு கல்யாணம் பண்ணிக்கிட்ட பொண்டாட்டி! நான் நொந்து போயிட்டேன் சார்! இப்படிப்பட்ட ஒரு கேவலமான ஜென்மத்தையா அவ்வளவுதூரம் உருகி உருகி லவ் செஞ்சோம்னு என் மேலேயே எனக்குக் கோபம் வந்திச்சு''

காசிநாதன் தண்ணீர் ஜக்கிலிருந்து கிளாஸில் சரித்து இருமின கதிரவனிடம் நீட்டினான்.

வாங்கிப் பருகி வைத்தான் கதிரவன்.

''ஆரம்பத்தில் நடிக்கணும்னு அவளும் அவங்கம்மாவும் கேட்டு நிபந்தனை வெச்சப்போ, சுதாரிக்காம போனது என் தப்பு சார்! யாரை நொந்து என்ன பிரயோசனம்? ஆனா அவ எனக்கு செஞ்ச துரோகத்தை என்னால



மன்னிக்க முடியலை சார். சமீபத்துல பத்திரிகை பேட்டிகள்ல மதுமிதா கூடிய சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கப் போறான்னு பேட்டி கொடுத்திருக்கிறதைப் பார்த்துட்டு நான் மறுபடி கொதிச்சுப் போயிட்டேன். நான் ஒருத்தன் ஏமாளியானது போதாதா? அவ மூலமா வேற யாரும் ஏமாளி ஆகக் கூடாதன்னு தீர்மானிச்சேன். எனக்கு அவகிட்டேர்ந்து ஒரு பைசாகூட சொத்து தேவையில்லை சார். உலகமே அவளைக் கொண்டாடிக்கிட்டு இருக்கு. ஆனா அவளோட சுயரூபம் என்ன எப்படிப்பட்ட அயோக்ய சிகாமணின்னு எல்லாருக்கும் புரிய வைக்கணும்னு தீர்மானிச்சு தான் உண்மைகளை சமுதாயத்துக்கு வெளிப்படுத்தறதுன்னு முடிவெடுத்தேன். முதல் கட்டமா உங்க பத்திரிகைக்கு எழுதினேன்.''

''உயிருக்கு ஆபத்து ஏற்படும்னு மதுமிதாமிரட்டினதா சொன்னீங்க... இப்ப இந்த மாதிரி உண்மைகள் வெளிப்படறதால அந்த பயம் இப்ப இல்லையா?''

''துணிஞ்சுட்டேன். ஒரு பொண்டாட்டி கொலை விழும்னு மிரட்டறதை ஒரு மீசை வைச்ச ஆம்பளை எப்படி சார் பொறுத்துக்க முடியும்? நான் சொன்ன எல்லாத் தகவல்களையும் விபரமாபோடுங்க சார். எழுதுங்க. அவ எப்படிப்பட்டவன்னு உலகத்துக்குப் புரிய வைங்க''

''அந்த கல்யாண போட்டோ''

''தர்றேன்.''

கதிரவன் சூட்கேஸிலிருந்து எடுத்து தந்த புகைப்படத்தில் கல்யாண கோலத்தில் கதிரவனும் மதுமிதாவும் இருந்தார்கள்.

மறுநாள் வெளியான 'சினிமா புயல்' பத்திரிகையில் 'மதுமிதா ஏற்கனவே திருமணமானவரா?' என்ற தலைப்பில் நான்கு பக்கத்திற்கு சூடாக அந்தக் கட்டுரை

வெளியிடப்பட்டு ஊர் முழுவதும் அதே தலைப்பில் போஸ்டர்களும் ஒட்டப்பட்டன.

# 25

கதவைத் தட்டி விட்டு உள்ளே வந்தாள் நர்ஸ்.

படித்துக் கொண்டிருந்த நாவல் புத்தகத்தை பக்கம் அடையாளம் வைத்து ஓரமாக வைத்த மதுமிதா ''குட் மார்னிங் சிஸ்டர் என்றாள்.

''குட்மார்னிங்'' என்று சொன்ன நர்ஸின் முகத்தில் வழக்கமான புன்னகை இல்லாததற்குக் காரணம் புரிய வில்லை.

நர்ஸ் கொண்டு வந்த ட்ரேயிலிருந்து மௌனமாக இன்ஜெக்ஷன் மருந்தை டிஸ்போசபிள் சிரிஞ்சில் ஏற்றத் துவங்கினாள்.

''என்ன சிஸ்டர் ஒரு மாதிரியா இருக்கீங்க?''

''ஒண்ணுமில்லையே.''

''வழக்கமா சிரிச்ச முகமா இருப்பீங்க ஏதாவது பேசிக் கிட்டேதான் இருப்பீங்க. மௌனமா இருக்கீங்க. முகமும் சரியில்லையேன்னுதான் கேட்டேன். வீட்ல ஏதாவது பிரச் னையா?''

''என் வீட்ல எந்தப் பிரச்னையும் இல்லைங்க''

''பின்னே வேற என்ன? டாக்டர் எதுக்காவது திட்டி னாரா?''

''வேணாம் விட்டுடுங்க மேடம். அப்புறம் நான் ஏதாவது சொல்லப் போயி நீங்க வருத்தப்படலாம்''



''நான் வருத்தப்படற மாதிரி அப்படி என்ன விஷயம்?''

''வெளிப்படையாய் பேசினா கோவிச்சுக்க மாட்டீங் கன்னா சொல்றேன்''

''எனக்கு வெளிப்படையாப் பேசறவங்களைத்தான் சிஸ்டர் ரொம்ப பிடிக்கும்''

''பொதுவா சமுதாயத்தில் உங்களை மாதிரி சினிமா நடிகைகள் மேல ஆர்வம் இருக்கற அளவுக்கு மரியாதை இருக்கறதில்லைங்க. ஆனா நீங்க இந்த ஆஸ்பத்திரில சேர்ந்ததிலேர்ந்து உங்க பேச்சும் பழக்கமும் உங்கமேல ஒரு கண்ணியமான மதிப்பை ஏற்படுத்திச்சிங்க. உங்களைப் பத்தி புகழ்ச்சியா நான் என் வீட்டுக்காரர்கிட்டேகூட பல தடவை சொல்லிக்கிட்டிருந்தேன். ஆனா இப்ப உங்களைப் பத்தி சில உண்மைகள் தெரிஞ்சதும் 'நீங்களும் மத்தவங்க மாதிரிதானா?'ன்னு ஒரு வெறுப்பு வந்துடுச் சிங்க''

''என்ன உண்மை தெரிஞ்சிட்டீங்க? எதனால வெறுப்பு வந்திச்சு?''

''நான் உங்க அளவுக்கு படிக்கலை. அந்தஸ்தும் இல்லை. ஆனா பண்பாடுன்னு ஒண்ணு இருக்கு. கலாச் சாரம்னு ஒண்ணு இருக்கு. அதை எல்லாம் மதிக்கிறவ தாங்க நல்ல பொம்பளை. அது யாரா இருந்தாலும் சரிங்க''

''இப்ப நான் ஏன் பண்பாட்டை மதிக்கலைன்னு சொல்றீங்க?''

''கல்யாணம்ங்கிறது விளையாட்டு சமாச்சாரம் இல்லைங்க. ஆயுசுக்கும் மாறாத ஒரு ஜென்ம பந்தத்தை ஏற்படுத்தற புனிதமான விஷயங்க''

''உண்மைதான். அதுக்கென்ன?''

''மனசுக்குப் பிடிக்காத புருஷன் அமைஞ்சாக்கூட, அந்தப் புருஷனை எப்படி மாத்தி நல்ல வழிக்குக் கொண்டார்றதுன்னு பார்க்கணும். பணம் காசு வந்ததும் புருஷனையே போடான்னு தூக்கி எறியறது என்ன குணங்க?''

''வெய்ட்! வெயிட்! புருஷனையே அலட்சியப்படுத்தற மாதிரி நான் எப்பவோ ஒரு கேரக்டர்ல நடிச்சதா ஞாபகம். படத்தோட பேரு ஞாபகத்தில் இல்லை. அந்தப் படத்தை நேத்து டி.வியில பார்த்தீங்களா சிஸ்டர்?''

''நீங்க சினிமால நடிச்சதைப் பத்திப் பேசலைங்க. வாழ்க்கைல நடிச்சிக்கிட்டிருக்கீங்களே அதைப்பத்திதான் பேசறேன்''

''நீங்க என்ன சொல்றீங்கன்னு எனக்குப் புரியலை''

''இதைப்பத்தி நீங்க பேச விரும்பலைன்னு புரியுது. நீங்க யாரோ. நான் யாரே. உங்களுக்கு அட்வைஸ் பண்றதுக்கு எனக்கு உரிமை இல்லை. அதேமாதிரி உங்க வாழ்க்கையைப் பத்தி விமர்சனம் பண்றதுக்கும்கூட உரிமை இல்லை. காலைல சாப்பிட வேண்டிய மூணு மாத்திரையும் சாப்பிட்டீங்களா?''

''சிஸ்டர் பேச்சை மாத்தாதீங்க. வெளிப்படையா கேளுங்க. எதனால என்னைப் பத்தி தப்பா பேசறீங்க?''

''நீங்க ஒரு நடிகையாகணுங்கறதுக்காக உங்கம்மா போட்ட நிபந்தனைக்கெல்லாம் தலையாட்டி உங்களை விட்டு விலகியிருந்த உங்க புருஷனை உயிரைக் காப்பாத்திக்கோன்னு மிரட்டி அனுப்பிச்சிருக்கீங்களே இது ஒரு நல்ல பொண்ணு செய்ற காரியமா?''

மதுமிதா வாய்விட்டுச் சிரித்து ''புருஷனா? எனக்கா? ராத்திரி ஏதாச்சும் கனவு கண்டீங்களா?'' என்றாள்.

''நீங்க ஒத்துக்கலைன்னா என்ன? உங்க புருஷன்தான் ஆதாரத்தோட பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்காரே...''



''எந்த பத்திரிகைக்கு யாரு பேட்டி கொடுத்திருக்காங்க?''

''இன்னைக்கு வெளிவந்திருக்கிற 'சினிமாபுயல்' பத்திரிகைல நீங்க சினிமாவுக்கு வர்றதுக்கு முன்னாடியே ரகசியமா பண்ணிக்கிட்ட கல்யாணத்தைப் பத்தி, உங்களுக்கு தாலி கட்டின புருஷன் வேங்கடரெட்டி விபரமா பேட்டி கொடுத்திருக்காரு. ஊரு பூரா இந்த போஸ்டர் தான் தொங்குது. எலெக்ட்ரிக் டிரெயின்லயும், பஸ்லயும் இதைப்பத்தித்தான் ஜனங்க பேசிட்டு இருக்காங்க. ஊருக்கே தெரிஞ்சி போச்சு. நீங்க என்கிட்ட உண்மையை மறைச்சி பேசிட்டிருக்கீங்க. நீங்க எப்படி வாழ்ந்தா எனக்கென்ன மேடம்? நான் வர்றேன்''

நர்ஸ் வெளியேற, குழப்பமடைந்த மதுமிதா குரல் கொடுக்க டச்சப் பெண் சுமதி ஓடி வந்தாள்.

''சுமதி இந்த இஷ்யூ 'சினிமாபுயல்' உடனே வாங்கிட்டு வா''

பத்து நிமிடத்தில் சுமதி வாங்கி வந்த இதழில் அந்தக் கட்டுரையை பரபரவென்று படித்து முடித்த மதுமிதாவுக்கு ஆத்திரம் பொங்கியது.

உடனே ஃபோனை எடுத்தாள். 'சினிமா புயல்' பத்திரிகையின் அலுவலகத்துக்கு முயன்றாள்.

'எடிட்டர்கிட்ட பேசணும். நான் ஆர்ட்டிஸ்ட் மதுமிதா பேசறேன்'' என்றதும் சில விநாடிகளில் எடிட்டர் லைனுக்கு வந்தார்.

''குட்மார்னிங் மேடம். சொல்லுங்க''

''என்ன சார் இது, இந்த இஷ்யூல இப்படி அபாண்டமா ஒரு கட்டுரை போட்டிருக்கீங்க?''

''அப்படியா? அதெல்லாத்தையும் நீங்க மறுக்கறீங் களா?''

''அத்தனையும் பொய் சார்! முழுக்க கட்டுக்கதை! யாரோ ஒருத்தன் திடீர்னு புகழ் தேடிக்கறதுக்காக செஞ்சிருக்கிற விஷமத்தனம்''

''அந்த வேங்கடரெட்டி குறிப்பிட்டபடி உங்களுக்கு திருமணம் நடக்கலைன்னு சொல்றீங்களா?''

''யார் அந்த வேங்கடரெட்டின்னே தெரியாது சார்''

''உங்க கைப்பட எழுதின லெட்டர் கொடுத்திருக் காரே. கல்யாண போட்டோ வேற இருக்குதே''

''எல்லாம் ஃபிராடு சார்! செட்டப் செஞ்சிருக்காங்க! நீங்க என்கிட்ட கேட்காம எப்படி சார் வெளியிடலாம்?''

''உங்ககிட்ட பர்மிஷன் கேக்கறதுக்கு நீங்க என்ன எங்க பத்திரிகையோட சீஃப் எடிட்டரா மேடம்?''

''அலட்சியமா பேசாதீங்க. உங்க பத்திரிகை மேல நான் மான நஷ்டஈடு வழக்கு போடுவேன்''

''தாராளமாப் போடுங்க. கோர்ட் எங்களுக்கு புதுசில்லை. ஏற்கனவே நாப்பத்தி ஏழு கேஸ் இருக்கு. உங்களோடது நாற்பத்தி எட்டாவது கேஸா இருந்துட்டுப் போகுது''

''கிண்டலா? ஒரு நடிகைன்னா உங்களுக்கு அவ்வளவு இளக்காரமாப் போச்சா? அவ பர்சனல் வாழ்க்கையைப் பத்தி எதை வேணும்னாலும் எழுதலாம்னு நினைப்பா?''

''மேடம் அதிகமாப் பேசாதீங்க. பப்ளிக் லைப்க்கு வந்துட்ட யாரைப் பத்தியும் நாங்க எழுதத்தான் செய் வோம். அந்த பேட்டிக் கட்டுரை கற்பனை இல்லை. உண்மையிலேயே ஒரு வேங்கடரெட்டி இருக்கிறார். அவர்



தான் எங்களுக்கு தபால் எழுதி நிருபரை அனுப்பச் சொன்னார். அவர் பேசின தகவல்களை மாத்தாம வெளி யிட்டிருக்கோம். பேட்டி முழுக்க டேப் செஞ்சி வெச்சிருக் கோம். அவர் கொடுத்த முதல் பேட்டி இது கூடியசீக்கிரம் அவர் ஒரு பிரஸ் மீட் நடத்தி இதே தகவல்களை எல்லாப் பத்திரிகைகளுக்கும் தரப் போறதா சொல்லியிருக்கார். எல்லாப் பத்திரிகைகளும் இதைப்பத்தி எழுதத்தான் போறாங்க. இந்தக் கட்டுரைக்கு மறுப்பு சொல்றதா இருந்தா விபரமா ஒரு அறிக்கை தயாரிச்சு அனுப்பி வைங்க போடறோம். இல்லை, எங்க நிருபரை அனுப்பி வைக் கிறோம். பேட்டி கொடுங்க. இதுதான் நாகரீகமான வழி. நீங்க கேஸ் போடறதுன்னா வேங்கடரெட்டி மேல கேஸ் போடுங்க. எமோஷனலா பேசாம யதார்த்தமா யோசிச்சு செயல்படுங்க மேடம் வேற ஏதாச்சும் சொல்ல விரும்பறீங்களா?''

எடிட்டரின் பேச்சில் இருந்த கிண்டல் தொனி மதுமிதாவை மேலும் எரிச்சல்படுத்தியது. டக்கென்று ஃபோனை வைத்தாள்.

என்ன இது? யார் இந்த வேங்கடரெட்டி? திடீரென்று எங்கிருந்து முளைத்தான்? ஏன் இப்படி அப்பட்டமான பொய்களை பத்திரிகைக்கு அளித்திருக்கிறான்?

பத்திரிகைகளில் என்னைப் பற்றி 'கிசுகிசு'வாக செய் திகள் வருவது ஒன்றும் புதிதில்லை. எந்தப் படத்தில் நடித்தாலும், அந்தப் பட ஹீரோவுடன் இணைத்து எழுதா விட்டால் பத்திரிகைகளுக்கு தலை வெடித்து விடும்.

ஆனால், ரகசியத் திருமணம் நடந்ததாக இத்தனை அபாண்டமாக போட்டிருக்கிறார்களே-

கல்யாண போட்டோ! மறுபடி பத்திரிகையைப் புரட் டினாள்.

இதுதான் வேங்கடரெட்டியா? பாவி! ஏதோ பழைய சினிமா ஸ்டில்லில் விளையாட்டு செய்திருக்கிறான். எத்த னையோ படங்களில் மணப்பெண் அலங்காரத்தில் மண வறையில் அமர்ந்து தாலி கட்டிக் கொண்டிருக்கிறேனே...

ஏதோ ஒரு பழைய சினிமா ஸ்டில்தான் இது.

அப்புறம் இந்தக் கடிதம்!

உற்றுப் பார்த்தபோது தன் கையெழுத்துதான் என பதும்...அதை எந்த சந்தர்ப்பத்தில் ஏன் எழுதினோம் என்பதும் அவளுக்கு நினைவுக்கு வந்தன!

இந்தக் கடிதம் அம்மா அல்லவா அப்போது பிடுங்கி வைத்துக் கொண்டிருந்தாள்.

அது எப்படி இப்போது யாரோ ஒரு வேங்கடரெட்டி யாம்?

யோசிக்க யோசிக்க...இது அம்மாவின் புதிய புரட்சித் திட்டம் என்பது விளங்கியது.

ஃபோன் எடுத்தாள். எண்களை ஒற்றினாள்.

''ஹலோ அம்மாவைப் பேசச் சொல்லுங்க.''

அம்மா விநாடிகளில் ''என்ன மதுமிதா?'' என்றாள்.

''சினிமா புயல்ல கட்டுரை படிச்சியா?''

''இப்ப தான் படிச்சேன்மா. அதைப்பத்தி தான் நானும் சித்தப்பாவும் கவலையா பேசிட்டிருந்தோம். ஒரேடியா உன் வாழ்க்கையை விட்டே விலகிடறதா சொல்லிட்டிருக்கிற அந்த வேங்கடரெட்டி இப்படி உண் மையைப் போட்டு உடைச்சுட்டானே'' என்றாள் துர்கா.



# 26

''அம்மா, என்ன பேசறே நீ?'' பதறிப் போனாள் மதுமிதா.

தன் அம்மா மிகுந்த ஆத்திரத்துடன் இருப்பாள் என்று நினைத்தால், ஏதோ எல்லாமே உண்மை போல நாடகத் தனமாகப் பேசியது அதிர்ச்சியாகவும் இருந்தது. அதே சமயம் இந்த பத்திரிகை வில்லங்கத்தை ஆரம்பித் திருப்பதே அம்மாதான் என்கிற தன்சந்தேகம் ஊர்ஜிதம் ஆகியது.

''மதுமிதா, நீ எதுவும் அப்செட் ஆகாதே! மேற் கொண்டு அந்த வேங்கட ரெட்டி அதிகமா எதுவும் பேசாம இருக்கச் செய்றதுக்கு நான் முயற்சி பண்றேன். நான் அவனை சந்திக்கிறதா இருக்கேன்'' என்றாள் துர்கா.

''எதுக்கு? உங்களோட அடுத்த கட்ட நவடிக்கை என்னன்னு டிஸ்கஸ் பண்றதுக்கா?''

''என்ன மதுமிதா இப்படி பேசறே?''

''என்னம்மா என்கிட்டயே நாடகமாடறே? எனக்கு எல்லாம் புரிஞ்சுப் போச்சு!''

''என்ன புரிஞ்சி போச்சி?''

''இதெல்லாம் உன்னோட ஏற்பாடுதான். சொந்தப் பெண்ணோட பேரையும் புகழையும் நாசம் பண்றதுக்குப் போராடற முதல் அம்மா நீயாதான் இருப்பே!''

''சரி, ஒத்துக்கறேன். நான்தான் இந்த ஏற்பாடுகள்ல இறங்கி இருக்கேன். ஏன் இப்படி எல்லாம் செய்றேன்னு யோசிச்சுப் பார்த்தியா? நீ என்னை அம்மான்னு மதிக்கற தில்லை. என் பேச்சுக்கு எந்த மரியாதையும் கொடுக்கற

தில்லை. ஆனா, நான் மட்டும் என் பொண்ணாச்சேன்னு உன்னைக் கொஞ்சிக்கிட்டே இருக்கணுமா? தலைல தூக்கி வைச்சிக்கிட்டு கொண்டாடிக்கிட்டே இருக்கணுமா? ரகசியமா எங்க எல்லாரையும் ஏமாத்திட்டு நீ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கு திட்டம் போடுவே. அதைப் பார்த்துக் கிட்டு நான் சும்மா இருக்கணுமா?''

''சரிம்மா...இவ்வளவு தூரம் வந்ததுக்கப்புறம் வெளிப் படையாவேப் பேசிடலாம். நீ சொல்றது உண்மைதான். என் மனசுக்குப் பிடிக்காத இந்தத் தொழில்ல உனக்காக இத்தனை வருஷம் நான் இருந்தது போதும்னு பட்டுச்சி. எனக்காக நான் வாழணும்னு ஆசை வந்திச்சு. என்னை முழுசாப் புரிஞ்சிக்கிட்ட நல்ல மனுஷனோட பழக்கமும் கிடைச்சிச்சு. என் எதிர்காலத்தைப் பத்தியோ, என் விருப் பங்களைப் பத்தியோ எப்பயாவது நீ கவலைப பட்டிருக் கியா? உன்னைப் பொறுத்தவரைக்கும் நான் ஒரு பணம் காய்க்கிற மரம். பாசம் எல்லாம் செத்துப்போய் என்னை ஒரு இயந்திரமா நீ பார்க்க ஆரம்பிச்சிட்டே... வாழ்நாள் பூரா உனக்காக உழைக்கிற ஒரு இயந்திரமாவே இருந்துட நான் தயாராயில்லை. அதனாலதான் ரகசியமா கல்யா ணம் பண்ணிக்கத் தீர்மானிச்சேன்.''

''தீர்மானிச்சே இல்லே, அதுக்கு பதிலடிதான் இந்த நடவடிக்கை''

''கொஞ்சமாவது உன் மனசுல பாசம் ஒட்டிக்கிட்டி ருக்கும்னு நான் எதிர்பார்த்தது என் தப்புதான். இப்ப நீ ஒரு அம்மாவா நடந்துக்கலை. ஒரு வில்லிமாதிரிதான் நடந்துக்கிட்டிருக்கே. பேசறதும் அப்படித்தான் இருக்கு. என் பொண்ணுக்கு ஏற்கனவே ரகசியமா கல்யாணம் நடந் துருச்சின்னு வாய் கூசாம மனசு கூசாம கதை கட்டி விட்டிருக்கியே...இதில உனக்கு என்ன சந்தோஷம்?''

''இது என் சந்தோஷத்துக்காக இல்லடி. அப்பத் தான் நீ என் வழிக்கு வருவே...அதுக்காகத்தான்! நீ



நினைச்சிக்கிட்டிருக்கிற உன் ரகசிய கல்யாணத்தைத் தடுத்து நிறுத்தணும். அதுக்காகத்தான்.''

''பத்திரிகைகள்ல என் பேரைக் கெடுத்துடறதால நீ நினைச்சதை சாதிச்சிட முடியும்னு நம்புறியா?''

''கண்டிப்பா''

''பாவம்மா நீ! இதிலயும் உனக்கு ஏமாற்றம்தான் கிடைக்கப் போகுது. அப்படி எந்தக் கல்யாணமும் நடக் கலைன்னு என்னால நிரூபிக்க முடியும். நிரூபிக்கத்தான் போறேன்.''

''முடிஞ்சா முயற்சி பண்ணிப்பாரு! என்னதான் நீ மறுப்புப் பேட்டி கொடுத்தாலும் உன்னைப் பத்தி மக்கள் மனசுல சந்தேகம் ஸ்ட்ராங்கா விழுந்துடும். ஊர் முழுக்க சந்தேகப்படறது இருக்கட்டும். ரொம்ப பெருந்தன்மை யோட உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதா இருக்கானே அந்த முட்டாள் சந்திரசேகர், அவன் மனசுல ஒரு பெரிய சந்தேகப்புள்ளி விழுந்துடும். இல்லையா? அது போதும்.''

''ஸோ...நான் கல்யாணம் பண்ணிக்கப் போற நபர் யாருன்ற வரைக்கும் தெரிஞ்சிக்கிட்டாச்சா?''

''உங்கம்மாவை யாருன்னு நினைச்சே? எனக்குப் பிடிக்காத எதையும் நான் நடக்கவிடமாட்டேன் மதுமிதா! 'என்னை மன்னிச்சிருங்கம்மா, நீங்க சொல்றபடி நான் நடந்துக்கறேன்னு நீ சொல்லத்தான் போறே. சொல்ல வைக்கிறேன் பாரு''

''பார்க்கலாம்மா...ஒரு பொண்ணு தன் அம்மா கிட்டேயே சவால் விட்டுப் பேசற நிலைமை சங்கடமான விஷயம். ஆனா என்னைப் பேச வைக்கிறே நீ. அம்மா, நீ என்ன பித்தலாட்டம் வேணும்னாலும் நடத்திக்கோ. என் இஷ்டப்படி என் கல்யாணம் நடக்கத்தான் போகுது''

''காலொடிஞ்சி ஆஸ்பத்திரில இருக்கறப்பவே உனக்கு இவ்வளவு திமிரா?''

''கால்தானேம்மா ஒடிஞ்சிருக்கு. மன சு எப்பவும் எனக்கு தேக்குமரம்''

ஃபோனை சட்டென்று வைத்தாள் மதுமிதா.

அம்மா மேல் ஆத்திரம் பொங்கியது.

''ச்சே! இவள் என் அம்மாதானா! நிஜமாகவே என்னை கருச் சுமந்து பெற்றவள்தானா இவள்?''

கருணையின் வடிவமாக அன்பின் இருப்பிடமாக பாசத்தின் பிரதிநிதியாக தெய்வத்தின் பிரதிபிம்பமாக அன்னையை உயர்த்தி பேசப்படுவதும், எழுதப்படுவதும் பொய்யா?

'இல்லை! எனக்கு அமைந்த அம்மா ஒரு விதி விலக்கு'

'மூன்றாவது மனிதன் தாக்க வந்தால், தாயிடம் செல்லலாம். தாயே தாக்க வந்தால் யாரிடம் செல்வது?'

'என்ன செய்யப் போகிறேன்? இந்தப் பிரச்சினையை எப்படி சமாளிக்கப் போகிறேன்?'

'சந்திரசேகர் இந்தக் கட்டுரையைப் படித்திருப்பாரா? படித்திருந்தாலும் 'குப்பை' என்று ஒரே வார்த்தையில் அதை அலட்சியப்படுத்தக் கூடியவர்தான் அவர்.

'தன் ஆபீசில் வேலை பார்க்கும் அந்த சாரியை சமாதானப்படுத்துவதற்காக அவரை வைத்து ஒரு நாடகமாடியதற்காக என் தன்மானம் பாதிக்கப்பட்டதாக அவரிடம் சத்தம் போட்டபோது என்ன சொன்னார் அவர்?'

'நான் உன்னை சந்தேகப்பட்டேன்னு நீ எப்படி என்னை சந்தேகப்படலாம் மது?'

அப்படி கேட்டவர் என் சந்துரு.



நான்தான் கோபம் தீராமல் அவரை வார்த்தைகளால் காயப்படுத்தி அனுப்பி வைத்தேன்.

இந்த செல்லமான ஊடல்கள் எங்களுக்குள் எத்தனையோ முறை நிகழ்ந்திருக்கிறது. ஊடல் இல்லாத காதல் ஏது? அதில் சுவைதான் ஏது?

சந்திரசேகரை உடனே சந்தித்து அடுத்து என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்க வேண்டும். அவருக்கு ஏதாவது நல்ல யோசனை தோன்றும்.

சந்திரசேகரை பிடிக்க தொலைபேசியில் முயன்றாள்.

வெளியே சென்றிருப்பதாகத் தகவல் சொன்னார்கள். வந்ததும் தனக்கு ஃபோன் செய்யச் சொல்லிவிட்டு ஃபோனை வைத்த மதுமிதா அறைக்குள் மெதுவாக உலாத்தியபடி யோசிக்கத் துவங்கினாள்.

ஃ ஃ ஃ

மதுமிதா வீட்டின் வரவேற்பறையில் நான்கு நிருபர்கள் காத்திருந்தார்கள். அவர்கள் முன்பு குளிர்பானங்கள் வைக்கப்பட்டிருந்தன.

ஈஸ்வர் கால்மேல் கால் போட்டு பீடா குதப்பியபடி அமர்ந்திருந்தார்.

''மேடம் வரட்டும். அதுவரைக்கும் நீங்க எங்ககிட்ட பேசிக்கிட்டு இருங்களேன் சார்'' என்றார் ஒரு நிருபர்.

மறுப்பாகத் தலையசைத்தார் ஈஸ்வர்.

''நீங்க எது சம்பந்தமா பேட்டிக்கு வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியும். இது பத்தி தெளிவா துர்கா சொல்லுவாங்க. என் வாயைக் கிளறாதீங்க. கொஞ்சம் அமைதியா இருங்க''

சில நிமிடங்கள் கழித்து பட்டுச்சேலை சரசரக்க மாடியிலேர்ந்து இறங்கி வந்து பொதுவாக அவர்களைப் பார்த்து புன்னகை செய்துவிட்டு அமர்ந்தாள்.

''என்ன கேக்கணும் உங்களுக்கு? கேளுங்க. ஒவ்வொருத்தராக் கேளுங்க'' என்றார் ஈஸ்வர்.

''மேடம், 'சினிமா புயல்' பத்திரிகையில வேங்கட ரெட்டின்னு ஒருத்தர் கொடுத்திருக்கிற பேட்டியை நீங்க படிச்சிருப்பீங்க. அதெல்லாம் உண்மையா? மதுமிதாவுக்கும் அவருக்கும் ஏற்கனவே கல்யாணம் நடந்தது நிஜம் தானா?''

''சொல்றேன், இந்தக் கேள்வியை மதுமிதாகிட்டே கேக்க முயற்சி செஞ்சீங்களா?''

''முயற்சி செய்வோம். எந்த பத்திரிகைக்காரங்களையும் நேர்ல சந்திக்கவோ, இல்லை ஃபோன்ல பேசவோ அவங்க தயாரா இல்லைன்னு அவங்க சிகிச்சை எடுத்துக்கிட்டிருக்கிற ஆஸ்பத்திரியில பதில் சொல்லிட்டாங்க மேடம். அதனாலதான் நாங்க இங்க வந்தோம்.''

''சார் விஷயம் இவ்வளவு தூரம் அதுவும் ஆதாரங்களோட வெளிவந்த பிறகு எந்த உண்மையையும் மறைக்க நான் தயாரா இல்லை. அந்த வெங்கடரெட்டி என் மருமகன்தான். அவளா விரும்பி ரகசியமா கல்யாணம் செய்துகிட்டா...முதல்ல நான் எதிர்த்தேன். அப்புறம் ஏத்துக்க வேண்டியதாப் போச்சு''

''நீங்க நிபந்தனை போட்டு அவரை விலகி இருக்கச் சொல்லிட்டு மதுமிதாவை நடிகை ஆக்கினதா குறிப்பிட்டிருக்கிறது...''

''அதுவும் உண்மைதான். அந்த சமயம் எனக்கு எக்கச்சக்கமான பண நெருக்கடி. என் பொண்ணை நடிகையாக்கறது மூலமா அதை சமாளிச்சிட முடியும்னு நினைச்சேன். கல்யாணமானவ ஒரு ஹீரோயினான்னு சொன்னா இளம் ரசிகர்கள் ஒதுக்கி வெச்சிடுவாங்களே... அதனாலதான் அப்படி ஒரு நிபந்தனை போட்டேன்.''



''சரி. இப்போ சமீபத்தில வேங்கடரெட்டி மதுமிதாவைச் சந்திச்சு நடந்த கல்யாணத்தை பகிரங்கப்படுத்திட்டு சேர்ந்து வாழலாம்னு சொன்னப்போ மதுமிதா மறுத்தது ஏன்?''

''மறுத்தது உண்மைதான். அதனாலதான் வேங்கட ரெட்டி ஆத்திரமாகி இப்படி பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்திட்டார்! கொஞ்சம் பொறுமையா இருங்க மாப்பிள்ளை. நான் என் மகளை சமாதானப்படுத்தறேன்னு நானும் சொல்லிப் பார்த்தேன்.''

''மதுமிதா காதலிச்சி செய்துகிட்ட கல்யாணம்தானே, இப்ப எதுக்காக சேர்ந்து வாழ பிரியப்படாம ஒதுக்கப் பார்க்கணும்?''

''சார், இந்தக்கேள்விக்கு என் மகளைப்பத்தி வெளிப்படையா சில விஷயங்களைப் பேச வேண்டியிருக்கு. ஒரு அம்மாவே தன் மகளைப் பத்தி இப்படியெல்லாம் பேசறது உங்களுக்கு ஆச்சரியமா இருக்கலாம். ஆனா நான் பேசறது உண்மை. மதுமிதாவை நடிகையாக்கியது நான்தான். ஆனா, அவ வளர்ந்து நடிகையாகி பேரும், புகழும், பணமும் சம்பாரிச்சதும் ஒரு அகந்தைவந்திடுச்சி. யாரையும் மதிக்கிறதில்லை. என்னையே பல சமயம் எடுத்தெறிஞ்சி பேசுவா. வேங்கட ரெட்டியை அப்ப விரும்பி காதலிச்சி என்னையே எதிர்த்துக்கிட்டு கல்யாணம் செய்துகிட்டா. இப்ப அவளோட ஸ்டேட்டசுக்கு வேங்கடரெட்டியோட குடித்தனம் பண்றதை கௌரவ குறைச்சலா நினைக்கிறா. சுயமா சம்பாதிக்கிற ஒரு வளர்ந்த பொண்ணுகிட்ட ஒரு தாய் அவ்வளவுதான் எடுத்துச் சொல்ல முடியும்.''

நிருபர்கள் ஆர்வமாக பரபரவென்று குறிப்பெடுத்துக் கொண்டார்கள்.

காரை நிறுத்திவிட்டு தன் அலுவலகத்திற்குள் வந்து அமர்ந்ததும் சந்திரசேகரிடம் வந்தார் சாரி. அவர் கையில் 'சினிமா புயல்'

''தம்பி, மதுமிதா பத்தி இந்த பத்திரிகையில...''

''என்ன எழுதியிருக்காங்க? நான் படிக்கலையே. கொடுங்க'' என்று வாங்கிப் புரட்டினான் சந்திரசேகர்.

# 27

சந்திரசேகர் 'சினிமா புயல்' பத்திரிகையில் வந்திருந்த அந்தக் கட்டுரையை முழுவதுமாக வாசித்தான்.

அவன் வாசித்து முடிப்பதற்காக அருகில் நின்றபடியே காத்திருந்தார் சாரி.

படித்து விட்டு பத்திரிகையை அவரிடம் திரும்ப நீட்டினான்.

''என்ன தம்பி, எதுவும் சொல்லலையே...''

''ஏதாச்சும் அக்கப்போர் பண்றதே பத்திரிகைகளுக்கு வேலையாப் போயிடுச்சி''

''அப்போ இதை நீங்க அலட்சியப்படுத்தறீங்களா?''

''வேற என்ன செய்றது? சினிமால பாப்புலரா இருந்தா, இப்படித்தான் ஏதாச்சும் புரளி விட்டுக்கிட்டிருப்பாங்க சார்''

''தம்பி, தப்பா நினைக்காதீங்க. நடிகைகளைப் பத்றி கிசுகிசு எழுதாத பத்திரிகையே கிடையாதுன்னு ஆயிடுச்சி. ஆனா இது கல்யாண விஷயம். போட்டோ லெட்டர்ன்னு ஆதாரத்தோட வெளியிட்டிருக்காங்க.''



''இதையெல்லாம் நம்பச் சொல்றீங்களா?''

''ஒரு சந்தேகம்கூட ஏற்படலையா உங்களுக்கு?''

''இல்லை''

''ஏன்?''

''மதுமிதாவை நான் அவ்வளவு நம்புறேன். அவ வாழ்க்கையில நடந்த அத்தனை விஷயங்களையும் என்கிட்ட மனம்விட்டுப் பேசிருக்கா. எதையுமே மறைச்சதில்லை. அதனாலதான் சொல்றேன்' அவ வாழ்க்கையில இதில எழுதியிருக்கிற மாதிரி ஒரு ரகசிய கல்யாணம் நடந்திருக்க வாய்ப்பே இல்லை சார்''

''தம்பி, தன்னோட இமேஜை பாதிக்கிற விஷயங்களையும் அந்தப் பொண்ணு உங்ககிட்ட சொல்லியிருக்கா?''

''சொல்லிருக்கா சார். சரி நீங்க வேஷம் போட்டுக்கிட்டு நேர்ல பார்த்து பேசிட்டு வந்து அவளைப் பத்தி நல்லவிதமாத்தானே உயர்வா எடுத்து சொன்னீங்க. இப்ப ஏன் இப்படி உங்களுக்கு சந்தேகம்?''

''தம்பி நான் ஒரே ஒரு தடவைதான் பார்த்தேன்' பேசினேன். அதுக்குள்ள எவ்வளவு தூரம் புரிஞ்சுக்க முடியும்? இதில போட்டோ எல்லாம் போட்டு எழுதியிருக்கிறதாலதான் இருக்குமோன்னு சந்தேகம் வந்துடுச்சி. தம்பி, உங்களுக்கு அந்தப் பொண்ணு எப்பவாவதுலெட்டர் எழுதியிருக்குதா?''

''எத்தனையோ லெட்டர்ஸ் எழுதியிருக்கு சார்''

''அதில ஏதாவது இப்ப உங்ககிட்ட இருக்கா?''

''எதுக்கு கேக்கறீங்க?''

''முதல்ல இருக்கான்னு சொல்லுங்க''

''இருக்கு''

''எடுங்க முதல்ல''

அவரைப் புதிராகப் பார்த்துவிட்டு சந்திரசேகர் சாவி போட்டு மேஜை டிராயரைத் திறந்து ஒரு மடக்கப்பட்ட கடிதத்தை தேடி எடுத்தான்.

இதுதான் மதுமிதா எனக்கு எழுதின முதல் கடிதம். அதனால அடிக்கடி எடுத்து படிச்சிப் பார்த்துக்கறேன். நீங்க இதைப் படிக்கிறதைப் பத்தி எனக்கு எந்த அப்ஜெக் ஷனும் இல்லை. குறும்புத்தனமா நிறைய எழுதியிருக்கா. அதெல்லாம் படிச்சுட்டு நெளியக் கூடாது.''

''ராமா! ராமா! நான் இந்த லெட்டரைப் படிச்சிப் பார்க்கிறதுக்காகக் கேக்கலை''

''பின்னே?''

''வெரிஃபை பண்றதுக்குத்தான் கேட்டேன்.''

''என்ன வெரிஃபை செய்யறதுக்கு?''

''இந்தக் கட்டுரையில மதுமிதா தன் கைப்பட அந்த வேங்கடரெட்டிக்கு எழுதின கடிதத்தையும் போட்டிருக் காங்க. கவனிக்கலையா? டிராயர்ல லென்ஸ் இருக்கு பாருங்க. அதை எடுங்க, பெரிசு பண்ணிப் பாருங்க. கையெழுத்து ஒரே மாதிரி இருக்கான்னு பாருங்க''

''சார்! அது சும்மா வாசகர்களை நம்ப வைக்கிறதுக் காக செஞ்ச செட்டப் லெட்டர் சார்! இப்படி சரி பார்க் கறதே மதுமிதாவை அவமானப்படுத்தறதா நினைக்கிறேன் சார்.''

''ரொம்ப உணர்ச்சிவசப்படாதீங்க தம்பி. அது செட்டப் லெட்டர்தான். அதுல உள்ளது மதுமிதாவோட கையெழுத்தே இல்லைன்னு ஊர்ஜிதம் செய்துக்கறதுக்காக வாவது பார்க்கக்கூடாதா?''



''நீங்க ரொம்பத்தான் தொல்லை பண்றீங்க சாரி சார்' என்றபடி லென்சை எடுத்து அவரிடம் கொடுத்தான். ''நீங்களே பாருங்க''

''முதல் வரி மட்டும் பார்க்கறேன்''

புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு அந்த முதல் கடிதத்தின் முதல் வரி மட்டும் தெரியும்படி மடக்கிவைத்துக் கொண்டு லென்சைப் பிடித்து எழுத்துக்களைப் பெரிது படுத்தி கண்களை இடுக்கி, உன்னிப்பாகப் பார்க்கத் துவங்கினார் சாரி.

புத்தகத்தில் இடம் பெற்றிருந்த அந்தக் கடிதத்தை முதலில் வரிவரியாகப் படித்தார்.

'அன்பரே,

உங்கள் ஆசைக் கடிதம் பார்த்து முதலில் அதிர்ச்சியும் பிறகு வியப்பு மேலிட்டது. அதிர்ச்சி உங்களிடமிருந்து அப்படி ஒரு கடிதம் எதிர்பார்க்காததால்! வியப்பு என் மனதில் ஓடிக்கொண்டிருக்கும் அதே எண்ணங்களை நீங்கள் வார்த்தையாக்கியிருப்பதால்! மேற்கொண்டு உங்கள் விருப்பத்தைப் பற்றி பெரியவர்கள்தான் முடிவு செய்ய வேண்டும். என் அம்மாவிடம் பேசுங்கள்.

**தங்கள், மதுமிதா.**

பிறகு சந்திரசேகர் கொடுத்த அந்தக் கடிதத்தில் முதல் வரியைப் படித்துப் பார்த்தார்.

'அன்புள்ள சந்துரு இந்தக் கடிதம் உங்களை அதிர்ச்சி அடைய வைக்கலாம்.'

இரண்டிலும் இடம் பெற்றுள்ள வார்த்தைகள் என்னென்ன என்று பார்த்தார்.

'கடிதம்!'

'அதிர்ச்சி!'

இந்த இரண்டு வார்த்தைகளும் இரண்டிலும் இருந்தன. இப்போது இந்த இரண்டு வார்த்தைகளை மட்டும் மாறி மாறி கூர்ந்து பார்த்தார்.

''என்ன சார் இவ்வளவு நேரம் பார்க்கறீங்க? ஒரு போலீஸ்காரன்கூட இப்படி பார்க்க மாட்டான் போலி ருக்கு!''

''தம்பி. இது உங்க வாழ்க்கைப் பிரச்னை. என்னை நீங்க வெறும் ஸ்டாஃபா மட்டும் நினைச்சி பழகிட்டு இருந்தா அலட்சியமா இருந்துடுவேன். உங்க மேல எனக்கு அக்கறை இருக்கறதாலதான் சட்டுன்னு ஒரு முடிவுக்கு வர முடியாத தவிக்கிறேன்''

''சரி பார்த்தீங்களே என்ன ஆச்சு?''

''இதுல கடிதம் அதிர்ச்சி இந்த ரெண்டு வார்த்தைகளை மட்டும் நல்லா ஒப்பிட்டுப் பாருங்க தம்பி. எனக்கென்னவோ இது ரெண்டும் ஒரே கையெழுத்தாப் படுது''

''கொண்டாங்க, நான் பார்க்கறேன்''

சந்திரசேகர் லென்சை அவரிடமிருந்து வாங்கிக் கொண்டு அந்த வார்த்தைகளை ஆராய்ந்து பார்த்தான்.

''ஒரே மாதிரிதான் தெரியுது சார். ஆனா செக்லயே ஒரே மாதிரி கையெழுத்தைப் போட்டு மோசடிகள் சகஜமாக நடந்திட்டிருக்கு. மதுமிதாவோட கையெழுத்து ஒன்றும் கிடைக்க முடியாத ஒண்ணு இல்லை. இந்த பத்திரிகை ஆபீசுக்கு வேற ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மதுமிதா லெட்டர் எழுதியிருக்கலாம். அதிலேர்ந்து கையெழுத்தைப் பார்த்து அதே மாதிரி செட்டப் செஞ்சி ருக்கலாம்''

''அப்ப இந்த போட்டோ?''

''அதுவும் சுலபமா செட்டப் செய்யலாமே சார்...''



''எப்படித்தான் உங்களால கொஞ்சம்கூட சந்தேகப் படாம இப்படிப் பேச முடியுதோ...''

சிரித்தபடி நாற்காலியைப் பின்னால் தள்ளி எழுந்தான் சந்திரசேகர். ''அதான் சார் நான் அவமேல வெச்சி ருக்கிற அசைக்க முடியாத நம்பிக்கை. இந்தக் கட்டுரையைப் படிச்சுட்டு பாவம் அவ பதறிப் போயிருப்பா. நான் மதுமிதாவைப் பார்த்துப் பேசிட்டு வந்துடறேன்'' என்றான்.

மௌனமாகத் தலையை அசைத்தார் சாரி.

ஃ ஃ ஃ

கதவைத் தள்ளிக்கொண்டு சந்திரசேகர் மதுமிதாவின் ஸ்பெஷல் வார்டு அறைக்குள் வந்ததும் சிந்தனையோடு நடை பழகிக் கொண்டிருந்த மதுமிதாவின் முகம் பிரகாசமாகியது.

''வாங்க சந்துரு. உங்களுக்கு போன் பண்ணியிருந்தேன்''

''தெரியும்''

''சினிமா புயல் பத்திரிகையில...''

''படிச்சேன். உனக்கு கால் எப்படி இருக்கு''

''ஒரு அடி எடுத்து வைச்சாலே வலி உயிர் போகும். இப்ப மெதுவா இந்தமாதிரி நடக்க முடியுது சந்துரு... அஞ்சி நிமிஷத்துக்கு மேலே நடந்தாத்தான் வலிக்குது''

''இப்ப நான் டாக்டரைப் பார்த்துட்டுத்தான் வர்றேன். நல்ல இம்ப்ரூவ் ஆயிட்டிருக்கிறதாச் சொன்னார். அதுசரி, உனக்கும் அந்தப் பத்திரிகைக்குப் ஏதாச்சும்

தகராறா? ஏன் இப்படி எல்லாம் அபாண்டமா எழுதியிருக்கான்?''

அவன் இப்படிக் கேட்டதும் ஏற்பட்ட நெகிழ்ச்சியில் அவள் கண்கள் கலங்கித் ததும்பின.

''ஏய்! என்ன இது...எதுக்கு அழறே?''

''யு ஆர் கிரேட் சந்துரு! அந்தக் கட்டுரையைப் படிச்சுட்டு நீங்க என் மேல சந்தேகப்பட்டுடுவீங்களோன்னு கவலையா இருந்திச்சி''

நாற்காலியில் அமர்ந்து, ''அசடு! யார் வேணாலும் சந்தேகப்படட்டும். நான் சந்தேகப்படுவேனா? நான் உன்னை பரிபூரணமா புரிஞ்சி வெச்சிருக்கேன் மது. அந்த போட்டோ செட்டப் போட்டோதானே?'' என்றான்.

''ஆமாம். நான் எப்பவோ ஒரு படத்தில கல்யாண சீன்ல நடிச்ச ஸ்டில்லுல இந்த மாதிரி வேற தலையை ஒட்டி விஷமம் செஞ்சிருக்காங்க''

''யாரு அந்த வேங்கடரெட்டி?''

''தெரியலை. ஆனா இந்த சதி நாடகத்தை அந்த வேங்கடரெட்டிதானா நடத்தலை. பின்னாடி இருக்கிற சூத்திரதாரி எங்கம்மா!''

''என்ன சொல்றே?'' என்றான் அதிர்ச்சியுடன்.

மதுமிதா தன் அம்மாவுடன் நடத்தின தொலைபேசி உரையாடல்களை அப்படியே சொன்னாள்.

''உங்கம்மாவைப் பத்தி நீ ஏற்கனவே சொன்னதை வெச்சி அவங்க 'தாய்' அப்படீன்ற சொல்லுக்குத் தகுதியே இல்லாதவங்கன்னு ஒரு அபிப்ராயத்தில் இருந்தேன். இப்போ அவங்க நடந்துட்டிருக்கிற கேவலமான நடவடிக்கையைப் பார்க்கறப்போ அவங்களை ஒரு மனுஷின்னு கூட சொல்ல முடியாது போலிருக்கு. மது, இதுக்கு ஒரு பதிலடி நாம கொடுக்கலாம்'' என்றான் உணர்ச்சிப் பூர்வமாக சந்திரசேகர்.



# 28

ஆனாலும் உங்கம்மா ரொம்ப திறமையாதான் திட்டம் போட்டிருக்காங்க, மதுமிதா என்றான் சந்திரசேகர்.

''அவங்களை என் அம்மான்னு சொல்றதே தப்பு சந்துரு. ஒரு பணப் பிசாசுன்னுதான் சொல்லணும். பணத்தைத் தவிர அவங்களுக்கு வேற எதுவுமே முக்கியம் இல்லை'' என்றாள் மதுமிதா.

''சரி...இப்படி உக்காரு. ரொம்ப நேரமா நின்னுக்கிட்டிருக்கே...கால் வலிக்கப் போகுது.'' அவள் தோளில் கை வைத்து கட்டிலுக்கு நடத்தி அமர வைத்தான். பரிவுடன் தலையைக் கோதி, ''ஏதாச்சும் சாப்பிடறியா? ஜூஸ் போட்டுத் தரட்டுமா?''

''எதுவும் வேணாம் சந்துரு, இந்த உலகத்தையேத் தூக்கி என் கையில கொடுத்தாலும் எனக்கு வேணாம்-என் சந்துருவோட மாறாத அன்பு ஒண்ணு மட்டும் போதும்''

உணர்ச்சிவசப்பட்டதில் விம்மல் ஏற்பட, அவன் மார்பில் சாய்ந்து கொண்டு மெலிதாக அழத்தொடங்கினாள்.

''என்ன இது, அசடுமாதிரி...ஏய் அழுகையை நிறுத்தப் போறியா, இல்லையா?''

''சந்துரு. நீங்க என்னைப் புரிஞ்சு வெச்சிருக்கிற அளவுக்கு நான் உங்களைப் புரிஞ்சு வெச்சுக்கலை.

ஐயாம்...ஸாரி...அப்பப்ப உங்களை நான் வார்த்தைகளால காயப்படுத்தறேன் இல்ல?''

''அதெல்லாம் எதுவும் இல்லை. அமைதியா இரு.''

''இனிமே எந்த விஷயத்துக்கும் உங்க மேல நான் கோபப்படவே மாட்டேன் சந்துரு. நம்ம கல்யாணத்துக் கப்புறம் எந்தப் பிரச்சினை வந்தாலும் அதில் முதல்ல விட்டுக் கொடுக்கறது நானாகத்தான் இருப்பேன் சந்துரு. நமக்குள்ளே வாழ்க்கையில சண்டையே வரக் கூடாது. அப்படியே வந்தாலும் ஒரே ஒரு சண்டைதான் வரணும்''

''அதென்ன?''

''யார் விட்டுக் கொடுக்கறதுன்ற சண்டை!''

சந்துரு சிரித்தான். நாற்காலியை இழுத்துப் போட்டு அவள் அருகில் அமர்ந்தான்.

''ஆக்சுவலா இந்த கட்டுரையை நான் பார்க்கவே இல்லை. நம்ம சாரிதான் கொண்டு வந்து காட்டினார்.''

''வழக்கம்போல அவர் இதை நம்பியிருப்பாரே''

''துப்பறியற வேலை எல்லாம் செய்ய ஆரம்பிச்சிட்டாரு''

''அப்படியா?''

''அவர் அந்த கல்யாண போட்டோவைக் கூட ஏதோ ட்ரிக் வேலைன்னு நம்பத் தயாரா இருந்தார். அந்த லெட்டர் விஷயத்துல சந்தேகம் தீரலை. நீ எனக்கு எழுதின லெட்டர்ஸ் ஏதாச்சும் இருக்கான்னு கேட்டாரு. நீ எனக்கு முதன் முதலா எழுதின லெட்டரை நான் அடிக்கடி எடுத்துப் படிச்சிப் பார்ப்பேன். அதை எடுத்துக் கொடுத் தேன். உடனே ஒரு லென்ஸ் வெச்சிக்கிட்டு புத்தகத்திலே போட்டிருந்த உன் லெட்டரையும், அதையும் ஒப்பிட்டுப்



பார்த்து ரெண்டும் ஒரே கையெழுத்துதான்னு அடம் பிடிக்க ஆரம்பிச்சிட்டார் மது''

''நீங்க என்ன சொன்னீங்க?''

''செக் மோசடி செய்றவங்க அச்சா, அசலா கையெழுத்துப் போடற மாதிரிதான் இதுவும் ஒரு ஃபோர்ஜரி வேலைன்னு சொன்னேன்.''

''அவரு அவ்வளவு மெனக்கெட்டதுக்குப் பதிலா எனக்கு ஒரு ஃபோன் செஞ்சிக்கேட்டிருந்தா ரெண்டும் ஒரே கையெழுத்துதான்னு நானே சொல்லியிருப்பேன்.''

சந்திரசேகர் புருவங்களை உயர்த்திப் பார்த்தான்.

''என்ன சொல்றே மது?''

''ஆமாம் சந்துரு. அந்தக் கையெழுத்து என்னோடது தான். அது நான் எழுதின ஒரு பழைய லெட்டர்தான். அதை எங்கம்மா இத்தனை வருஷமா பத்திரமா எடுத்து வெச்சிருந்தாங்க. இப்போ இந்த சதி நாடகத்துல கச்சி தமா பயன்படுத்திட்டாங்க''

''எனக்குப் புரியலை''

''நான் ஏற்கனவே உங்கக்கிட்டே சொல்லியிருக் கேனே சந்துரு. காதல்னா என்னான்னு புரியாத அந்த வயசுல நான் டைப்ரைட்டிங் கத்துக்கிட்டப்போ ரவின்னு ஒருத்தன் என் பின்னாலேயே சுத்திட்டிருந்தான். எனக்கு லவ் லெட்டர் கொடுத்தான்.''

''ஆமாமா...சொல்லிருக்கே. அவன் சிவப்பா சுருள் கிராப்பா, ஸ்டைலா இருந்தான். அவனைப் பிடிச்சிப் போச்சு உனக்கு. எங்கம்மாகிட்டே பேசுங்கன்னு லெட்டர் எழுதிக் கொடுத்தேன்னு சொன்னே...அந்த லெட்டர் தானா இது?''

''ஆமாம்...கன்னுக்குட்டிக் காதல்னு சொல்வாங்களே, அப்படிப்பட்டக் காதல் அது! அந்தப் பையன் அவங்கப்பாவை கூட்டிக்கிட்டு வந்து பொண்ணு கேட்டு அடி உதை வாங்கினான். அந்த லெட்டரையும் அவன்கிட்டேயிருந்து பிடுங்கி வெச்சிக்கிட்டாங்க எங்கம்மா... அதுக்கப்புறம் அவன் ஊரைவிட்டே போய்ட்டான். கொஞ்ச நாளைக்கு அவனை நினைச்சு நான் அழுதுட்டிருந்தேன்.''

''சரிதான். அதுவரைக்கும் உண்மைக் கதையை வெச்சிக்கிட்டு அப்புறம் ரகசிய கல்யாணம் நடந்ததா கற்பனை சேர்த்து, அந்த ரவிக்கு பதிலா வேங்கட ரெட்டின்னு எவனையோ உருவாக்கி...யப்பா! சதி பண்றதில உங்கம்மாவை மிஞ்சுறதுக்கு ஆள் இருக்க முடியாதுன்னு நினைக்கிறேன்.''

''அவங்க எவ்வளவு திறமையா சதி செஞ்சு என்ன பிரயோஜனம் சந்துரு? மக்கள் மத்தியில என் பேரை ரிப்பேர் பண்றதில வேணும்னா அவங்க ஓரளவுக்கு ஜெயிச்சிருக்கலாம். ஆனா உங்க மனசை கலைக்க நினைச்ச அவங்க நோக்கம் நிறைவேறலையே...அதுல அவங்க படு தோல்வி அடைஞ்சுட்டாங்க''

''ரைட்டு மதுமிதா, இப்ப சீரியஸா சில முடிவுகள் எடுக்கலாம்''

''சொல்லுங்க சந்துரு''

''நாம ஏற்கனவே பேசிக்கிட்ட திட்டப்படி நாளைக்கு இதே ஆஸ்பத்திரியில இதே ரூமில டாக்டரையும், சாரியையும் சாட்சியா வெச்சி கல்யாணம் பண்ணிக்கிறதா இருந்தோம். அதில இப்ப ஏதாச்சும் மாற்றம் செய்யணுமா?''

''எதுக்கு மாற்றம் செய்யணும்? அவசியமில்லை''

''ரைட்டு. உன் விருப்பப்படி நாளைக்கு இங்கே நம்ம கல்யாணம் நடக்கட்டும் மது. உன்னை ஞாயிற்றுக்கிழமை காலைல டிஸ்சார்ஜ் பண்றதா டாக்டர் சொன்னார். அன்னைக்கு ஈவினிங் கிராண்டா ரிசப்ஷன் நடத்திடலாம். நான் அதுக்கான ஏற்பாடுகளை செஞ்சிடறேன். ஓ.கே.யா?''



''ஓ.கே. இன்னொரு ஏற்பாடும் செய்யணும்''

''என்ன சொல்லு?''

''அதே ஞாயித்துக்கிழமை காலைல பிரஸ் மீட் வெச்சிக்கலாம்.''

''சரி''

''உங்க வீட்ல வெச்சிக்கலாமா?''

''சரி''

''அப்போ எங்கம்மா செஞ்ச சதியைப் பத்தி வெளிப்படையா நான் விளக்கம் சொல்றேன்''

''ரைட்டோ. இதில இன்னொரு விஷயமும் எனக்குத் தோணுது''

''என்ன?''

''நானும் நீயும் கல்யாணம் செய்துக்கக் கூடாதுன்னுதான் உங்கம்மாவோட நோக்கம். அதை பொறுமையா உங்கிட்டே சொல்லிப் பார்த்தாங்க. நீ உறுதியா இருந்தே. உன்னைப் பத்தி அசிங்கமான ஒரு சந்தேகத்தை என் மனசில விதைச்சா நான் கல்யாணத்திலேர்ந்து பின் வாங்கிடுவேன்னு எதிர்பார்த்துதான் இந்த சதிக் கட்டுரை நடந்திருக்கை! இல்லையா?''

''ஆமாம்''

''இந்த முயற்சியில அவங்க தோத்துட்டாங்கன்னு நம்ம ரெண்டு பேருக்கு மட்டும்தான் தெரியும்''

''ஆனா அவங்க இதில ஜெயிச்சுட்டதா நம்ப வைக்கணும். அப்பத்தான் ஞாயித்துக்கிழமை நாம பிரப்பீப்பளை சந்திச்சு உண்மை சொல்ற வரைக்கும் அவங்க புதுசா வேற எந்த ஒரு சதியிலயும் இறங்காம இருப்பாங்க. ஆஸ்பத்திரியில வெச்சே நமக்குக் கல்யாணம் நடந்த விஷயம் அவங்களுக்கு ஒரு பெரிய இடியா இறங்கணும்''

''அதுக்கு என்ன செய்யலாம்?''

''நான் சொல்ற மாதிரி நீ செய்யணும்'' என்ற சந்திரசேகர் தன் யோசனையை விரிவாகச் சொல்லத் துவங்கினான்.

ஃ ஃ ஃ

ஒலித்த ஃபோனை துர்கா எடுத்தாள்.

''ஹலோ துர்கா பேசறேன்''

''நான் மதுமிதா பேசறேன்ம்மா'' என்றாள் ஃபோனில் மதுமிதா. அவளின் வார்த்தைகள் கண்ணீரில் நனைந்திருந்தன.

''என்ன?'' என்றாள் அம்மா உணர்ச்சியே இல்லாமல்.

''நீ செஞ்ச சதியால என் கனவெல்லாம் கலைஞ்சு போச்சும்மா. நான் உன்னை உடனேநேர்ல பார்க்கணும்மா உன்கிட்டே மனசு விட்டுப் பேசணும்மா... ப்ளீஸ்... உடனே புறப்பட்டு ஆஸ்பத்திரிக்கு வாம்மா...'' என்றாள் விம்மல்களினூடே.

''என்ன மதுமிதா ஆச்சரியமா இருக்கு? நீ அழறதாவது'''

''அழ வெச்சவளே நீதானம்மா... நேர்ல வாயேன்''

''வர்றேன். நீ அழறதை கண்ணால பார்க்கறதுக்காவது வர்றேன்'' என்று ஃபோனை வைத்துவிட்டுஎழுந்தாள் துர்கா.



பதினைந்து நிமிடத்தில் காரில் வந்திறங்கின துர்கா, அந்த ஆஸ்பத்திரியின் ஸ்பெஷல் வார்டில் மதுமிதா முன் வந்து அலட்சியமாக நின்றாள்.

''என்னடி எதுக்கு வரச் சொன்னே?''

கலங்கின கண்களுடனிருந்த மதுமிதா ''உன்னோட மேதினா நான்தான் தோத்துப் போவேன்னு நல்லாப் புரிஞ்சிடுச்சும்மா... நீ என்ன நினைச்சியோ அதை சாதிச்சிட்டே என்றாள்.

''என்னடி புதிர் போடறே?''

''கொஞ்சம் முன்னாடி சந்திரசேகர் இங்க வந்திருந்தாரு. இந்த உலகமே என்னை சந்தேகப்பட்டாலும் என் சந்துருஎன்னைசந்தேகப்படமாட்டாருன்னுரொம்ப நம்பிக்கையோட இருந்தேன்ம்மா...'சினிமா புயல்'பத்திரிகையை என் மூஞ்சில விட்டெறிஞ்சு கோபமா பேசினாரு. நான் என்ன விளக்கம் சொல்லியும் அவர் நம்பலை அதில வந்திருக்கிற ஒவ்வொரு பொய்யையும் அவர் உண்மைன்னு நினைச்சுட்டாரும்மா... நிஜமாவே நான் ஏற்கனவே ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டு அதை மறைச்சி அவர் கிட்ட பழகிட்டதா குற்றம் சாட்டி திட்டினாரு. இனிமே என் முகத்திலேயே முழிக்கமாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாரு. இப்ப உனக்கு திருப்திதானே?''

''ரொம்ப திருப்தி! இதுக்காக நான் எவ்வளவு மெனக்கெட்டேன்?''

''அம்மா உன்கிட்டே வீம்பு பேசி பிரயோஜனமில்லைன்னு நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். நான் உன்னை எவ்வளவு தடவை அலட்சியப்படுத்திப் பேசியிருக்கேன். அதெல்லாம் மறந்துடும்மா. என்னை மனப்பூர்வமா மன்னிச்சிடும்மா... தயவு செஞ்சி என் காதலை மட்டும் முறிச்சிடாதேம்மா! நீ சந்திரசேகரை சந்திச்சு எல்லாம்

உன் சதின்னு உண்மையை ஒத்துக்கிட்டு அவருக்கு இருக்கிற சந்தேகத்தை போக்கும்மா...ப்ளீஸ்...''

அழுகை கலந்து பேசின மதுமிதாவை அலட்சியமாகப் பார்த்த துர்கா ''முடியாது'' என்றாள் அழுத்தமாக.

# 29

''அம்மா, ப்ளீஸ்...'' என்றாள் மதுமிதா கலங்கின கண்களுடன்.

அவளை அலட்சியமாகப் பார்த்தாள் துர்கா.

''எவ்வளவு திமிர் பிடிச்சி தலைக் கனத்தோட தூக்கி எறிஞ்சி பேசிட்டிருந்தே! பார்த்தியா உன்னைக் கெஞ்ச வெச்சிட்டேன். கடைசியில நீ என் காலடிலவிழுந்துதாண்டி ஆகணும்னு சொன்னேன். இப்ப அதுதானே நடக்குது?''

''நமக்குள்ளே என்ன போட்டியாம்மா? அப்படியே போட்டின்னு வெச்சிக்கிட்டாலும் என் தோல்வியைத்தான் நான் இப்ப உன்கிட்ட பகிரங்கமா ஒத்துக்கறனே... ப்ளீஸ்மா... கொஞ்சம் மனசு வைம்மா''

''இப்ப நான் என்ன செய்யணும் சொல்றே?''

''இதெல்லர்ம் என்னோட சதிதான், என் பொண்ணுக்கு ரகசியமா கல்யாணம் எதுவும் நடக்கலைன்னு சந்திரசேகரைப் பார்த்து உண்மையைச் சொல்லணும்மா''

''அப்படிச் சொன்னா என்ன நடக்கும்?''

''என்னை தப்பா நினைச்சிட்டிருக்காரும்மா... அந்த நினைப்பை சரி செய்யணும்மா''

''சரி செஞ்சுட்டா உன்னைக் கல்யாணம் செய்துக்குவானே... போடி! அறிவு கெட்டவளே... என்னை என்ன ...ட்டான்னு நினைச்சியா?''



''அம்மா நானும் அவரும் கல்யாணம் பண்ணிக்கிறதில உனக்கு என்னம்மா இடைஞ்சல்?''

''வெளிப்படையா சொல்லட்டுமா?''

''சொல்லு''

''உனக்கு இளமையும் உடம்பும் இருக்கற வரைக்கும் தான் சினிமா வாய்ப்பு வந்துகிட்டிருக்கும். இப்ப உனக்கு இருக்கற புகழுக்கும் வாய்ப்புக்கும் இன்னும் அஞ்சி வருஷத்துக்கு கண்டிப்பா நீ ஃபீல்டுல இருப்பே. அஞ்சி வருஷம்னா அம்பது படம்! அம்பது படம்னா எத்தனை கோடி! நினைச்சுப்பாரு! நானோ பெரிய பட்ஜெட்ல படம் எடுத்துட்டு இருக்கேன். எக்கச்சக்கமா பணம் தேவைப்படுது. நீ பாட்டுக்கு கல்யாணம் பண்ணிக்கிட்டு நடிப்பை நிறுத்திட்டா உன் மூலமா இந்த அஞ்சி ஆறு வருஷம் வர்ற வருமானம் கட்டாயிடுமே... அதனாலதான் நீ கல்யாணம் பண்ணிக்கிறது எனக்குப் பிடிக்கலை''

''ஏம்மா உனக்குப் பணத்து மேல இவ்வளவு வெறி?''

''அது இன்னைய தேதிக்கு யாருக்கு இல்லை? அது தாண்டி வாழ்க்கைக்கு ஒரே உந்து சக்தி!''

''சந்திரசேகரை நான் லவ் பண்றேம்மா... காதலை விட பணம் பெரிசாம்மா? என் கோணத்தில் இருந்து யோசிச்சுப் பாரு''

''சரி... இப்படி ஒரு நிபந்தனைக்கு நீ ஒத்துக்கிறியா?''

''என்ன?''

''இன்னும் அஞ்சி வருஷம் நடிச்சிக் கொடுத்துடு, அதுக்கப்புறம் நீ யாரை வேணாலும் கல்யாணம் பண்ணிக்கோ. நான் தடுக்கலை என்ன சொல்றே?''

''நீ சொல்றது கொஞ்சமாவது நியாயமா இருக்கா?''

''என்ன நியாயமில்லை? நிஜமான காதல்னா எத்தனை வருஷம் வேணும்னாலும் அது காத்திருக்கும்''

''ஆக உன்னைப் பொறுத்தவரைக்கும் என்னை நீ உன் பொண்ணாகப் பார்க்க தயாராயில்லை. நான் சம்பாரிச்சுத் தர்ற ஒரு இயந்திரம். அவ்வளவுதானே!''

''கண்ட புஸ்தகத்தையும் படிச்சிட்டு கேள்வி கேக்கறே நீ? ஆனா என்னோட எதிர்பார்ப்புல தப்பே இல்லை. ஒரு அப்பா தான் படிக்க வைச்ச பிள்ளை பிற்காலத்தில தனக்கு உதவணும்னு எதிர்பார்க்கறதில்லையா? அப்படி உன்னை இந்த இண்டஸ்ட்ரில நான்தானே அறிமுகப் படுத்தினேன்? உனக்கு ஆரம்ப காலத்தில சான்ஸ் பிடிக் கிறதுக்காக எவ்வளவு முயற்சிகள் பண்ணியிருக்கேன்னு உனக்கேத் தெரியும். நான் ஆளாக்கிவிட்ட ஒரு பொண்ணு எனக்கு உபயோகப்படலைன்னா எப்படி?''

மதுமிதா அமைதியானாள்.

துர்கா தன் வாட்சைப் பார்த்துக் கொண்டாள்.

''நான் புறப்படட்டுமா? சன் டி.வி.யிலேர்ந்து வர்றேன்னு சொல்லியிருக்காங்க. 'சினிமா புயல்' கட்டுரைப் பத்தி பேட்டி எடுக்கறதுக்காகத்தான் வர்றாங்க உனக்கும் வேங்கட ரெட்டிக்கும் ஏற்கனவே கல்யாணம் ஆயிடுச்சிங்கிற அதே பொய்யைத்தான், இப்ப என்னை நேர்லயும் போன்லயும் பேட்டி எடுக்கிறவங்ககிட்ட சொல்லிட்டு இருக்கேன். டி.வி. காரங்ககிட்டேயும் அதைத்தான் சொல்லப்போறேன். என்னாடி அப்படிப் பார்க்கற? ஒரு நாடகத்தை கடைசி வரைக்கும் கரெக்டா நடத்த வேணாமா? இல்லைன்னா என்இமேஜ் கெட்டுடுமே வரட்டுமா?''

அலட்சியமாகப் புன்னகைத்து விட்டு வெளியேறினாள் துர்கா.



தனக்குள் சிரித்துக் கொண்டாள் மதுமிதா.

அந்த ஸ்பெஷல் வார்டைவிட்டு துர்கா வெளியே வந்தபோது வெளியே மூச்சிரைக்க வந்து நின்றான் அந்த வார்டு பாய்.

''இப்பதாம்மா நான் உங்களுக்கு ஃபோன்செஞ்சேன். நீங்க இல்லைன்னாங்க. நல்லவேளை இங்கேயேப் பார்த்துட்டேன்''

''வளவளன்னு பேசாதே ராமு. மேட்டர் என்ன சொல்லு''

' உங்க பொண்ணை அந்த சந்திரசேகர் சந்திக்கவந்தா அவங்க என்ன பேசிக்கிறாங்கன்னு கண்காணிச்சி அப்பப்ப தகவல் கொடுக்கச் சொல்லியிருந்திங்களே''

''ஆமாம்''

''காலைல அவரு வந்திருந்தாரும்மா''

அந்த வராந்தாவில் நடமாட்டம் அதிகமாக இருந்த தால், சைகை காட்டி, அவனை சற்று ஒதுக்குப்புறமாக அழைத்து வந்த துர்கா ''சொல்லு, என்ன பேசிக்கிட் டாங்க?''

''கதவை லேசா திறந்து வெச்சி ஒட்டுக்கேட்டேம்மா''

''அந்த சந்திரசேகர் இவளை கன்னாபின்னான்னு திட்டிப் பேசி, கத்தி கலாட்டா செஞ்சானா?''

''அவர் எங்க திட்டினாரு!? உங்க பொண்ணுதான் உங்களைத் திட்டினமாதிரி இருந்திச்சி. ரெண்டுபேரும் சிரிச்சிதான் பேசினாங்க''

''சிரிச்சிப் பேசினாங்களா?''

''ஆமாம்மா...இதே ஆஸ்பத்திரில இந்த வார்டு ரூமில வெச்சி அவங்க ரெண்டுபேரும் கல்யாணம் பண்ணிக்கப்

போறதாப் பேசினாங்கம்மா. எங்க டாக்டரே அதுக்கு ஒரு சாட்சியாம்''

துர்காவின் முகம் சிவந்தது.

''எனக்கு எதிர் நடவடிக்கை காட்றாளா அவ? எப்போ பண்ணிக்கப் போறாங்களாம்?''

''ஞாயித்துக்கிழமைன்னு ஏதோ பேசிக்கிட்டாங்கம்மா. ஞாயித்துக்கிழமை பத்திரிகைக்காரங்களைக் கூப்புடணும்னு பேசிக்கிட்டாங்க''

''அப்படியா? ரொம்ப தேங்க்ஸ் ராமு''

தன் கைப்பையிலிருந்து நூறு ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் கொடுத்துவிட்டு வேகமாக நடந்தாள்.

வீட்டின் வாசலில் தன் காரை சத்தமாக பிரேக் அடித்து நிறுத்தி, அவள் இறங்கியதிலேயே, அவள் பயங்கரமான கோபத்தில் இருப்பதைப் புரிந்துகொண்ட ஈஸ்வர், வாயில் போடப்போன பீடாவை போடாமல் நிறுத்தி சோபாவிலிருந்து எழுந்து கொண்டார்.

''என்ன துர்கா, ரொம்ப டென்ஷனா இருக்கே? எங்க போய்ட்டு வர்றே?''

''என் ருமுக்கு வாங்க''

விருட்டென்று படிகளில் ஏறி அறைக்குச் சென்று ஹேண்ட்பேக்கை கட்டிலின்மேல் விசிறிவிட்டு அமர்ந்தாள்.

ஏர்க்கண்டிஷன் ஸ்பீடை அதிகரித்து வைத்துவிட்டு வந்து அவள் அருகில் அமர்ந்தார் ஈஸ்வர்.

''என்னம்மா ஆச்சு?''

''நாம மெனக்கெட்டதெல்லாம் வேஸ்ட்''

''என்ன சொல்றே?''



''அந்த சந்திரசேகர் அவளைத் தப்பா நினைச்சி விலகணும். அவ கல்யாணத் திட்டம் தவிடுபொடியாகணும்னு பிளான் பண்ணித்தானே ரகசிய கல்யாணம் நடந்ததா ஒருத்தனை பிடிச்சி சாமர்த்தியமா செட்டப் செஞ்சோம்?''

''ஆமாம்''

''அந்த சந்திரசேகர் அதெல்லாம் நம்பினதாகத் தெரியலைங்க. அவனுக்கு மதுமிதா மேல அசைக்கமுடியாத நம்பிக்கைப் போலிருக்கு. ரெண்டுபேரும் அந்த ஆஸ்பத்திரியிலயே ரகசியமா கல்யாணம் செஞ்சுக்கப் போறாங்களாம்''

''எப்போ?''

''வர்ற ஞாயித்துக்கிழமை''

''உனக்குத் தகவல் சொன்னது யாரு?''

''அங்க இருக்கிற வார்டு பாய் ராமு''

''அவனே கேட்டானாமா?''

''அவங்க பேசிட்டிருந்ததைக் கேட்டானாம்''

''அப்ப தகவல் சரியாத்தான் இருக்கும்''

''இவ, எவ்வளவு திமிர் பிடிச்சவ பாருங்க! என்னைக் கூப்புட்டு சந்திரசேகர் எல்லாத்தையும் நம்பி என்னைத் திட்டிட்டு இனிமே முகத்திலேயே முழிக்கமாட்டேன்னு சொல்லிட்டுப் போயிட்டாருன்னு ஆக்ட் கொடுக்கிறா''

''அவ ஏன் அப்படிச் செய்யணும்?''

''ஞாயித்துக்கிழமை அவளோட ரகசிய கல்யாணம் நடந்து முடியறவரைக்கும் நான் வேற எந்த எதிர்நடவடிக்கையிலயும் இறங்காம இருக்கறதுக்காக''

''உன் பொண்ணு இல்லையா? உன்னைவிட ஸ்பீடா யோசிக்கிறா!''

''ஆனா அவளைப் பெத்தவளே நான்!''

''சரி, இப்ப என்ன செய்யப் போறோம்?''

''அவ நினைச்சபடி இந்தக் கல்யாணம் கண்டிப்பா நடக்கக் கூடாதுங்க''

''அதுக்கு என்ன செய்றது?''

''கச்சிதமான ஒரு பிளான் யோசிங்க'' என்ற துர்கா பத்து நிமிட அமைதியான சிந்தனைக்குப்பிறகு சொடக்குப் போட்டு, ''இதான் திட்டம்!'' என்றாள் பிரகாசமாக.

# 30

துர்கா சொன்ன திட்டத்தைக் கேட்டு மிகவும் அதிர்ந்து போயிருந்தார் ஈஸ்வர். அவள் சொன்னதை மூளை உள்வாங்கிக் கொள்ளவே சில விநாடிகள் பிடித்தன. அவளை உற்றுப் பார்த்தார்.

''என்னங்க அப்படிப் பார்க்கறீங்க?''

''நீ விளையாட்டாப் பேசறியா, இல்லை...''

''இல்லை. நான் பேசினது விளையாட்டு இல்லை. நூறு சதவீதம் சீரியஸாத்தான் சொன்னேன்'' என்றாள் துர்கா.

''ரொம்பப் பெரிய விஷயம் துர்கா''

''ஆமாம்''

''அந்த அளவுக்கு நாம நடவடிக்கை எடுத்தாகணுமா?''

''வேற வழி இருந்தா நீங்க சொல்லுங்க''

ஈஸ்வர் கண்களை மூடி யோசித்தார். உதடுகள் பீடாவை அதிக ஓசையின்றி மென்று கொண்டிருந்தன.



அந்த அறையின் நீள அகலத்தை அளப்பவள் போல குறுக்கும் நெடுக்குமாக வேகமாக உலாத்தத் துவங்கினாள் துர்கா.

''இப்படி செஞ்சா என்ன?''

''எப்படி?''

''மதுமிதாகிட்ட போட்ட கண்டிஷனை அந்த சந்திரசேகரை சந்திச்சிப் போட்டா என்ன?''

''விளக்கமா சொல்லுங்க!''

''அஞ்சு வருஷம் சினிமால பிஸியா நடிச்சிக் கொடுத்துட்டு அப்புறம் யாரை வேணாலும் கல்யாணம் பண்ணிக்கோன்னு மதுமிதாகிட்டே நீ பேசினியே...''

''அதைத்தான் அவ வழக்கம்போல அலட்சியப்படுத்திட்டாளே...''

''அந்த சந்திரசேகரை சந்திக்கலாம். சந்திச்சு இதையே சொல்லலாம். அஞ்சு வருஷம் கழிச்சு பண்ணிக்கங்கன்னு சொல்லலாம்''

''அவன் எதுக்கு உங்க நிபந்தனைக்கு ஒத்துக்கணும்''

''அது நிபந்தனையா பேசக்கூடாது. மிரட்டலாப் பேசணும். மீறி அவசரப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டா விளைவுகள் விபரீதமா இருக்கும். ஒரு நாள்கூட நீங்க நினைச்சபடி சந்தோஷமா வாழ முடியாதுன்னு சொல்லலாம்''

''எது வேணும்னாலும் சொல்லலாம். ஆனா அதுக்கெல்லாம் அவன் பயப்படணுமே...உன் வேலையைப் பார்த்துக்கிட்டுப் போய்யான்னு அலட்சியப்படுத்திட்டா?''

''அப்படின்னா வேற விதமா நிபந்தனை போடலாம். நீங்க ரெண்டு பேரும் உங்க விருப்பப்படி ரகசியமா கல்யா

ணம் செய்துக்கங்க. ஆனா இந்த விஷயம் அஞ்சு வருஷத்துக்கு வெளிய தெரிய வேணாம். இப்படி பேசினா?''

''நீங்க எப்படிப் பேசினாலும் ரெண்டு பேரும் ஒத்து வர மாட்டாங்க. அதனாலதான் நான் அப்படி ஒரு நல்ல யோசனை சொன்னேன்''

''அது நல்ல யோசனைதான்''

''பின்னே ஏன் இழுக்கறீங்க?''

''பெரிய ரிஸ்க் இருக்கு''

''நீங்களோ நானோ இதில நேரிடைய சம்பந்தப் பட்டாத்தான் ரிஸ்க் இருக்கு''

''பின்னே யாரை வைச்சு இதை...''

''மைக்கேல் அல்ஃபோன்ஸா ஞாபகம் இருக்கா?''

''அவன் ஒரு அண்டர்கிரவுண்ட் தாதா ஆச்சே?''

''ஆமாம். நாலு வருஷம் முன்னாடி நம்ம படத்தில் ஒரு ஃபைட் சீன்ல நிஜமான தாதாவை நடிக்க வைக்கணும்னு டைரக்டர் ஆசைப் பட்டாரு. மைக்கேல் அல்ஃபோன்ஸாவை நடிக்க வெச்சாரு. அவனுக்கு நம்ம வீட்ல பிரமாதமா விருந்து கொடுத்தோம். என்கிட்ட ரொம்ப மரியாதையா நடந்துக்கிட்டான். எப்போ என்ன பிரச்னையா இருந்தாலும் சொல்லுங்க மேடம்னு சொல்லியிருக்கான். படத்தில நடிச்சதுக்காக நான் கொடுத்த அம்பதாயிரத்தைக் கூட வேணாம்னு சொல்லிட்டான். இப்போ நமக்கு அவன்தான் உதவப்போறான். புறப்படுங்க.''

''எங்கே?''

''அவனைப் பார்க்கத்தான். மகாபலிபுரம் ரோட்ல ஒரு ஹோட்டல் ரூம்ல அவன் தங்கியிருக்கான். போய்ப் பேசிட்டு வந்துடலாம்.''



இருவரும் காரில் புறப்பட்டார்கள்.

ஃ ஃ ஃ

ஜவுளிக் கடையில் இரண்டு மணி நேரம் புரட்டிப் புரட்டி அலசிப் பார்த்து பதினைந்தாயிரம் ரூபாய்க்கு முகூர்த்தப் பட்டுப் புடவை எடுத்தான் சந்திரசேகர்.

பிறகு தனக்கு பட்டு வேஷ்டி, அங்கவஸ்திரம் எடுத்தான். நகைக்கடைக்கு வந்து தாலி வாங்கினான். மேலும் போட்டு வைத்திருந்த லிஸ்ட்படி பொருள்களை வாங்கி காரில் நிறைத்துக்கொண்டு புறப்பட்டபோது காரில் வைத்திருந்த செல் போன் ஒலித்தது.

''ஹலோ சந்திரசேகர்''

''நான்தான் மதுமிதா பேசறேன்''

''மது, நானே உனக்கு இப்ப ஃபோன் செய்யலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீ செய்துட்டே''

''என்ன விஷயம் சொல்லுங்க''

''நீ சொல்ல வந்ததை முதல்ல சொல்லு''

''ம்கூம். முதல்ல நீங்க''

''சரி. பட்டுப் புடவை ரொம்ப பிரமாதமா அமைஞ்சிருக்கு மதுமிதா''

''அப்படியா? என்ன கலர்ல எடுத்தீங்க?''

''மெருன் கலர். பிரமாதமா இருக்கு ஜரிகை. சரி, மல்லிகைப் பூ எத்தனை முழம்னு போடலியே லிஸ்ட்லே. எவ்வளவு வாங்கட்டும்? ரெண்டு பந்து வாங்கட்டுமா?''

''மைகாட்! ரெண்டு பந்தா! எதுக்கு? சந்துரு. நாளைக்கு நமக்கு நடக்கப் போறது வெறும் முகூர்த்தம் தான். சாந்தி முகூர்த்தம் இல்லை''

''சரி, அது எப்போ? அதைப்பத்தி யோசிக்கவே இல்லையே...அதுக்கு வேண்டிய சாமான் எல்லாம் இன்னும் லிஸ்ட் போடலியே''

''ஏய்...!''

''ரைட்டு! இப்ப நீ சொல்ல வந்ததைச் சொல்லு''

''இங்க ஒரு வார்டு பாய் கொஞ்சம் முன்னாடி நான் ஃபோன் பேசினப்ப கதவு பின்னாடி நின்னு ஒட்டுக் கேட்டுக்கிட்டிருந்தான். நான் அவனை கப்புன்னு புடிச்சிட்டேன். டாக்டருக்கு தகவல் சொல்லி அவர் வந்து அவனை நாலு சாத்து சாத்தி விசாரிச்சாரு. ஒரு அதிர்ச்சியான தகவல் சொன்னான் அவன்''

''என்ன?''

''என் ரூம்ல நான் யார்கிட்ட என்ன பேசறேன்னு அப்பப்ப கண்காணிச்சி தகவல் சொல்லணும்னு அவனுக்கு உத்தரவு போட்டது என் அம்மாவாம்''

''இதில் ஆச்சரியப்படறதுக்கு எதுவும் இல்லை. தனக்குத் தெரியாம நீ எதுவும் செய்துடக் கூடாதுன்னு உங்கம்மா முன்னெச்சரிக்கையோட உளவாளிகளைப் போட்டு வெச்சிருந்திருக்காங்க!''

''இந்த உளவாளி கடைசியா கொடுத்த தகவல் என்ன தெரியுமா?''

''என்ன?''

''இன்னைக்கு நீங்க வந்தது, பேசினது இதைப்பத்தி சொல்லிருக்கான். நீங்க கோபமா இருந்தீங்களான்னு எங்கம்மா கேட்டிருக்காங்க. இல்லை, சிரிச்சி பேசிட்டு இருந்தாங்கன்னு சொல்லிருக்கான். வர்ற ஞாயிற்றுக்கிழமை இதே ஆஸ்பத்திரில கல்யாணம் பண்ணிக்கப் போறாங்கன்னும் சொல்லியிருக்கான்''



''ஞாயிற்றுக்கிழமையா?''

''ஞாயிற்றுக்கிழமை டிஸ்சார்ஜ் ஆனதும் உங்க வீட்ல பத்திரிகைக்காரங்களை எல்லாம் மீட் பண்றதுன்னு பேசிணமே...அது அவனுக்கு கல்யாண நாளா பட்டிருக்கு''

''அதுவும் நல்லதுக்குத்தான். உங்கம்மா ஞாயிற்றுக்கிழமை கல்யாணம் நடக்காம இருக்கத்தான் யோசிப்பாங்க. ஆனா நாளைக்கு வெள்ளிக்கிழமை காலைலயே நமக்கு கல்யாணம் நடந்து முடிஞ்சிடும்''

''நான் அம்மாவை ஃபோன் செஞ்சு வரச்சொன்னது, அழுதமாதிரி நடிச்சது எல்லாம் பொய்ன்னு தப்பா புரிஞ்சுக்கிட்டு என்மேல உலகமகா கோபத்தில இருப்பாங்க''

''உன்னை கல்யாணம் பண்ணிக்கப் போறதால என்மேலயும் அவங்க பயங்கரமான கோபத்தில இருப்பாங்க''

34752

''ஆமாம். ஜாக்கிரதையா இருங்க''

''ஐ டோண்ட் கேர்! செல்போன்ல இப்படி பேசிட்டே இருந்தா சிம் கார்டுல பவர் தீர்ந்திடும். ஒரு மணி நேரம் கழிச்சு நான் கூப்புடறேன். வெச்சிடவா?'' என்றான் சந்திரசேகர்.

ஃபோனை வைத்துவிட்டு காரை எடுத்தான்.

ஃ ஃ ஃ

அந்த ஹோட்டல், முக்கிய சாலையிலிருந்து விலகிச் சென்ற பக்கவாட்டுச் சாலையின் எல்லையில், ஒதுக்குப்புறமாக இருந்தது. ஹோட்டலைச் சுற்றிலும் சவுக்குத் தோப்புகள் இருந்தன. சொற்பமான கார்கள் இருந்தன.

மூன்றாவது மாடிக்கு வந்தார்கள் துர்காவும், ஈஸ்வரும்.

அறை எண் 307ன் முன்வந்து நின்று அழைப்புமணியை அழுத்திக் காத்திருந்தார்கள்.

கதவைத் திறந்த மைக்கேல் அல்ஃபோன்ஸா வெற்று மார்புடன் இடுப்பில் ஷார்ட்ஸ் மட்டும் அணிந்து உதட்டில் தொங்கும் சிகரெட்டுடன், விஸ்கி வாடை வீச, ''வாங்க மேடம்! என்ன இது, நீங்க என்னைத்தேடி ஃபோன் செஞ்சிருந்தா நானே வந்திருப்பேனே...உள்ளே வாங்க'' என்றான்.

உள்ளே வந்து அமர்ந்தார்கள்.

குளிர்பானங்கள் வரவழைக்கப்பட்டன. தனக்கு பீர் வேண்டுமென்று கேட்டு வாங்கி அருந்தியபடி துர்கா, ''மைக்கேல்! நீங்க எனக்கு மிகப்பெரிய உதவி செய்யணும்'' என்றாள்.

''சொல்லுங்க மேடம். என்ன செய்யணும்?''

துர்கா சற்றே தயங்கிவிட்டு, ''என் பொண்ணு மதுமிதா என்னைவிட்டு விலகப் போறா! தன் டஷ்டத்துக்கு ஒரு கல்யாணம் பண்ணிக்கப் போறா. இது நடக்கக் கூடாது'' என்றாள்.

''அதுக்கு?''

''நீங்க ஒரு கொலை செய்யணும். முடியுமா.'' என்றாள் துர்கா.

# 31

''நீங்க ஒரு கொலை செய்யணும். முடியுமா?'' என்று துர்கா கேட்டதும் மைக்கேல் அல்ஃபோன்ஸா சில விநாடிகள் அவளை உற்றுப் பார்த்தான். பிறகு ஏதோ ஒரு மகத்தான ஹாஸ்யம் கேட்டவன்போல சிரிக்கத் தொடங்கினான்.



''ஏன் சிரிக்கிறீங்க?'' என்றார் ஈஸ்வர் புரியாமல்.

ஆஷ்ட்ரேயில் காத்திருந்த புகையும் சிகரெட்டை எடுத்து தொடர்ச்சியாக மூன்று முறை இழுத்து புகை பரப்பி அதை அழுத்தி நசுக்கிவிட்டு ''கொல்லன் பட்டறைக்குப் போய் வண்டிக்கு ஒரு அச்சாணி செய்யணும். முடியுமான்னு கேள்வி கேட்டா அவன் சிரிக்கமாட்டானா? கொலை பண்றது எனக்குத் தொழில். என்கிட்ட வந்து முடியுமான்னு கேட்டா எப்படி? யாரைன்னு சொல்லுங்க. எப்போ நடக்கணும்னு சொல்லுங்க. போதும்!'' என்றான் அல்ஃபோன்ஸா.

''என் மகளை கல்யாணம் பண்ணிக்கப் போற சந்திர சேகரை நீங்க கொலை செய்யணும்!''

''கொலை அவசியம்தானா? அவனை தனியா தள்ளிக்கிட்டு வந்து அவன் உடம்புல ரெண்டு மூணு நரம்புக்கு சுளுக்கு எடுத்துட்டு உங்க வழிக்கு வராம இருக்கச்சொல்லி மிரட்டி வெச்சாப் போதாதா?''

''மத்த விஷயத்தில மிரட்டல் அடி உதை இதெல்லாம் பலன் கொடுக்கும். காதல் விஷயத்தில மட்டும் இது வொர்க் அவுட் ஆகாது. அதுக்கு சக்தி அதிகம். எல்லா மிரட்டல்களையும் தாண்டி சாதிக்கத் துடிக்கும் இந்த காதல்! அவன் என் பொண்ணு மேல அழுத்தமான காதலை வளர்த்து வைச்சிருக்கான். அவன் மனசுல சந்தேகத்தை ஏற்படுத்தி அவளைவிட்டு விலக வைக்க நாங்க செஞ்ச பெரிய முயற்சிகள் தோத்துடுச்சி. அவன் ரொம்ப பிடிவாதக்காரன். ஆள் பலம், பண பலம் அவனுக்கும் இருக்கு. அதனாலதான் கடைசி வழியா இந்த வழியை யோசிச்சோம்'' என்றாள் துர்கா.

அல்ஃபோன்ஸா தன் தாடையை லேசாகத் தடவிக் கொண்டான். கொஞ்சம் விஸ்கியை கிளாஸில் ஊற்றி எதுவும் கலக்காமல் கவிழ்த்துக் கொண்டான்.

''ரைட்டு. செஞ்சிடலாம். அவன் ஃபோட்டோ அட்ரஸ் எல்லாம் கொண்டாந்திருக்கீங்களா?''

துர்கா கைப்பையிலிருந்து ஒரு சிறிய கவர் எடுத்துக் கொடுத்தாள்.

''இதில எல்லா விபரமும் இருக்கு''

''இது எப்போ நடக்கணும்?''

''இன்னைக்கு வியாழன். வர்ற ஞாயிற்றுக்கிழமை காலையில அவங்க ரெண்டு பேரும் ரகசிய கல்யாணம் செய்துக்கறதா திட்டம்''

''அப்போ இன்னைக்கு ராத்திரியே முடிச்சிடவா?''

''வேணாம். என்னை ஏமாத்திட்டதா அவங்க ரெண்டு பேரும் சந்தோஷப்பட்டுக்கிட்டிருக்காங்க. இந்த சந்தோஷம் ரெண்டு நாளைக்காவது அவங்களுக்கு நிலைக்கட்டும்''

''அப்படீன்னா சனிக்கிழமை முடிச்சிடவா?''

''ரைட்டு! விடிஞ்சா தன் திட்டப்படி கல்யாணம் நடக்கப் போகுதுன்னு அந்த மதுமிதா நம்பிக்கிட்டு இருப்பா. அந்த நம்பிக்கையில இடி விழணும்!''

''நடத்திடலாம். கவலையை விடுங்க. அப்புறம்...''

''சொல்லுங்க''

''முன் விரோதத்தால திட்டமிட்டு நடந்த கொலை மாதிரி இது தெரிஞ்சா உங்க பக்கம் போலீஸ் பார்வை திரும்பறதுக்கு வாய்ப்பு இருக்கு. இல்லையா?''

''ஆமாம்...''

''அதனால இது வழிப்பறி திருட்டுக்காக நடந்த கொலை மாதிரி போலீஸை நம்ப வெச்சிடட்டுமா?''



''அப்படியே செய்யுங்க. எக்காரணம் கொண்டும் இதில என் பேர் சம்பந்தப்படக்கூடாது''

''சம்பந்தப்படாதுங்க மேடம்!''

''வேற ஏதாவது பேசணுமா இதில்?''

''லேசா தட்டி வைக்கிற வேலை, ஆஸ்பத்திரியில படுக்க வைக்கிற வேலை-இந்த மாதிரி இருந்தா இலவசமாவே செய்து கொடுப்பேன். இதில ரிஸ்க் அதிகம். நானே நேரடியா இறங்க வேண்டியிருக்கும். அதனால...''

''நீங்க தயங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எவ்வளவு வேணும்? செய்யப்போற வேலைக்கு உண்டான கூலியைக் கேக்கறது தப்பில்லை சொல்லுங்க.''

''எவ்வளவு தரலாம்னு நீங்க மனசுல ஐடியா வெச்சிருக்கீங்க?''

''இதென்ன காய்கறி வியாபாரமா? வழக்கமா நடத்திக்கிட்டு இருக்கமா? நீங்கதான் கேக்கணும்!''

''அப்படியா! இந்தக் கொலை நடக்கறதால உங்களுக்கு என்ன லாபம்னு சொல்லுங்க!''

''மதுமிதா மறுபடி என் கட்டுப்பாட்டுக்குள்ள வந்துடுவா''

''எனக்குப் பணக் கணக்கில் சொல்லுங்க. அப்படி மதுமிதா உங்க கட்டுப்பாட்டுக்குள்ளே வர்றதால உங்களுக்கு என்ன லாபம்?''

''அவளுக்கு மார்க்கெட் இருக்கிற வரைக்கும் நடிக்க வைப்பேன். அவ நடிச்சி சம்பாரிச்சிக் கொடுக்கறதெல்லாம் லாபம்தான். ஆனா சினிமால யாருக்கு எத்தனை வருஷம் மார்க்கெட் இருக்கும்னு கியாரண்டியா சொல்ல முடியாது. வரிசையா ரெண்டு படம் விழுந்திருச்சின்னா வீட்ல சும்மா உட்கார வெச்சிடுவாங்க''

''ரொம்ப சாமர்த்தியமா பேசறீங்க. சரி அந்த விப ரம் எல்லாம் எனக்கு அநாவசியம். எனக்கு அஞ்சு லட்சம் கொடுப்பீங்களா?''

''அஞ்சு லட்சமா?''

''என்ன இவ்வளவு அதிசயப்பட்டுக் கேக்கறீங்க? சினிமாவுல இருக்கிற உங்களுக்கு அஞ்சு லட்சம் பெரிய தொகையா? நான் அதிகமா எதுவும் கேக்கலைன்னு நினைக்கிறேன். ஒரு உயிரை எடுக்கறது சாதாரண மேட் டரா என்ன?''

துர்கா யோசனையில் ஆழ்ந்தாள்.

ஈஸ்வர் அவள் காதருகில் குனிந்தார்.

''துர்கா உனக்காக இலவசமா செஞ்சித் தருவான்னு நினைச்சியா? பேசாம இந்த ஐடியாவை ட்ராப் பண்ணிட லாமா?'' என்று கிசுகிசுப்பாகக் கேட்டார்.

அவரை முறைத்துவிட்டு, ''அல்ஃபோன்ஸா நீங்க சொன்ன மாதிரி இதை திருட்டுக்காக நடந்த கொலையா செட்டப் செஞ்சிடுவீங்கதானே?'' என்றாள் துர்கா.

''அதெல்லாம் கச்சிதமா செஞ்சிடுவேன் மேடம்''

''ரைட்டு அஞ்சு லட்சம் தர்றேன். அட்வான்ஸ் ஒரு லட்சம் நாளைக்குத் தர்றேன். மீதிப் பணம் வேலை முடிஞ்சதும் தர்றேன்''

''எனக்கு அட்வான்ஸ் எதுவும் தேவையில்லைங்க. வார்த்தை போதும். மொத்தப் பணத்தையும் காரியத்தை முடிச்சுட்டு நான் வாங்கிக்குவேன். நீங்க புறப்படலாம்''

இருவரும் எழுந்து கொண்டார்கள்.

''வர்றேன் அல்ஃபோன்ஸா''

''ஒரு நிமிஷம் மேடம். கொடுத்த வாக்கை காப்பாத் தறதில நீங்க எப்படிப்பட்டவங்கன்னு எனக்குத் தெரியாது



ஆனா அப்படிக் காப்பாத்தாதவங்ககிட்ட நான்ரொம்பவும் கேவலமா நடந்துக்குவேன். சும்மா ஒரு தகவலா சொன்னேன். புறப்படுங்க.''

அவனைத் திரும்பிப் பார்த்துவிட்டு வேகமாக நடந் தாள் துர்கா. அவளைப் பின்தொடர்ந்து வந்து காரை ஸ்டார்ட் செய்தார் ஈஸ்வர்.

கார் ஓடிக் கொண்டிருந்தது.

''துர்கா'' என்றார் ஈஸ்வர்.

''என்ன?''

''அநாவசியமா ஒரு பெரிய வில்லங்கத்தில மாட்டிக்கப் போறோமோன்னு எனக்குக் கவலையா இருக்கு''

''இதில என்ன வில்லங்கம் இருக்கு? திருட்டுக்காக கொலை நடந்ததா அவன் செட்டப் செய்யப்போறான். அல்ஃபோன்ஸா வரைக்குமே போலீஸ் வராது. அப்படியே வந்தாலும் இதைச் செய்ய சொன்னதுநாமதான்னு அவன் கண்டிப்பா காட்டிக் கொடுக்கமாட்டான்.''

''எப்படி நம்பறது?'?

''சில விஷயங்களை நம்பித்தான் ஆகணும்!''

''எனக்கென்னவோ...''

''கொஞ்சம் பேசாம இருக்கீங்களா? எனக்கு எல்லாம் தெரியும்'' என்று துர்கா அதட்டலாகச் சொன்னதும் வாயை மூடிக் கொண்டார் ஈஸ்வர்.

ஃ ஃ ஃ

அந்த ஆஸ்பத்திரியின் ஸ்பெஷல் வார்டில் மதுமிதா வின் அறையில் மேஜையின் மேல் சுவாமி படங்கள் சுவரோரமாக சாய்த்து வைக்கப்பட்டு புதுமாலைகள்

அணிவிக்கப்பட்டிருந்தன. இரண்டு குத்து விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஊதுபத்திகள் புகைந்து கொண்டிருந்தன.

புதுப் பட்டுப் புடவையில் மதுமிதா நின்றிருந்தாள். பட்டு வேஷ்டி சட்டையில் சந்திரசேகர் நின்றிருந்தான். அருகில் சீஃப் டாக்டரும் சாரியும். சந்திரசேகரின் நண்பர்களில் ஒருவன் கழுத்தில் கேமிராவைத் தொங்கவிட்டிருந்தான். தோளில் சிறிய கையடக்க வீடியோ கேமிராவைத் தாங்கி அவர்களை கவர் செய்து கொண்டிருந்தான்.

சாரி தன் வாட்சில் பார்த்துவிட்டு, ''தம்பி முகூர்த்த நேரம் வந்துடுச்சு'' என்றார். தனியாக வைக்கப்பட்டிருந்த ஒரு மாலையை எடுத்துக் கொடுக்க அதை சந்திரசேகர் மதுமிதாவுக்கு அணிவித்தான். மதுமிதாவிடம் தரப்பட்ட மாலையை சந்திரசேகருக்கு அணிவித்தாள்.

சாரி எடுத்துத் தந்த தாலியை டேப்ரெக்கார்டரில் நாதஸ்வரம் முழங்க சந்திரசேகர் மதுமிதாவுக்குக் கட்டினான். சாரியும் டாக்டரும் வீடியோ கிராஃபரும் கைதட்டினார்கள்.

''கங்கிராஜுலேஷன்ஸ் மதுமிதா'' என்றார் டாக்டர். சந்திசேகரின் கையைப் பற்றிக் குலுக்கி வாழ்த்து சொன்னார். ''இத்தனை சிம்பிளான ஒரு கல்யாணத்தை என் அனுபவத்தில இன்னைக்குத்தான் பார்க்கறேன். நல்லா இருங்க'' என்றார்.

அந்த அறையிலிருந்த டெலிபோன் ஒலித்தது.

## 32

ஒலித்த ஃபோனை டாக்டர் எடுத்துக் கேட்டுவிட்டு ''மதுமிதா உங்க அம்மா பேசறாங்க'' என்று ரிசீவரை அவளிடம் நீட்டினார்.



வாங்கி ''ஹலோ'' என்றாள்.

''என்ன மதுமிதா உன்னை எப்போ டிஸ்சார்ஜ் செய்யறதா டாக்டர் சொன்னார்?'' என்றாள் எதிர்முனையில் துர்கா.

''என்ன விஷயம்?''

''உன் பக்கத்திலதான் இருக்கக் கூடாதுன்னுட்டே. இதுகூட விசாரிக்கக் கூடாதா? டிஸ்சார்ஜ் பண்றதுன்னா ஹாஸ்பிடல் பில் கட்டணும். அதுக்கான ஏற்பாடுகள் எல்லாம் நான் செய்ய வேணாமா?''

''அதைப் பத்தி எல்லாம் நீ ஏம்மா கவலைப்படறே? நான் பார்த்துக்கறேன். ஞாயித்துக்கிழமை காலையில ஃபிசியோதெரபிஸ்ட் வர்றார். அவர் சில எக்ஸர்சைஸ் எல்லாம் சொல்லித் தரப்போறார். மத்தியானம் என்னை டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. கார் மட்டும் அனுப்பி வை. போதும்''

''சரி! அப்புறம் ஒரு விஷயம்''

''கோவிந்தராஜ் ஃபோன் செஞ்சார்''

''என்னவாம்?''

''திங்கள்கிழமைலேர்ந்து டப்பிங் தியேட்டர் புக் பண்ணிரலாமான்னு கேட்டார். மூணு தடவை ரிலீஸ் தேதி தள்ளி வெச்சிட்டாங்களாம். டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் எல்லாம் கொதிச்சுப் போயிருக்காங்களாம். என்ன சொல்றே?''

''இன்னும் பதினைஞ்சு நாளைக்கு நான் ரெஸ்ட் எடுத்தாகணும்''

''காலுக்குத்தானே ரெஸ்ட்? தொண்டைக்கு என்ன?''

''நான் கோவிந்தராஜ்கிட்டே நேரடியா ஃபோன்ல பேசிக்கிறேன். ஃபோனை வெச்சுடு''

தொடர்பைத் துண்டித்தாள் மதுமிதா.

டாக்டரும், சாரியும் மீண்டும் வாழ்த்து சொல்லிவிட்டு அறையை விட்டு விலக, வீடியோ எடுத்த நண்பனும் கேபிளைச் சுருட்டிக்கொண்டு சென்றான்.

மதுமிதா அருகில் வந்தான் சந்திரசேகர்.

அவனையே கண்கலங்க பார்த்த அவளை தோளோடு சாய்த்துக் கொண்டு, ''எதுக்குக் கலங்கறே?'' என்றான்.

''சந்தோஷம் சந்துரு. என்மேல உங்களுக்கு இருக்கற அழுத்தமான அசைக்க முடியாத அன்பை நினைச்சுப் பார்க்கிறப்ப இவ்வளவு அன்புக்கு நான் தகுதி உள்ளவ ளான்னு சுய இரக்கம் ஏற்படுது சந்துரு''

''அசடு மாதிரி ஏதாச்சும் உளறிக்கிட்டு இருக்காதே. உன் விருப்பப்படி கல்யாணம் இங்கேயே நடந்து முடிஞ் சிடுச்சி. திருப்திதானே!''

''ஊரறிய பண்ணிக்க முடியாமல் போச்சேன்னு ஒரு பக்கம் வருத்தம் இருக்கத்தான் செய்யுது சந்துரு''

''அதான் ஊரறிய வரவேற்பு கொடுக்கபோறோமே?''

''சந்துரு, என் வாழ்க்கையில கல்யாணம்னு ஒண்ணு இருக்குமான்னு எனக்கு நம்பிக்கையே இல்லை. உங்களை சந்திக்கிற வரைக்கும்! இப்ப என் மனசுல கொப்புளிக்கிற ஃபீலிங்கை என்னால வார்த்தையாக்க முடியலை சந்துரு. இந்த நிமிஷம் நீங்க என்னை செத்துப் போகச் சொன்னாக் கூட சந்தோஷமா செத்துப் போவேன்'' என்றாள் குரல் இடற...

''என்ன பேச்சு இதெல்லாம்? டோன்ட் பீ ஸில்லி டு ஸே! நடிகைன்ற பட்டம் உனக்குப் போர்த்தப்பட்ட ஒரு சால்வை மதுமிதா. நான் ஒருநாள்கூட உன்னை நடிகையா பார்த்ததில்லை. மதுமிதாங்கற ஒரு பொண்ணா பார்த்



தேன். ஒரு ஆத்மாவாப் பார்த்தேன். அதனாலதான் என்னால உன்னை ஆழமா நேசிக்க முடிஞ்சுது''

சந்திரசேகர் அவள் நெற்றியில் முத்தமிட்டு அணைத்துக்கொண்டான்.

''ஓ.கே. நடுவில ஒருநாள்தான் இருக்கு. நான் ண்டே காலைல எங்க வீட்ல நடக்கப்போற பிரஸ் மீட் க்கான ஏற்பாடுகளை பண்ணிடறேன். ரிசப்ஷனுக்கு த்தனை பேருக்கும் டெலிஃபோன்லயே அழைப்பு காடுக்கப் போறதா சொன்னே. எப்போ செய்யப் போறே?''

''நாளைக்கு ஈவினிங்லேர்ந்து ஃபோன் பண்ண ஆரம் ச்சிடறேன்!''

''ரைட்டு, நான் வரட்டுமா மை டியர் மனைவியே''

புன்னகைத்தாள் மதுமிதா.

ஃ ஃ ஃ

றுநாள். சனிக்கிழமை.

இரவு ஏழு மணி.

மகாபலிபுரம் செல்லும் சாலையில் இருந்த ஒரு இடிந்த ட்டிடத்தின் வாசலில் ஒரு காரில் சாய்ந்து நின்று கொண் ருந்தான் மைக்கேல் அல்ஃபோன்ஸா.

அவன் எதிரே இரண்டு தடியர்கள் நின்றிருந்தார்கள்.

''நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா?''

''இருக்கு தலைவா''

''அந்த சந்திரசேகர் மேல ஒரு சின்ன கீறல்கூட ழாம இங்கே கொண்டாந்துடுங்க. நான் இங்கேயே வயிட் பண்றேன்.''

''சரி, தலைவா''

''அவனை அவன் கார்லயே அழைச்சுட்டு வரணும். ரிஞ்சுதா?''

''புரிஞ்சுது''

''உங்களை யாரும் பார்த்திடக்கூடாது. எச்சரிக்கையா நடந்துக்கங்க'' என்ற அல்ஃபோன்ஸா தன் வாட்சைப் பார்த்துவிட்டு, ''நீங்க இப்ப புறப்பட்டா சரியா இருக்கும். போங்க'' என்றான்.

இரண்டு தடியர்களும் ஒரு மோட்டார் பைக்கில் தடதடவென்று புறப்பட்டுச் சென்று ஒளிப்புள்ளியாகி மறைந்தார்கள்.

அப்ஃபோன்ஸா காருக்குள் சாய்ந்தமர்ந்து டேப்பைப் போட்டுக் கொண்டு கண்களை மூடிக்கொண்டான்.

ஃ ஃ ஃ

மதுமிதா முதலில் பரணிக்கு ஃபோன் செய்தாள்.

''ஹலோ பரணி சார்! நான் மதுமிதா பேசறேன்''

''சொல்லும்மா! எப்படி இருக்கே?''

''எண்பது பர்செண்ட் சரியாகிட்டேன். எக்ஸர்சைஸ் பண்ணச்சொல்லியிருக்காங்க. இன்னும் ரெண்டு வாரத்தில் முழுக்க குணமாகிவிடுவேன்.''

''வெரிகுட். எப்போ டிஸ்சார்ஜ்''

''ஸண்டே. அப்புறம் சார். நீங்க என்னை வாழ்த்தணும்''

''என் வாழ்த்து உனக்கு என்னைக்கும் உண்டு. என்ன விஷயம் சொல்லும்மா''

''நானும், சந்திரசேகரும் நேத்து கல்யாணம் செய்துகிட்டோம்''

''அப்படியா? கங்கிராஜுலேஷன்ஸ்! என்னோட ஃபார்ம் ஹவுஸ்ல வெச்சி பண்ணிக்கிறதா இருந்தீங்களே. என்ன அவ்வளவு அர்ஜெண்ட்?''



''அம்மாவோட தொந்தரவுதான். விபரமா ஒருநாள் சொல்றேன். நேத்து இங்க ஆஸ்பத்திரிலயே பண்ணிக்கிட்டோம்.''

''வெரிகுட்' எந்த பத்திரிகையிலயும் நியூஸ் பார்க்கலையே''

''நாங்க வேணும்னுதான் யாருக்கும் தெரிவிக்கலை. நாளைக்குக் காலைல பிரஸ் மீட் ஏற்பாடு பண்ணியிருக்கேன். அப்போ ஃபோட்டோஸ் கொடுத்து அறிவிச்சிடலாம்னு இருக்கோம்''

''அதான் நல்லது''

''ஈவினிங் அம்பாஸிடர் பல்லவால ஒரு சின்ன ரிசப்ஷன் சார். லிமிட்டட் அன்ட் செலக்டட் கெஸ்ட்ஸ்! நீங்க கண்டிப்பா வரணும் சார்''

''ஷ்யூர்! கண்டிப்பா வர்றேன். அப்புறம்? ஃபியூச்சர் ப்ளான் என்ன?''

''இனிமேதான் பொறுமையா ப்ளான் பண்ணணும் சார். நீ எது வேணாலும் செய்யின்னு எனக்கு முழுச்சுதந்திரம் கொடுத்துட்டார் சந்துரு. இப்ப நடிச்சிக்கிட்டிருக்கிற ரெண்டு படத்தையும் முடிச்சிக் கொடுத்துடுவேன். இனி நடிக்கப் போறதில்லை. இதையும் நாளைக்கு பிரஸ் மீட்ல சொல்லப் போறேன்''

''இண்டஸ்ட்ரிக்கு பெரிய நஷ்டம் மதுமிதா''

''என்ன சார் பண்றது? வெறும் மதுமிதாவா வாழ ஆசைப்படறேன்!''

''வெல். ஆல் தி பெஸ்ட்! எப்போ என்ன உதவி வேணும்னாலும் என்னை நீ தயங்காம கேக்கலாம். நாளைக்கு ரிசப்ஷன்ல மீட் பண்றேன்.''

''தேங்க் யூ சார்''

ஃபோனை வைத்த மதுமிதா அடுத்து வரிசையாக நடிகர்கள், நடிகைகள், தயாரிப்பாளர்கள், பத்திரி யாளர்கள் என்று ஒவ்வொருத்தராக அழைத்து ரிசப் செய்தி சொல்லத் துவங்கினாள்.

ஃ ஃ ஃ

வீட்டிலே சிகரெட் பிடித்தபடி ஈஸிசேரில்சாய்ந்து திருந்த சந்திரசேகர் டெலிஃபோன் அடித்த உட எடுத்தான்.

''ஹலோ சந்திரசேகர் ஹியர்''

''சார் உங்க கம்பெனி லாரி ஒண்ணு நீலாங் பக்கத்துல கவுந்து கிடக்குது சார். மரம் ஏத்தின சார். மரம் எல்லாம் சிதறி கிடக்கு டிரைவர் போயிட்டான். உடனே ஸ்பாட்டுக்கு வாங்க.

''நீங்க யாரு சார்?''

''நான் இந்த ஏரியால குடி இருக்கிறவன். சில மரத்தை எல்லாம் திருடப் பார்த்தாங்க! நான் அவ விரட்டிவிட்டுட்டு லாரிக்குப் பக்கத்திலேயே இருக்கேன். நீங்க உடனே வாங்க''

''இதோ உடனே புறப்பட்டுட்டேன்.''

சந்திரசேகர் பதட்டமாகப் புறப்பட்டான்.

இரண்டாவது நிமிடம் தன் காரில் இருந்தான். நீலாங்கரை நோக்கி படுவேகமாகச் செலுத்தினான்.

அரை மணியில் சந்திரசேகர் நீலாங்கரை வந் சாலை ஓரத்தில் நின்ற ஒருவன் கையசைத்து நிறுத்தச் சொன்னான்.



காரை நிறுத்தியதும் அவன் முன் கதவு திறந்து ஏறிக் கொண்டு ''நான்தான் உங்களுக்கு ஃபோன் செஞ்சேன், லாரி எங்க கவுந்திருக்குன்னு காட்றேன் நேரா ஓட்டுங்க'' என்றான்.

நேரா ஓட்டத் துவங்கிய சந்திரசேகர் அவனுடைய தோற்றம் பார்த்து லேசாக சந்தேகம் எழ...

''உங்க பேர் என்ன சொன்னீங்க?''

''அதெல்லாம் எதுக்கு? சொல்ற இடத்துக்கு ஓட்டுப்பா''

மரியாதைக் குறைந்ததில் திடுக்கிட்டுப் பார்த்தான். இடுப்பிலிருந்து பளபளக்கும் கத்தியை எடுத்தான் அவன்.

''கேள்வி எதுவும் கேட்காம நான் சொல்ற இடத்துக்கு ஓட்டு பிரதர்''

''நீ யாரு? எதுக்காக என்னைக் கூட்டிகிட்டுப் போறே?''

''கேள்வி கேக்காதேன்னு சொன்னேன்ல? உன் கேள்வி எல்லாத்துக்கும் எங்க தலைவர் பதில் சொல்லு வாரு. கம்முன்னு ஓட்டு.''

பதட்டத்தோடு காரை ஓட்டினான் சந்திரசேகர்.

ஃ ஃ ஃ

டெலிஃபோன் ஒலிக்க துர்கா எடுத்தாள்.

''ஹலோ துர்கா பேசறேன்''

''நான் புரொடக்ஷன் மேனேஜர் கோவிந்தராஜ் பேசறேன். காலைல கூட பேசினேன். நீங்க அப்பக்கூட விஷயம் சொல்லாம மறைச்சுட்டீங்களே...''

''எதைச் சொல்றீங்க?''

''நாளைக்கு ஈவினிங் மதுமிதாவோட கல்யாண ரிசப்ஷன் நடக்கப் போறதைத்தான் சொல்றேன். நீங்க சொல்லலைன்னா என்ன, மதுமிதா ஃபோன்ல கூப்பிட்டு இன்வைட் பண்ணாங்க''

''என்ன சொல்றீங்க?''

''புரியாத மாதிரி பேசறீங்களே! நேத்தைக்கு ஆஸ்பத்திரிலேயே மதுமிதா ரகசிய கல்யாணம் பண்ணிகிட்டாங்களாமே!'' என்றான் கோவிராஜ் எதிர்முனையில்.

துர்காவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் ரிசீவர் நழுவியது.

# 33

முகம் வெளிறிப் போய் பொம்மை மாதிரி அமர்ந்திருந்த துர்காவின் தோளைத் தொட்டார் ஈஸ்வர்.

''என்ன துர்கா? ஃபோன்ல யாரு?''

''புரொடக்ஷன் மேனேஜர் கோவிந்தராஜ் ஃபோன் செஞ்சாங்க''

''என்னவாம்?''

''அவனுக்கு மதுமிதா ஃபோன் செஞ்சாளாம். நேத்து ஆஸ்பத்திரிலியே அவளும் சந்திரசேகரும் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டதாகவும் நாளைக்கு சாயங்காலம் ரிசப்ஷன் இருக்கிறதாவும் சொல்லிருக்கா!''

''இதென்ன புதுக்குழப்பம்? அவ நாளைக்குக் காலைல தான் கல்யாணம் பண்ணிக்கப் போறதாத்தானே நமக்கு தகவல் வந்தது?''

''ஆமாம். அதான் எனக்கு ஒண்ணும் புரியலை''



''கோவிந்தராஜ் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நமக்கு தகவல் தந்த அந்த வார்டு பாய் வெள்ளிக்கிழமைன்னு சொல்றதுக்கு பதிலா ஞாயிற்றுக்கிழமைன்னு சொல்லிருப்பானோ?''

''அதாங்க என்னோட பயமும்''

''அல்ஃபோன்ஸா இன்னைக்கு ராத்திரிதானே கொல்லப் போறான்?''

''ஆமாம். வாங்க...உடனே நான் மதுமிதாவைப் பார்க்கணும். எனக்கு பதறுதுங்க''

துர்காவும் ஈஸ்வரும் உடனே புறப்பட்டார்கள். ஆஸ்பத்திரிக்கு வந்து மதுமிதாவின் அறைக்குள் புயலெனப் புகுந்தபோது அவள் ஃபோனில் ''கண்டிப்பா வந்துடுங்க'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் கழுத்தில் புத்தம் புதிய தாலியைப் பார்த்ததுமே துர்காவுக்கு மயக்கம் வருவது போலிருந்தது.

ஃபோனை வைத்த மதுமிதா ''வாம்மா. என்ன இவ்வளவு அவசரமா புறப்பட்டு வந்திருக்கே?'' என்றாள்.

துர்கா அருகில் வந்து மதுமிதாவின் கழுத்தில் தொங்கின தாலிக் கயிற்றைக் கையில் எடுத்துக் காட்டி ''என்னடி இது?'' என்றாள்.

''தெரியலை? தாலி! உன்னோட ஆசீர்வாதத்தோட நடக்க வேண்டிய கல்யாணம் உனக்குச் சொல்லாமலேயே நடந்துடுச்சி. என்ன பண்றது? நீதான் எனக்கு கல்யாணம் நடக்கக் கூடாதுன்னு வரிஞ்சு கட்டிக்கிட்டு சதி பண்ணிட்டிருந்தியே...அப்புறம் உனக்கு எப்படி தகவல் சொல்ல முடியும்? நீ என்னோட சந்திரசேகர் மனசை கலைக்கப் போராடினே. ஆனா அவர் என்மேல் வைச்சிருந்தது புனிதமான அன்புங்கறதை நேத்து எனக்கு தாலி கட்டி நிரூபிச்சுட்டார்.''

துர்கா வெறித்துப் பார்த்தாள்.

''அதிர்ச்சியா இருக்கா? நாளைக்குக் காலைல பிரம மீட். சாயங்காலம் அம்பாஸிடர் பல்லவா ஹோட்டலில் சிம்ப்ளா ரிசப்ஷன். இப்பக்கூட ஒண்ணும் மோசமில்லை. உனக்கு மனசிருந்தா நீ ரிசப்ஷன்ல கலந்துக்கலாம்''

துர்கா வியர்த்துப்போய் தொப்பென்று நாற்காலியில் அமர்ந்தாள்.

''என்னம்மா மயக்கமா வருதா? டாக்டரை கூப்புட டுமா'''

''இல்லை, முதல்ல அந்த சந்திரசேகரை ஃபோன்ல கூப்பிடு''

''எதுக்கு?''

''அவர் எந்த ஆபத்தும் இல்லாம இருக்காரான்னு முதல்ல தெரிஞ்சிக்கிடணும் மது'' என்றாள் தயக்கத் துடன்.

''என்ன சொல்றே?''

''விபரம் அப்புறம் சொல்றேன். முதல்ல ஃபோன் பண்ணிப்பாரு!''

மதுமிதாவை லேசாக ஒரு பதட்டம் தொற்றிக் கொள்ள டெலிஃபோன் எடுத்து அவன் வீட்டு எண்ணை அழைத்தாள். மணி அடித்துக் கொண்டே இருந்தது.

''என்னாச்சு?''

''பெல் அடிச்சுக்கிட்டே இருக்கு!''

தன் தலையில் இரண்டு கைகளையும் வைத்துக் கொண்ட துர்கா, ''நான் ஒரு பெரிய தப்பு பண்ணிட் டேன் மதுமிதா. நேத்தே நீங்க ரெண்டுபேரும் கல்யாணம்



செய்துகிட்டது தெரியாம முட்டாள்தனமா ஆத்திரத்தில் ஒரு முடிவு எடுத்துட்டேன். மதுமிதா''

''என்னம்மா சொல்றே? சீக்கிரம் சொல்லும்மா. எனக்குப் பதறுது?',

''வந்து...வந்து...நீங்க ரெண்டுபேரும் ஞாயிற்றுக் கிழமைதான் இங்க ரகசியக் கல்யாணம் பண்ணிக்கப் போறதா எனக்குத் தகவல் வந்திச்சு. இந்தக் கல்யாணம் எப்படியும் நடந்துடக் கூடாதுங்கறதில நான் ரொம்பத் தீவிரமா இருந்தேன். அதனால...''

''அதனால.''

''இன்னைக்கு ராத்திரி அந்த சந்திரசேகரை கொலை செய்யச் சொல்லி மைக்கேல் அல்ஃபோன்ஸாங்கிற ஆளடிக்கு கூலி பேசி ஏற்பாடு செஞ்சிருந்தேண்டி''

மதுமிதாவின் முகத்தில் ரத்தம் பாய்ந்தது.

''அடிப்பாவி! நீ ஒரு மனுஷியா?''

''இத பாரு! இப்ப நீ என்மேல ஆத்திரப்படறதில பிரயோஜனம் இல்லை. நம்ம சண்டையை அப்புறம் வெச்சிக்கலாம். கல்யாணம் நடந்துடக் கூடாதுன்னுதான் நெனக்கெட்டேன். நடந்த கல்யாணத்தை நாசம் பண்ணி உன்னை விதவை ஆக்கற அளவுக்கு நான் அரக்கி இல்லை. அப்படி நான் நினைச்சிருந்தா சத்தம் போடாம வீட்லயே இருந்திருப்பேன். எப்படியோ உனக்கு கல்யாணம் ஆயிடுச்சி. நீ சுமங்கலியா இருக்கணும் மதுமிதா! அந்த சந்திரசேகரை காப்பாத்தியாகணும். அதுக்கு என்ன வழின்னுதான் இப்ப யோசிக்கணும். இதுவரைக்கும் எந்த விபரீதமும் நடந்திருக்கக்கூடாதுன்னு முதல்ல ஆண்ட வனை வேண்டிக்கோ!'' என்றாள் துர்கா.

ஃ ஃ ஃ

வியர்க்க விறுவிறுக்க காரை ஓட்டிக் கொண்டிருந்தா சந்திரசேகர். அருகில் அந்த தடியன் கையில் கத்தி உட்கார்ந்து விசிலடித்துக் கொண்டிருந்தான்.

ஏதோ விபரீதம் என்பதை சந்திரசேகரால் உண முடிந்தது.

நிச்சயமாக இது மதுமிதாவின் அம்மா துர்கா இன்னொரு புதிய சதி என்பதை அவனால் புரிந்துகொ முடிந்தது.

இந்த ஆபத்தில் இருந்து எப்படியாவது விடுவித் கொள்ளவேண்டும். எங்கோ அழைத்துச் செல்கிறா யாரோ இவன் தலைவன்; எனக்கு பதில் சொல்வா என்கிறான்.

இந்த தனிநபரிடமிருந்து சாமர்த்தியமாக தப்பித்தா தான் உண்டு. ஒரு குரூப்பிடம் மாட்டிக் கொண்டா பிறகு அவர்கள் கட்டுப்பாட்டில்தான் சிக்கியாக வேண்

என்ன செய்யலாம்? பேசிப் பார்க்கலாமா?

''இத பாரு, இந்தமாதிரி என்னைக் கடத்திட்டு வா சொல்லி உனக்குபொறுப்ப ஒப்படைச்சது மதுமிதாவோ அம்மா துர்காதானே?'' என்றான் காரை ஓட்டி சந்திரசேகர்.

''அதெல்லாம் உனக்கு எதுக்கு?''

''வெளிப்படையாக ஒரு பேரம் பேசத்தான் கே றேன்''

''பேரமா?''

''ஆமாம். நீ என்னை எதுக்காக கடத்திட் போறேன்னு தெரியாது. எதுக்காக இருந்தாலும் பின்ன யில் கண்டிப்பா அந்த துர்காவோட பணம் விளையா யிருக்குன்னு புரியுது. அவங்க எவ்வளவு பணம், இ



வேலைக்குத் தந்தாங்களோ, அதைவிட அதிகமா நான் தர்றேன். எனக்கு பணத்துக்குப் பஞ்சமில்லை''

''எதுக்கு?''

''என்னை சுதந்தரமா விட்டுட்டு நீ விலகறதுக்கு''

''என் தலைவரு எனக்குக் கொடுத்த வேலையை நான் சரியா செய்யலைன்னாலே, என் தலை தப்பிக்காது. அவருக்கு எதிரா உன்கிட்ட காசு வாங்கிட்டு விட்டுட்டா... என் தலை மட்டும் இல்லை, சாம்பல் கூட என் குடும்பத் துக்கு கிடைக்காது.''

''யாரு உன் தலைவர்?''

''இப்பத்தான் நீ பார்க்கப் போறியே''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே 'டமார்' என்று காரின் பின் டயர் வெடித்தது. கார் கோணல் மாணலாக ஓடி ஓரமாக நின்றது.

இறங்கிப் பார்த்தார்கள்.

''டயர் பர்ஸ்ட் ஆயிடுச்சு'' என்றான் சந்திரசேகர்.

''ஸ்டெப்னி இருக்குதில்ல?''

''இருக்கு''

''உனக்கு டயர் மாத்தத் தெரியுமில்ல?''

''தெரியும்''

''சீக்கிரம் மளமளன்னு மாத்து. தலைவரு வெய்ட் பண்ணிட்டு இருப்பாரு! சீக்கிரம்!''

அவன் டார்ச் லைட்டைப் பிடித்துக்கொள்ள, ஜாக்கி, டூல்ஸ், ஸ்டெப்னி எல்லாம் எடுத்து வைத்தான் சந்திர சேகர்.

ஜாக்கி வைத்து பர்ஸ்ட் ஆன சக்கரத்தைக் கழற்றி னான். அந்த தடியன் ஏதாவது ஒரு விநாடி அசந்தால்,

அவனைத் தாக்கிவிட்டு ஓட்டம் பிடித்து விடலாமா என்று சிந்தனை ஓடியது.

அவனோ ஒரு கையில் விரித்த கத்தியும், மறுகையில் டார்ச் லைட்டுமாய் இவன் மேல் முழுகவனத்தையும் வைத்துக்கொண்டு நின்றிருந்தான்.

ஸ்டெப்னி சக்கரத்தைப் பொருத்தினான். ஒவ்வொரு நட்டாக டைட் செய்யத் துவங்கினான். கப் மாட்டினான். ஜாக்கியை விடுவித்தான்.

டூல்சை அதன் பையில் பொறுக்கிப் போட்டான். சக்கரத்தை டிக்கியில் வைத்தான். ஜாக்கியை எடுத்தும் வைத்தான். ஜாக்கியை உயர்த்தும் நீள ராடை கடைசியாக கையில் எடுத்த சந்திரசேகர் சட்டென்று அதனால் கத்தி பிடித்த அவன் கையில் ஓங்கி அடிக்க...கத்தி கீழே நழுவி விழ...அவன் வலி பொறுக்க முடியாமல் அலறி சற்றே தடுமாறி விலக...

அந்த விநாடியைப் பயன்படுத்திக் கொண்ட சந்திரசேகர், மீண்டும் அந்த ராடால் அவனது தோள்பட்டையில் தாக்கினான்.

ஆனால், இதை எதிர்பார்த்தவன் போல அவன் தடுத்துப்பிடித்துப் பிடுங்கியதில் பிடி நழுவி, ராடு அவன் கைக்குச் சென்று விட்டது.

அவன் ஆவேசத்தோடு ராடைத் தூக்கி தாக்க வந்து அதே விநாடியில் குனிந்து கத்தியையும் கையில் எடுத்துக் கொண்டு விட்டான்.

''இதப்பாரு, நீ அடிச்ச அடிக்கு உன் உடம்புல ஒரு எலும்பு உருப்படியா இல்லாம என்னால பின்னி எடுத்துட முடியும். ஆனா என் தலைவர் உன்மேல ஒரு கீறல் கூட விழாம கூட்டிட்டு வரச் சொன்னார். அவர் வார்த்தைக்கு மரியாதை கொடுத்து பதிலுக்குத் தாக்காம விட்டேன். இந்த வீர சாகச விளையாட்டெல்லாம் வேணாம். மரியாதையாக கார்ல உக்காரு! ம்!''



அவனுடைய அதிகார மிரட்டலுக்குக் கட்டுப்படுவதைத் தவிர வேறு வழியில்லாததால் ஏமாற்றத்தை மறைத்துக்கொண்டு காரில் அமர்ந்தான் சந்திரசேகர்.

அவனும் அமர்ந்து, ''ம்! ஸ்டார்ட் செய்! வந்துட்டோம். பக்கம்தான். இன்னும் அஞ்சு நிமிஷம்தான் ஓட்டு!'' என்றான்.

கார் ஓடத் தொடங்கியது.

ஃ ஃ ஃ

ஃபோனை வைத்த துர்கா, ''மைக்கேல் அல்ஃபோன்ஸா லாட்ஜ் ரூம்ல இல்லை. அவன் தன் திட்டத்தை எங்கே வெச்சி செயல்படுத்தறதா பிளான் செஞ்சிருக்கான்னு சத்தியமா எனக்குத் தெரியாது மதுமிதா. இப்ப என்ன செய்யறது?'' என்று கைகளைப் பிசைந்தாள்.

மதுமிதாவுக்கு முழுக்க வியர்த்து விட்டது.

துர்காவைப் பார்க்கப் பார்க்க கோபம் தலைக்கு ஏறியது.

''என் சந்துருவுக்கு மட்டும் ஏதாவது விபரீதமாச் சின்னா, அப்புறம் நான் மனுஷியாவே இருக்க மாட்டேன்'' என்று கத்தினாள்.

''மதுமிதா கொஞ்சம் அமைதியா இரு. தப்பு நடந்து போச்சு. இப்ப என்ன செய்யலாம்னு மட்டும்தான் சிந்திக்கணும்.'' என்றாள் துர்கா.

''அந்த மைக்கேல் அல்ஃபோன்ஸாவோட திட்டம் என்னன்னும் தெரியாதுன்னு சொல்றியே''

''நான் அதெல்லாம் கேட்டுக்கலை. ஞாயித்துக் கிழமை அவங்க கல்யாணம் பண்ணிக்கிறதா இருக்காங்க. சனிக்கிழமை ராத்திரி அவனைத் தீர்த்துடுன்னு மட்டும் தான் சொன்னேன்.''

''கொலை வரைக்கும் சிந்திச்சிருக்கியே பாவி! எதுக் காக உனக்கு இப்படி ஒரு ரத்த வெறி?''

''மதுமிதா! மறுபடியும் சந்திரசேகர் வீட்டுக்கு ஃபோன் போட்டுப் பாரு. அவர் வேற எங்கேயாவது போயிருக்கலாம். இப்ப திரும்பி பத்திரமா வந்துகூட இருக்கலாம்.'' என்றார் ஈஸ்வர்.

அவரை முறைத்துவிட்டு மறுபடியும் சந்திரசேகரின் வீட்டுக்கு டயல் செய்தாள் மதுமிதா.

மணி அடித்துக் கொண்டேயிருக்க மதுமிதாவுக்கு அழுகை பொங்கியது. விரக்தியுடன் ரிசீவரை வைத்தாள்.

''சந்திரசேகர் வீட்டுக்குப் பக்கத்திலயோ எதிர்லயோ உள்ள ஏதாச்சும் வீட்டு ஃபோன் நம்பர் உனக்குத் தெரியுமா?''

''வீட்டு நம்பர் எதுவும் தெரியாது. ஆனா அவர் வீட்டுக்கு எதிர்ல ஒரு மெடிக்கல் கடை இருக்கு''

''அந்த நம்பர் தெரியுமா?''

''தெரியாது''

''கடை பேரு என்ன?''

மதுமிதா யோசித்துப் பார்த்து, ''ராதா மெடிக் கல்ஸ்'' என்றாள்.



ஈஸ்வர் உடனே ஹாஸ்பிடலின் ரிசப்ஷனுக்கு ஓடிச் சென்று டெலிஃபோன் டைரக்டரி எடுத்து வந்து, புரட்டி ராதா மெடிக்கல்ஸ்ஸின் நம்பரைப் பிடித்தார். அவரே டயல் செய்தார்.

''ஹலோ ராதா மெடிக்கல்ஸ்''

''சார். உங்க கடைக்கு எதிர்ல டிம்பர் பிஸினெஸ் பண்ற சந்திரசேகர் வீடு இருக்கு. அவருக்கு முக்கியமா அவசரமா ஒரு தகவல் சொல்லணும். அவரோட ஃபோன் அடிச்சுக்கிட்டே இருக்கு. அவர் வீடு திறந்திருக்குதா, பூட்டியிருக்குதான்னு கொஞ்சம் பார்த்துச் சொல்ல முடியுமா? ப்ளீஸ்''

''ஒரு நிமிஷம் சார்''

சில வினாடிகளுக்குப் பிறகு

''வீடு பூட்டியிருக்கு சார்''

''வாசல்ல அவரோட கார் நிக்கிதா சார்?''

''இல்லைங்க. கொஞ்சம் நேரம் முன்னாடி அவர் கார்ல புறப்பட்டுப் போனதைப் பார்த்ததா நம்ம கடைப் பையன் சொல்றான்.''

''தேங்ஸ்'' என்று வைத்த ஈஸ்வர், ''மதுமிதா, சந்திர சேகர் கார் எடுத்துக்கிட்டு எங்கயோ போயிருக்கார். அவரோட கார் நம்பர் தெரியுமா உனக்கு?''

''தெரியும்... **T.N. 06.E.1525**''

''ஒண்ணு செய்யலாமா? அஸிஸ்டெண்ட் கமிஷனர் ராஜேஸ்வரன் உனக்கு நல்ல பழக்கமாச்சே. அவர்கிட்ட சொல்லி இந்தக்காரை உடனடியா மடக்கி சந்திரசேகருக்கு பாதுகாப்புத் தரச் சொல்லலாமா?''

துர்கா பதறி ''என்ன பேசறீங்க? போலீஸ்ல தகவல் சொன்னா விபரம் கேப்பாங்க. அப்புறம் என்மேல நடவடிக்கை எடுப்பாங்க!'' என்றாள்.

''எனக்கு என் சந்துருவோட உயிர்தான் முக்கியம்.'' என்ற மதுமிதா, அவளே உதவி கமிஷனருக்கு முயற்சி செய்தாள்.

''ஹலோ ராஜேஸ்வரன் ஹியர்''

''குட் ஈவினிங் சார். நான் ஆர்ட்டிஸ்ட் மதுமிதா பேசறேன்.''

''ஹலோ! எப்படி இருக்கீங்க?''

''நல்லா இருக்கேன் சார்''

''என்ன விஷயம் சொல்லுங்க.''

''ஒரு சின்ன உதவி சார்! சந்திரசேகர் என் ஹஸ்பெண்ட் நேத்துதான் எனக்கும் அவருக்கும்கல்யாணம் ஆச்சு, இப்ப அவரைக் காணோம். அவரைக் கொலை செய்யறதுக்கு ஒரு கும்பல் திட்டம் போட்டிருக்கு சார். அவர் அவர் கார் நம்பர் சொல்றேன்... குறிச்சுகோங்க... அவர் உயிருக்கு ஆபத்துன்னு அவருக்குத் தெரியாது சார். இப்ப அவர் எங்கே போயிருக்காருன்னு தெரியலை. அவரோட காரை லொகேட் பண்ணி அவரை கண்டுபிடிச்சி, முதல் காரியமா அவருக்கு பாதுகாப்பு கொடுக்கணும் சார். ப்ளீஸ் சார்...''

''இருங்க, பதறாதீங்க. மேக்ஸிமம் முயற்சி பண்றேன். முதல்ல கார் நம்பர் சொல்லுங்க''

ராஜேஸ்வரன் நம்பர் குறித்துக் கொண்டு, உடனே செயல்படுவதாகச் சொல்லி வைத்தார்.

ஈஸ்வர் கேட்டார். ''ஏன் மதுமிதா சந்திரசேகர்கிட்ட செல்போன் இல்லையா?''

மதுமிதாவின் முகம் பிரகாசமாக மாறியது.

''இருக்கு. பதட்டத்தில எனக்குத் தோணவே இல்லை.''



மதுமிதா உடனே சந்திரசேகர் செல்போனை அழுத்தி னாள்.

ஃ ஃ ஃ

தடியன் விரித்த கத்தியுடன் காரை ஓட்டிக் கொண் டிருந்த சந்திரசேகர் மேல் முழு கவனத்தையும் வைத்து அருகில் அமர்ந்திருந்தான்.

இப்போது காரில் டெஷ்போர்டு மேல் வைக்கப்பட் டிருந்த சந்திரசேகரின் செஃபோன் சங்கீதமாக அழைத்தது

அதை எடுக்கப் போன அவன் கையைத் தடுத்தான் தடியன்.

''ஏதாச்சும் முக்கியமான செய்தியா இருக்கலாம். நான் பேசிடறனே?''

''கூடாது! நீ சாமர்த்தியமான ஆளா இருக்கறே! உன்னோட நிலைமையை நீ ரகசியமா தெரிவிச்சிடுவே''

''அதெல்லாம் எதுவும் பேசலை. என்னன்னு மட்டும் கேட்டுக்கறேன்.''

''கொஞ்சம் இரு. யாருன்னு நான் பேசப் பார்த்துட்டு அவசியம் இருந்தா உன்னைப் பேச அனுமதிக்கிறேன்.''

தடியன் செல்போனை எடுத்தான்.

''ஹலோ'' என்றான்.

''ஹலோ! சந்திரசேகரைப் பேசச் சொல்லுங்க''

''நீங்க யாரு பேறது?''

''மதுமிதா! அவரோட மனைவி! நீங்க யாரு?''

''மனைவியா? நாளைக்குத்தானே கல்யாணமே பண்ணிக்கப் போறீங்க? அதுக்குள்ள மனைவின்னு சொல்றீங்களே.''

''ஹலோ! நீங்க யாரா இருந்தாலும் சரி...தயவு செஞ்சு ஃபோனை வெச்சிடாதீங்க. ப்ளீஸ்...எனக்கும் சந்திரசேகருக்கும், நேத்தே ரகசியமாக் கல்யாணம் நடந்திருச்சி...அவசரப்பட்டு அவரைத் தீர்க்கச் சொல்லி எங்கம்மா சொல்லிட்டாங்க. நீங்க மைக்கேல் அல்ஃபோன்ஸாவா? தயவு செஞ்சு சொல்லுங்க? சந்திரசேகருக்கு ஆபத்து எதுவும் இல்லையே? அவரை எதுவும் செஞ்சிடாதீங்க? என் அம்மா துர்காகூட இதோ பக்கத்திலதான் இருக்காங்க. வேணும்னா அவங்களைப் பேசச் சொல்றேன். சந்திரசேகர் எங்கே? தயவு செஞ்சி அவரைப் பேசச் சொல்லுங்க''

பரபரவென்று கெஞ்சினாள் மதுமிதா.

தடியன் தன் நடுமண்டையில் சொறிந்துகொண்டான்.

''நான் அல்ஃபோன்ஸாவோட ஆளு. இந்த நிமிஷம் உன் சந்திரசேகருக்கு ஒண்ணும் இல்லை. பூஜை எல்லாம் இனிமேலதான். நீ ஃபோனை வெச்சிடு''

தொடர்பைத் துண்டித்து வைத்தான்.

''உனக்கும், மதுமிதாவுக்கும் கல்யாணமாயிடுச்சா?''

''ஆமாம்'' என்றான் சந்திரசேகர்.

''எப்போ?''

''நேத்து?'

''பொய் சொல்றே''

''நிஜமாத்தான்''

இப்போது கார் அந்த இடிபாடுகளுடன் கூடிய கட்டிடத்தின் வாசலில் நின்றது. சந்திரசேகர் இறக்கப்பட்டான்.

அங்கே காத்திருந்த மைக்கேல் அல்ஃபோன்ஸா அருகில் வந்தான்.



''ஏண்டா லேட்டு?''

''வழில கார் டயர் பர்ஸ்ட் ஆயிடுச்சி...ஸ்டெப்னி மாத்திக்கிட்டு வர்றோம் தலைவா. இவர் என்னைத் தூக்கிட்டு, ஹீரோ வேலை செய்யப் பார்த்தாரு. மடக்கிட்டேன். பெண்டு நிமித்திருப்பேன். உங்க வார்த்தைக்குக் கட்டுப்பட்டு பத்திரமா கூட்டிட்டு வந்துட்டேன்.''

அல்ஃபோன்ஸா சந்திரசேகரை முறைத்தான்.

''உனக்கு நடிகை கேக்குதா? விடிஞ்சா கல்யாணமா?''

''கல்யாணம் நேத்தே முடிஞ்சிருச்சி'' என்றான் அமைதியாக சந்திரசேகர்.

''உனக்கு என்ன நடக்கப் போகுதுன்னு புரிஞ்சுக்கிட்டே! தப்பிக்கிறதுக்காக இப்படி ஒரு பொய் சொல்லிப் பாக்கிறியா.''

இப்போது மீண்டும் ஸெல்ஃபோன் ஒலித்தது.

''அந்த ஃபோன்ல என் மனைவி மதுமிதாதான் பேசறா...வேணும்னா நீயே கேட்டுப்பாரு''

புருவங்களைச் சுருக்கிப் பார்த்தான் அல்ஃபோன்ஸா.

''அந்தப் போனை எடுத்துட்டு வாடா''

கொண்டு வரப்பட்ட ஃபோனில், ''ஹலோ'' என்றான்.

''தயவு செஞ்சு மறுபடி ஃபோனை கட் பண்ணிடாதீங்க. நான் மதுமிதா பேசறேன். ஃபோனை மைக்கேல் அல்ஃபோன்ஸாகிட்ட கொடுங்க''

''நான் அல்ஃபோன்ஸாதான் பேசறேன்.''

''மை காட்! இத பாருங்க. உங்களுக்கு கொலை செய்யச் சொல்லி, வேலை கொடுத்த எங்கம்மா துர்கா பக்கத்தில இருக்காங்க. அவங்ககிட்ட பேசுங்க. சந்திரசேகருக்கும் எனக்கும் கல்யாணம் நடந்துருச்சி. அவரை எதுவும் செஞ்சிடாதீங்க. அம்மாகிட்ட பேசுங்க''

அல்ஃபோன்ஸா எரிச்சலுடன் சிகரெட் பற்ற வைத்தான்.

''அல்ஃபோன்ஸா, நான் துர்கா பேசறேன்.'.

''என்னம்மா?''

''சந்திரசேகரை ஒண்ணும் செய்ய வேணாம்.''

எதிரே நிற்கும் சந்திரசேகரைப் பார்த்த அல்ஃபோன்ஸா, ''இதோ பாருங்க! என்னை என்ன உங்கவீட்டு வேலைக்காரன்னு நினைக்கிறீங்களா? எடுத்துக்கிட்ட காரியத்தை பாதியில நிறுத்தற பழக்கம் எனக்குக் கிடையாது. மறுபடி ஃபோன் செய்யாதீங்க!'' என்று வைத்தான்.

இடுப்பிலிருந்து பெல்ட்டை உருவினான் அல்ஃபோன்ஸா.

# 35

''என்ன சொல்றான் அவன்?'' பரபரத்தாள் மதுமிதா.

''லைனைக் கட் பண்ணிட்டான்.'' என்றாள் ஏமாற்றமாக துர்கா.

''என்ன சொன்னான்? அதைச் சொல்லு''

''எடுத்துக்கிட்ட காரியத்தை பாதியில நிறுத்தற பழக்கம் எனக்குக் கிடையாது. மறுபடி ஃபோன் செய்யாதீங்கன்னு சொல்லிட்டு வெச்சிட்டான்.''

மதுமிதாவின் முகத்தில் பீதி படர்ந்தது.

மயக்கம் வந்தது.

''நான் மறுபடி முயற்சி பண்றேன். தைரியமா இரும்மா''

செல்ஃபோனைத் தொடர்பு கொள்ள மீண்டும் முயன்றாள் துர்கா. வியர்வையில் துர்காவின் ஜாக்கெட் நனைந்தது. எதிர்முனையில் ஃபோன் ஒலிக்கத் தொடங்கியது. மைக்கேல் அல்ஃபோன்ஸா அதை எடுக்க வேண்டும். பேச வேண்டும் என்று அவசர அவசரமாக எல்லா தெய்வங்களையும் வேண்டிக் கொள்ளத் துவங்கினாள்.

''ஹலோ!'' என்றான் மைக்கேல் அல்ஃபோன்ஸா!

''நான் துர்காதான் பேசறேன்.''



''உங்களை மறுபடி ஃபோன் செய்ய வேணாம்னு சொன்னேன் இல்லை?''

''தயவு செஞ்சு கட் பண்ணிடாதீங்க. நான் சொல்றதைக் கொஞ்சம் முழுசாக் கேளுங்க''

''என்ன கேக்கணும்?''

''அந்தப் பையனைத் தீர்த்துடச் சொன்னப்போ நிலைமை வேற! இப்ப நிலைமை வேற. எனக்குத் தெரியாம அவங்க ரெண்டு பேரும் ரகசியமா கல்யாணம் பண்ணிக்கிட்டாங்க. இப்ப அவன் என் மகளோட கணவன்! அவனை நீங்க தீர்த்துட்டா என் மக விதவையாயிடுவா! அதை என்னால சகிச்சுக்க முடியாது''

''இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றீங்க?''

''அந்த சந்திரசேகரை எதுவும் செய்ய வேணாம். பத்திரமா அனுப்பி வெச்சிட்டா போதும்.''

''நான் மெனக்கெட்டு திட்டம் போட்டேனே. கொஞ்சம் செலவெல்லாம் செஞ்சிட்டேனே''

''இதோ பாருங்க! ஒரு உயிரை எடுக்கணும்னு நான் உங்களுக்குப் பேசின அதே தொகையை இப்ப அந்த உயிரை நீங்க எதுவும் தொந்தரவு செய்யாம இருக்கறதுக்குத் தர்றேன்.''

''அப்படியா? இதில மாற்றம் இல்லையே?''

''இல்லை. கண்டிப்பாத் தர்றேன்.''

''அப்படின்னா விட்டுர்றேன்.';

''ரொம்ப தேங்க்ஸ்'' என்று பெருமூச்சு விட்டாள் துர்கா. ஃபோனை வைத்துவிட்டு, மதுமிதாவைப் பார்த்தாள்.

''மதுமிதா அவனைத் தீர்க்கறதுக்காகப் பேசின அதே தொகையைக் கொடுத்துடறேன்னு சொன்னதும் சந்திரசேகரை விட்டுடறதாச் சொல்லிட்டான். இப்ப திருப்தி தானே உனக்கு?'' என்றாள்.

மதுமிதா அவளை வெறுமையாகப் பார்த்தாள்.

''இதோ பார் மது நீ என்மேல ஆத்திரப்படறதில அர்த்தமே இல்லை. உனக்கு அவன் கணவனாகறதுக்கு

முன்னாடி நான் அந்த விபரீத யோசனையில இறங் கினேன். உன்னை பெத்தவடி! என்னதான் நீ என்னை எதிரி மாதிரி நினைச்சு தூர வெச்சிப் பழகினாலும் நீ என் ரத்தம்! உன் பொட்டழிக்கிறதுக்கு நினைக்கிற மகாபாவி இல்லை நான். அதே சமயம் கொஞ்சம் யோசிச்சுப்பாரு இப்ப நான் மட்டும் மைக்கேல் அல்ஃபோன்ஸாகிட்டே கெஞ்சிப் பேசி பணம் தர்றதா ஒப்புக்கலைன்னா என்னா ஆகியிருக்கும்? உன் புருஷனை மரணத்தோட விளிம்பு லேர்ந்து காப்பாத்தியிருக்கிறதும் உன் அம்மாதான். உன் பூவுக்கும் பொட்டுக்கும் உயிர் கொடுத்திருக்கிறது நான் தான். அதனால...''

நிறுத்தி அவளைப் பார்த்தாள் தயக்கத்துடன்.

''அதனால?''

''அதனால உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆன விஷயம் ரகசியமாவே இருக்கட்டும். மக்களுக்குத் தெரிய வேணாம். நீங்க ரகசியமாவே குடித்தனம் நடத்துங்க. ஒரு அஞ்சே அஞ்சு வருஷம் நீ சினிமாவுல நடிச்சுக் கொடு திடு. அதுக்கப்புறம் உங்க கல்யாண விஷயத்தை அறிவிச் சுக்கோ! என்ன சொல்றே?''

துர்காவை ஒரு புழுவைப் பார்ப்பதுபோல முகத்தை சுளித்துப் பார்த்தாள் மதுமிதா.

''நீ மாறவே மாட்டியா? இப்பக்கூட உனக்கு பணம் தான் முக்கியமா? உன் ரத்தம்னு சொல்றியே உன் ரத்த தோட உணர்வுகளை கடைசி வரைக்கும் புரிஞ்சுக்கவே போறதில்லையா நீ? சந்திரசேகரைக் கொலை செய்ய சொன்னதும் உன் சுய லாபத்துக்காகத்தான்! இப்ப கொல்ல வேணாம்னு சொன்னதும் உன் லாபத்துக்காகத் தானா? எப்பவுமே நான் ஒரு மெஷின்தானா? அப்படித் தான் உனக்கு நான் தெரியறேனா?''

''இல்லை மது. நான் என்ன சொல்ல வர்றேன்னா''

''வேணாம். நீ எதுவும் எனக்குச் சொல்ல வேணாம். நீ வெளில போ! நீயும் நானும் சந்திக்கிறது இதுவே கடைசி தடவையா இருந்தா நான் சந்தோஷப்படுவேன்.



''நான் மரணத்தோட விளிம்பைத் தொட்ட சமயத் துல உன் அழகான முகம் பதட்டத்தில் எப்படி இருந்திருக்கு முன்னு யோசிச்சுப் பார்த்தேன்.''

''இப்ப எதுக்கு அதைப் பத்தியெல்லாம் சிந்திக்க ணும்? வேற பேசுங்க?''

''இந்த பேட்டிலகூட உன்னோட ஒரு பண்பாட்டை நாகரீகத்தை நான் ரொம்ப ரசிச்சேன் மது.''

''எதை சொல்றீங்க?''

''இந்த பத்திரிகையாளர் சந்திப்புல உங்கம்மா செஞ்ச பல கொடுமைகளை பகிரங்கப்படுத்தப் போறதா சொல் லிட்டிருந்தே. கடைசியில ஒரு வரி கூட அதைப் பத்தி பேசலை. அதைச் சொன்னேன்.''

''சந்துரு என்னை நடிகையா உருவாக்கின அம்மாவை நான் அடியோட வெறுக்கறேன். ஆனா என்னை ஒரு உயிரா மனுஷியா பெத்தெடுத்த அம்மாவைப் பகிரங்கமா கொச்சைப்படுத்த வேணாமேன்னுதான்.''

''இந்தப் பக்குவமும் சிந்தனையும்தான் மதுமிதாவை நேசிக்க வெச்சது'' என்ற சந்திரசேகர், அவள் தோளை பெருமையுடன் அணைத்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

ஆட்டோவில் வந்து இறங்கினாள் இனியா.

வீட்டிற்குள் வந்தாள். ஹாலில் அமர்ந்திருந்தவர் களைப் புரியாமல் பார்த்தாள். கடந்து தன் அம்மா துர்காவிடம் வந்தாள்.

''என்னம்மா, எதுக்கு திடீர்னு என்னை வரச்சொல்லி ஃபோன் செஞ்சே?''

''உங்கக்கா நடத்தின கூத்தெல்லாம் தெரியுமில்லே உனக்கு?''

''தெரியும்! போறா விடு! இனிமே சினிமால நடிக்க மாட்டாளாம். இவ நடிக்கலைன்னா சினிமா உலகமே

அழிஞ்சிடுமாக்கும். இவளைவிட பெரிய புகழோட வேற புது ஸ்டார்ஸ் வரமாட்டாங்களா என்ன? ஆமா... ஹால்ல உட்கார்ந்திருக்கிறது யாரு?''

''காஸ்ட்யூமர், மேக்கப் மேன், ஸ்டில் போட்டோ கிராஃபர்''

''அவங்க எல்லாம் எதுக்கு வந்திருக்காங்க?''

''ஒரு புது ஸ்டாரை உருவாக்கிறதுக்காக''

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம் இனியா. மதுமிதாவைவிட பிரபலமா நான் உன்னை உருவாக்கப் போறேன். நீ படிப்பை நிறுத்திடு. எங்கே நீ அவளுக்கு போட்டியா வந்துடுவியோன்னு தான் அவ இத்தனை நாளும் உன்னை சினிமாவுக்கு வரக் கூடாதுன்னு தடை போட்டு வெச்சிருந்தா. இனி அவளுக்கும் இந்த குடும்பத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நீ சினிமால தாராளமா நடிக்கலாம். நான் நடிக்க வைக்கிறேன்.''

''ஹைய்!நான் ஒரு சினிமா ஸ்டாரா?'' உற்சாகமாகக் குதித்தாள் இனியா.

''சீக்கிரம் முகம் கழுவிட்டு வா... உனக்கு மேக்கப் போட்டு விதவிதமா ஸ்டில்ஸ் எடுக்கணும்.'' என்றாள்— அடுத்த பணம் காய்க்கும் மரத்தை உருவாக்கப் போகிற ஆர்வத்துடன் துர்கா! ●

**(முற்றும்)**

34752